# தொல்காப்பியமும் நன்னூலும்

பேராசிரியர்
டாக்டர். ரா.சீனிவாசன்
எம்.ஏ; எம்.லிட்; பி.எச்டி

# தொல்காப்பியமும் நன்னூலும்

டாக்டர். ரா. சீனிவாசன்,
எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
பச்சையப்பன் கல்லூரி

அணியகம்
சென்னை-30

முதற்பதிப்பு பிப்பரவரி : 1972

வெளியீடு :
பிரகாசம், 22, செல்லம்மாள் தெரு, சென்னை-30.

உரிமை : ஆசிரியர்க்கு

கிடைக்குமிடம் :
அணியகம், 22, செல்லம்மாள் தெரு, சென்னை-30.

விலை ரூ. 10-00

மாருதி பிரஸ், 83, பீட்டர்ஸ் ரோடு, சென்னை-1

# முன்னுரை

தொல்காப்பியமும் வீரசோழியமும் நன்னூலுக்கு முன் நூல்களாகும். தொல்காப்பியம் முதல்நூல்; வீர சோழியம் துணைநூல். வீரசோழியம் 11ம் நூற்றாண்டில் எழுந்த நூலாகும். நன்னூலார் தொல்காப்பியத்தையும் வீரசோழியத்தையும் பின்பற்றியே தொகை நூலாக யாத்துள்ளார். தொல்காப்பியர் காலத்து வழக்குகள் ஒருசிலவற்றை விட்டும் புதிய சில வழக்குகளைக் காட்டியும் நன்னூல் எழுதப் பெற்றுள்ளது. புலவர்களிடைப் பயின்று வழங்கும் நூலாக நன்னூல் அமைந்துவிட்டது.

தொல்காப்பியம் தமிழ் இலக்கண நெறியை முழுவதும் போற்றி வந்த நூலாகும். அதனைக் கற்ற நன்னூலார் தம் காலத்தின் போக்குக்கு ஏற்பச் செய்திகளைத் தொகுத்துத் தந்துள்ளார். தொல்காப்பியம் தொடரியலுக்குச் சிறப்புத் தருகிறது; நன்னூல் சொல்லியலுக்குச் சிறப்புத் தருகிறது.

வீரசோழிய ஆசிரியர் தொடரியலைப் பற்றிப் பேசிற்றிலர். சொல்லியல் அடிப்படையிலேயே மொழி ஆராய்ந்து காட்டுவர். வீரசோழியத்திற்கு நன்னூல் மிகவும் கட்டுப் பட்டுள்ளது.

வீரசோழியம் பின்வரும் சிறப்புச் செய்திகளைக் கூறும்.

(1) வட சொற்கள் தமிழாக்கம் பெறும் பொழுது உண்டாகும் மாறுதல்களை விரித்துக் கூறும். அவற்றுள் குறிப்பிடத்தக்கவை குணசந்தி, தீர்க்கசந்தி, விருத்தி சந்தி என்பனவாம். எதிர்மறையில் ந விகுதி ஏற்கும். அநேகம்: அநுசிதன் (நகரம் இடம் பெயர்ந்தது.) மாலா—மாலை; குமாரீ—குமரி, ஏனைய நன்னூல் காட்டுவனவேயாம்,

(2) தொல்காப்பியம் எழுவாய்க்கும் விளிவேற்றுமைக்கும் உருபுகள் கூறவில்லை. வீரசோழியம் சொல்லீற்று நிலைகளை உருபுகள் எனக் கூறும். உருபன் இன்மையைச் 'சு' விகுதி புணர்ந்து கெட்டது என்று கூறும்.

(3) தமிழில் கூறப்படும் தொகை நிலைத் தொடர்களை வீரசோழியம் சமாசம் எனக் காட்டும். இதில் மிகுதியாக வேறுபாடு இல்லை.

(4) பெயர்ச்சொல் ஆக்கம் குறித்து வீரசோழியம் தத்திதப் படலம் என்னும் பகுதியில் ஆராயும். பெயராக்கத்திற்குத் துணையாகும் விகுதிகளை விவரித்துக் கூறும்.

(5) வீரசோழியம் காட்டும் தாதுப்படலம் நன்னூலார் காட்டும் வினைப் பகுதிகளுக்குத் துணை செய்துள்ளது. வடமொழியை ஒட்டி வீரசோழியம் நட விடு செய் பண்ணு நண்ணு போ சிந்து, முதலிய வினைப் பகுதிகளை வாய்பாடுகளாகக் காட்டும். இதை ஒட்டியே நன்னூல் 'நடவாமடிசீ' என்னும் சூத்திரத்தைச் செய்துள்ளது.

(6) வினை விகுதிகளைப் பிரித்துக் காட்டுவதே தனி முறை: 'செய்தான்' என்பதைச் 'செய்+தான்' என்றே பிரித்துக் காட்டும். இடைநிலை என்ற ஓர் பகுப்பை வீரசோழியம் மேற்கொள்ளவில்லை.

(7) சந்திகளில் நகர ஞகரப் போலிக்கு வீர சோழியமே வழி காட்டியுள்ளது.

கவி+நன்று—கவிஞன்று
பனை+நன்று—பனைஞன்று

இகர ஐகார முன்னர் நகரம் ஞகரமாக மாறும் என்பர். இவ்விதியை நன்னூல் முழுவதும் ஏற்றுக் கொள்ளவில்லை என்றாலும் நகர ஞகர போலிக்கு இச்செய்தியே துணை செய்தது என்று கூறலாம்.

(8) ளகர ஈறு பெறும் விதியை ழகரம் பெறும் என்னும் செய்தி வீரசோழியம் காட்டும் தனிச் சந்தி விதியாகும்.

ழகரம் வலிமுன் டகரமாகவும் மெலிமுன் ணகரமாகவும் மாறும் என்று கூறுவர்.

பாழ்+தீமை—பாட்டீமை
பாழ்+நரகு—பாணரகு.
முகிழ்+முள்—முகிண்முள்

இவை அக்காலத்தில் பேச்சு வழக்கில் பயின்று வந்த வழக்காக இருந்திருக்க வேண்டும். நன்னூல் இவ்விதியைப் போற்றவில்லை. 13ம் நூற்ருண்டில் இவ்வழக்கு அருகிவிட்டிருக்கும்.

(9) வீரசோழிய உரை அக்காலத்தில் வழங்கிய பேச்சு வழக்குத் திரிபுகள் ஒரு சிலவற்றைக் காட்டும். அவை மொழி வரலாறுக்குத் துணை செய்வனவாகும். ழகரம் ளகரமாகவும், ளகரம் ழகரமாகவும் உச்சரிக்கப்பட்டன. திசை வழக்குகளின் திரிபுகளைத் தக்க எடுத்துக் காட்டுகள் தந்து நிறுவுவர். (சூ82 உரை காண்க.)

வீர சோழியத்தின் போக்கு அதன் உரைகாரர் கூற்றில் விளங்கும். தமிழுக்கு இலக்கணமே வடமொழியிலிருந்து அமைந்தது என்பது அவர் நம்பிக்கையாகும். நன்னூல் வீர சோழியத்தை வடநூற் சந்திகள் விளக்குவதற்கும், பதவியல் அமைப்புக்கும் துணையாகக் கொண்டதே தவிர ஏனைய வழிகளில் இது தொல்காப்பியத்தையே முழுவதும் பின்பற்றியுள்ளது.

நன்னூலையும் தொல்காப்பியத்தையும் ஒப்பிட்டுப் படிக்கும்பொழுதே தொல்காப்பியத்தின் பெருமை முழுவதும் விளங்கும். தொல்காப்பியத்தை முழுவதும் படித்து அதன் அருமை பெருமைகளை ஆய்வுக் கண்ணேட்டத்தோடு பார்க்கும்பொழுது எவ்வளவு அரிய மொழியியல் விளக்க நூல் நம்மிடை வழங்குகிறது என்றுநினைக்கச் செய்கிறது.

தொல்காப்பியம் செய்யுள், வழக்கு என்னும் அடிப்படையிலும், சொன்மை நிலை பொருண்மை நிலை என்ற பாகுபாட்டோடும் தமிழ் மொழியியலை ஆய்ந்து தருகிறது. மொழியியல் அடிப்படையில் எல்லா வகையிலும் முழுமை பெற்று விளங்கும் இத்தனித் தமிழ் இலக்கணநூல் கற்போருக்குக் காவியச் சுவையை அள்ளித் தருகிறது என்றால் மிகை இல்லை.

'தொல்காப்பியமும் நன்னூலும்' எம். ஏ. மாணவர்களுக்கு ஒப்பியற் பாடமாக அமைந்துள்ளது. அவர்களுக்கு இது ஒரு துணை நூலாகவும் ஏனையோர்க்குத் தமிழியலை அறிய ஓர் தொகுப்பு நூலாகவும் இது வெளிவருகிறது.

சுருங்கக் கூறி விளங்க வைத்தல் இலக்கண நூலுக்கு அடிப் படையாகும். அந்த முறையே இதில் மேற்கொள்ளப் பட்டது. ஈற்றில் 'சாரியைகளும் எழுத்துப் பேறும்' 'செய்யுள் வழக்குகள்', 'சொல்லும் பொருளும்,' என்ற மூன்று கட்டுரைகள்தொகுப்புச் செய்திகளைத் தருகின்றன.

**ரா. சீனிவாசன்**

# உள்ளுறை


| | | | |
|---|---|---|---|
| 1. | நூன் மரபு | ... | 9 |
| 2. | மொழி மரபு | ... | 20 |
| 8. | பிறப்பியல் | ... | 37 |
| 4. | பதவியல் | ... | 42 |
| 5. | புணரியல் | ... | 51 |
| 6. | தொகை மரபு | ... | 66 |
| 7. | உருபு புணரியல் | ... | 86 |
| 8. | உயிர் மயங்கியல் | ... | 96 |
| 9. | புள்ளி மயங்கியல் | ... | 115 |
| 10. | குற்றியலுகரப் புணரியல் | ... | 134 |
| 11. | கிளவியாக்கம் | ... | 155 |
| 12. | வேற்றுமையியல் | ... | 181 |
| 13. | பெயரியல் | ... | 207 |
| 14. | வினையியல் | ... | 217 |
| 15. | இடையியல் | ... | 234 |
| 16. | உரியியல் | ... | 240 |
| 17. | எச்சவியல் | ... | 246 |
| 18. | சாரியைகளும் எழுத்துப் பேறும் | ... | 264 |
| 19. | செய்யுள் வழக்குகள் | ... | 273 |
| 20. | சொல்லும் பொருளும் | ... | 277 |

# ஆசிரியரின் பிற நூல்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | மொழியியல் | 10 | 00 |
| 2. | மொழி ஒப்பியல் | 5 | 00 |
| 3. | மொழி வரலாறு | 5 | 00 |
| 4. | தமிழ் இலக்கிய வரலாறு | 3 | 50 |
| 5. | சொல்லின் செல்வன் (இலக்கிய நாடகம்) | 3 | 00 |
| 6. | அணியும் மணியும் (கட்டுரைகள்) | 2 | 00 |
| 7. | வழுக்கு நிலம் (நாவல்) | 2 | 50 |
| 8. | இருளும் ஒளியும் (நாவல்) | 2 | 00 |
| 9. | இளமை (நாவல்) | 4 | 00 |

# தொல்காப்பியமும் நன்னூலும்

## 1. நூன் மரபு

1. நன்னூல் எழுத்தியலை எண், பெயர், முறை பிறப்பு, உருவம், மாத்திரை, முதல்நிலை, இடைநிலை, ஈற்றுநிலை, போலி எனவும், பதம் புணர்ப்பு எனவும் வகைப்படுத்தி ஆராயும். முன்னவை பத்தும் எழுத்தின் அகத்திலக்கணம் எனவும், பதம் புணர்ப்பு என்பவை எழுத்தின் புறத்திலக்கணம் எனவும் கூறுவர்.[1]

2. தொல்காப்பியனுர் நூன் மரபு என்னும் பகுதியில் எண், பெயர், முறை, உருவம், மாத்திரை என்னும் ஐந்து செய்திகளை விளக்குவர்; மொழி மரபில் எழுத்துக்கள் சொற்களில் வழங்கும் இடச்சார்பை உணர்த்துவர். முதல்நிலை, இடைநிலை, ஈற்றுநிலை, போலி ஆகிய இந்த நான்கு செய்திகளும் மொழி மரபில் இடம் பெறுகின்றன. பதவியல் என்பது நன்னூலார் படைப்பாகும். தனிச் சொல்லின் அமைப்பை விளக்குவது பதவியல் ஆகும்; அது பிற சொற்களோடு தொடரும் பொழுது அடையும் மாற்றங்கள் புணரியலில் கூறப்படுகின்றன. பிறப்பியல் என்ற ஒரு தனி இயல் தொல்காப்பியத்தில்

---

1. "எண்பெயர் முறை பிறப்பு உருவம் மாத்திரை
முதல் ஈறு இடைநிலை போலி என்றா
பதம் புணர்பு எனப் பன்னிரு பாற்றதுவே." —நன்–57

இடம் பெற்றுள்ளது. அது நன்னூலில் எழுத்தியல் என்ற தலைப்பிலேயே கூறப்படுகிறது.

3. உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபு புணரியல் என்ற மூன்று தலைப்புக்களில் புணரியல் செய்திகளை நன்னூல் தருகிறது. தொல்காப்பியனார் புணரியல், தொகை மரபு, உருபியல், உயிர் மயங்கியல், புள்ளி மயங்கியல், குற்றியலுகரப் புணரியல் என ஆறு வகையாகப் பிரித்துக் காட்டுவர்.

4. நூன்மரபு: எழுத்துக்களின் அமைப்பை விளக்குவது நூன்மரபாகும். இதில் விளக்கப்படும் செய்திகள் பின்வருமாறு.

(1) எண்
(2) பெயர்
(3) முறை
(4) மாத்திரை
(5) உருவம்

4-1 எண் : (1) அகர முதல் னகர இறுவாய் எழுத்துக்கள் முப்பது ஆகும். குற்றியல் இகரம், குற்றியல் உகரம், ஆய்தம் மூன்றும் சார்பு ஒலிகள் எனப்படும்.[2]

2. "எழுத்தெனப்படுப
அகர முதல்
னகர இறுவாய் முப்பஃது என்ப
சார்ந்துவரல் மரபின் மூன்றலங் கடையே" —தொல்–1
"அவைதாம்
குற்றியல் இகரம் குற்றியல் உகரம்
ஆய்தம் என்ற
முப்பாற் புள்ளியும் எழுத்தோ ரன்ன" —தொல்–2
"உயிரும் உடம்புமாம் முப்பதும் முதலே." —நன்-59

(2) அ, இ, உ, எ, ஒ ஐந்தும் குறில்.[3]

(3) ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ ஏழும் நெடில்.[4]

(4) அகர முதல் ஔகார இறுவாய்ப் பன்னீ—ரெழுத்தும் உயிர் ஆகும்.[5]

(5) ககர முதல் ன்கர இறுவாய்ப் பதினெண் எழுத்தும் மெய் ஆகும்.[6]

(6) மெய்யொலிகளுள் வல்லினம் ஆறு, மெல்லினம் ஆறு, இடையினம் ஆறு ஆகும்.[7]

---

3. "அவற்றுள், அஇஉ
எ ஒ என்னும் அப்பால் ஐந்தும்
ஓரளபு இசைக்கும் குற்றெழுத்து என்ப." —தொல்-3
"அவற்றுள்
அ, இ உ எ ஒக் குறில் ஐந்தே." —நன்-64

4. "ஆ ஈ ஊ ஏ ஐ
ஓ ஔ என்னும் அப்பால் ஏழும்
ஈரளபு இசைக்கும் நெட்டெழுத்து என்ப." —தொல்-4
"ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ நெடில்." —நன்-6

5. "ஔகார இறுவாய்ப்
பன்னீ ரெழுத்தும் உயிரென மொழிப." —தொல்-8
"னகர இறுவாய்ப்
பதினெண் எழுத்தும் மெய்யென மொழிப." —தொல்-9

6. "அம்முதல் ஈராறு ஆவி கம்முதல்
மெய்ம்மூவாறு என விளம்பினர் புலவர்." —நன்-63

7. "மெய்யோடு இயையினும் உயிரியல் திரியா."
—தொல்-10
"வல்லினம் கசடதபற" —தொல்-19
"வல்லினம் கசட தபற என ஆறே." —நன்-68
"மெல்லெழுத்தென்ப ஙஞண நமன" —தொல்-20

முதலெழுத்து முப்பது, சார்பு ஒலிகள் மூன்று; குறில் ஐந்து, நெடில் ஏழு, உயிர் பன்னிரண்டு, மெய் பதினெட்டு; அவற்றுள் வல்லினம் ஆறு, மெல்லினம் ஆறு, இடையினம் ஆறு என்பது எண்ணைப்பற்றித் தொல்காப்பியனார் தரும் செய்தியாகும்.

**4.2.** பெயர் : அகர முதல் னகர ஈறும் இவை முதல் எழுத்துக்களாம். குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தம் மூன்றும் சார்பு எழுத்துக்களாம். அ இ உ எ ஒ இவை குறில்; ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ இவை நெடில்; அ முதல் ஔ இறுவாய் உயிர்; க முதல் ன இறுவாய் இவை மெய்; கசட தபற வல்லினம்; ஙஞண நமன மெல்லினம்; யரலவழள இடையினம்; அ இ உ மூன்றும் சுட்டு;[8] ஆ ஏ ஓ அம்மூன்றும் வினா[9]; அளபு மிக்கு இசைத்தல் அளபெடை எனப்படும். அவை உயிரளபெடை, ஒற்றளபெடை எனப்படும்.[10] இவை எழுத்தின் பெயர்களாம்.

**4.3.** முறை : அகரத்தை முதலாகக் கொண்டு னகரத்தை இறுவாயாக முடிவது தமிழ் எழுத்தின் முறையாகும். உயிர் மெய்யை ஒலிக்கும் வழி மெய்

---

"மெல்லினம் ஙஞண நமன என ஆறே." —நன்-69
"இடையெழுத்தென்ப யரலவழள" —தொல்-21
"இடையினம் யரல வழள என ஆறே." —நன்-80

8. "அ இ இ அம் மூன்றும் சுட்டு." —தொல்-31
"அ இ உ ம் முதல் தனிவரில் சுட்டே." —நன்-66

9. "ஆ ஏ ஓ அம் மூன்றும் வினா." —தொல்-32
"எயா முதலும் ஆ ஓ ஈற்றும்
ஏ இரு வழியும் வினுவா கும்மே." —நன்-67

10. "அளபிறந்து உயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்
உளவென மொழிப இசையொடு சிவணிய
நரம்பின் மறைய என்மனார் புலவர்." —தொல்-33

முதலும் உயிர் பின்னும் ஒலித்தல்முறையாகும்.[11] க ச ட த ப ற என்பதும், ங ஞ ண ந ம ன என்பதும், ய ர ல வ ழ ள என்பதும் எழுத்து முறைவைப்பாகும்.

அவை ஒன்றை ஒன்று தொடரும் பொழுது ஒரு குறிப்பிட்ட முறையைப் பின்பற்றும். அவற்றை எழுத்து மயக்கம் என்பர். அவை உடனிலை மெய்ம் மயக்கம் எனவும் வேற்றுநிலை மெய்ம் மயக்கம் எனவும் இரு வகைப்படும். இவை மயங்குவதில் குறிப்பிட்ட முறை பின்பற்றப்பட்டது.

இடைநிலை மெய்ம்மயக்கம் ஒலிச் சார்பு பற்றிய செய்தியாகும். முதல் நிலை, ஈற்று நிலை என்பன புணரியலுக்குத் துணை செய்வனவாகும். அதனால் இடைநிலை மெய்ம் மயக்கத்தை எழுத்து நிலையிலும் ஏனையவற்றை மொழி நிலையிலும் வைத்துத் தொல்காப்பியனார் அமைத்தது குறிப்பிடத் தக்க செய்தியாகும். மொழி நிலையில் அடையும் ஒரு சில இடைநிலை மாறுதல்களையும் மொழி மரபிற் கூறுவர்.

டறலள முன் கசப மயங்கும்.[12] லள முன் யவ வும் தோன்றும்.[13] ஙஞண நமன முன் இனமாகிய கசட தபற மயங்கும்.[14] ணன முன் கசஞ பமயவ ஏழும் உரிய.[15]

---

11. "மெய்யின் வழியது உயிர்தோன்று நிலையே."
—தொல்-18

12. "டறலள வென்னும் புள்ளி முன்னர்க்
கசப என்னும் மூவெழுத்து உரிய." —தொல்-23

13. "அவற்றுள்
லளஃகான் முன்னர் யவவுந் தோன்றும்." —தொல்-24

14. "ஙஞண நமன என்னும்புள்ளி முன்னர்த்
தத்தம் இசைகள் ஒத்தன நிலையே." —தொல்-25

ஞநமவ முன் ய நிற்கும்.[16] மஃகான் புள்ளி முன் வகரம் மயங்கும்.[17] யரழ என்னும் புள்ளி முன்னர் மொழிக்கு முதலாக வரும் எழுத்துக்களாகிய உயிர் பன்னிரண்டும் ஙகரமும், கசஞத நபம வயவும் வரும்.[18]

**4-4 மாத்திரை : உயிர் :** குறில் உயிருக்கு மாத்திரை ஒன்று[19]; நெடிலுக்கு மாத்திரை இரண்டு;[20] எந்தத் தனி எழுத்தும் மூன்று மாத்திரை பெறுவது இல்லை.[21] அளபெடை மாத்திரை மிக்கு எழும்.[22] கண்ணிமையும் நொடியும் எழுத்தின் மாத்திரைக்கு அளபு.[23]

---

15. "அவற்றுள், ணனஃகான் முன்னர்க்
கசஞப மயவ ஏழும் உரிய." —தொல்-26
16. "ஞநமவ என்னும் புள்ளி முன்னர்
யஃகான் நிற்றல் மெய்பெற் றன்றே." —தொல்-27
17. "மஃகான் புள்ளிமுன் வவ்வும் தோன்றும்."
—தொல்-28
18. "யரழ என்னும் புள்ளி முன்னர்
முதலாகு எழுத்து ஙகரமொடு தோன்றும்."
—தொல்-29
19. "அவற்றுள், அ இ உ
எ ஒ என்னும் அப்பால் ஐந்தும்
ஓரளபு இசைக்கும் குற்றெழுத்து என்ப." —தொல்-3
20. "ஆ ஈ ஊ ஏ ஐ
ஓ ஔ என்னும் அப்பால் ஏழும்
ஈரளபு இசைக்கும் நெட்டெழுத்து என்ப." —தொல்-4
21. "மூவளபு இசைத்தல் ஓரெழுத்து இன்றே." —தொல்-5
22. "நீட்டம் வேண்டின் அவ்வளபு உடைய
கூட்டி எழூஉதல் என்மனார் புலவர்." —தொல்-6
23. "கண்ணிமை நொடியென அவ்வே மாத்திரை
நுண்ணிதின் உணர்ந்தோர் கண்ட வாறே."
—தொல்-7

"இயல்பெழு மாந்தர் இமைநொடி மாத்திரை"
—நன்-100

**மெய்** : மெய்யின் அளவு அரை;[24] மெய்யோடு இயையினும் உயிர் இயல் திரியாது;[25] சார்பெழுத்துக்கள் மூன்றும் அரை மாத்திரை பெறும்[26]; மகரம் குறுகி அரை மாத்திரையினும் குறைந்து வரும்.[27]

அளபெடை உயிர் அளபெடை எனவும், ஒற்றளபெடை எனவும் இருவகைப்படும்.[28]

**4-5 உருவம் :** (1) மகரக் குறுக்கம் உள்ளே ஒரு புள்ளியை வேறு பெறும்.[29] ஏனைய மகரம் வெளியே மட்டும் புள்ளி பெறும்.

(2) மெய்யின் இயக்கம் புள்ளியொடு நிலையும்.[30] எகர ஒகரம் புள்ளி பெறும்.[31] அகரமொடு மெய்கள்

---

24. "மெய்யின் அளவே அரையென மொழிப." —தொல்-11

25. "மெய்யோடு இயையினும் உயிரியல் திரியா." —தொல்-10

26. "அவ்வியல் நிலையும் ஏனை மூன்றே." —தொல்-12

27. "அரையளவு குறுகல் மகரம் உடைத்தே
இசையிடன் அருகும் தெரியும் காலை." —தொல்-13

28. "அளபிறந்து உயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்
உளவென மொழிப இசையொடு சிவணிய
நரம்பின் மறைய என்மனார் புலவர்." —தொல்-33

"இசைகெடின் மொழிமுதல் இடைகடை நிலைநெடில்
அளபெழும் அவற்றவற்று இனக்குறில் குறியே," —நன்-91

"ஙஞண நமன வயலள ஆய்தம்
அளபாங் குறிலிணை குறிற்கீழ் இடைகடை
மிகலே அவற்றின் குறியாம் வேறே." —நன்-92

29. "உட்பெறு புள்ளி உருவா கும்மே." —தொல்-14

30. "மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்." —தொல்-16

31. "எகர ஒகரத்து இயற்கையும் அற்றே." —தொல்-15

உயிர்க்கும் பொழுது புள்ளி நீங்கிய வடிவம் பெறும், ஏனைய உயிர்களோடு சேரும் பொழுது வடிவு திரியும்.[32] மெய் முதலும் உயிர் பின்னும் இசைக்கும்.[33]

## 5. நன்னூல் தரும் சிறப்புச் செய்திகள்

**1.** எண் : மொழிக்கு முதற் காரணமாகவும் அணுத்திரளின் காரியமாகவும் விளங்கும் ஒலி எழுத்தாகும் என்று கூறும் விளக்கம் நன்னூல் தருவதாகும். அது முதல், சார்பு என இருவகைத்து என அறுதியிட்டுக் கூறுகிறது நன்னூல்.[34]

(2) தொல்காப்பியனார் சார்பெழுத்துக்கள் மூன்றனை மட்டும் கூற நன்னூல் பத்து என வகைப்படுத்திக் கூறும்.[35]

---

32. "புள்ளி யில்லா எல்லா மெய்யும்
உருவுரு வாகி யகரமோடு உயிர்த்தலும்
ஏனை உயிரோடு உருவுதிரிந்து உயிர்த்தலும்
ஆயீ ரியல உயிர்த்தல் ஆறே." —தொல்-17
"புள்ளிவிட்டு அவ்வொடு முன்னுருவாகியும்
ஏனை உயிரோடு உருவு திரிந்தும்
உயிரளவாயதன் வடிவொழித்து இருவயிற்
பெயரொடும் ஒற்று முன்னாய் வரும் உயிர்மெய்."
—நன்-89

33. "மெய்யின் வழியது உயிர்தோன்று நிலையே."
—தொல்-18
"நின்ற நெறியே உயிர்மெய் முதலீறே." —நன்-109

34. "மொழிமுதற் காரணமாம் அணுத்திரளொலி
எழுத்தது முதல் சார்பு எனஇரு வகைத்தே."
—நன்-58

35. "உயிர்மெய் ஆய்தம் உயிரளபு ஒற்றளபு
அஃகிய இஉ ஐஔ மஃகான்
தனிநிலை பத்தும் சார்பெழுத்து ஆகும்." —நன்-60

உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குறில் இ, குறில்உ, ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம், மகரக் குறுக்கம், ஆய்தக் குறுக்கம் ஆகிய பத்தினையும் சார்பு எழுத்துக்கள் எனக்கூறும். அவற்றின் விரி இன்னது என்றும் விரித்துக் கூறும்.

உயிர்மெய் 216; •ஆய்தம் 8, உயிரளபெடை 21 ஒற்றளபெடை 42; குறில் இ 37, குறில்உ 36, ஐகாரக் குறுக்கும் 3, ஔகாரக் குறுக்கம் 1, மகரக் குறுக்கம் 3, ஆய்தக் குறுக்கும் 2; ஆக விரி 369 என்று தொகைப் படுத்தும்.[36]

2. பெயர் : வினா எழுத்துக்களாகத் தொல் காப்பியர் ஆ, ஏ, ஓ மூன்றை மட்டுமே கூற நன்னூல் எ, யா இரண்டையும் உடன் சேர்த்துக் கூறும். எழுத்துக் களுக்கு இடுகுறி பற்றியும் காரணம் பற்றியும் பெயர் வழங்கும் என்பர்.[37] தொல்காப்பியர் எகர வினாவை யும், யாவினாவையும் சொல்லதிகாரத்தில்குறிப்பிடுவர்.[38]

---

36. "உயிர்மெய் இரட்டுநூற்று எட்டு உயர்ஆய்தம்
எட்டு உயிரளபு எழுமூன்று ஒற்றளபெடை
ஆறேழ் அஃகும் இம்முப் பானேழ்
உகரம் ஆறுஆறு ஐகான் மூன்றே
ஔகான் ஒன்றே மஃகான் மூன்றே
ஆய்தம் இரண்டொடு சார்பெழுத்து உறுவிரி
ஒன்றொழி முந்நூற்று எழுபான் என்ப." —நன்-61

37. "இடுகுறி காரணப்பெயர் பொதுச் சிறப்பின."
—நன்–62

38. "யாது எவன் என்னும் ஆயிரு கிளவியும்
அறியாப் பொருள்வயின் செறியத் தோன்றும்."
—தொல்-சொல் 31

**3.** முறை : வினா எழுத்துக்களில் மொழிக்கு முதலில் வருவன இவை எனவும், ஈற்றில் வருவன இவை எனவும் வேறுபடுத்திக் காட்டுகின்றார்.

> "எயா முதலும் ஆ ஓ ஈற்றும்
> ஏ இருவழியும் வினா ஆகும்மே." —நன் 67

'ஐ'க்கு இனம் இ; ஔக்கு இனம் உ. அ ஆ இவ்விரண்டும் ஓரினமாக வருதல் முறை என்று விளக்கம் தருகிறது.[39] இனம் என்பதற்குத் தரும் விளக்கம் போற்றுதற்கு உரியதாகும்.

> "தானம் முயற்சி அளவு பொருள் வடிவு
> ஆன ஒன்றுதி ஓர்புடை ஒப்பு இனமே." —நன் 72

என்பர்.

இடைநிலை மெய்ம்மயக்கத்துச் செய்திகளை நன்னூல் அழகாகத் தொகுத்துத் தருகின்றது. இதற்கு விளக்கமும் தொடர்ந்து தருகிறது. இதில் தொல்காப்பியருக்கும் நன்னூலாருக்கும் வேறுபாடு இல்லை. சொல்லும் முறையிலேயே வேறுபாடு உள்ளது.

கசதப நீங்கிய 14 வேற்றுநிலை மெய்ம்மயக்காகும், ரழ நீங்கிய 16 உடனிலை மெய்ம்மயக்கமாகும் என்பர்.

---

"அவற்றுள்
யாதுஎன வரூஉம் வினாவின் கிளவி
அறிந்த பொருள்வயின் ஐயந் தீர்தற்குத்
தெரிந்த கிளவி ஆதலும் உரித்தே."
தொல்–சொல் 82

39. "ஐ ஔ இ உச் செறிய முதலெழுத்து
இவ்விரண்டு ஓரினமாய் வரல் முறையே." —நன்–71

கசதப உடனிலை மயக்கத்தையே பெறும். ரழ வேற்று நிலை மயக்கத்தையே பெறும்.[40]

சிறப்பினும் இனத்தினும் செறிந்து ஈண்டு அகர[1] முதலா நடத்தல் முறை என்பர் நன்னூலார்.[41]

**4.** மாத்திரை : தொல்காப்பியனார் குறில், நெடில், மெய், குற்றியல் இகரம், குற்றியல் உகரம், ஆய்தம், மகரக் குறுக்கம், ஐ, ஔகாரக்குறுக்கம் இவற்றிற்கு மட்டும் மாத்திரை கூறுவர். நன்னூல் அது குறிப்பிடும் எல்லாச் சார்பெழுத்துக்களுக்கும் மாத்திரை கூறும் ஒரே சூத்திரத்தில் இச் செய்தியைத் தொகுத்துக் கூறும்.

"மூன்று உயிர் அளபு; இரண்டாம் நெடில்; ஒன்றே
குறிலோடு ஐ ஔக் குறுக்கம் ஒற்றளபு;
அரை ஒற்று இ உக்குறுக்கம் ஆய்தம்;
கால் குறள் மஃகான் ஆய்தம் மாத்திரை" —நன் 99

**5.** உருவம் : எகரமும் ஒகரமும் புள்ளி பெறும் என்னும் செய்தியை மட்டும் வற்புறுத்திக் கூறுகிறது. பழைய வடிவின எல்லா எழுத்தும் என்ற குறிப்பைத் தருகிறது. தொல்காப்பியர் தரும் தனிச் செய்திகளை இது சிறப்பித்துக் கூறவில்லை.

"தொல்லை வடிவின எல்லா எழுத்தும் ஆண்டு
எய்தும் எகர ஒகர மெய்ப் புள்ளி." —நன் 78

---

40. "கசதப ஒழித்த ஈரேழன் கூட்டம்
மெய்ம்மயக்கு உடனிலை ரழவொழித்து ஈரெட்டு
ஆகும்இவ் விருபான் மயக்கு மொழியிடை
மேவும் உயிர்மெய் மயக்களவு இன்றே." —நன்-110
"ரழவல்லன தம்முன் தாம்உடன் நிலையும்." —நன்–118

41. "சிறப்பினும் இனத்திலும் செறிந்தீண்டு அம்முதல்
நடத்தல் தானே முறையா கும்மே." —நன்–73

# 2. மொழி மரபு

மொழி மரபு என்னும் தலைப்பில் முதல்நிலை, இடை நிலை, ஈற்று நிலை, போலி என்னும் நான்கு செய்திகள் கூறப்படுகின்றன. மொழிக்கண் எழுத்துக்கள் பெறும் இடச்சார்பே இவ்வியலில் கூறப்படுகின்றது. எழுத்தின் அமைப்பு, தன்மை இடச்சார்பு என இருவகைப்படும். எழுத்தின் தன்மை, நூன்மரபில் கூறப்பட்டது. எழுத்துக் களின் இடச்சார்பு மொழிமரபில் கூறப்படுகிறது.

### எழுத்துககளின் இடச்சார்பு

### 1. (அ) தனிமொழிக்கண் குற்றியலிகரம்—

யா என்னும் ஈற்று நிலைக்கு முன் உரையசைக் கிளவி யாகிய 'மியா' என்னும் அசைச் சொல்லிடத்துக் குற்றிய லிகரம் இடம் பெறும். ஈண்டுக் குற்றியலிகரம் மொழி யிடை வரும் என்பது கூறியவாறு ஆயிற்று. கேண்மியா, சென்மியா"[1]

### (ஆ) தொடர் மொழிக் கண் குற்றியலிகரம் :—

குற்றியலுகர ஈற்றுத் தொடர் முன் யகரம் வரு வழிக் குற்றியல் உகர்ம் மறைந்து குற்றியல் இகரம் இடம் பெறும்.[2]

நாகியாது; வரகியாது

---

1. "குற்றிய லிகரம் நிற்றல் வேண்டும்
யாவென் சினைமிசை உரையசைக் கிளவிக்கு
ஆவயின் வருஉம் அகரம் ஊர்ந்தே." —தொல்-34

2. "புணரியல் நிலையிடைக் குறுகலும் உரித்தே
உணரக் கூறின் முன்னர்த் தோன்றும்." —தொல்-35

### 2. (அ) தனி மொழிக்கண் குற்றியலுகரம் :—

நெட்டெழுத்தை அடுத்தும் ஏனைய தொடர் மொழியை அடுத்தும் குற்றியலுகரம் வல்லின மெய்களை ஊர்ந்து வரும்.

நாகு, வரகு, தெள்கு

எஃகு, கொக்கு, குரங்கு

### (ஆ) தொடர் மொழிக்கண் குற்றியலுகரம் :—

தொடர்மொழிக்கண் ஒரு சில தொடருள் தன் அரை மாத்திரையினும் குற்றியலுகரம் குறைந்து வரும் என்பர். வன்தொடர்க் குற்றியலுகரத்தை அடுத்துக் கசதப முதல்மொழி அல்வழியிலும், வேற்றுமையிலும் வருவழி இவ்வியல்பு காணப்படுகிறது.

கொக்குக் கடிது; கொக்குக் கடுமை.

இவற்றில் குற்றியலுகரம் அரைமாத்திரையினும் குறைந்து காணப்படுகிறது என்பர். ஏனைய தொடர்களுள் அரை மாத்திரை நிலைபெறும் என்பர்.[3]

குரங்கு கடிது, குரங்குக் கடுமை. ஈண்டு அரை மாத்திரையே நிலைபெறும் என்பர்.

இது தொல்காப்பியம் தரும் சிறப்புச் செய்தியாகும்.

---

3. "இடைப்படிற் குறுகும் இடனுமா ருண்டே
கடப்பாடு அறிந்த புணரிய லான." —தொல்-37

"வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்துவருவழித்
தொல்லை இயற்கை நிலையலும் உரித்தே." —தொல்-409

### 3. (அ) தனிமொழிக்கண் ஆய்தம் :—

குற்றெழுத்தை அடுத்தும் குசுடுதுபுறு என்னும் வல்லெழுத்தை அடுத்த உயிர் முன்னும் ஆய்தம் வரும்.

எஃகு, கஃசு, கஃடு, கஃது, கஃபு, கஃறு, அஃது, இஃது, உஃது, அஃது.[4]

[இவை லளவ இவற்றின் திரிபாக அமைந்தவை. எவ்+கு— எஃகு; அவ்+து— அஃது; அல்+கு — அஃகு]

### (ஆ) தொடர்மொழிக்கண் ஆய்தம் :—

கஃறீது, முஃடீது,

தொடர் மொழிக்கண் குற்றெழுத்தை அடுத்தும் வல்லெழுத்து முன்னும் ஆய்தம் வரும்.

லள ஈற்றுச் சொற்களே இவ்வாறு புணர்மொழிக் கண் வரும் என்பது புணரியல் விதிகள் கொண்டு அறிய முடிகிறது.[5]

### (4) அளபெடைகள் வருமாறு :—

நெட்டெழுத்துக்களே அளபெடுக்கும். மொழியில் இசை குன்றுமேயானுல் நின்று இசை நிறைக்க வருவது அளபெடையாகும். அவற்றிற்கு அறிகுறியாக அவற்றின் குற்றெழுத்துக்கள் வரிவடிவில் இடம் பெறும். ஐ ஔ

---

4. "குறியதன்முன்னர் ஆய்தப் புள்ளி
உயிரொடு புணர்ந்த வல்லாறன் மிசைத்தே."

—தொல்-38

5. "ஈறியன் மருங்கினும் இசைமை தோன்றும்."

—தொல்–39

என்டவற்றிற்கு இகரமும் உகரமும் இசை நிறைவுக்கு அறிகுறியாகும்.[6]

## (5) எழுத்துக்கள் மொழியாதல் :—

மொழியில் எழுத்துக்களின் நிலையைக் கூறுமுன் அவை மொழியாமாறு தெளிவிக்கப் படுகிறது.

### (அ) தனி எழுத்துக்கள் மொழியாதல் :—

தனி எழுத்துக்களும் நின்று தமிழில் மொழியாக அமைகின்றன. நெடில் எழுத்துக்கள் ஏழும் தனி நின்று ஓரெழுத்து ஒரு மொழியாய் இயங்கும்.[7]

ஆ—பசு; ஈ—கொடு; ஊ—ஊன் என்பதன் திரிபு;

ஏ—அம்பு, ஏவு; ஐ—தலைமை, வியப்பு;

ஓ—மதகு நீர் தாங்கும் பலகை;

ஓ— ஒழிதல்.

இவை தம்மை உணர நின்றவழி எழுத்தாம். பொருள் உணர்த்தியவழிச் சொல்லாம். எனவே எழுத்துக்களுக்கு எழுத்துத்தன்மையும் பொருள்

---

6. "குன்றிசை மொழிவயின் நின்றுஇசை நிறைக்கும்
நெட்டெழுத்து இம்பர் ஒத்தகுற் றெழுத்தே."
—தொல்–41

"ஐ ஒள என்னும் ஆயீர் எழுத்திற்கு
இகர உகரம் இசை நிறைவாகும்," —தொல்–42

"ஐ ஒள இ உச் செறிய முதல் எழுத்து
இவ்விரண்டு ஓரினமாய் வரல் முறையே" —நன்–71

7. "நெட்டெழுத்து ஏழே
ஓரெழுத்து ஒருமொழி." —தொல்–43

உணர்த்தும் தன்மையும்உள என்பதாம். குற்றெழுத்து ஐந்தும் தனித்து நின்று மொழியாவதில்லை.[8]

நூன் மரபில் எழுத்துக்களுக்குப் பொருள் உணர்வு கூறப்படவில்லை. ஒலிகள் என்ற அளவே அங்கே ஆராயப் பட்டன. ஈண்டு எழுத்துகட்குப் பொருள் உணர்வும் சேர்க்கப் படுகின்றன.

(ஆ) தொடர் எழுத்துக்கள் மொழியாதல் :—

எழுத்துக்கள் என்று கூறும்பொழுது மொழியியல் அடிப்படையில் பார்த்தால் உயிரும் மெய்யும் தனி எழுத்துக்களாகும். உயிர்மெய் என்பது இரண்டு எழுத் துக்களாகும். உயிர் மெய் என்பது இரண்டு எழுத்துக் களின் சேர்க்கையாகும்.

செய்+தான்; செய்+வான்.

த்—வ் என்பன பொருள் மாற்றத்திற்குக் காரண மாக வழங்குதல் காண்க. அவை த்+ஆ—தா; வ்+ஆ— வா என அமைவதாயிற்று.

செய்யுளியல் நோக்கின் மெய்யெழுத்துக்கள் அலகு காரியம் பெறுவது இல்லை. உயிர்களே எழுத்துக்களாகக் கருதப்படுகின்றன. இந்த அடிப்படையில் நச்சினார்க் கினியர் மெய்களுக்கு எழுத்துத் தனித்தன்மை தாராமல் உயிர்களையே எழுத்தாகக் காட்டுவர்.

---

8. "குற்றெழுத்து ஐந்து மொழிநிறைபு இலவே."

—தொல்-44

"உயிர்மவில் ஆறும் தபநவில் ஐந்தும்
கவசவில் நாலும் யவ்வில் ஒன்றும்
ஆகும் நெடில் நொதுவாம் குறில் இரண்டொடு
ஓரெழுத்து இயல்பதம் ஆறேழ் சிறப்பின."

—நன்–129

ஆ— ஓரெழுத்து ஒரு மொழி
கா, நா— ஓரெழுத்தொருமொழி
அணி, மணி, வரகு, கொற்றன்—ஈரெழுத்து ஒரு மொழி யாகக் காட்டுவர்

குரவு, அரவு—மூவெழுத்து ஒரு மொழியாகக் காட்டுவர் இவ்வாறு தனது உரையில் நச்சினார்க்கினியர் விளக்குவர்.

'உயிர்மெய்' ஒரே எழுத்தாகக் கொள்ளும் மரபு தமிழில் வழக்கில் இருந்து வருகிறது. நன்னூல் உரை உயிர்மெய்யைத் தனி எழுத்தாகவும், மெய்யைத் தனி எழுத்தாகவும் காட்டுகிறது.

அணி, மணி — ஈரெழுத்து மொழிகள்
வரகு — மூவெழுத்து மொழி
கொற்றன் — நாலெழுத்து மொழி

ஓரெழுத்து மொழி, ஈரெழுத்துமொழி, இரண்டிறந்து இசைக்கும் தொடர்மொழி உளப்பட மூன்றே மொழிநிலை தோன்றிய நெறியே என்பர் தொல்காப்பியனார்.[9]

எழுத்து என்பதில் மெய்யெழுத்துக்களும் அடங்குகின்றன. உயிர்மெய் ஓர் எழுத்தா ஈரெழுத்தா என்பதில் கருத்து வேறுபாடு கொள்ள இடம் தருகின்றது.

---

9. "ஓரெழுத் தொருமொழி ஈரெழுத்து ஒருமொழி
இரண்டிறந்து இசைக்கும் தொடர்மொழி உளப்பட
மூன்றே மொழிநிலை தோன்றிய நெறியே."
—தொல்-45

"எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருள்தரில்
பதமாம் அதுபகாப்பதம் பகுபதம் என
இருபா லாகி யியலும் என்ப." —நன்–128

பொருள் உணர்வு அடிப்படையில் உறழ்ந்து பார்க்கும் பொழுது மெய்யெழுத்துக்களும் எழுத்தாகக் கொள்வதும் உயிர்மெய் எழுத்துக்களை ஈரெழுத்தாகக் கொள்வதும் பொருந்துவது ஆகிறது.

சொன்மை நிலையில் பார்த்தால் மெய்யெழுத்துக்கள் அகரச் சாரியையோடு ஒலிக்கப்படுகின்றன.

"மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்"

—தொல்-48.

மெய்களில் உயிர் ஏறி உயிர்மெய் ஆகும் காலத்து அவை உயிரின் மாத்திரையைப் பெறுகின்றன. அவை உயிரின் மாத்திரையைப் பெற்றாலும் அவை மெய்களின் அடிப்படையிலேயே வழங்கப் பெறும்.[10]

## (6) ஈரொற்றாக உடன் நிற்றல் (மொழியிடை நிலை)

(1) தமிழ் மொழியில் இரண்டு ஒற்றுக்கள் உடன் நிற்றல் இல்லை. யரழ என்னும் மெய்களை அடுத்துக் கசதப ஙஞநம நின்று ஈரொற்றாக நிற்றல் உண்டு.

வாய்ப்பு, பீர்க்கு, வாழ்க்கை.

அவற்றுள் ரகரமும் ழகரமும் குற்றெழுத்தை அடுத்து ஈரொற்றாக நிற்றல் இல்லை.[11]

எனவே கார், வீழ் எனச்சொல் அமையுமே யன்றி கர், விழ் என அமைதல் இல்லை. ஒன்று கார், வீழ் என

---

10. "தம்மியல் கிளப்பின் எல்லா எழுத்தும்
மெய்ந்நிலை மயக்கம் மானம் இல்லை." —தொல்-47

11. "யரழ என்னும் மூன்றும் ஒற்றக்
கசதப ஙஞநம ஈரொற்று ஆகும்." —தொல்-48

"அவற்றுள், ரகார ழகாரங் குற்றொற்று ஆகா."

—தொல்-49

அமைதல் வேண்டும். அல்லது கரு, விழு என அமைதல் வேண்டும்.

## (7) மகரக்குறுக்கம்

செய்யுளில் போலும் என்பது 'போன்ம்' எனத் திரிந்து நிற்புழி 'ன்ம்' என்பன ஈரொற்றாக நிற்கின்றன.

**'போன்ம்'**

னகரத்தின் முன் மகரம் மாத்திரையிற் குறுகும் என்பர். இதனை மகரக்குறுக்கம் என்பர்.[12]

## (8) எழுத்துக்கள் மொழியில் தொடர்தல்

'குறுமையும் நெடுமையும் அளவிற் கோடலின் தொடர் மொழியெல்லாம் நெட்டெழுத்தியல' என்னும் சூத்திரத்திற்குத் தக்க உரை விளங்கிலது.

இரண்டு குறில்கள் இணைந்து ஒரு நெட்டெழுத்துக்கு நிகர் என்று கூறுவதே பொருந்தும் எனலாம்.

அரு ஆர்; அழு-ஆழ்; பகல்-பால்; பெரு-பேர்; எழு-ஏழ்; மகன்-மான்; அகழ்-ஆழ்; தொகுப்பு-தோப்பு முதலிய எடுத்துக் காட்டுகள் இதற்குச் சான்றாகும்.

குற்றெழுத்தென்பதும், நெட்டெழுத்து என்பதும் மாத்திரை பற்றி அமையும் பெயர். ஆதலின் குறிலிணைகள் நெட்டெழுத்தாகக் கொள்ளப்படும் என்றவாறு.

---

12. "செய்யுள் இறுதிப் போலி மொழிவயின்
னகாரம் மகாரம் ஈரொற் றாகும்" —தொல்-51
"னகாரை முன்னர் மகாரம் குறுகும்." —தொல்-52

எழுத்துக்கள் மொழியாய்த் தொடரினும் அவற்றின் எழுத்தியல்பு மாருது.[13]

## (9) ஐகாரக் குறுக்கமும் ஔகாரக்குறுக்கமும்

ஐகாரமும் ஔகாரமும் தம் இரண்டு மாத்திரையிற் குறைந்து ஒரு மாத்திரை ஆதலும் உண்டு என்பர்.[14]

ஐப்பசி; இடையன்; குவளை; கௌவை என்பன எடுத்துக்காட்டுகளாம்.

## (10) மொழி முதல் நிலை

பன்னீருயிரும் மொழி முதலாகும்.[15] உயிர்மெய் அல்லன மொழிமுதல் ஆகாது.[16]

கதநபம எனும் இவ்வைந்து எழுத்துக்களும் எல்லா உயிரோடும் இயைந்து மொழி முதலாக வரும். சகரக் கிளவி அ, ஐ, ஔ இம் மூன்ருேடு மொழிக்கு முதலில் வருவது இல்லை[17]. வகரம் உ, ஊ, ஒ, ஓ, என்னும் நான்

---

13. "மொழிப்படுத் திசைப்பினும் தெரிந்து வேறிசைப்பினும்
எழுத்தியல் திரியாது என்மனுர் புலவர்." —தொல்-53
"மொழியாய்த் தொடரினும் முன்னனைத்து எழுத்தே"
—நன்-127

14. "ஓரளபு ஆகும் இட னுமார் உண்டே
தேருங் காலை மொழிவயி னான." —தொல்-57

15. "பன்னீர் உயிரும் மொழிமுதல் ஆகும்." —தொல்-59

16. "உயிர்மெய் அல்லன மொழிமுதல் ஆகா."
—தொல்-60

17. "கதந பமவெனும் ஆவைந்து எழுத்தும்
எல்லா உயிரொடும் செல்லுமார் முதலே."
—தொல்-61
"சகரக் கிளவியும் அவற்ருேர் அற்றே
அஐ ஔவெனும் மூன்றலங் கடையே." —தொல்-62

குயிரோடு வருதல் இல்லை[18]. ஞகாரம் ஆ, எ, ஐ என்னும் மூவுயிரோடு வரும்[19]. யகரம் ஆவோடுதான் முதலில் வரும்[20].

எழுத்து நிலையில் இவற்றின் பெயர்களைக் கூறுமிடத்து முதலாகா என்று வரையறை செய்யப் பட்டனவும் மொழிக்கு முதலில் வரும்[21].

குற்றியலுகரம் நுந்தை என்னும் மொழிக்கண் மொழிக்கு முதலில் நிற்கும். அதனால் அது முற்றிய லுகரமாக உச்சரிக்கப்பட்டாலும் பொருள் வேறு படாது. ஆகப் பன்னிரண்டு உயிர்கள், ஒன்பது மெய் கள், நுந்தை என்பதில் குற்றியலுகரம் என இருபத்தி ரண்டு எழுத்துக்கள் மொழிக்கு முதலாகும்[22].

---

18. "உ ஊ ஒ ஓ என்னும் நான்குயிர்
வ என் எழுத்தொடு வருதல் இல்லை." —தொல்-63

19. "ஆ, எ, ஒ எனும் மூவுயிர் ஞகாரத்து உரிய."
—தொல்-64

20. "ஆவோ டல்லது யகர முதலாகாது." —தொல்-65

21. "முதலா ஏன தம்பெயர் முதலும்." —தொல்-66

22. "குற்றிய லுகரம் முறைப்பெயர் மருங்கின்
ஒற்றிய நகரமிசை நகரமொடு முதலும்."
—தொல்-67

"முற்றியல் உகரமொடு பொருள்வேறு படாஅது
அப்பெயர் மருங்கின் நிலையிய லான." —தொல்-68

"மூன்று தலையிட்ட முப்பதிற்று எழுத்தின்
இரண்டு தலையிட்ட முதலாகு இருபஃது
அறுநான்கு ஈறொடு நெறிநின்று இயலும்
எல்லா மொழிக்கும் இறுதியும் முதலும்
மெய்யே உயிரென்று ஆயீ ரியல." —தொல்-103

## (11) மொழியீற்று நிலை: அ. (உயிரீறுகள்)

ஔ மொழிக்கு ஈறாக வருதல் இல்லை. ஏனைய உயிர்களே ஈறாக வரும். கவ வோடு இயையின் ஔவும் இறுதியாக வரும்[23].

எ என வரும் உயிர் மெய்யீறு ஆகாது[24]. ஒகரம் நகரத்தோடு மட்டும் ஈறாக வரும்[25]. ஏ, ஓ ஞகாரத்தோடு ஈற்றில் வருவது இல்லை[26]. உ, ஊ என்னும் எழுத்துக்கள் நவ வொடு வருவது இல்லை[27].

'சு' என்பது உசு, முசு என்னும் இருமொழிக் கண் மட்டும் வரும். உசு-உளுவின் பெயர்; முசு என்பது குரங்கினுள் ஒரு சாதி என்பர் நச்சினார்க்கினியர்[28].

'பு' என்பது 'தபு' என்னும் சொல்லின்கண் மட்டும் வரும். தபு என்பது படுத்துக் கூற நீ சா எனத் தன்வினையாம்; எடுத்துக் கூற நீ ஒன்றினைச்சாவப் பண் எனப் பிறவினையாம். எஞ்சியவை எல்லாம் மொழிக்கு ஈறாக வருவதில் கட்டுப்பாடு இல்லை என்பர்[29].

### (ஆ). மெய்யீறுகள்

ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள என்னும் அப்பதினொன்றே புள்ளியிறுதி[30]

23. "உயிர்ஔ எஞ்சிய விறுதி யாகும்." —தொல்-69
    "கவவோடு இயையின் ஔவும் ஆகும்." —தொல்-70
24. "எ என வருமுயிர் மெய்யீறு ஆகாது." —தொல்,71
25. "ஒவ்வும் அற்றே நவ்வலங் கடையே." —தொல்-72
26. "ஏ ஓ எனுமுயிர் ஞகாரத் தில்லை." —தொல்-73
27. "உ ஊ காரம் நவவொடு நவிலா." —தொல்-74
28. "உச்ச காரம் இருமொழிக்கு உரித்தே." —தொல்-75
29. "எஞ்சிய வெல்லாம் எஞ்சுதல் இலவே." —தொல்-77
30. "ஞணநம னயரல வழள வென்னும்
    அப்பதி னொன்றே புள்ளி யிறுதி." —தொல்-78

நகரம் இரு மொழிக்கண் மட்டும் வரும். பொருந்; வெரிந்[31].

ஞகரம், உரிஞ் என்னும் ஒரு மொழிக்கண் மட்டும் வரும்[32].

அவ் இவ் உவ் தெவ் என நான்கு மொழியீற்றின் கண் மட்டும் வகரம் வரும்,[33]

'பன்னிரண்டு உயிரும், பதினொரு மெய்யும், குற்றிய லுகரமும் ஆகச் சேர்ந்து இருபத்து நான்கு எழுத்துக்கள் மொழிக்கு ஈறு ஆகின்றன.[34]

## (12) போலி:— மொழிமுதற்போலி:—

அஇ—அய்—ஐ இவை மூன்றும் போலிகள். ஐவனம்—அஇவனம்—அய்வனம்.

அஉ—ஔ—போலியாகும்; உரையாசிரியர் 'அவ்' என்பதையும் உடன் சேர்த்துக்கொள்வர்.

ஔவை; அஉவை; அவ்வை;[35]

---

31. "உச்ச காரமொடு ஞகாரம் சிவணும்." —தொல்-79

32, "உப்பகார மொடு ஞகாரையும் அற்றே
அப்பொருள் இரட்டாது இவணை யான." —தொல்-80

33. "வகரக் கிளவி நான்மொழி ஈற்றது." —தொல்-81

34. "ஆவி ஞணநமன யரலவழளமெய்
சாயும் உகரம் நாலாறும் ஈறே." —நன்-107

35. "அகர இகரம் ஐகார மாகும்." —தொல்-54
"அகர உகரம் ஔகார மாகும்." —தொல்-55
"அகரத்திம்பர் யகரப்புள்ளியும்
ஐயென் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்." —தொல்-56

இ—ய்—போலி, மொழி இறுதிப்போலி:—

நாய்—நாஇ

ன்—ம்—போலி

அஃறிணைச் சொற்களில் னகரமும் மகரமும் போலியாக வரும்.

நிலம்—நிலன்; அறம்—அறன்

குளம்—குளன்;

ஒன்பது சொற்கள்மட்டும் போலியாக வருவது இல்லை. எகின், செகின், விழன், பயின், குயின், அழன், புழன், கடான், வயான், என இவற்றிற்கு எடுத்துக்காட்டுகளை நச்சினார்க்கினியர் தருவர்.[36]

## (13) நன்னூல் தரும் சிறப்புச் செய்திகள்:—

(1) முதல்நிலை:—1. பன்னீருயிரும் க ச த ந ப ம வ ய ஞ ங இப்பத்து உயிர்மெய்யும் மொழிக்கு முதலாகும் என்பர். ஙகரம் தொல்காப்பியரால் குறிக்கப்பெறவில்லை.[37]

(2) யகரம் ஆவோடல்லது அ, உ, ஊ, ஓ, ஒள இவற்றோடும் வரும் என்பர்.[38]

---

36. "இகர யகரம் இறுதி விரவும்." —தொல்-58
"மகரத் தொடர்மொழி மயங்குதல் வரைந்த
னகரத் தொடர்மொழி ஒன்பஃது என்ப
புகரறச் கிளந்த அஃறிணை மேன." —தொல் 82

37. "பன்னீ ருயிருங் கசதந பமவய
ஞங வீரைந்து உயிர்மெய்யும் மொழிமுதல்." —நன்-102

38. "அ ஆ உ ஊ ஓ ஒள யம்முதல்." —நன்-104

(3) ஞகாரம் அ ஆ எ ஒவ்வொடு ஆகும் என்பர்; அகரத்தையும் உடன் சேர்ப்பர்.[39]

(4) ஙகரம் சுட்டை ஒட்டியும் யகரத்தை ஒட்டியும் மொழிக்கு முதலில் வரும் என்பர்.[40]

(5) குற்றுயலுகரம் நுந்தை என்பதில் உளது என்பதைக் கூறவில்லை.

**2. இறுதிநிலை:**—(1) குற்றுயிர் அளபின் ஈறும்; எகரம் மெய்யொடு ஏலாது; ஒ நவ்வொடு ஆகும்; ஔ ககர வகரமொடு ஆகும் என்பர். இதில் கருத்து வேறுபாடு யாதுமில்லை.[41]

(2) உசு, முசு; தபு; பொருந், வெரிந்; அவ், இவ், உவ், தெவ் இவ்வாறு மட்டும் வரும் என்னும் வரையறையை வற்புறுத்தவில்லை.

**3. மொழியிடைநிலை:**— (1) 'போன்ம்' என வரும் மகரக்குறுக்கத்தை மட்டுமன்றி 'மருண்ம்' எனவரும் மகரக்குறுக்கத்தையும் தரும் வளவன் என வகரத்தின் முன் வரும் மகரக்குறுக்கத்தையும் நன்னூலார் சேர்த்துக் கொள்கின்றார். புள்ளிமயங்கியலில் தொல் காப்பியனார் வகரத்தின் முன் மகரம் குறுகுதலைக் குறிப் பிடுவர். புணர்மொழியின் கண். தோன்றும் மாறுதலை ஆண்டுக் கூறுன்கிறார்.

---

39. "அ ஆ எ ஒவ்வோடாகும் ஞம்முதல்." —நன்-105

40. சுட்டியா வெகர வினவழி யவ்வை
ஒட்டி ஙவ்வும் முதலாகும்மே." —நன்-106

41. "குற்றுயிர் அளபின் ஈறும்; எகரம்
மெய்யொடு ஏலாது; ஒநவ்வொடாம் ஔக்;
ககர வகரமோடு ஆகும் என்ப." —நன்-108

"வகாரம் மிசையும் மகாரம் குறுகும்." —தொல்-330

என்பர்.[42] 'நிலம்வலிது'

4. போலி:— தொல்காப்பியனார் அஇ—அய்—ஐ; அஉ—அவ்—ஔ என்னும் மொழி முதற்போலியையும், ய இ ஈற்றுப்போலியையும், அஃறிணைப் பெயர்களில் னகரமகரப் போலியையும் மட்டும்கூற, நன்னூலார் கீழ் வரும் போலிகளையும் கூறுவர்.

அகரமும் ஐகாரமும்:— ச, ஞ, ய முன்னர் அகரம் ஐகாரமாகும்.[43]

பசல்—பைசல்

மொழியிடை ந ஞ போலி:— ஐயவழி நஞ உறழும். செய்ஞ்ஞின்ற; மைஞ்ஞின்ற, நெய்ஞ்ஞின்ற, கைஞ் ஞின்ற; சேய்நலூர்—சேய்ஞலூர் [44]

5, ஆய்தக்குறுக்கம்:—'ஆய்தம் அஃகாக்காலையான என்ற தொடரைக்கொண்டு தொடர் மொழிக்கண் புணர்ச்சியால் அமையும் 'ஆய்தம்' ஆய்தக் குறுக்கம் என்னும் தெளிவை நன்னூலார் தருவர். [45]

6. தொல்காப்பியனார் குறில் இ; குறில் உ; ஆய்தம் மூன்றை மட்டும் சார்பெழுத்துக்கள் எனக் குறிப்பிட்டா

---

42. "லளமெய் திரிந்த னணமுன் மகாரம்
நைந்தீ ரொற்றும் செய்யு ளுள்ளே." —நன்-120

43. "அ ஐ முதலிடை ஒக்கும் சஞய முன்." —நன்-123

44. "ஐகான் யவ்வழி நவ்வொடு சில்வழி
ஞஃகான் உறழும் என்மரும் உளரே," —நன்-124

45. "லள வீற் றியைபினும் ஆய்த மஃகும்," —நன்-97

லும் மொழிமரபில் அளபெடை; மகரக் குறுக்கம், ஐகார ஔகாரக் குறுக்கங்கள் இவை மாத்திரை குறைதலும் மிகுதலும் இவற்றின் சார்பும் கூறியுள்ளார். தனிமொழிக்கண் வரும் மகரக் குறுக்கத்தைப் புள்ளி மயங்கியலிலும் கூறுவர். இவையே நன்னூலார் சார்பு எழுத்துக்கள் என விரிவுபடுத்துவதற்குத் துணையாயின.

# 3. பிறப்பியல்

1. ஒலியே எழுத்தாகும். உள்ளிருந்து எழும் காற்று ஒலியாக மாறி அவை மொழிக்குக் காரணம் ஆகின்றன. உந்தி இடமாகக் கொண்டு எழுப்பப்படும் காற்றுத் தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைத்துப் பல்லும் இதழும் நாவும் மூக்கும் அண்ணமும் பொருந்திப் பல்வேறு வடிவமாக எழுத்தின் ஒலிவடிவம் அமையும்.[1]

2. உயிர் ஒலிகள் :—உயிர் ஒலிகள் மிடற்றை இட மாகக் கொண்டு பிறக்கும்.[2] அ ஆ வாய் அங்காத்தலை

---

1. "உந்தி முதலா முந்துவளி தோன்றித்
தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇப்
பல்லும் இதழும் நாவு மூக்கும்
அண்ணமும் உளப்பட எண்முறை நிலையான்
உறுப்புற் றமைய நெறிப்பட நாடி
எல்லா எழுத்தும் சொல்லும் காலைப்
பிறப்பின் ஆக்கம் வேறுவேறு இயல
திறப்படத் தெரியும் காட்சியான." —தொல்–83

"நிறையுயிர் முயற்சியின் உள்வளி துரப்ப
எழும்அணுத் திரள்ஊரம் கண்டம் உச்சி
மூக்குற்று இதழ்நாப் பல்அணத் தொழிலின்
வெவ்வேறு எழுத்தொலியாய் வரல் பிறப்பே." —நன்-74

2. "அவ்வழி
பன்னீ ருயிரும் தந்நிலை திரியா
மிடற்றுப் பிறந்த வளியின் இசைக்கும்." —தொல்–84

"அவ்வழி—
ஆவி இடைமை இடம்மிடறு ஆகும்
மேவும் மென்மை மூக்கு உரம்பெறும் வன்மை."
—நன்–75

உடைய.[3] இ, ஈ, எ, ஏ, ஐ, ஆகிய இவை அங்காப் போடு அண்பல்லே நாமுதல் விளம்பு உறப்பிறக்கும்.[4] உ ஊ ஒ ஓ ஔ இவை இகழ் குவி உயிர்களாகும்.[5]

உயிர் ஒலிகளுள் சிற்சில வேறுபாடுகள் உள்ளன. நா உயரம் பற்றி ஒன்று, மற்ருென்றனேடு மாறுபடும். தத்தம் திரிபே சிறிய என்பர் தொல்காப்பியனர்.[6] எடுத்தல் படுத்தல் நலிதல் ஆகிய முயற்சி வேறுபாடு உளது என்று நன்னூல் கூறும்.[7] இச் செய்தி உயிருக்கும் மெய்க்கும் பொதுவான செய்தியாகும்.

---

3. "அவற்றுள்—
அ ஆ ஆயிரண்டு அங்காந்து இயலும்." —தொல்–85

"அவற்றுள்—
முயற்சியுள் அஆ அங்காப்புடைய." —நன்-76

4. "இஈ எஏ ஐயென இசைக்கும்
அப்பால் ஐந்தும் அவற்ருே ரன்ன

"அவைதாம்
அண்பல் முதல்நா விளிம்புறல் உடைய." —தொல்–86

"இஈ எஏ ஐ அங்காப்போடு
அண்பல் முதல்நா விளம்புற வருமே." —நன்–77

5. "உ ஊ ஒஓஔவென இசைக்கும்
அப்பால் ஐந்தும் இதழ்குவிந்து இயலும்." —தொல்-87
"உ ஊ ஒஓஔ இதழ் குவிவே." —நன்–78

6. "தத்தம் திரிபே சிறிய வென்ப." —தொல்–88

7. "எடுத்தல் படுத்தல் நலிதல் உழப்பில்
திரிபும் தத்தமிற் சிறிதுள வாகும்." —நன்–88

**3. மெய் யொலிகள் : கங முதல்நா அண்ணத்தையும் சஞ இடைநா அண்ணத்தையும் டண நுனிநா அண்ணத்தையும் உறப் பிறக்கும்.**[8]

**அண்பல் அடியை நாநுனி பரந்து மெய்யுற ஒற்றத் த, ந பிறக்கும்.**[9] **அண்ணத்தை நாநுனி நன்ருக உற றன வரும்.**[10]

**மேல் இதழும் கீழ் இதழும் பொருந்த ப ம பிறக்கும்**[11] **பல்லும் இதழும் பொருந்த வகாரம் பிறக்கும்**[12]. **மிடற்று எழும் ஓசை அண்ணத்தை உரச ய பிறக்கும்**[13].

---

8. "ககார ஙகாரம் முதல்நா அண்ணம்:" —தொல்–89
"சகார ஞகாரம் இடைநா அண்ணம்." —தொல்–90
"டகார ணகாரம் நுனிநா அண்ணம்." —தொல்–91
"கஙவும் சஞவும் டணவும் முதலிடை
நுனிநா அண்ணம் உறமுறை வருமே." —நன்–79

9. "அண்ணம் நண்ணிய பல்முதல் மருங்கில்
நாநுனி பரந்து மெய்யுற ஒற்றத்
தாமினிது பிறக்கும் தகார நகாரம்." —தொல்-93
"அண்பல் அடிநா முடியுறத் தந வரும்·" —நன்–80

10. "அணரி நுனிநா அண்ணம் ஒற்ற
றஃகான் னஃகான் ஆயிரண்டும் பிறக்கும்." —தொல்-94
"அண்ண நுனிநா நனியுறிற் றன வரும்." —நன்–86

11. "இதழியைந்து பிறக்கும் பகார மகாரம்." —தொல்–87
"மீகீழ் இதழுறப் பம்மப் பிறக்கும்." —நன்-81

12. "பல்லிதழ் இயைய வகாரம் பிறக்கும்." —தொல்-98
மேற்பல் இதழுற மேவிடும் வவ்வே." —நன்-85

13. "அண்ணம் சேர்ந்த மிடற்றெழு வளியிசை
கண்ணுற்று அடைய யகாரம் பிறக்கும்." —தொல்-99
"அடிநா அடியணம் உறயத் தோன்றும்." —நன்–82

**4. உயிரும் யகரமும் மிடற்று ஒலிகள் என்பர் தொல்காப்பியனார். நுனி நா அண்ணத்தை நோக்கிச் சென்று வருட ரகரமும் ழகரமும் பிறக்கும். நாவிளிம்பு வீங்கி அண்பல்லை ஒற்ற லகரமும் அண்ணத்தை வருட ளகரமும் பிறக்கும்.[14]**

**5. மெல்லெழுத்துக்களுக்கும் வல்லெழுத்துக்களுக்கும் உறுப்பு முயற்சி ஒன்றே; எனினும் மெல்லெழுத்துக்கள் மூக்கு வழியாகச் செல்லும் காற்று ஓசையால் பிறக்கும்.[15]**

**6. சார்பொலிகளாகிய குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தம் மூன்றும் தத்தம் சார்பிற் பிறப்பொடு பொருந்தி ஒத்த காட்சியில் தம்மியல்பு இயலும் என்பர்.**

**"சார்பெழுத்து ஏனவும் தம்முதல் அனைய" என்பர் நன்னூலார். சார்பெழுத்துக்கள் தம் முதல் எழுத்துக்களின் முயற்சியையே பெறும் என்பதும் தத்தம் இடச்**

---

14. "நாவிளிம்பு வீங்கி அண்பல் முதலுற
ஆவயின் அண்ணம் ஒற்றவும் வருடவும்
லகார ளகாரம் ஆயிரண்டும் பிறக்கும்." —நன்-84

"அண்பல் முதலும் அண்ணமும் முறையின்
நாவிளிம்பு வீங்கி ஒற்றவும் வருடவும்
லகார ளகாரம் ஆயிரண்டும் பிறக்கும்." —நன்-84

15. "மெல்லெழுத்து ஆறும் பிறப்பின் ஆக்கம்
சொல்லிய பள்ளி நிலையின வாயினும்
மூக்கின் வளியிசை யாப்புறத் தோன்றும்." —தொல்-100

"அவ்வழி—
ஆவி இடைமை இடம்மிடறு ஆகும்;
மேவும் மென்மை மூக்கு; உரம்பெறும் வன்மை."
—நன்–75

சார்போடு பொருந்தி அவற்றோடு இயைந்து ஒன்றாகப் பிறக்கும் என்பதும் கருத்தாகும்.

7. எனவே குறில் உகரம் ஏனைய உகரத்தின் முயற்சியையும், குறில் இகரம் ஏனை இகரத்தின் முயற்சியையும், ஆய்தம் அதன் திரிபுக்குக் காரணமாகிய லளவ இவற்றின் நலிந்த முயற்சியையும் பெற்று அவை சாரும் நிலைக்களனாகிய வல்லெழுத்தோடு இயைந்து ஒரு சேர ஒரே எழுத்தாகக் காட்சி அளித்துத் தமக்குரிய தனி இயல்போடு பிறக்கும் என்பதாம். [16]

8. நன்னூல் தரும் சிறப்புச் செய்திகள்:

(1) பிறப்பு முயற்சியில் உயிரும் யகரமும் அன்றி ஏனைய இடை எழுத்துக்கள் அனைத்தும் மிடற்றுப் பிறக்கும் என்பர். (நன் 75)

(2) ஆய்தத்திற்கு இடம் தலை; அங்கா முயற்சி என்பர். [17]

(3) வன்மை உரம் பெறும் என்பர்.

(4) தொல்காப்பியனார் தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலை இ என்பர். தலை என்பது மிடற்றுக்கு மேற்பட்ட பகுதி என்பது பொருளாகும்; நெஞ்சு என்பது மிடற்றுக்கும் கீழ்ப்பகுதி என்று கொள்ளலாம். நெஞ்சு என்பதனையே நன்னூலார் உரம் என்பர்.

---

16. "சார்ந்துவரின் அல்லது தமக்கியல்பு இலவெனத்
தேர்ந்துவெளிப் படுத்த வேனை மூன்றும்
தத்தம் சார்பில் பிறப்பொடு சிவணி
ஒத்த காட்சியில் தம்மியல்பு இயலும்." —தொல்-101

17. "ஆய்தக்கு இடம்தலை அங்கா முயற்சி
சார்பெழுத்து ஏனவும் தம்முதல் அனைய." —நன்-87

'உரம் கண்டம் உச்சி மூக்கு உற்று' என்று அவர் கீழிருந்து மேற்பகுதியைக் குறிப்பிடுவர்.

தொல்காப்பியனுர் தலை, மிடறு, நெஞ்சு என்று மேலிருந்து கீழ் குறிப்பிடுகின்றுர்.

உரம் என்பது நெஞ்சுப் பகுதியை உணர்த்துவதாகும். கண்டம் என்பது மிடற்றுப் பகுதியாகும். உச்சி என்பது தலையாகிய வாய்ப் பகுதி அத்துணையையும் உணர்த்தும் என்பதாம்.

மிடற்று ஒலிகள் என்பவை யரலவழள என்பது நன்னூலார் கருத்தாகும். கசடதபற நெஞ்சுஒலிகள் என்பதாகிறது. அதாவது வேறு எந்தவித மாறுதலும் நிகழாமல் (மிடற்று ஒலிகளாகவும், மூக்கு ஒலிகளாகவும் அமையாமல்) வெளிப்படுவது என்பது பொருளாகும், ங ஞ ண நமன என்பது மூக்கு ஒலிகள் ஆகும். இதுவே நன்னூலார் தரும் விளக்கமாகும். ஆய்தம் தலைப் பகுதியிலேயே சிறப்பு நிலை அடைகிறது. அதாவது மூக்கிலும், மிடற்றிலும் அவை எந்த வடிவும் பெறுவது இல்லை என்பதாம். மிடற்று ஒலிகளை ஒலிப்பு ஒலிகள் (Voiced) என்பர். மூக்கு ஒலிகளை (Nasals) மூக்கு ஒலிகள் என்பர். ஏனைய ஒலிகளை வாய்ஒலிகள் (Orals) என்பர்.

கசடதபற மிடற் ருெலியாவது இல்லை என்பது ஆகிறது. இவை ஒலிப்புப் பெருத ஒலிகளாக இயங்கின என்பது உரம் பெறும் (நெஞ்சு நிலைத்தல்) என்னும் கருத்து உணர்த்துகிறது. இவற்றை ஒலிப்பில் ஒலிகள் (Voiceless sounds) என்றும், வெறும் காற்று ஒலிகள் (Breathed sounds) என்றும் கூறுவர்.

தமிழ் இலக்கண நூல்கள் வல்லொலியில் ஒலிப்பில் ஒலிகளையே உணர்த்தியுள்ளன. மிடற்று ஒலிப்புப் பெற்றதாகக் குறிப்பிடப்படவில்லை. எனவே இவ்வேறுபாட்டைத் தமிழ் இலக்கண நூல்கள் காட்டவில்லை என்பது குறிப்பிடத் தக்க செய்தியாகும்.

# 4. பதவியல்

1. பதவியல் என்ற ஒரு தனியியலைத் தொல்காப்பியர் வகுக்கவில்லை; எனினும் அச்செய்திகளை அவர் சொல்லதிகாரத்தில் கூருமல் இல்லை. கிளவியாக்கம், வினையியல், பெயரியல், இடையியல், உரியியல் என இவ் ஐந்து இயல்களிலும் பதவியல் செய்திகளை முறைப்படக் கூறியிருக்கின்ருர்.

2. தமிழ்ச் சொற்களில் பால்பாகுபாடு இன்றியமையாதது. உயர்திணை, அஃறிணை என்று பிரிந்து இயங்கி அவற்றிற்கு ஏற்பப் பெயரும் வினையும் சொற்ருெடர் முடிவு கொள்கிறது.

3. எழுவாயும் பயனிலையும் பால் ஈறுகள் ஒட்டி இயைபு கொள்ளும் என்பது தொல்காப்பியர் வற்புறுத்தும் கருத்தாகும்.

4. சொற்களின் உறுப்புக்களாக நன்னூல் இவ்வாறினைக் காட்டும். பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என்று இவற்றைப் பகுபத உறுப்புக்களாகக் காட்டும்.[1]

5. பகுதி : தமிழ்ச் சொற்கள் பண்பு, செயல் என்ற இவ்விரு அடிச்சொற்களைக் கொண்டு இயங்கும்.

---

1. "பகுதி விகுதி இடைநிலை சாரியை
சந்தி விகாரம் ஆறினும் ஏற்பவை
முன்னிப் புணர்ப்ப முடியும் எப்பதங்களும்." —நன்-133

இந்த அடிப்படையை நன்னூலார் தெளிவாகக் காட்டி யுள்ளார்.

விகுதி, இடைநிலை முதலியன நீங்கி எஞ்சி நிற்கும் முதல்நிலை பகுதியாகும். இவை பண்புப் பகுதி எனவும், செயல் பகுதி எனவும் நன்னூல் பிரித்துக் காண்கிறது.

பண்புச் சொற்கள் அடையாகுங்கால் மாற்றம் பெறுகின்றன. பண்புச் சொற்களில் மாற்று வடிவங்கள் மிகுதியாக வழங்குகின்றன. இவற்றுள் மை பெற்ற வடிவத்தை அடிப்படையாகக் கொண்டு ஏனையவற்றை அதன் திரிபுகள் என நன்னூல் காட்டும்.

"ஈறுபோதல் இடையுகரம் இய்யாதல்.
ஆதிநீடல் அடியகரம் ஐயாதல்
தன்னொற்று இரட்டல் முன்னின்ற மெய்திரிதல்
இனமிகல் இனையவும் பண்பிற்கு இயல்பே."

—நன் 136

இக்கருத்துத் தொல்காப்பியத்தில் காணப்பட வில்லை.

இது நன்னூலார் தரும் தனிச் செய்தியாகும்.

வினை அடிச் சொற்களைத் தொல்காப்பியனார் வினை யியலில், 'செய்' என்னும் வாய்பாட்டில் அமைத்துக் காட்டி இருக்கிறார். வினையெச்ச வாய்பாடுகளையும் பெயரெச்ச வாய்பாடுகளையும் தொல்காப்பியனார் 'செய்' என்னும் வாய்பாடு கொண்டு விளக்குகின்றார். இதுவே வினையின் பகுதியாகும். இதனை நன்னூலார் சொல்லின் ஈற்று எழுத்து அடிப்படையில் 23 வடிவங்களில் காட்டுவர். அகர ஈற்றில் இறுவது நட; ஆகார ஈற்றில் இறுவது வா; இகரத்தில் இறுவது மடி; இவ்வாறே

ஏனையவும் அமைத்துள்ளார்;[2] தொல்காப்பியஉரியியலில் பண்பு அடிச் சொற்களுக்கு மட்டும் விளக்கம் கிடைக்கிறது. இசையினும் பண்பினும் குறிப்பினும் தோன்றி என்பர்.

செய்வி, செய்விப்பி முதலியன பிறவினை விகுதிகளாம்.

வினைப்பகுதிகளும் பண்புப் பகுதிகளைப் போல் சூழ்நிலைக்கு ஏற்ப மாறிவரும். வா, வரு, வந் என்பன வா என்பதன் மாற்று வடிவங்களாம்; தா, தரு, தந் என்பன தா என்பதன் மாற்று வடிவங்களாம். இக்கருத்தை உட்கொண்டே நன்னூலார் "விளம்பிய பகுதி வேருதலும் விதியே என்று கூறியுள்ளார்.[3]

6- விகுதிகள் :

"அன்ஆன் அள்ஆள் அர்ஆர் பம்மார்
அஆ குடுதுறு என்ஏன் அல்அன்
அம்ஆம் எம்ஏம் ஓம்மொ டும்மூர்
கடதற ஐஆய் இம்மின் இர்ஈர்
ஈயர் கயவும் என்பவும் பிறவும்

---

2. "நட வா மடி சீ விடுகூ வேவை
நொப்போ வெளவுரிஞ் உண் பொருந் திருந்தின்
தேய்பார் செல்வவ் வாழ்கேள் அஃகென்று
எய்திய விருபான் மூன்றும் ஈற்றவும்
செய்யென் ஏவல் வினைப்பகாப் பதமே." —நன்-137

3. "விளம்பிய பகுதி வேருதலும் விதியே" என்ற நூற்பாவிற்கு உரையாசிரியர்கள் வேறு பொருள் கொள்வர், நட என்பது நடத்துவி நடத்துவிப்பி என மாறுவதைக் காட்டுவர். இவையும் வினைப் பகுதியின் மாற்று வடிவங்கள் ஆகும்.

வினையின் விகுதி பெயரினும் சிலவே." —நன் 140

என்பர் நன்னூலார்.

தொல்காப்பியர் கிளவியாக்கத்திலும் வினையியலி லும் பால் விகுதிகளைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

"னஃகான் ஒற்றே ஆடூஉ அறிசொல்" —தொல் 5

"ளஃகான் ஒற்றே மகடூஉ அறிசொல்" —தொல் 6

"ரஃகான் ஒற்றும் பகர இறுதியும்
மாரைக் கிளவியும் உளப்பட மூன்றும்
நேரத் தோன்றும் பலரறி சொல்லே," —தொல் 7

"ஒன்றறி கிளவி தறட ஊர்ந்த
குன்றிய லுகரத்து இறுதியாகும்." —தொல் 8

"அ ஆ வ என வரூஉம் இறுதி
அப்பால் மூன்றே பலவறி சொல்லே." —தொல் 9

இப்பதினொரு எழுத்தும் வினையொடு தோன்றும். வினைப் பால் கிளவியும் பெயர்ப் பால் கிளவியும் மயங்குதல் கூடா எனவும் கூறியுள்ளார்.[4]

எனவே இச் சூத்திரங்களின் வாயிலாக ன, ள, ர, மார், துறுடு, அ ஆ வ ஆகிய இவை படர்க்கையிடத்து ஐம்பால் விகுதிகள் என அறிவிக்கின்றார்.

மற்றும் உயர்திணைத் தன்மைப் பன்மை வினை விகுதிகளாக அம், ஆம், எம், ஏம், கும், டும், தும்,றும்

---

4. "இருதிணை மருங்கின் ஐம்பால் அறிய
ஈற்றில் நின்றிசைக்கும் பதினோரெழுத்தும்
தோற்றம் தாமே வினையொடு வருமே." —தொல்-10

'வினையின் தோன்றும் பாலறி கிளவியும்
பெயரின் தோன்றும் பாலறி கிளவியும்
மயங்கல் கூடா தம்மரபினவே.' —தொல்-11

என்பன வற்றையும்[5] உயர்திணைத் தன்மை ஒருமை விகுதிகளாக என், ஏன், அல், கு, டு, து, று, என்பவற்றை யும் வினையியலில் காட்டுவர்[6]

அன் ஆன் அள் ஆள் என்னும் நான்கும் படர்க்கை உயர்திணை ஒருமை விகுதிகளாகக் கூறுவர் தொல்காப் பியனார்.[7]

அர், ஆர், ப, மார் இவை உயர்திணைப் பல்லோர் படர்க்கை என்பர்.[8]

அ, ஆ, வ என வரும் மூன்றும் அஃறிணைப் பலவின் படர்க்கை என்பர்.[9]

---

5. "அவைதாம்
அம்ஆம் எம்ஏம் என்னும் கிளவியும்
உம்மொடு வரூஉங் கடதற என்னும்
அந்நாற் கிளவியொடு ஆயெண் கிளவியும்
பன்மை உரைக்கும் தன்மைச் சொல்லே."
—தொல்-202

6. "கடதற என்னும்
அந்நான்கு ஊர்ந்த குன்றியல் உகரமொடு
என் ஏன் அல் என வரூஉம் ஏழும்
தன்வினை உரைக்கும் தன்மைச் சொல்லே."
—தொல்-203

7. "அன்ஆன் அள்ஆள் என்னும் நான்கும்
ஒருவர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே."—தொல்-205

8. "அர்ஆர் ப என வரூஉம் மூன்றும்
பல்லோர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே."
—தொல்-206

"மாரைக்கிளவியும் பல்லோர் படர்க்கை
காலக் கிளவியொடு முடியும் என்ப." —தொல்-207

9. "அஆ வ என வரூஉம் இறுதி
அப்பால் மூன்றே பலவற்றுப் படர்க்கை,"—தொல்–216

அஃறிணை ஒன்றன் படர்க்கை து, று, டு என்பர்.[10]

முன்னிலை ஒருமை விகுதிகளாக இ ஐ ஆய் என்பவற்றையும் பன்மை விகுதிகளாக இர் ஈர் மின் என்பவற்றையும் சுட்டிக் காட்டுவர் [11]

மேலும் தொல்காப்பியனார் உரிச் சொற் கிளவியும் பண்புத் தொகைகளும் வினைத்தொகைகளும் எண்ணுத் தொகைப் பெயர்களும் மரூஉ முடிபுகள் என்றும், அவை புணரியல் நிலையிடை உணரத் தோன்றா என்றும் கூறுவர். எழு 482. "உணரத் தோன்றா" என்று கூறியவற்றிற்கு விளக்கம் தருவது பதவியலாகும்.

சிறப்பாக 11ம் நூற்றாண்டு நூலாகிய வீரசோழியமே 'பதவியல்' என்ற தலைப்பைப் புகுத்துவதற்குத் துணை செய்தது என்று கூறலாம். வடமொழி இலக்கண நெறியை ஒட்டிப் பதவியல் என்ற தலைப்பு அமைக்கப் பட்டுள்ளது. செய்தி தொல்காப்பியம் உணர்த்திய செய்திகளே யாகும். முறை வடமொழி இலக்கணங்கள் காட்டிய நெறியாகும் என்பது வீரசோழியம் தெளிவு படுத்துகிறது.

---

10. "ஒன்றன் படர்க்கை தறட வூர்ந்த
குன்றிய லுகரத்து இறுதி யாகும்." —தொல்-217

11. அவற்றுள், முன்னிலைக் கிளவி
இஐ ஆய் என வரூஉம் மூன்றும்
ஒப்பத் தோன்றும் ஒருவர்க்கும் ஒன்றற்கும்.
—தொல்- 223

இர்ஈர் மின் என வரூஉம் மூன்றும்
பல்லோர் மருகினும் பலவற்று மருங்கினும்
சொல்லோர் அனைய என்மனார் புலவர். —தொல்-224

12. "இருதிணை மருங்கின் ஐம்பால் அறிய
ஈற்றில் நின்றிசைக்கும் பதினோ ரெழுத்தும்
தோற்றம் தாமே வினையொடு வருமே." —தொல்-10
"வினையின் விகுதி பெயரினும் சிலவே." —நன்-140

வினையில் இவை தெளிவாக அமையும் என்பதும் ஒரு சில பெயர்களிலேயே இவை அறிய முடியும் என்ப தும் தொல்காப்பியரும் நன்னூலாரும் தெரிவிப்பன வாகும்.[12]

7. இடைநிலை : பகுதி, விகுதி பிரித்து இடைநின் றதை இடைநிலை என நன்னூலார் காட்டுவர். தொல் காப்பியர் இடைநிலை என்ற ஒரு கிளவியைக் காட்டிற் றிலர். அவரைப் பொறுத்தவரை பகுதி, விகுதி என்ற இரண்டு பாகுபாடுகளையே காட்டுவர். பெயர்ச் சொற் களில் பகுதி விகுதி பிரித்துக் காட்டும் தன்மை அவரிடம் காணப்படவில்லை. அதனால்தான் பண்புச் சொற்களின் மாற்றங்களை அவர் காட்டவில்லை. இப்பதினேரெழுத் தும் வினையொடு தாம் வரும் என்று கூறியதும் இக் கருத்துப்பற்றி என்க.

தொல்காப்பியர் கால இடைநிலைகளைப்பற்றி யாண்டும் கூறவில்லை. செய்த, செய்யும் என்பன மட்டும் முறையே இறப்பும் எதிர்வும் காட்டும் என்பார்.

குடுதுறு என்று கூறப்படும் அவற்றுள் பால் ஈறும் காலஈறும் இணைந்துள்ளன. விகுதியையும் இடைநிலை யையும் பிரித்துக் காணும் இயல்பு தொல்காப்பியத்தில் இல்லை.

விகுதிகளே பாலையும் காலத்தையும் காட்டிய வழக்கே தொல்காப்பியர் வாய்பாடுகள் வழியாகக் காட்டுவர். அவற்றை நன்னூலார் கீழ்வரும் நூற் பாவில் தெளிவு படுத்துவர்.

“றவ்வொடு உகர உம்மைநிகழ்பு அல்லவும்
தவ்வொடு இறப்பும் எதிர்வும் டவ்வொடு
கழிவும் கவ்வொடு எதிர்வும்மின் னேவல்
வியங் கோளிம்மா ரெதிர்வும் பாந்தஞ்
செலவொடு வரவும் செய்யும்நிகழ்பு எதிர்வும்
எதிர்மறை மும்மையும் ஏற்கும் ஈங்கே.” —நன்–145

இவை தொல்காப்பியர் காட்டும் வாய்பாடுகளை ஒட்டியும் வழக்கை ஒட்டியும் அமைக்கப்பட்ட நூற்பாவாகும்.

நன்னூலார் கால இடைநிலைகள் என ஒரு சில வற்றைத் தெளிவாகக் காட்டுவர்.

த், ட், ற், இன்—இறப்பு.[13]

ஆநின்று, கின்று, கிறு—நிகழ்வு.[14]

ப, வ—எதிர்வு.[15]

8. சாரியை, சந்தி, விகாரம் என்பன புணர் மொழிக்கண் ஏற்படும் மாறுதல்களாகும். இவை புணரியலில் விளக்கிக் கூறப்படுகின்றன.

9. வடசொற்கள் தமிழில் வழங்குமிடத்து ஏற்படும் மாறுதல்களை நன்னூலார் காட்டுவர். வீரசோழியம் இதற்கு வழிகாட்டுகிறது.

"வடசொற்கிளவி வடஎழுத்து ஒரீஇ எழுத்தோடு புணர்ந்த சொல்லாகும்மே." என்பர் தொல்காப்பியனார். தொல்-சொல் 401,

எனவே வடசொற்கள் தமிழாகுங்கால் தமிழ் ஒலிக் கேற்ப மாற்றி இசைக்கப்படும் என்பது அவர்காட்டும் வழியாகும். இவ்வடிப்படையை உட்கொண்டு நன்னூலார் வடஎழுத்துக்களைத்தமிழ் எழுத்துக்களைக்கொண்டு எழுதும் முறையினை விளக்கமாகத் தருவர்.

---

13. "தடறவொற்று இன்னே ஐம்பால் மூவிடத்து
இறந்த காலம் தரும் தொழில் இடைநிலை." —நன்-142

14. "ஆநின்று கின்று கிறு மூவிடத்தின்
ஐம்பால் நிகழ்பொழுது அறை வினைஇடைநிலை."
—நன்–143

15. "பவ்வ மூவிடத்து ஐம்பால் எதிர்பொழுது
இசை வினைஇடைநிலையாம்இவை சிலவில. —நன்-144

தமிழுக்கே உரிய சிறப்பெழுத்துக்களாக ற, ன, ழ, எ என இவற்றைக் கூறுவர்.[16] மற்றும் வட எழுத்துக்களுள் ரு என்பது இயாகவும் (ருஷபம்—இடபம்) (ம்ருகம்—மிருகம்), வர்க்க எழுத்துக்கள் அவ்வவ் எழுத்துக்களாகவும், ஜ என்பதுயகரமாகவும், ஶ (S) என்பது சயாகவும், (சிவன், சிவா.) (தேசம்—தேயம்) ச, யவாகவும் திரிந்தன. ஷ சவாகவும், டவாகவும் (ஷண்முகம்—சண்முகம்; விஷம்—விடம்)ஸ என்பது சவாகவும், தவாகவும் (வாஸம்-வாசம்) (மாசம்-மாதம்) ஹ என்பது அகரமாகவும்ககரமாகவும் (ஹரன் -அரன்; மோஹம்-மோகம்), க்ஷ என்பது இரட்டித்த ககரமாகவும் (பக்ஷம்-பக்கம்) ஆகாரஈறு ஐகார ஈருகவும் (மாலா-மாலை;) ஈகாரஈறு இகர ஈருகவும் (புரீ-புரி) மாறும் என்பர்.

மற்றும் ய, ர, ல மொழிமுதலாகத் தமிழில் வருவதில்லை. அதனால் வடசொற்கள் தமிழில் வரும்பொழுது யகரத்திற்கு இகரத்தையும் (யக்கம்-இயக்கம்) லகரத்திற்கு இகரமும் உகரமும் (லாபம்—இலாபம்; லோபம்—உலோபம்) ரகரத்திற்கு அ, இ, உ மூன்றும் (ரங்கன்—அரங்கன்; ராமன்—இராமன்; ரோமம்—உரோமம்) வரும் என்பர்.

வடமொழியில் சில ஒலிகள் இணைந்து இயலும். அவ்வாறு இணைந்து இயல்வது தமிழ்மொழியின் ஒலி முறைக்கு ஒவ்வாதது ஆகும். எனவே அதனைத் தவிர்க்க உயிரொலிகளைத் துணையாக இடையில் சேர்த்து ஒலிப்பர். (த்யாகம்-தியாகம்; வாக்யம்-வாக்கியம்; பத்மம்—பதுமம்; அர்த்தம்—அருத்தம்.

16. "றனழ எஒவ்வும் உயிர்மெய்யும் உயிரளபு
அல்லாச் சார்பும் தமிழ்பிற பொதுவே." —நன்-150

# 5. புணரியல்

அறிமுகம்:— புணரியல் ஆறு இயல்களில் கூறப்படு கின்றன.

(1) புணரியல்:— புணரியல் என்னும் தலைப்பில் புணரியல் நியதிகளைத் தொகுத்துத் தருகின்றது. அல்வழி வேற்றுமைப் பொருளில் உயிரும் மெய்யும் புணரும் பொழுது திரிதல், மிகுதல், கெடுதல், இயல்பு ஆகிய மாற்றங்கள் நிகழும். எழுத்துப்பேறும் சாரியை மிகுதலும் மருஉ முடிபும் புணரியலில் நிகழும் என்பதும் கூறப்படுகிறது. சிறப்பாகச் சாரியைகள் பெறும் மாற்று வடிவங்களையும் இவை மாறும் சூழ்நிலைகளையும் கூறுகின்றது; எழுத்தின் சாரியைகளையும் கூறுகின்றது. பொதுவாகப் புணரியல் நியதிகளையும் அவற்றிற்குக் கருவியாகப் பயன்படும் சாரியைகளையும் விளக்கிக் கூறுகின்றது. எனவே இது புணரியல் என்னும் தலைப்பைப் பெறுவது ஆயிற்று.

(2) தொகை மரபு:— தொல்காப்பியர் காலத்து வழங்கிய வழக்கியல் மரபுகளைத் தொகைப்படுத்திக் கூறுகின்றது. மரபு என்பது வேறு; விதி என்பது வேறு. விதி என்பது சூழ்நிலைபற்றி அமையும் ஒழுங்கான நியதி பற்றியதாகும், மரபு என்பது வழக்கை ஒட்டியதாகும். மரபில் வழங்கிய பல்வேறு வடிவங்களைத் தொகை மரபு தொகுத்துத் தருகின்றது. அதனால்தான் இது தொகை மரபு எனக் கூறப்பட்டது.

(3) உருபியல்:—வேற்றுமைத் தொடரில் உருபுகள் பெயர்களோடு புணர்கின்றன. அவை சாரியைகளைப் பெற்றுப் புணர்வது அதன் இயல்பாகும். உருபுகளை ஒட்டி அமையும் சாரியைகளின் இடச்சார்பு ஈண்டுக் கூறப்படுகிறது.

(4) உயிர் மயங்கியல்:—நிலைமொழி ஈற்றுஉயிர் பிற சொற்களோடு பொருந்தும் இடத்தையும் பிற எழுத்துக்கள் பெறும் திரிபுகளையும் கூறுகின்றது. உயிர்மெய்யிலும் உயிரே நின்று உயிர்மெய்யாகும். ஏனைய உயிரோடும் பொருந்தி நிற்குமேயன்றிப் புணர்ந்து அது தன்னை இழந்து பிறவற்றோடு ஒன்றாகி விடுவதில்லை.

(5) புள்ளி மயங்கியல்:—ஈற்றில் புள்ளிவடிவமாக நிற்கும் மெய்கள் பிறவற்றோடு பொருந்தும் நிலையைக் கூறுகிறது. மயங்கியல் என்பது பிறவற்றோடு நிற்றல் என்பதாகும், உடனிலை மெய்ம்மயக்கம், வேற்றுநிலை மயக்கம் முதலியன காண்க.

(6) குற்றியலுகரப் புணரியல்:—குற்றியல் உகரம் நிலைமொழியோடும் வருமொழியோடும் இயைவதால் இது புணரியல் எனக் கூறப்பட்டது. குற்றியலுகரம் ஒரு சார்பு எழுத்தே தவிர முதல் எழுத்து அல்ல. அதனால் அது பிறவற்றோடு சாரும் சார்பும் அதனால் ஏற்படும் மாறுதல்களும் புணரியல் எனக் கூறப்பட்டது.

நூற்செய்தி:—

1. முதலும் ஈறும்:-முதலும் சார்பும் என எழுத்துக்கள் முப்பதும் மூன்றும் ஆகும். இவற்றுள் இருபத்திரண்டு எழுத்துக்கள் மொழிக்கு முதலில் வரும். உயிர் 12; மெய் 18; குறில் உகரம் ஒன்று (நுந்தை) ஈற்றில் இரு

பத்து நான்கு வரும். உயிர் 12; மெய் 11; குறில் உகரம் 1 இவ்வெழுத்துக்கள் உயிரும் மெய்யும் எனஇருவகையாக வழங்கும்.[1]

2. **மூன்று இயல்கள்** :—அவற்றுள் மெய்யீறு எல்லாம் புள்ளியொடு நிலைபெறும்; அவை மெய்யீறுகளாக நிற்கும். குற்றியலுகரமும், புள்ளியீறுபோல உயிர் ஏற இடங்கொடுத்து நிற்கும். உயிர்மெய்யீற்றுச் சொற்கள் உயிர் ஈற்றின் இயல்பினதாக நிற்கும். எனவே, சொற்களின் ஈறுகளை உயிர் மயங்கியல், புள்ளியியல், குற்றியலுகரப் புணரியல் என்னும் தலைப்புகளில் பிரித்து அறிய இயலும்[2].

3: **எழுத்து நிலையில் சொற்கள்**:—உயிர் முன் உயிரும், உயிர்முன் மெய்யும், மெய்ம்முன் உயிரும், மெய்ம்முன் மெய்யும் என நிலைமொழியும் வருமொழியும் புணர்வு பெறும்[3].

---

1. மூன்றுதலை யிட்ட முப்பதிற்று எழுத்தின்
இரண்டுதலை யிட்ட முதலாகு இருபஃது
அறுநான்கு ஈறொடு நெறிநின்று இயலும்
எல்லா மொழிக்கும் இறுதியும் முதலும்
மெய்யே உயிர்என்று ஆயீ ரியல." —தொல்-103

2. "அவற்றுள்,
மெய்யீ றெல்லாம் புள்ளியொடு நிலையல்."—தொல்-104
"குற்றியல் உகரமும் அற்றென மொழிப."—தொல்-105
"உயிர்மெய் ஈறும் உயிரீற்று இயற்றே." —தொல்-106

3. "உயிரிறு சொன்முன் உயிர்வரு வழியும்
உயிரிறு சொன்முன் மெய்வரு வழியும்
மெய்யிறு சொல்முன் உயிர்வரு வழியும்
மெய்யிறு சொன்முன் மெய்வரு வழியும்என்று
இவ்வென அறியக் கிளக்குங்காலை
நிறுத்த சொல்லே குறித்து வருகிளவிஎன்று
ஆயீ ரியல புணர்நிலைச் சுட்டே." —தொல்-107

4. **சொல் நிலையில் புணர்வு நிலை:**—சொல் நிலையில் இத்தொடர்களைக் காணும்பொழுது அவற்றைப் பெயரொடு பெயரும், பெயரொடு தொழிலும், தொழிலொடு பெயரும், தொழிலொடு தொழிலும் இயைந்து நிற்கும் நிலைகளைக் காண இயலும்.

5. **திரிபும் இயல்பும் :**—அவ்வாறு புணரும்பொழுது அவற்றைத் திரிபுப் புணர்ச்சி எனவும் இயல்புப் புணர்ச்சி எனவும் காண இயலும். அவற்றுள் மெய்பிறிதாதல், மிகுதல், குன்றல் என்பன திரிபு ஆகும். நிலைமொழியும் வருமொழியும் தனித்து இயைவதோடு அன்றி அடையொடு தோன்றினும் அவை புணர் நிலைக்கு உரியனவாகும்.[4] இப்புணர்வுகளுள் ஒன்றுக்கு மேற்பட்டவை மரூஉ முடிபு ஆகும். அவையும் புணரியல் நியதிகளில் ஒன்றுகும்[5].

---

அவற்றுள்
நிறுத்த சொல்லின் ஈறுஆகு எழுத்தொடு
குறித்துவரு கிளவி முதலெழுத்து இயையப்
பெயரொடு பெயரைப் புணர்க்குங் காலும்
பெயரொடு தொழிலைப் புணர்க்குங் காலும்
தொழிலொடு தொழிலைப் புணர்க்குங் காலும்
மூன்றே திரிபிடன் ஒன்றே இயல்பு என
ஆங்குஅந் நான்கே மொழிபுணர் இயல்பே—தொல்-108

அவைதாம்
மெய்பிறி தாதல் மிகுதல் குன்றல் என்று
இவ்வென மொழிப திரியு மாறே —தொல்-109

4. "நிறுத்த சொல்லுங் குறித்துவரு கிளவியும்
அடையொடு தோன்றினும் புணர்நிலைக் குரிய."
—தொல்-110

5. "மருவின் தொகுதி மயங்கியல் மொழியும்
உரியவை யுளவே புணர்நிலைச் சுட்டே." —தொல்-111

6. **சிறப்புச் செய்திகள் :**—வேற்றுமையிலும் அவ்வழியிலும் தொடர்கள் அமையும்பொழுது எழுத்து மிகுதலும், சாரியை மிகுலும் குறிப்பிடத் தக்கவையாகும். வேற்றுமை உருபுகள் ஐ, ஒடு, கு, இன்; அது, கண் என்பனவாகும். அவை பெயர்களோடு புணரும்பொழுது எழுத்து மிகுதலும் சாரியை மிகுதலும் குறிப்பிடத் தக்கனவாம்[6].

7. பெயரொடு உருபு புணரல்

(1) வல்லெழுத்தை முதலாக உடைய வேற்றுமை உருபுகளாகிய கு, கண் என்பன பெயர்களோடு புணரும் பொழுது வல்லொற்றுயினும் மெல்லொற்றுயினும் மிகுதல் வேண்டும்.

மணி+கு—மணிக்கு; தீ+கண்—தீக்கண்; வேய்+கு—வேய்க்கு; ஊர்+கண்—ஊர்க்கண்; தம்+கண்—தங்கண்; நும்+கண்—நுங்கண்[7].

---

6. "மெய்யுயிர் முதலீறும் இருபதங்களும்
தன்னொடும் பிறிதொடும் அல்வழி வேற்றுமைப்
பொருளிற் பொருந்துழி நிலைவரு மொழிகள்
இயல்பொடு விகாரத்து இயைவது புணர்ப்பே."
—நன்-151

"வேற்றுமை ஐம்முதல் ஆறும் அல்வழி
தொழில் பண்பு உவமை உம்மை அன்மொழி
எழுவாய் விளியீ ரெச்சம் முற்று இடையுரி
தழுவு தொடர் அடுக்கு என ஈரேழே." —நன்-152

"விகாரம் அனைத்தும் மேவலது இயல்பே." —நன்-153

"தோன்றல் திரிதல் கெடுதல் விகாரம்
மூன்றும் மொழி மூவிடத்தும் ஆகும்." —நன்-154

7. "வல்லெழுத்து முதலிய வேற்றுமை யுருபிற்
கொல்வழி ஒற்றிடை மிகுதல் வேண்டும்." —தொல்-114

(2) ஆறன் உருபாகிய 'அது' என்பதன் அகரக் கிளவி அகர ஈற்றுச் சொல்லின்முன் கெடுதல் வேண்டும்.

தம+அது—தமது[8].

(3) இவ்வாறு வேற்றுமை உருபுகள் பெயர்களோடு புணரும்பொழுது குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்படுகின்றன. பெயரின் பின்னரே வேற்றுமை உருபுகள் நிற்கும்[9]. பெயர்களை உயர்திணைப்பெயர் அஃறிணைப் பெயர் என்று பிரித்துக் காணலாம்[10]. இப்பெயர்களின் பின் சாரியைகள் இடம் பெறல் உண்டு. எனவே பெயர் சாரியை உருபு என்பனவே தொடர் நிலையில் இவை பெறும் இடநியதியாகும்.

**8. சாரியைகளும் மாற்று வடிவங்களும் :**

அவைதாம்,
இன்னே வற்றே அத்தே அம்மே
ஒன்னே ஆனே அக்கே இக்கே
அன் என்கிளவி உளப்படப் பிறவும்
அன்ன என்ப சாரியை மொழியே
—தொல் 119

---

8. ஆறன் உருபின் அகரக் கிளவி
ஈறுகு அகரமுனைக் கெடுதல் வேண்டும்." —தொல்-115

9. "வேற்றுமை வழிய பெயர்புணர் நிலையே."—தொல்-116
"பெயர்வழித் தம்பொருள் தரவரும் உருபே."—நன்-241

10. "உயிர்திணைப் பெயரே அஃறிணைப் பெயரென்று
ஆயிரண்டு என்ப பெயர்நிலைச் சுட்டே." —தொல்-117
"ஒருவன் ஒருத்தி பலர்ஒன்று பலவென
வருபெயர் ஐந்தொரு பெயர்முதல் இருநான்கு
உருபும் உறழ்தர நாற்பதாம் உருபே." —நன்-240

பிற என்பவற்றுள் குறிப்பிடத்தக்கவை தம், நம், நும், கெழு, உம், ஏ என்பனவாம். இவை தொல்காப்பியரால் ஏனைய இயல்களில் கூறப்படுகின்றன[11].

---

11. "உயிர்திணை யாயி னம்மிடை வருமே."

—தொல் உருபியல்-190

"எல்லாரும் என்னும் படர்க்கை இறுதியும்
எல்லீரும் என்னும் முன்னிலை இறுதியும்
ஒற்றும் உகரமும் கெடுமென மொழிப
நிற்றல் வேண்டும் ரகரப் புள்ளி
உம்மை நிலையும் இறுதியான
தம்மிடை வரூஉம் படர்க்கை மேன
நும்மிடை வரூஉம் முன்னிலை மொழிக்கே."

—தொல் உருபியல்-191

"படர்க்கைப் பெயரும் முன்னிலைப் பெயரும்
தொடக்கம் குறுகும் பெயர்நிலைக் கிளவியும்
வேற்றுமை யாயி னுருபியல் நிலையும்
மெல்லெழுத்து மிகுதல் ஆவயி னான"

—தொல் புள்ளிமயங்கியல்-320

"உயிரும் புள்ளியும் இறுதியாகி
அளவு நிறையும் எண்ணும் சுட்டி
உளவெனப் பட்ட எல்லாச் சொல்லும்
தத்தம் கிளவி தம்மகப் பட்ட
முத்தை வரூஉங் காலம் தோன்றின்
ஒத்த தென்ப ஏயென் சாரியை."

—தொல் தொகை மரபு-164

"இருதிசை புணரின் ஏயிடை வருமே."

—குற்றியலுகரப் புணரியல்-431

"லனவென வரூஉம் புள்ளி இறுதிமுன்
உம்முங் கெழுவும் உளப்படப் பிறவும்
அன்ன மரபின் மொழியிடைத் தோன்றிச்
செய்யுள் தொடர்வயின் மெய்பெற நிலையும்
வேற்றுமை குறித்த பொருள்வயி னான."

—தொல் குற்றியலுகரப்புணரியல்-481

மேற்குறிப்பிட்ட ஒன்பது சாரியைகளின் மாற்று வடிவங்கள் பின்வருமாறு:—

**1. இன்—ன்—இற்**

**ஆவினை; ஆனை, பதிற்றகல்.**

**சூழ்நிலைகள்:—ஆன்—ஆவின் முன் 'இ' கெடுதல் உண்டு.**

**பதின்+அகல்'—அளவுப் பெயராக வரும் பெயரின் முதல் உயிராக அமையும்பொழுது ன்—ற் ஆகிறது.**

இன்—ஏனையிடத்து இன் என்பதே வரும்[12].

**2. வற்று—அற்று:—**

**அற்று:—அவை+அற்று—அவையற்று—யற்று.**

**சூழ்நிலை:—சுட்டுமுதல் ஐ ஆகிய அவை என்பதன் முன் வரும் வகர மெய்கெட்டு அகரம் நிலைபெறுகிறது.**

வற்று—ஏனையிடத்து[13].

3. **இன், ஒன், ஆன், அன்:—இற், ஒற், ஆற், அற்; விளவிற்கு, கோஒற்கு, ஒருபாற்கு, அதற்கு.**

**றகர வடிவம்:—நான்கன் உருபு வருவழி னகரம் றகரம் ஆகும்.**

**னகர வடிவம்:—ஏனையிடத்து[14].**

---

12. "அவற்றுள்
இன்னின் இகரம் ஆவின் இறுதி
முன்னர்க் கெடுதல் உரித்துமாகும்." —தொல்-120
"அளவாகு மொழிமுதல் நிலைஇய உயிர்மிசை
னஃகான் றஃகான் ஆகிய நிலைத்தே." —தொல்-121

13. "வஃகான் மெய்கெடச் சுட்டுமுதல் ஐம்முன்
னஃகான் நிற்றல் ஆகிய பண்பே." —தொல்-122

14. "னஃகான் றஃகான் நான்கன் உருபிற்கு."—தொல்-123

4. ஆன்—ஆற்:—பரணியாற் கொண்டான்.

ஆற்:—நாட்பெயர் முன்னும் தொழிற்பெயர் பின்னும் வருவழி 'ஆற்' என வருகிறது.

ஆன்:—ஏனையிடத்து[15].

5. அத்து—த்து

மக+அத்து—மகத்துக் கொண்டான்

த்து—அத்தின் அகரம் அகரமுனை இல்லை[16].
அத்து—ஏனையிடத்து.

6. இக்கு—க்கு:

ஆடி+இக்கு—ஆடிக்குக் கொண்டான்; சித்திரைக்குக் கொண்டான்.

க்கு—இக்கின் இகரம் இகரமுன்னும் எகரமுன்னும் இல்லை.

இக்கு:—ஏனையிடத்து[17].

7. அக்கு--அ:

குன்றக் கூகை
தமிழ்க் கூத்து

வல்லெழுத்து வருவழி 'க்கு' என்பன கெடுகின்றன.

இவை எல்லாம் புணர்ந்து கெட்டன என்று கூறுதல் இலக்கண மரபாகும்.

---

15. "ஆனின் அகரமும் அதனோ ரற்றே
நாண்முன் வரூஉம் வன்முதற் றொழிற்கே."—தொல்-124

16. "அத்தின் அகரம் அகரமுனை இல்லை." —தொல்-125
"அத்தினகரம் அகரமுனை இல்லை." —நன்-252

17. "இக்கின் இகரம் இகரமுனை யற்றே." —தொல்-126
"ஐயின் முன்னரும் அவ்வியல் நிலையும்." —தொல்-127

அக்கு:--ஏனையிடத்து[18].

8. அம்—அங்—அஞ்—அந்...அ

புளியங்கோடு; புளிஞ்செதில்; புளியந்தோல்; புளிய யாழ்; புளிய ஞூரி.

அங், அஞ், அந்:

கசத வருவழி அங், அஞ், அந்,

அ—உயிரும் இடையும் வருவழி.

அம்—ஏனையிடத்து.[19]

9, இன்; உருபன் இன்மை: உறழ்வு நிலை:

விளவின் பழம்.

இன்இன்மை:—இன் என வரும் வேற்றுமை உருபிற்கு இன் என் சாரியை இன்மை வேண்டும்.

இன்—ஏனையிடத்து.[20]

உறழ் நிலை

வேற்றுமை உருபு தொகா நிலைத் தொடரிடத்தும் அவை தொக்க தொகை நிலைத் தொடரிடத்தும் ஒடுவயின் இருநிலையும் பெறல்.

---

18. "எப்பெயர் முன்னரும் வல்லெழுத்து வருவழி
அக்கின் இறுதி மெய்ம்மிசையொடுங் கெடுமே
குற்றியல் உகரம் முற்றத் தோன்றாது." —தொல்-128

19. "அம்மின் இறுதி கசதக் காலைத்
தன்மெய் திரிந்து ஙஞந வாகும்." —தொல்-129
"மென்மையும் இடைமையும் வரூஉம் காலை
இன்மை வேண்டும் என்மனார் புலவர்." —தொல்-130

20. "இன்னென வரூஉம் வேற்றுமை உருபிற்கு
இன்னென் சாரியை இன்மை வேண்டும்." —தொல்-131

**உறழ்நிலை :**

பூவினொடு விரிந்த கூந்தல்—இன்வருதல்
பூவொடு விரிந்த கூந்தல்—இன்தவிர்தல்.
தனிநிலை—ஏனையிடத்து.[21]

**10. நிலைமொழித் திரிபுகள்** :-நிலைமொழி வருமொழியால் ஏற்பட்ட சாரியையின் திரிபுகள் மேலே காட்டப்பட்டன. சாரியைகளால் நிலைமொழித் திரிபுகளும் நிகழ்தல் உண்டு.

கலம்+அத்து—கலத்து—ம் கெட்டது.
கலத்துக் குறை—க்—மிக்கது.
அவற்றுக் கோடு —அவ்+வற்று+கோடு.
நிலைமொழி'வ்' கெட்டது—வருமொழி நோக்கி 'க்' மிக்கது.[22]

**11. எழுத்துச் சாரியைகள் பின்வருமாறு** :-காரம், கரம், கான் என்பன எழுத்தின் சாரியைகளாம்.

கரம்—குற்றெழுத்தோடு மட்டும் வரும்.

---

21. "பெயரும் தொழிலும் பிரிந்தொருங் கிசைப்ப
வேற்றுமை உருபு நிலைபெறு வழியும்
தோற்றம் வேண்டாத் தொகுதிக் கண்ணும்
ஓட்டுதற்கு ஒழுகிய வழக்கொடு சிவணிச்
சொற்சிதர் மருங்கின் வழிவந்து விளங்காது
இடைநின்று இயலும் சாரியை இயற்கை
உடைமையும் இன்மையும் ஒடுவயின் ஒக்கும்."
—தொல்-132

22. "அத்தே வற்றே ஆயிரு மொழிமேல்
ஒற்றுமெய் கெடுதல் தெற்றென் றற்றே
அவற்றுமுன் வரூஉம் வல்லெழுத்து மிகுமே."
—தொல்-133

காரம்—குற்றெழுத்தோடும் நெட்டெழுத்தோடும் வரும்.

கான்—குற்றெழுத்தோடும் ஐ ஔ இவற்றோடும் மட்டும் வரும். ஏனைய நெட்டெழுத்தோடு வருதல் இல்லை.[23]

12. மெய்யும் உயிரும் புணர்தல் :

புள்ளி+உயிர்—உயிர் மெய்யாகும்.

பால்+அரிது—பாலரிது.[24]

பாலரிது—அரிது (நீங்க)—பால்

உயிர் வருவழி புள்ளி வடிவம் நீங்கி உயிர்மெய் ஆகும்.

உயிர்மெய்யில் உயிர் நீங்கின் புள்ளிவடிவம் பெறும்.

---

23. "காரமும் கரமும் கானொடு சிவணி
நேரத் தோன்றும் எழுத்தின் சாரியை." —தொல்-134
"அவற்றுள்
கரமும் கானும் நெட்டெழுத் திலவே." – தொல்-135
"வரன் முறைமூன்றும் குற்றெழுத்துஉடைய."
—தொல்-136
"ஐகார ஔகாரம் கானொடும் தோன்றும்."—தொல்-137
"மெய்கள் அகரமும் நெட்டுயிர் காரமும்
ஐஔக் கானும் இருமைக் குறிலிவ்
இரண்டொடு கரமுமாம் சாரியை பெறும்பிற."
—நன்-126

24. "புள்ளி ஈற்றிமுன் உயிர் தனித்து இயலாது
மெய்யொடும் சிவணும் அவ்வியல் கெடுத்தே."
—தொல்-138
"மெய்யுயிர் நீங்கில் தன்னுரு வாகும்." —தொல்-139
"உடன்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே."
—நன்-204

13. **உயிரும் உயிரும்:**-எல்லா மொழிக்கும் உயிரீற்று மொழிமுன் உயிர் முதல் மொழி வருமாயின் உடம்படு மெய் வருதலும் வாராமையும் உண்டு

கிளியழகிது; விளவழகிது

கிளி அழகிது; 'விள' அழகிது.[25]

14. **பொருள்கோள்பற்றிச் சொற்கள் அமைதல்:**-பொருள் கோள் நிலை பற்றிச் சொற்கள் பிரித்து உணரப்படும்.

செம்பொன் பதின்ருெடி—செம்பு ஒன்பதின் தொடி; சொம்பொன் பதின்தொடி.

**செம்பருத்தி** :-செம் பருத்தி; செம்பு அருத்தி

**குறும்பரம்பு**—குறும்பர் அம்பு; குறும் பரம்பு.

**நாதன்றேவன்போத்து**—நாகன் தேவன் போத்து; நாகு அன்றே வன்போத்து.

**தாமரைக் கணியார்**—தாமரைக்கு அணியார்—தாம் அரைக்கு அணியார்.

**குன்றேருமா**—குன்று ஏறு ஆமா; குன்று ஏரு மா.

இவை சூழ்நிலை பற்றிப் பிரித்து அறியப்படும். எனவே தொடர்கள் பிரியும் சேர்க்கையும் பொருள்

---

25. "எல்லா மொழிக்கும் உயிர்வரு வழியே
உடம்படு மெய்யின் உருவுகொளல் வரையார்."
—தொல்'140

"இஈஐ வழி யவ்வும் ஏனே
உயிர்வழி வவ்வும் ஏமுனிவ் இருமையும்
உயிர்வரின் உடம்படு மெய்மயென்று ஆகும்." —நன்-162
எழுத்தோர் அன்ன பொருள்தெரி புணர்ச்சி
இசையில் திரிதல் நிலைஇய பண்பே —தொல்-141

அடிப்படையில் அமைவதாகும். என்பதாம். அல்வழி வேற்றுமை என்பது தொடரியற் பொருள். இது சொற்களுக்கு அமைந்துள்ள இயல்புப் பொருள். இப்பொருள் உணர்வும் புணரியலுக்கு அடிப்படை என்பதாம்.[26]

**15. நன்னூலார் தரும் சிறப்புச் செய்திகள்:**

நன்னூலார் கீழ் வருவனவற்றை வினைக்கும் பெயருக்கும் அமையும் பொதுச்சாரியைகளாகக் கூறுவர்.

(1) அன் ஆன் இன் அல் அற்று இற்று அத்து அம்
தம் நம் நும் ஏ அ உ ஐ கு ன
இன்ன பிறவும் பொதுச்சாரியையே"

—நன். 244

(2) தொல்காப்பியர் எழுத்துப் பேறாகக் குறிப்பிடும் அ, உ ன என்பவற்றை நன்னூல் சாரியை எனக் குறிப்பிடுகிறது. தொல்காப்பியர் வற்று என்பதை நன்னூல் அற்று என்றே குறிப்பிடுகிறது.

(3) நன்னூலார் பதமுன் விகுதியும், பதமும் உருபும் சேர்வழி அமையும் சாரியைகளாக மேற்குறிப்பிட்டவற்றைக் காட்டுவர். அவர் பதவியல் என்ற இயல் அமைத்திருப்பதற்கு ஏற்பப் பதமுன் விகுதியும் சேரும்

---

26. "அவைதாம்
முன்னப் பொருள புணர்ச்சி வாயில்
இன்ன வென்னும் எழுத்துக் கடன் இலவே."

— தொல்-142

"எழுத்தியல் திரியாப் பொருள்திரி புணர்மொழி
இசைத்திரி பால்தெளி வெய்தும் என்ப." —நன்-39

பொழுது உண்டாகும் சாரியைகளையும் உடன் சேர்ப்பர். 'பதமும் உருபும்' என்பது உருபு புணரியலுக்கே உரிய வேற்றுமைத் தொடர்களாம்.

"பதமுன் விகுதியும்; பதமும் உருபும்
புணர்வழி ஒன்றும் பலவும் சாரியை
வருதலும் தவிர்தலும் விகற்பமும் ஆகும்"

—நன் 243.

நடந்தனன்—பதமுன் விகுதி; அன் சாரியை பெற்றது.

புளியங்காய்—பதமுன் பதம்; அம் சாரியை பெற்றது.

சாரியை வாராதிருத்தலும் உண்டு.

நடந்தான்; புளிக்கரி; தன்னை—சாரியை பெற வில்லை.

# 6. தொகை மரபு

1. ஒன்றுக்கு மேற்பட்ட செய்திகளைத் தொகுத்துக் கூறுவது தொகைமரபு. ஏனைய புள்ளி மயங்கியல், உயிர் மயங்கியல், புணரியல், உருபு புணரியல்களில் ஒவ்வொரு செய்தியே வரிசைபடக் கூற இயல்கிறது. இவ்வியல்களில் அச் செய்திகளைத் தொகுத்துக் கூற இயல்கின்றது.

2. மற்றும் ஒரே இயலிலும் ஒரு சில ஈறுகள் அடையும் பொது விதிகளையும் அவற்றின் தனிச் சூத்திரங்களில் கூறுவதற்கு இல்லை. அதனால் அப் பொது விதிகளையும் ஈண்டுக் கூற இயல்கின்றது. 'தந' இவற்றிற்கு உரிய மாற்றங்களைச் சேர்த்துக் கூறுவது என்றால் அதனை இங்கே இயல்கிறது. அவ்வியல்களில் ஒவ்வோர் ஈற்றிற்கே விதிகள் கூற இயல்கிறது. இங்குச் சேர்த்துத் தொகுத்துக்கூற முடிகிறது.

3. "உயரீறும் புள்ளியீறும் மேலே அகத்தோத்தினுள்முடிக்கும் வழி ஈறுகள் தோறும் விரித்து முடிப்பனவற்றை ஈண்டு ஒரோவோர் சூத்திரங்களால் தொகுத்து முடிவு கூறினமையின் இவ்வொத்துத் தொகை மரபு என்னும் பெயர்த்தாயிற்று" என்பர் நச்சினார்க்கினியர்.

4. தொகை மரபில் கூறப்படும் தொகைச் செய்திகள் பின் வருமாறு:

1. (அ) நிலைமொழி உயிர்முன் வருமொழியில் கசதப வந்தால் இனமெல்லெழுத்து மிகலும், (ஆ) ஏனைய ஞ, ந,

ம, வ உயிர் வந்தால் இயல்பும், (இ) இம்மெய்யெழுத்துக் களே வந்தால் மெலி மிகலும் மிகாமையும் ஆகிய உறழ் வும் புணர்மொழிக்கண் அமையும்.[1]

(அ) மெல்லெழுத்து மிகுதல் :—

விள+கோடு—விளங்கோடு
விள+செதிள்—விளஞ்செதிள்
விள+தோல்—விளந்தோல்
விள+பூ—விளம்பூ

(ஆ) மெல்லெழுத்து மிகாமை :—

விள+ஞான்றது—விளஞான்றது
விள+நீண்டது—விளநீண்டது
விள+மாண்டது—விளமாண்டது
விள+யாது—விளயாது
விள+வலிது—விளவலிது
விள+அழகிது—விள அழகிது.[2]

---

1. "கசதப முதலிய மொழிமேற் றோன்றும்
மெல்லெழுத் தியற்கை சொல்லிய முறையான்
ஙஞநம வென்னும் ஒற்றாகும்மே
அன்ன மரபின் மொழிவயி னான." —தொல்-143

"எண்மூ வெழுத்தீற் றெவ்வகை மொழிக்கும்
முன்வரு ஞநமய வக்கள் இயல்பும்
குறில்வழி யத்தனி யைந்நொது முன்மெலி
மிகலுமாம் ணளனல வழிநத் திரியும்." —நன்-158

2. "ஞநம யவவெனு முதலாகு மொழியும்
உயிர்முதல் ஆகிய மொழியும் உளப்பட
வன்றி அனைத்தும் எல்லா வழியும்
நின்ற சொன்முன் இயல்பு ஆகும்மே." —தொல்-144
நன்னூல் 158ஐ இதனுடனும் பொருத்துக.

(இ) மெல்லெழுத்து உறழ்ச்சி :—

கதிர்+நெரி—கதிர்ந்நெரி; கதிர்நெரி
கதிர்+முரி—கதிர்ம்முரி; கதிர்முரி
கை+நீட்டினர்—கைந்நீட்டினர்; கை நீட்டினர்.[3]

2. ண ன என் புள்ளி முன் வருமொழி அடையும் மாற்றங்கள்:

'யாவும் ஞாவும்' மாற்று வடிவங்களாக அமைதல். 'யாத்த', 'ஞாத்த' என இரண்டும் மாற்று வடிவங்களாக வருதல்.

மண்யாத்த—மண்ஞாத்த
பொன்யாத்த—பொன்ஞாத்த

இவை வினைச் சொற்களாக வரும்பொழுதே இம்மாற்றங்கள் நிகழும் என்பர்.

"ணனஎன் புள்ளிமுன் யாவும் ஞாவும்
வினையோர்அனைய என்மனார் புலவர்"—தொல் 146.

எனவே, மண்யாமை; மண்ஞாமை எனப் பெயர்க்கண் வருதல் இல்லை என்பர். யா முற் கூறியதால் யாச் சென்ற வழியே ஞாச் செல்லும் என்று விளக்கம் தருவர். (நச்சினார்க்கினியர் உரை).

3. ண ன ஈறுகள் வருமொழி நோக்கித் திரிதலும் திரியாமையும் உள.

திரிதல்:

மண்+குடம்—மட்குடம்[4]

---

3. "அவற்றுள்
மெல்லெழுத்து இயற்கை உறழினும் வரையார்
சொல்லிய தொடர்மொழி யிறுதியான."—தொல்-145

4. "ணகார விறுதி வல்லெழுத்துத் தியையின்
டகார மாகும் வேற்றுமைப் பொருட்கே."
—தொல் 302-புள்ளிமயங்கியல்,

பொன்+குடம்—பொற்குடம்[5]

சூழ்நிலை :—வேற்றுமைத் தொடரில் ண ன முறையே ட ற வாகத் திரியும்.

திரியாமை;—(இயல்பு)

மண்+கடிது—மண்கடிது

பொன்+கடிது—பொன்கடிது[6]

பொன்+நீட்சி—பொன்நீட்சி

மண்+வன்மை—மண்வன்மை[7]

சூழ்நிலை :—அல்வழித் தொடரில் வல்லெழுத்து வந்தாலும் திரியாது. மற்றும் வல்லெழுத்து அல்லாத விடத்து வேற்றுமைக் கண்ணும் திரிதல் இல்லை.

புள்ளி ஈற்றில் சொல்லப்பட்ட திரிபு விதிக்கு இங்குத் திரியாமைச் செய்திகள் தொகுத்துக் கூறப் பட்டன.

4. த—றட ஆதலும், ந—னண ஆதலும்.

த வின் மாற்று வடிவங்கள் ற ட; ந வின் மாற்று வடிவங்கள் ன ண.

---

5. "னகார விறுதி வல்லெழுத் தியையின்
றகார மாகும் வேற்றுமைப் பொருட்கே."
—தொல் 332-புள்ளிமயங்கியல்

6. "மொழிமுத லாகும் எல்லா எழுத்தும்
வருவழி நின்ற ஆயிரு புள்ளியும்
வேற்றுமை யல்வழித் திரிபிடன் இலவே." தொல்-147

7. "வேற்றுமைக் கண்ணும் வல்லெழுத் தல்வழி
மேற்கூறியற்கை யாவயினான." —தொல்-148

"ணனவல் லினம்வரட் டறவும் பிறவரின்
இயல்புமாகும் வேற்றுமைக்கு; அல்வழிக்கு
அனைத்துமெய் வரினும் இயல்பு ஆகும்மே." —நன்-209

இவற்றின் சூழ்நிலைகள்:-

ல ன முன்—ற—கஃறீது, பொன்றீது.

ண ள முன்—ட—மண்டீது, முஃடீது.

ஏனையிடத்து—த—ஊர்தீது;

ல ன முன்—ன—கன்னன்று; பொன்னன்று.

ண ள முன்—ண—கண்ணன்று; முண்ணன்று.

ஏனையிடத்து—ந—ஊர்நன்று[8]

**5. இயல்பும் உறழ்வும்:**--உயிரீறு முன்னிலைக் கிளவிகள் முன் மிகாமையும் உறழ்வும் ஆகிய இரு நிலைகள் காணப்படல்.

மிகாமை:

எறி +கொற்று—எறிகொற்று

உண்+கொற்று—உண் கொற்று

உறழ்வு:

நட +கொற்று—நடகொற்று; நடக்கொற்று

ஈர் +கொற்று—ஈர்கொற்று; ஈர்க்கொற்று.

சூழ்நிலை:—உயிரீறு ஆகிய முன்னிலைக் கிளவியும், புள்ளி யிறுதி ஆகிய முன்னிலைக் கிளவியும் இயல்பு ஆதலும் உறழ்வு பெறுதலும் என்னும் இரண்டு தன்மைகளும் பெறும் வல்லெழுத்து வருவழி.[9]

---

8. "லனவென வரூஉம் புள்ளிமுன்னர்த்
தநவென வரிற் றனவா கும்மே." —தொல்-149

"ணளவென் புள்ளிமுன் டணவெனத் தோன்றும்." —தொல்-150

"னலமுன் றனவும் ணளமுன் டணவும்
ஆகும் தநக்கள் ஆயுங் காலே." —நன்-237

9. "உயிரீறு ஆகிய முன்னிலைக் கிளவியும்
புள்ளியிறுதி முன்னிலைக் கிளவியும்
இயல்பாகுநவும் உறழ்ஆகுநவும் என்று
ஆயீ ரியல வல்லெழுத்து வரினே." —தொல்-151

**6. உகர ஈற்றுச் சொற்கள் மெல்லெழுத்து மிகுதலும் மிகாமையும்:**

கௌவு+கொற்று—கௌவு கொற்று; கௌவுக் கொற்று.
உரிஞு+கொற்று—உரிஞுகொற்று; உரிஞுக்கொற்று.
பொருநு+கொற்று—பொருநுகொற்று; பொருநுக் கொற்று.
திருமு+கொற்று—திருமுகொற்று; திருமுக்கொற்று
தெவ்வு+கொற்று—தெவ்வு கொற்று; தெவ்வுக் கொற்று.
கூட்டு+கொற்று—கூட்டுகொற்று; கூட்டுக்கொற்று

"ஒள வென வரூஉம் உயிரிறு சொல்லும்
ஞ ந ம வ என்னும் புள்ளி இறுதியும்
குற்றியல் உகரத்து இறுதி உளப்பட
முற்றத் தோன்று முன்னிலை மொழிக்கே."

—தொல் 152.

முற்ற என்றதனால் நிலைமொழி உகரம் பெற்று உறழ்ந்து முடிதல் கொள்க என்பர் நச்சினார்க்கினியர்.

**7. உயர்திணைப் பெயரும், அஃறிணை விரவுப் பெயரும்:**

உயிரீற்று உயர்திணைப் பெயர்களும், புள்ளியீற்று உயர்திணைப் பெயர்களும் எல்லா வழியும் (அல்வழிக் கண்ணும், வேற்றுமைக் கண்ணும்) இயல்பாகும். அவற்றுள் இகர இறுபெயர் மட்டும் மாறுபடுகிறது. அஃறிணையின்கண் வழங்கும் விரவுப் பெயர் இயல்பாய் முடிவனவும் உள.

---

"ஆவி யரழ இறுதி முன்னிலை வினை
ஏவன்முன் வல்லினம் இயல்பொடு விகற்பே."

—நன்-161

உயர்திணைப் பெயர்:—(இயல்பு)

1. அவன் பெரியன்; அவள் பெரியள்
அவன் பெருமை; அவள் பெருமை[10]

2. எட்டி +பூ—எட்டிப்பூ
காவிதி+பூ—காவிதிப்பூ
நம்பி+பேறு—நம்பிப்பேறு

உயர்திணைப் பெயர்கள் வேற்றுமைக்கண் மிக்கு முடிந்தன.[11] (இகர இறு பெயர்கள்)

இயல்பு

3. சாத்தன்+குறியன்—சாத்தன் குறியன்
சாத்தி+குறியது—சாத்தி குறியது
சாத்தன்+செவி—சாத்தன் செவி
சாத்தன்+தலை—சாத்தன் தலை

அஃறிணை விரவுப் பெயர் இயல்பாக முடிந்தது.[12]

### 8 மூன்றும் வேற்றுமைத் தொடர்களில் இயல்பும் உறழ்ச்சியும்:

நாய்+கோட்பட்டான்—நாய் கோட்பட்டான்
(இயல்புமட்டும்)

---

10. "உயிரீ றாகிய உயர்திணைப் பெயரும்
புள்ளி இறுதி யுயர்திணைப் பெயரும்
எல்லா வழியும் இயல்பென மொழிப." —தொல்-153

11. "அவற்றுள்
இகர இறுபெயர் திரிபிடன் உடைத்தே." —தொல்-154

12. "அஃறிணை விரவுப் பெயர் இயல்பு மாருளவே."
—தொல்-155

"பொதுப்பெயர் உயர்திணைப் பெயர்கள் ஈற்றுமெய்
வலிவரின் இயல்பாம் ஆவி யரமுன்
வன்மை மிகாசில விகாரமாம் உயர்திணை." —நன்-159

சூர்+கோட்பட்டான்—சூர்கோட்பட்டான்; சூர்க் கோட்பட்டான்.

வளி+கோட்பட்டான்—வளிகோட்பட்டான்; வளிக்கோட்பட்டான்,—உறழ்ச்சி.

சூழ்நிலை: உயிரீற்றுச் சொல்லும் மெய்யீற்றுச் சொல்லும் நிலைமொழியாகவும், மூன்றும் வேற்றுமைப் பொருட்கண் வினைச் சொல் வருமொழியாகவும் வந்தால் இயல்பும் உறழ்ச்சியும் நிகழும் என்பர்.[13]

**9. இரண்டன் தொடரில் மாற்று வடிவங்கள்:**

1. விள + குறைத்தான் — விளங்குறைத்தான்; விளக்குறைத்தான்.

2. மரம்+குறைத்தான்—மரங் குறைத்தான்; மரக் குறைத்தான்.

3. தாய்+கொலை—தாய் கொலை; தாய்க் கொலை.

4. பலா+குறைத்தான்—பலாஅக் குறைத்தான்; பலாக் குறைத்தான்.

5. வண்டு + கொணர்ந்தான் — வண்டினைக் கொணர்ந்தான்; வண்டுக் கொணர்ந்தான்.

---

13. "புள்ளி யிறுதியும் உயிரிறு கிளவியும்
வல்லெழுத்து மிகுதி சொல்லிய முறையாற்
தம்மி னாகிய தொழிற்சொல் முன்வரின்
மெய்ம்மை யாகலும் உறழத் தோன்றலும்
அம்முறை இரண்டும் உரியவை உளவே
வேற்றுமை மருங்கிற் போற்றல் வேண்டும்."
—தொல்-156

"புள்ளியும் உயிரும் ஆயிறு சொன்முன்
தம்மின் ஆகிய தொழின் மொழி வரினே
வல்லினம் விகற்பமும் இயல்பும் ஆகும்." —நன்-256

தொ.—5

6. புளி+குறைத்தான்—புளியம் குறைத்தான்; புளியைக் குறைத்தான்.

7. மழவர்+ஓட்டிய—மழவரை ஓட்டிய; மழவர் ஓட்டிய.

8. கொற்றன் + கொணர்ந்தான் — கொற்றனைக் கொணர்ந்தான்; கொற்றன் கொணர்ந்தான்.

9, மண்+கொணர்ந்தான்—மட் கொணர்ந்தான்; மண் கொணர்ந்தான்.

சூழ்நிலைகள்:-

1. மெல்லெழுத்து மிகுவழி வல்லெழுத்து வரல்,
2. வல்லெழுதது மிகுவழி மெல்லெழுத்து வரல்,
3. இயல்பாக வருமிடத்து மிகுதல்,
4. உயிர் எழுத்துப் பேருக வருமிடத்து அது கெடுதல்,
5. சாரியை உள்வழிச் சாரியை இன்மை,
6. சாரியை உன்வழி உருபு மட்டும் நிற்றல்,
7. உயர் திணையில் உருபு வருதல்,
8. அஃறிணை விரவுப் பெயர்க்கண்ணும் உருபு வருதல்,
9. மெய் பிறிதாகத் திரியுமிடத்தும் திரியாமல் நிற்றல்.

ஆகிய இவை இரண்டாம் வேற்றுமைத் திரிபு என்பர்.[14]

---

14. "மெல்லெழுத்து மிகுவழி வலிப்பொடு தோன்றலும்
வல்லெழுத்து மிகுவழி மெலிப்பொடு தோன்றலும்
இயற்கை மருங்கின் மிகற்கை தோன்றலும்
உயிர்மிக வருவழி உயிர்கெட வருதலும்
சாரியை உள்வழிச் சாரியை கெடுதலும்
சாரியை உள்வழித் தன்னுருபு நிலையலும்

ஏனையிடத்துக் கூறப்பட்ட விதிகளை ஈண்டு மறுத்து மாற்று நிலைகள் கூறப்பட்டன.*

10. இ, ஐ என்னும் ஈற்றுப் பெயர்க்கிளவி அல்வழிக் கண் இயல்பும் மிகலும் உறழ்வும் என மூவகை நிலைகளைப் பெறல்.

---

சாரியை யியற்கை யுறழத் தோன்றலும்
உயர்திணை மருங்கின் ஒழியாது வருதலும்
அஃறிணை விரவுப்பெயர்க்கு அவ்வியல் நிலையலும்
மெய்பிறி தாகிடத் தியற்கை யாதலும்
அன்ன பிறவும் தன்னியன் மருங்கின்
மெய்பெறக் கிளந்து பொருள்வரைந்து இசைக்கும்
ஐகார வேற்றுமைத் திரிபென மொழிப.''—தொல்-157

''இயல்பின் விகாரமும், விகாரத் தியல்பும்,
உயர்திணை யிடத்து விரிந்தும் தொக்கும்,
விரவுப் பெயரின் விரிந்தும் நின்றும்,
அன்ன பிறவும் ஆகும் ஐயுருபே.'' —நன்-255

*1. ''மரப்பெயர்க் கிளவி மெல்லெழுத்து மிகுமே.'' —தொல்-217

2. ''மகர இறுதி வேற்றுமையாயின்
துவரக் கெட்டு வல்லெழுத்து மிகுமே.'' —தொல்-310

3. ''தாய் என் கிளவி இயற்கையாகும்.'' —தொல்-358

4. ''குறியதன் முன்னரும் ஓரெழுத்து மொழிக்கும்
அறியத் தோன்றும் அகரக் கிளவி.'' —தொல்-226

''ஏஎன் இறுதிக்கு எகரம் வருமே.'' —தொல்-244

5. ''வண்டும் பெண்டும் இன்னொடு சிவணும்.''—தொல்-420

6. ''புளிமரக் கிளவிக்கு அம்மே சாரியை.'' —தொல்-277

''பனையும் அரையும் ஆவிரைக் கிளவியும்
நினையுங் காலை அம்மொடு சிவணும்.'' —தொல்-283

''பூல்வேல் என்றா ஆலென் கிளவியொடு
ஆமுப் பெயர்க்கும் அம்மிடை வருமே.'' —375

**இயல்பு மட்டும்:**

பருத்தி குறிது, சிறிது, தீது, பெரிது
காரை குறிது, சிறிது, தீது, பெரிது

**மிகுதி மட்டும்:**

மாசித்திங்கள்; சித்திரைத் திங்கள்

**உறழ்ச்சி:**

கிளிகுறிது—கிளிக்குறிது
தினை குறிது—தினைக்குறிது.

**விளக்கம்:**

"வேற்றுமை அல்வழி இ ஐ என்னும்
ஈற்றுப் பெயர்க்கிளவி மூவகை நிலைய
அவைதாம்.
இயல்பாகுநவும் வல்லெழுத்து மிகுநவும்
உறழாகுநவும் என்மனார் புலவர்,"

—தொல்158

"அல்வழி இஐம் முன்னர் ஆயின்
இயல்பும் மிகலும் விகற்பமும் ஆகும்."

—நன் 176.

---

7. "உயிரீறு ஆகிய உயர்திணைப் பெயரும்
புள்ளி இறுதி உயர்திணைப் பெயரும்
எல்லா வழியும் இயல்பு என மொழிப." —தொல்-153

8. "அஃறிணை விரவுப் பெயர் இயல்புமார் உளவே."
—தொல்-155

9. "ணகார இறுதி வல்லெழுத்து இயையின்
டகாரமாகும் வேற்றுமைப் பொருட்கே."—தொல்-302

"னகார இறுதி வல்லெழுத்து இயையின்
றகார மாகும் வேற்றுமைப் பொருட்கே."—தொல்-332

**11.** இகர ஐகார இறுதிச்சுட்டு விஞப்பெயர்கள் முன் வல்லெழுத்து மிகலும் உறழ்வும்

மிகுதல்:-

அதோளிக் கொண்டான்
ஆண்டைக் கொண்டான்
யாண்டைக் கொண்டான்

உறழ்வு:

எவ்வழிக் கொண்டான்; எவ்வழிகொண்டான்
ஆயிடைக் கொண்டான்; ஆயிடை கொண்டான்

சூழ்நிலே:-

"சுட்டு முதலாகிய இகர இறுதியும்
எகர முதல் விஞவின் இகர இறுதியும்
சுட்டுச்சினை நீடிய ஐயென் இறுதியும்
யாவென் விஞவின் ஐயென் இறுதியும்
வல்லெழுத்து மிகுநவும் உறழாகுநவும்
சொல்லியல் மருங்கின் உளஎன மொழிய."
—தொல் 159

**12.** இரட்டாமல் கெடுதல்:

கோள்+நிமிர்ந்தது—கோ+ணிமர்ந்தது
—கோணிமர்ந்தது
கோல்+தீயன்—கோ றீயன்—கோறீயன்.
தாம்+நல்லர்—தா+நல்லர்—தாநல்லர்
கோன்+நல்லன்—கோ+னல்லன்—கோனல்லன்
வருமொழி நகரமும் தகரமும் திரிதல்
முன்னர்க் கூறப்பட்டன.[15]

---

15. "லனவென வரூஉம் புள்ளி முன்னர்த்
"தநவென வரி றனவா கும்மே." —தொல்-149
"ணளவென் புள்ளிமுன் டணவெனத் தோன்றும்."
—தொல்-150

ஆறன் உருபினும் நான்கன் உருபினும் கூறிய குற்றொற்று இரட்டுவது இல்லை

நம்+அது—நமது
நம்+அ+கு—நமக்கு (அகரம் எழுத்துப்பேறு)
நும்+அது—நுமது
நும்+அ+கு—நுமக்கு (அகரம் எழுத்துப்பேறு)

### மெய்கள் இரட்டுதல்:

நள்+இரவு—நள்ளிரவு
பல்+அழகு—பல்லழகு
தம்+ஆடை—தம்மாடை
பொன்+அகல்—பொன்னகல்
நெய்+அகல்—நெய்யகல்

சூழ்நிலை:-

"நெடியதன் முன்னர் ஒற்றுமெய் கெடுதலும்
குறியன் முன்னர்த் தன்னுரு இரட்டலும்
அறியத் தோன்றிய நெறியியல் என்ப"
—தொல். 160

"தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும்"
நன், 205

"குறிலணை வில்லா ணனக்கள் வந்த
நகரந் திரிந்துழி நண்ணுங் கேடே" —நன் 210

"குறில்செறி யாலள அல்வழி வந்த
தகரம் திரிந்தபின் கேடும் ஈரிடத்தும்
வருநத் திரிந்தபின் மாய்வும் வலிவரின்
இயல்புந் திரிபும் ஆவன உளபிற." —நன் 229

**சூழ்நிலைகள்:** அகரமொடு நிலையும் நெடுமுதல் குறுகும் மொழியிடத்தும் நும் என்னும் பெயரிடத்தும் நிலைமொழியின் மெய் இரட்டுதல் இல்லை.[16]

**13. உகரம் பெறுதலும் பெறாமையும்:**

உகரமாகிய எழுத்துப் பேறு புணரும் புள்ளியீறுகள் யகரமும் உயிரும் வருமொழியாக வருமிடத்து அவ்வுகரம் பெறாது இயல்பாய் முடியும்.

"உகரமொடு புணரும் புள்ளி யிறுதி
யகரமும் உயிரும் வருவழி இயற்கை" —தொல் 163

அவ் வீறுகளாவன புள்ளி மயங்கியலுள் உகரம் பெறும் என்று விதிக்கும் பல ஈறுகளும் என்று கொள்க.[17]

உரிஞ்யாது; வல்யாது; தெவ்யாது.

---

16. ஆறன் உருபினும் நான்கன் உருபினும்
கூறிய குற்றொற்று இரட்டல் இல்லை
ஈறாகு புள்ளி யகரமொடு நிலையும்
நெடுமுதல் குறுகும் மொழிமுன் னான." —தொல்-161
"நும்மென் இறுதியும் அந்நிலை திரியாது." —தொல்-162
"தான்தாம் நாம்முதல் குறுகும்: யான்யாம்
நீநீர் என்எம் நின்நும் ஆம்;பிற
குவ்வின் அவ்வரு நான்காறு இரட்டல." —நன்-247

17. "ஞகாரை யொற்றிய தொழிற்பெயர் முன்னர்
அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்
வல்லெழுத் தியையினவ் வெழுத்து மிகுமே
உகரம் வருதல் ஆவயி னான." —தொல்-296
"ஞநமவ இயையினும் உகரம் நிலையும்." —தொல்-297
"நகர இறுதியும் அதனோர் அற்றே." —தொல்-298
"தொழிற் பெயரெல்லாம் தொழிற்பெய ரியல."
—தொல்-306, 327, 376, 401.

## 14. அளவுப் பெயரும் நிறைப்பெயரும்

அளவுப் பெயரும் நிறைப் பெயரும் எண்ணுப் பெயரும் உம்மைத் தொகையின்கண் இரண்டு பெயர்கள் புணரும் பொழுது பெறும் சாரியைகள் சூழ்நிலைக்கு ஏற்ப மாறுதல் பெறும். தம்மிற் குறைந்த மதிப்புடைய சொற்கள் வரும்பொழுதே இம்மாற்றங்கள் நிகழ்கின்றன.

**ஏகாரம் பெறுதல்:-** தம்மிற் குறைந்த சொற்கள் வந்தால் ஏ என் சாரியை வரும்.

நாழியே ஆழாக்கு; தொடியே கஃசு, ஒன்றே கால்.[18]

**சாரியை இன்மை:** அரை என்று வரும்பொழுது சாரியை வருவது இல்லை.

உழக்கரை; கழஞ்சரை; பத்தரை.

---

"மின்னும் பின்னும் பன்னும் கன்னும்
அந்நாற் சொல்லும் தொழிற பெயரியல."
—தொல்-345

"வல்லென் கிளவி தொழிற்பெய ரியற்றே."
—தொல்-373

"ஏனை வகரம் தொழிற் பெயரியற்றே." —தொல்-382

18. "உயிரும் புள்ளியும் இறுதி யாகி
அளவும் நிறையும் எண்ணும் சுட்டி
உளவெனப் பட்ட எல்லாச் சொல்லும்
தத்தம் கிளவி தம்மகப் பட்ட
முத்தை வருஉங் காலந் தோன்றின்
ஒத்த தென்ப ஏயென் சாரியை." —தொல்-164

**வல்லெழுத்து மிகுதல்; வல்லெழுத்தாகத் திரிதல்:**

சூழ்நிலை: குறை என்னும் பெயர் வருவழி.

உரி+குறை—உரிக்குறை

கலம்+குறை—கலக்குறை

கால்குறை—காற்குறை

உரியும் குறையும் என உம்மைப் பொருளாயிற்று. (குறை-உழக்கு). எனவே உம்மைத் தொகையாம்.

**இன்சாரியை பெறுதல்:**

குற்றியலுகரத்திற்கு இன் சாரியை வரும். உழக்கின் குறை; ஆழாக்கின் குறை. இதற்கு உழக்கும் குறையும் என்பதே பொருள். எனவே, அல்வழித் தொடராம் என்க. —தொல்-168.

மற்றும் பனையென்னும் அளவுப் பெயரும் கா என்னும் நிறைப் பெயரும் வருமொழியில் குறை என்பது வருவழி இன்சாரியை பெறும். பனையின் குறை காவின் குறை, —தொல்-169.

**அத்துச் சாரியை வரல்**:--கலம் என்னும் அளவுப் பெயருக்கு அத்து என்னும் சாரியை வரும்.

கலத்துக்குறை—கலமும் குறையும் என்பது பொருளாம்.[19]

---

19. "அரைஎன வரூஉம் பால்வரை கிளவிக்குப்
புரைவ தன்றால் சாரியை இயற்கை" —தொல்-165
குறையென் கிளவி முன்வரு காலை
நிறையத் தோன்றும் வேற்றுமை இயற்கை."
—தொல்-166

"குற்றிய லுகரக்கு இன்னே சாரியை." —தொல்-167

"பனையென் அளவும் காவென் நிறையும்
நினையுங் காலை இன்னொடு சிவணும்." —தொல்-169

"அத்திடை வரூஉம் கலம்என் அளவே." —தொல்-168

அளவுப் பெயர்கள் பின்வருமாறு:-கலம், சாடி, தூதை; பானை, நாழி, மண்டை, வட்டி, அகல், உழக்கு இவை அளவு.

நிறைப் பெயர்கள் பின்வருமாறு:—கழஞ்சு, சீரகம், தொடி, பலம், நிறை, மா, வரை; அந்தை, இவை நிறை. உகர முதற்பெயர் வந்துழிக் காண்க என்பர் நச்சினார்க்கினியர். எனவே நச்சினார்க்கினியர் காலத்தில் இச்சொல் வழக்கு இல்லை எனத் தெரிகிறது.

"அளவிற்கும் நிறையிற்கும் மொழி முதலாகி
உளவெனப்பட்ட ஒன்பதிற்றெழுத்தே
அவைதாம்
க ச த ப என்று நமவ என்று
அகர உகரமோடு அவை என மொழிப."

—தொல் 170

15. விளுப் பெயரின் மாற்று வடிவங்கள்:

யாவர்—யார்; யாது—யாவது,

தொல்காப்பியனார் யாவர் என்பதை அடிப்படையாகக் கொண்டு யார் என்பதைத் திரிபு என்றும், யாது என்பதை அடிப்படையாகக் கொண்டு யாவது என்பதைத்திரிபு என்றும் காட்டுவர். இதனை மரூஉ முடிபு என்பர்.

சூழ்நிலைகள்:—

பலர் அறி சொல்லாகிய அவர் என்பதன் முன் யார் என்பது வரும்; ஒன்றறி சொல்லாகிய அது என்பதன் முன் யாவது என்பது வரும்.

அவர் யார்

அது யாவது

ஏனையிடத்து யாவர் என்பதும் யாது என்பதும் வரும் என்பாராயிற்று.

அவர் யார்
யாவர் வந்தார்
அது யாவது
யாது வந்தது.

பலரறி சொல்முன் யாவர் என்னும்
பெயரிடை வகரங் கெடுதலும் ஏனை
ஒன்றறி சொல்முன் யாதென் வினவிடை
ஒன்றிய வகரம் வருதலும் இரண்டும்
மருவின் பாத்தியில் திரியுமன் பயின்றே

—தொல் 172

16. வழக்கியல்:

உயரும் புள்ளியும் இறுதியாக வரும் சொற்கள் பல்வேறு வகையில் முடிவன எல்லாம் வழக்கொடு பொருத்தி அறிதல் வேண்டும் என்பர். தொல்-171.
நன் 253, நன் 254.

எனவே அக்காலத்து வழக்குகளைக் கூறுவதாலேயே இத் தலைப்பு மரபு என்னும் பெயர் பெற்றது என்பதற்கு இச் சூத்திரம் சான்றாக நிற்கிறது.

தொகுப்புரை :

பிற இயல்களில் தனிச் சொற்களே சொல்ல இயலும். ஈண்டுச் செய்திகள் தொகுத்துத் தரப் படுகின்றன.

1. உயிர் முன் வல்லெழுத்துவந்தால் மெல்லினம் மிகும்; ஏனை இனம் வந்தால் இவை வருவது இல்லை. மெல்லினம் வந்தால் மெல்லினம் மிகுதலும் மிகாமையும் ஆகிய உறழ்வு ஏற்படுகிறது.

2. ண ன என் புள்ளி முன் யா வரும் இடங்களில் ஞா வருதல் உண்டு.

3. ணன வல்லினமாகத் திரிதலும் திரியாமையும் உண்டு. வல்லினம் வந்தால் வேற்றுமையில் திரியும்; அல்வழியில் திரியாது; வேற்றுமைக் கண்ணும் ஏனை இனம் வந்தால் திரிதல் இல்லை.

4. த—ற ட என மாறும். ந்—னண எனமாறும்.

5. முன்னிலைக் கிளவிகள் இயல்பும் உறழ்வும் பெறல்.

6. உகர எழுத்துப் பேறு பெற்ற சொற்கள் வல்லெழுத்து மிகுதலும் மிகாமையும் பெறல்.

7. உயிர்திணைப் பெயரும் அஃறிணை விரவுப் பெயரும் இயல்பும் உறழ்வும் பெறுதல்.

8. மூன்றும் வேற்றுமைத் தொடர் இயல்பும் உறழ்வும் பெறல்.

9. இரண்டாம் வேற்றுமைத் தொடர்கள் பெறும் மாற்று வடிவங்கள் சில உள்ளன.

10. இ, ஐ என்னும் ஈற்றுப் பொதுப் பெயர் இயல்பும் உறழ்வும் பெறுதல்.

11. இ ஐ சுட்டு வினைப் பெயர்கள் மிகலும் உறழ்வும் பெறுதல்.

12. இரட்டுதலும் இரட்டாமையும் ஆகிய இரு நிலைகள்: நெடில் தொடர் இரட்டாது; குறில் தொடர் இரட்டும். நெடுமுதல் குறுகும் மூவிடப் பெயர்கள் வேற்றுமை உருபுகளாகிய நான்கன் உருபும் ஆறன் உருபும் பெறும்பொழுது இரட்டா.

13. எழுத்துப் பேறாகிய உகரம் பெறுதலும் பெறாமையும் உண்டு.

**14.** அளவுப் பெயர்கள், நிறைப் பெயர்கள், எண்ணுப் பெயர்கள், உம்மைத் தொகையில் பல்வேறு சாரியைகள் பெறும். தம்மினும் குறைந்த மதிப்புடைய பெயர்கள் வரும்பொழுதே இச் சாரியைகள் பெறும். ஏ, இன், அத்து முதலிய சாரியைகள்வருதலும், சாரியை இன்மையும், வல்லெழுத்துப் பெறுதலும் இவற்றின் தனிச் சிறப்பாம்.

**15.** யார் யாவது என்பன மரூஉ முடிபுகள் ஆகும்.

**16.** இவை யனைத்தும் அக்காலத்து வழங்கிய வழக்கியல் மரபுகள். எனவே இவை தொகை மரபு என்னும் பெயர் பெறுவது ஆயிற்று.

# 7. உருபு புணரியல்

முன்னுரை :—பெயர்ச் சொற்களோடு வேற்றுமை உருபுகள் சேரும்பொழுது இடையே இருக்கும் வெற்று ருபன்களைச் சாரியைகள் என்பர். இச்சாரியைகளின் மாற்று வடிவங்களைப் புணரியலின் கண் காட்டியுள்ளார்.

ஒரு காலத்தில் சொல்லின் ஈற்று நிலைகளாக இருந்தவை வெற்றுருபன்களாக நின்று சாரியைகளாக உணரப்பட்டன. எனவே இவை சொல்லுக்குச் சொல் வேறுபடுதல் இயற்கை.

கோஒன் —கோ—ஒன்

மான்—மா—ன்

புளியம்—புளி—அம்

குன்றம்—குன்று—அம்

ஒன், ன், அம் முதலியவை சொல்லின் ஈற்று நிலைகளாம். குன்று என்பதை நோக்கக் குன்றம் என்பதிலுள்ள அம் வெற்றுருபனாகும். இதனையே சாரியை என்று கொண்டனர். சொற்களின் வடிவுகளுக்கு ஏற்ப ஈற்று நிலைகளும் மாறுதல் இயற்கை. இவ் வீற்று நிலைகளைச் சாரியைகளாகக் கொண்டதால் ஒரு சில சாரியைகளே மீண்டும் அச்சொற்களோடு பொருந்துவன ஆயிற்று. எவ்வெச் சொற்களுக்கு எவ்வெச் சாரியைகள் வரும் என்பதை உருபு புணரியல் என்ற தலைப்பு எடுத்துக் காட்டுகிறது.

புணரியலில் சாரியைகளின் மாற்று வடிவங்களைக் காட்டுவர். உருபு புணரியலில் அவை எவ்வெச் சொற்களோடு இயைகின்றன என்பதைக் காட்டுவர்: சாரியைகளின் திரிபுகள் புணரியலிலும் அவை வரும் சூழ்நிலைகள் உருபு புணரியலிலும் காட்டப்படுகின்றன. இச் சாரியைகள் எல்லாம் சொற்களின் ஈற்று நிலைகளாக இருந்திருத்தல் வேண்டும் என்ற கருத்து நிலவுகிறது. உருபுகளுக்கும் சாரியைகளுக்கும் உள்ள தொடர்பு ஈண்டுக் காட்டப்படும்.

னகர ஈற்றுச் சாரியைகள் (இன், அன், ஆன், ஒன்);

1. 'இன்' என்னும் சாரியை:

(அ) விளவினை, பலாவினை, கடுவினை. தழூஉவினை, சேவினை, வௌவினை (வௌவுதல் தொழிற் பெயர்).

அ ஆ உ ஊ ஏ ஔ இவ்வுயிரீற்றுப் பெயர்கள் இன் சாரியை பெற்றன.

இ ஈ எ ஓ இவற்றின் முன் இன் வருவதில்லை என்பது தெரிகிறது.

(ஆ) உரிஞினை, பொருநினை

ஞ, ந ஆகிய இம்மெய்யீற்றுச் சொற்கள் இன் சாரியை பெற்றன.[2]

(இ) வகர ஈற்றுச் சொற்களில் அவ், இவ், உவ் என்பன வற்று என்னும் சாரியை பெறுகின்றன. ஏனைய தெவ் என்பது இன் சாரியை பெறும்.[3]

---

1. "அஆ உஊ ஏஔ வென்னும்
அப்பால் ஆறன் நிலைமொழி முன்னர்
வேற்றுமை உருபிற்கு இன்னே சாரியை."—தொல்-173

2. "ஞ,நவென் புள்ளிக்கு இன்னே சாரியை."—தொல்-182

3. "சுட்டு முதல் வகர மையு மெய்யும்
கெட்ட விறுதி யியற்றிரி பின்றே." —தொல்-183

"ஏனைய வகரம் இன்னொடு சிவணும்." —தொல்-184

(ஈ) மகர ஈற்றுச் சொற்கள் பெரும்பாலும் அத்து என்னும் சாரியை பெறும். எனினும் ஒரு சில சொற்கள் இன் பெற்று முடிதலும் உண்டு.

மரத்தை, நிலத்தை (அத்து பெற்றது)

உருமினை, திருமினை (இன் பெற்றது).[4]

(உ) அழன், புழன் என்னும் னகர ஈற்றுச் சொற்கள் அத்தும் இன்னும் பெறும் இயல்பின.

அழத்தை, அழனினை
புழத்தை, புழனினை.[5]

(ஊ) குற்றியலுகர இறுதி பொதுச் சொற்கள் இன் சாரியை பெறும்.

நாகினை, வரகினை, வீட்டினை.[6]

2, அன் என்னும் சாரியை:-

(அ) சுட்டை முதலாகவுடைய உகர ஈற்றுச் சொற்கள் அன் சாரியை பெறும். நிலைமொழி உகரம் கெடும்.

அது + அன் + ஐ — அதனை.[7]

---

4. "மஃகான் புள்ளி முன்அத்தே சாரியை." —தொல்-185
"இன்னிடை வரூஉம் மொழியுமா ருளவே."
—தொல்-186

5. "அழனே புழனே ஆயிரு மொழிக்கும்
அத்தும் இன்னும் உறழத் தோன்றல்
ஒத்தது என்ப உணரு மோரே." —தொல்–193

6. "குற்றிய லுகரத் திறுதி முன்னர்
முற்றத் தோன்றும் இன்னென் சாரியை."—தொல்-195

7. "சுட்டு முதலுகரம் அன்னொடு சிவணி
யொட்டிய மெய்யொழித் துகரம் கெடுமே."
—தொல்–176
"சுட்டின் முன் ஆய்தம் அன்வரின் கெடுமே." —நன்-251

(ஆ) எண்ணுப் பெயர்களுள் ஏழ் என்பதன் முன் **அன்** சாரியை வரும்.

ஏழ்+ அன் + ஐ—ஏழனை (ஏழற்கு, ஏழனின்).[8]

(இ) குற்றியலுகர ஈற்று எண்ணுப் பெயர்கள் அன் சாரியை பெறும்.

ஒன்றனை, இரண்டனை, மூன்றனை.[9]

(ஈ) யாது, அஃது, இஃது, உஃது இவை அன் சாரியை பெறும். சுட்டுப் பெயர்களுள் அன் வரும்பொழுது ஆய்தம் கெடும்.

யாதனை, அதனை, இதனை, உதனை.[10]

**3. ஆன் சாரியை :**

ஒன்று+பத்து+ஐ—ஒருபான்—ஒருபானை
இரு+பத்து+ஐ—இருபான்—இருபானை.

ஆன் சாரியை வந்தது. ஆய்தம் கெட்டது. ஒன்று முதலாக எட்டு ஈறுகவுள்ள எண்கள் பத்து என்பதனோடு புணரும் பொழுது ஆன் என்னும் சாரியை வரும் என்பர்.[11]

---

8. "அன்னென் சாரியை ஏழன் இறுதி
முன்னர்த் தோன்றும் இயற்கைத் தென்ப." —தொல்-194

9. "எண்ணின் இறுதி யன்னொடு சிவணும்." —தொல்-198

10. "யாதென் இறுதியும் சுட்டு முதலாகிய
ஆய்த விறுதியும் அன்னொடு சிவணும்
ஆய்தம் கெடுதல் ஆவயி னான." —தொல்-200

11. "ஒன்று முதலாகப் பத்தூர்ந்து வரூஉம்
எல்லா எண்ணும் சொல்லுங்காலை
ஆனிடை வரினும் மானமில்லை
அஃதேன் கிளவி ஆவயிற் கெடுமே
உய்தல் வேண்டும் பஃகான் மெய்யே." —தொல்-199

4. ஒன் என்னும் சாரியை:

கோ+ஐ=கோஒனை ஒகார ஈற்றுச் சொற்கள் ஒன் என்னும் சாரியை பெறும் என்பர்.[12]

5. அத்து என்னும் சாரியை:-

(அ) உயிர்களுள் அகர, ஆகார ஈற்று மரப்பெயர்க் கிளவிகள் அத்து என்னும் சாரியை பெறும்.

விள+அத்து+கண்—விளவத்துக்கண்.

பலா+அத்து+கண்—பலாவத்துக் கண்.[13]

(ஆ) மெய்களுள் மகர ஈற்றுச் சொற்கள் அத்து என்னும் சாரியை பெறும்.

மரம்—மரத்தை

நிலம்—நிலத்தை.[14]

6. வற்று என்னும் சாரியை:

இது பொதுவாக அஃறிணைப் பன்மை ஈற்றுச் சொற்களிலேயே இடம் பெறும் இயல்பினது.

சுட்டுவினுத் தொகைப் பெயர்களிலேயே வற்று இடம் பெறுகிறது.

---

"ஒன்று முதலெட்டு ஈறும் எண்ணூர்
பத்தின் முன்னுன்வரிற் பவ்வொற் றொழியமேல்
எல்லா மோடு மொன்பது மிற்றே." —நன்-249

12. "ஒகார இறுதிக்கு ஒன்னே சாரியை." —தொல்-180

13. "அ ஆ வென்னும் மரப்பெயர்க் கிளவிக்கு
அத்தொடுஞ் சிவணும் ஏழன் உருபே." —தொல்-181

14. "மஃகான் புள்ளிமுன் அத்தே சாரியை." —தொல்-185

பல+ஐ—பலவற்றை
சில+ஐ—சிலவற்றை
யா+ஐ—யாவற்றை
யாவை+ஐ—யாவற்றை
அவை+ஐ—அவையவற்றை[15]

அவற்றை இவற்றை உவற்றை

எல்லாம்+ஐ—எல்வாவற்றையும் (அஃறிணைச் சொல்) எல்லாவற்றுக்கோடும் தொல். 189, 322

எல்லாம்+ஐ—எல்லா நம்மையும்; உயர்திணைச் சொல் வற்றுப் பெறவில்லை[16]

---

15. "பல்லவை நுதலிய வகர இறுபெயர்
வற்றொடு சிவணல் எச்சம் இன்றே." —தொல்-174

"யாவென் வினாவும் ஆயியல் திரியாது." —தொல்-175

"சுட்டுமுத லாகிய வையென் இறுதியும்
வற்றொடு சிவணி நிற்றலும் உரித்தே." —தொல்-177

"யாவென் வினாவி னையென் இறுதியும்
ஆயியல் திரியாது என்மனார் புலவர்
ஆவயின் வகரம் ஐயொடும் கெடுமே." —தொல்-178

"வவ்விறு சுட்டிற்கற்றுறல் வழியே." —நன்-250

16. "எல்லா மென்னும் இறுதி முன்னர்
வற்றன் சாரியை முற்றத் தோன்றும்
உம்மை நிலையும் இறுதி யான." —தொல்-189

"உயிர்திணை ஆயின் அம்மிடை வருமே." —தொல்-190

"எல்லாம் என்பது இழிதிணை யாயின்
அற்றோ டுருபின் மேலும் முறுமே
அன்றே னம்மிடை யடைந் தற்றுகும்." —நன்-245

**7, இடப்பெயாகளின் குறுக்கம் சாரியை யாதல்;--**

எல்லா நன்மையும்—நம்
எல்லார் தம்மையும்—தம்
எல்லீர் நும்மையும்—நும்[17]

**8. சாரியை பெருத இடபெயர்கள்:**

நீ எழுவாய்
நின் உருபேற்கத் திரிந்த வடிவம்:[19]
நீர்—நும்.[19]
தான்—தன்.[20]

---

17. "உயிர்திணை யாயின் நம்மிடை வருமே." —தொல்-190

"எல்லாரும் என்னும் படர்க்கை இறுதியும்
எல்லீரும் என்னும் முன்னிலை இறுதியும்
ஒற்றும் உகரமும் கெடுமென மொழிப
நிற்றல் வேண்டும் ரகரப் புள்ளி
உம்மை நிலையும் இறுதி யான
தம்மிடை வரூஉம் படர்க்கை மேன
நும்மிடை வரூஉம் முன்னிலை மொழிக்கே."
—தொல்-191

"எல்லாரும் எல்லீரும் என்பவற் றும்மை
தள்ளி நிரலே தம்நும் சாரப்
புல்லும் உருபின் பின்ன ரும்மே" —நன்-246

18. "நீயெ னொருபெயர் நெடுமுதல் குறுகும்
ஆவயின் அகரம் ஒற்றாகும்மே." —தொல்-179

19. "நும்மென் இறுதி இயற்கையாகும்." – தொல்-187

20. "தான்யான் என்னும் ஆயீ ரிறுதியும்
மேன்முப் பெயரொடும் வேறுபாடு இலவே."
—தொல்-192

**யான்—என்,**[21]

தாம்—தம் } [22]
நாம்—நம் }

இடப்பெயர்கள் நெடுமுதல் குறுகி வடிவம் மாறுபடுகின்றன. இவை சாரியைகளை ஏற்பதில்லை.

**9. சாரியை பெறுதலும் பெறுமையும்**

ஏழன் உருபிற்குத் திசைப் பெயர் முன்னர் சாரியை வருதலும் உண்டு; வாராமையும் உண்டு.

வடக்கு+கண்—வடக்கின்கண் (சாரியை பெற்றது); வடக்கண் சாரியை பெறவில்லை.[23]

நெட்டெழுத்து முதலாகவுடைய குற்றியலுகர ஈற்றுச் சொற்கள் இரட்டித்து வரும். இன் சாரியை பெற்றும் பெறுமலும் வரும்.

யாடு—யாட்டை; யாட்டினை.
சோறு—சோற்றை; சோற்றினை.

---

21. "தொல்-192"

22. "தாநா மென்னும் அகர இறுதியும்
யாமென் இறுதியும் அதனோ ரன்ன
ஆ எ ஆகும் யாமென் இறுதி;
ஆவயின் யகரமெய் கெடுதல் வேண்டும்
ஏனை யிரண்டு நெடுமுதல் குறுகும்." —தொல்-188

"தான்தாம் நாம்முதல் குறுகும்; யான்யாம்
நீ நீர் என் எம் நின்நும் ஆம்பிற
குவ்வி னவ்வரு நான்கா றிரட்டல்." —நன்-247

23. "ஏழன் உருபிற்குத் திசைப்பெயர் முன்னர்
சாரியைக் கிளவி இயற்கையு மாகும்
ஆவியின் இறுதி மெய்யொடுங் கெடுமே."—தொல்-201

இவை இன் பெறவேண்டும் என்ற நியதி இல்லை. இன் பெற்றும் பெறாமலும் அமையும்.[24]

மேற் கூறிய சாரியைகள் பெறும் என்று காட்டியவைகள் தவிர ஏனைய பெயர்ச் சொற்கள் எல்லாம் சாரியை பெற்றும் பெறாமலும் அமையும் என்பர்.

மண்ணினை; மண்ணை;

கல்லினை; கல்லை.[25]

**தொகுப்புரை :-**

சொல்லின் ஈற்றுநிலைகள் தொல்காப்பியர் காலத்தில் சாரியைகளாக நிலைபெற்றன. பெயர் சாரியை உருபு எனத் தொடரும்.

புணரியலில் சாரியைகளின் மாற்றுவடிவங்களைக் காட்டுவர்; உருபியலில் சாரியைகள் வரும் இடம் காட்டப் பெறுகின்றன. வேற்றுமை உருபுகள் வெளிப்படையாக ஏற்கும் பொழுது வரும் சாரியைகளையே ஈண்டுக் குறிப்பிடுவர்.

1. னகர ஈற்றுச் சாரியைகள் இன், அன் ஆன், ஒன் என்பனவாம். இன் என்னும் சாரியை இ, ஈ, எ, ஒ என்னும் ஈற்றுப் பெயர்களின் முன் வருதல் இல்லை. ஏனை அஆ உஊ ஏஓஐ ஔ இவ்வீற்றுப் பெயர்களின் முன்

24. "நெட்டெழுத்திம்பர் ஒற்று மிகத் தோன்றும்
அப்பான் மொழிகள் அல்வழி யான." —தொல்-196

"அவைதாம்
இயற்கைய வாகும் செயற்கைய வென்ப."
—தொல்-197

25. "புள்ளி யிறுதியும் உயிர்இறு கிளவியும்
சொல்லிய வல்ல ஏனைய எல்லாம்
தேருங்காலை யுருபொடு சிவணிச்
சாரியை நிலையும் கடப் பாடிலவே." —தொல்-202

மட்டும் வரும். இஈ இன எழுத்துக்கள் ஆதலின் இன் சாரியை வருவதில்லை.

மெய்களுள் மகரனகர ஈற்ருேடு இன் வரும். தெவ் என்பதோடு இன் சேர்கிறது. மகரனகர ஈற்றுச் சொற்களில் ஒரு சில சொற்களில் மட்டும் இன் வரும் குற்றியலுகர ஈற்றுச் சொல் இன் பெறும்.

2. அன்—சுட்டுப்பெயர் ஏழ் என்னும் எண்ணுப் பெயர், குற்றிய லுகர ஈற்று எண்ணுப் பெயர், ஒன்றன் பால் விஞைப் பெயர், சுட்டுப் பெயர் முதலியவற்ருேடு அன்வரும்

3. ஆன் சாரியை பத்து என்னும் எண்ணுப் பெயரோடு வரும் 'ஒருபானை. இருபானை, முப்பானை.

4. ஒன் என்னும் சாரியை ஒகார ஈற்றுச் சொல்லில் இடம் பெறும்.

5. அத்து:-உயிர்களுள் அகர ஆகார ஈற்று மரப் பெயர்க்கிளவிகள் அத்துப் பெறும். மெய்களுள் மகர ஈற்றுச் சொற்கள் அத்துப் பெறும்.

6. வற்று:- பன்மைச் சொற்கள் வற்றுப் பெறும். அவ், இவ், உவ், பல, சில, யாவை, அவை எல்லாம் முதலியன வற்றுப் பெறும்.

7. நம், தம், நும் என்பன. எல்லாம், எல்லாரும் எல்லீரும் முதலிய சொற்களுள் சாரியைகளாக வரும்.

8. சாரியை பெருத பெயர்கள்;- மூவிடப் பெயர்கள் உருபு ஏற்கும் போது நெடுமுதல் குறுகும்; இவை சாரியை பெரு.

9. பெறுதலும் உண்டு; பெருமையும் உண்டு.

எனவே மேல் குறிப்பிட்டவை அனைத்தும் இச்சாரியைகள் பெற்ரே வரும் என்பது ஆயிற்று.

# 8. உயிர் மயங்கியல்

உயிர் மயங்கியல் என்பது உயரீறு நின்று ஏனைய சொற்களோடு புணர்தல் என்பதாம். அவற்றைக் கீழ் வரும் தலைப்புக்களின் காணலாம்.

(1) தோன்றல் (2) திரிதல் (3) கெடுதல் (4) இயல்பு (5) உறழ்வு (6) எழுத்துப்பேறு (7) சாரியை (8) மரூஉ முடிபு (9) பொருள் பற்றிய உறழ்வு எனக் காணலாம்.

1. தோன்றல் (அ) வல்லெழுத்துத் தோன்றல்: இயல்பாகவும் திரிந்தும் நிற்கும் உயிர் ஈறுகள் வருமொழி வல்லெழுத்தோடு புணரும்பொழுது வல்லெழுத்து மிகும். இதனை ஒவ்வொரு ஈறுகத் தொல்காப்பியனார் விதந்து கூற நன்னூலார் தொகுத்துத் தருகின்றார்.

"இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன்
கசதப மிகும் விதவாதன மன்னே." —நன் 165

இதனைத் தொல்காப்பியனார் பல சூத்திரங்களில் விளக்குவர்.[1]

---

1. "அகர இறுதிப் பெயர்நிலை முன்னர்
வேற்றுமை அல்வழிக் கசதபத் தோன்றில்
தத்தம் ஒத்த ஒற்றிடை மிகுமே" —தொல்-203
"ஆகார இறுதி அகர இயற்றே" —தொல்-221
"ஈகார இறுதி யாகார இயற்றே" —தொல்-249
"உகர இறுதி அகர இயற்றே" —தொல்-254
"ஊகார இறுதி ஆகார இயற்றே" —தொல்-264

(1) அ ஆ ஈ உ ஊ ஏ ஒ ஈற்றுப் பெயர்ச் சொற்களின் முன் வேற்றுமையிலும் அல்வழியிலும் க ச த ப வந்தால் தத்தம் ஒத்த ஒற்று இடையில் மிகும். இகரம் மட்டும் இப்பொது விதியை ஏற்கவில்லை என்பது தெரிகிறது. எகரம் மொழிக்கு ஈறு ஆவது இல்லை. எனவே எகரம் விலக்கப்பட்டது.[1]

(2) செய்யா என்னும் வினையெச்சக் கிளவியும் அவ்வியல் திரியாது என்பர்.[2]

(3) இகர ஈற்றுப் பெயர்நிலை முன்னர் வேற்றுமையாயின் வல்லெழுத்து மிகும். கிளிக்கால்[3]

(4) இனி என்னும் காலம் உணர்த்தும் சொல்லும், அணி என்னும் இடம் உணர்த்தும் சொல்லும், இகர ஈற்று வினையெஞ்சு கிளவியும் சுட்டும் அன்ன.

இனிக்கண்டான்; அணிக் கண்டான்;
தேடிக் கண்டான்; இக்கொற்றன்.[4]

---

"ஏகார இறுதி ஊகார இயற்றே" —தொல்-274
"வேற்றுமைக் கண்ணும் அதனோர் அற்றே"
தொல் 225, 252, 259, 266, 276
"ஓகார இறுதி ஏகார இயற்றே" —தொல்-289
"வேற்றுமைக் கண்ணும் அதனோர் அற்றே
ஒகரம் வருதல் ஆவயினான" —தொல்-292

2. "செய்யா என்னும் வினையெஞ்சு கிளவியும்
அவ்வியல் திரியாது என்மனார் புலவர்" —தொல்-222

3. "இகர இறுதிப் பெயர்நிலை முன்னர்
வேற்றுமை யாயின் வல்லெழுத்து மிகுமே"
—தொல்-235

4. "இனியணி என்னும் காலையும் இடனும்
வினையெஞ்சு கிளவியுஞ் சுட்டும் அன்ன" —தொல்-236

(5) தூணி என்னும் அளவுப் பெயர் முன் பதக்கு என்னும் அளவுப் பெயர் வருமாயின் வல்லெழுத்து மிகும். தூணிப்பதக்கு[5]

(6) ஊகார ஈற்று வினையெஞ்சு கிளவி முன் கசதப வருவழி வல்லெழுத்து மிகும். முன்னிலை மொழியும் இவ்விதியே பெறும்.

உண்ணூக் கொண்டான்

கைதூக் கொற்று.[6]

(7) ஐகார இறுதிப்பெயர்நிலை முன்னர் வேற்றுமை யாயின் வல்லெழுத்து மிகும்.
யானைக்கோடு.[7]

(8) ஔகார இறுதிப் பெயர்நிலை முன்னர் அல்வழி யிலும் வேற்றுமையிலும் உகரம் வரும்; வல்லெழுத்து மிகும்.

கௌவுக் கடிது; கௌவுக் கடுமை.[8]

---

5. "பதக்குமுன் வரினே தூணிக் கிளவி
முதற்கிளந் தெடுத்த வேற்றுமை யியற்றே"
தொல்-239

6. "வினையெஞ்சு கிளவிக்கும் முன்னிலை மொழிக்கும்
நினையுங் காலை அவ்வகை வரையார் —தொல்-265

7. "ஐகார இறுதிப் பெயர்நிலை முன்னர்
வேற்றுமை யாயின் வல்லெழுத்து மிகுமே"
—தொல்-280

8. "ஔகார இறுதிப் பெயர்நிலை முன்னர்
அல்வழி யானும் வேற்றுமைக் கண்ணும்
வல்லெழுத்து மிகுதல் வரைநிலை இன்றே
அவ்விரு ஈற்றும் உகரம் வருதல்
செவ்விது என்ப சிறந்திசி னோரே" —தொல்-295

ஆ. மெல்லெழுத்துத் தோன்றல் (மரப்பெயர்க் கிளவிகள்) :—

(1) மரப்பெயர்க் கிளவி மெல்லெழுத்து மிகும்.

அதங்கோடு, விளங்கோடு, செதிள், தோல் பூ என வரும்.[9]

(2) மா மரக்கிளவி அகரம் எழுத்துப் பேருகப் பெறுதலோடு அன்றி மெல்லெழுத்தும் பெறும்.

மா அங்கோடு[10]

(3) உதிமரக் கிளுவி, ஒடுமரக் கிளவி, சேவென் மரப்பெயர், விசை மரக் கிளவி, ஞெமை, நமை ஆகிய இவையும் மெல்லெழுத்து மிகும்.[11]

ஒரு சில மரப்பெயர்கள் அம் சாரியை பெறுகின்றன. அவற்றினின்று விலக்கிக் காட்டவே தனித்தனி ஈறுகளில் இவற்றைக் கூறுகின்றுர் என்பது தெரிகிறது.

---

9. "மரப்பெயர்க் கிளவி மெல்லெழுத்து மிகுமே"
—தொல்-217

"மரப்பெயர் முன்னர் இனமெல் லெழுத்து
வரப்பெறு னவும்உள வேற்றுமை வழியே" —நன்-166

10. "மாமரக் கிளவியும் ஆவும் மாவும்
ஆம்முப் பெயரும் அவற்றேர் அன்ன
அகரம் வல்லெழுத்து அவையவண் நிலையா
னகரம் ஒற்றும் ஆவும் மாவும்" —தொல்-231

11. உதிமரக் கிளவி மெல்லெழுத்து மிகுமே" —தொல்-243
"ஒடுமரக் கிளவி உதிமர வியற்றே" —தொல்-262
"சேவென் மரப்பெயர் ஒடுமர இயற்றே" —தொல்-278
"விசை மரக் கிளவியும் ஞெமையும் நமையும்
ஆம் முப்பெயரும் சேமர இயல" —தொல்-282

## 2. திரிதல்

(1) சுட்டுப் பெயர்களின் அகரமும் உகரமும் செய்யுளில் திரிதல் உண்டு. இவை முதல் நீள்வு பெறுகின்றன. உயிர் வருவழி அகர இகரச் சுட்டுகள் முதல் நீள்வு பெறுகின்றன.

ஆயிரு திணையின் இசைக்கு மன சொல்லே.

ஆயிருபாற் சொல்.[12]

ஈ காண் தோன்றும் எம் சிறு நல்லூரே.[13]

(2) உரைப் பொருள் கிளவியாகிய அகரம் நீளலும் உண்டு.

அம்மகொற்ரு—அம்மா கொற்ரு.[14]

(3) பலவற்றை உணர்த்தும் சொற்கள் முதல் நீள்வு பெற்றன. பலாஅஞ், சிலாஅம் என்மனுர் புலவர்" செய்யுளில் இம்மாறுதல் நிகழ்கிறது.[15]

(4) ஆப்பீ என்பது ஆப்பி எனக்குறுகுகின்றது.[16]

(5) குற்றெழுத்தை அடுத்த நெடில் ஆ குறில் அகரமாகத் திரிந்து உகரம் பெற்று முடியும் செய்யுளகத்து.

---

12. "நீட வருதல் செய்யுளில் உரித்தே" —தொல்-208
13. "சுட்டின் இயற்கை முற்கிளந்தற்றே" —தொல்-238
14. "உரைப் பொருட்கிளவி நீட்டமும் வரையார் —தொல்-212
15. "பலவற்று இறுதி நீடுமொழி உளவே
செய்யுள் கண்ணிய தொடர் மொழியான" —தொல்-213
16. "ஆன்முன் வரூஉம் ஈகார பகரம்
தான்மிகத் தோன்றிக் குறுகலும் உரித்தே." —தொல்-233

நிலா—நிலவு; சுறா—சுறவு

நில சுற என நிற்றல் நன்னூலார் காட்டுவது ஆகும்.[17]

(6) இன்றி என்னும் வினையெஞ்சு இறுதியின் பின் இகர உகரமாதல் செய்யுள் நெறியாகும்.

உப்பின்று புற்கை உண்கமா கொற்கையோனே. [18]

(7) அது+அன்று அதாஅன்றம்ம

உகரம் ஆகாரமாகத் திரிந்தது.

அது+மற்றம்ம—அதை மற்றம்ம—உகரம் கெட்டது. இது செய்யுளில் திரிபாகும்.[19]

(8) ழகர உகரம் நீடும் இடனும் உண்டு. உகரம் எழுத்துப்பேறாக வரும்.

---

17. "குறியதன் இறுதிச் சினைகெட உகரம்
அறிய வருதல் செய்யுளுள் உரித்தே." —தொல்-234

"குறியதன் கீழாக் குறுகலும் அதனோடு
உகரம் ஏற்றலும் இயல்புமாம் தூக்கின்." —நன்-172

18. "இன்றி என்னும் வினையெஞ்சு இறுதி
நின்ற இகரம் உகரம் ஆதல்
தொன்றியல் மருங்கில் செய்யுளுள் உரித்தே."
—தொல்-237

"அன்றி இன்றி என் வினையெஞ்சு இகரம்
தொடர்பினுள் உகரமாய் வரின் இயல்பே."
—நன்-173

19. "அன்றுவரு காலை ஆவாகுதலும்
ஐவரு காலை மெய்வரைந்து கெடுதலும்
செய்யுள் மருங்கின் உரித்தென மொழிப."
—தொல்-258

"அதுமுன் வரும் அன்று ஆன்று ஆம் தூக்கின்."
—நன்-180

(9) எழு+கதவு—எழூஉக் கதவு.[20]

(10) **சுட்டுப் பெயர்களில் திரிபுகள்**

(அ) சுட்டின் முன்னர் ஞநமத் தோன்றின் அதன் ஒற்று இடை மிகுதல் வேண்டும்.[21]

அஞ்ஞாண், அந்நூல், அம்மண்.

ஏனையிடத்து

அ+யாழ்—அவ்யாழ் [22]

அ+உயிர்—அவ்வுயிர்[23]

அ+இட—ஆயிடை (செய்யுள் வழக்கு) [24]

அது+குறிது—அது குறிது-இயல்பு [25]

(ஆ) அது+அன்று—அதா அன்று

அது+மற்று—அதைமற்றம்ம [26]

---

20. "ழகர வுகரம் நீடிடன் உடைத்தே
உகரம் வருதல் ஆவயின் ஆன." —தொல்-261

21. "சுட்டின் முன்னர் ஞநமத் தோன்றின்
ஒட்டிய வொற்றிடை மிகுதல் வேண்டும்."
—தொல்-205

22. "யவமுன் வரினே வகரம் ஒற்றும்," —தொல்-206

23. "உயிர்முன் வரினும் ஆயியல் திரியாது" —தொல்-207

24. "சுட்டின் முன்னரும் அத்தொழிற்று ஆகும்."
—தொல்-255

"ஏனவை வரினே மேனிலை யியல." —தொல்-256

25. "சுட்டுமுதல் இறுதி இயல்பா கும்மே." —தொல்-257

26. "அன்றுவரு காலை ஆவாகு தலும்
ஐவரு காலை மெய்வரைந்து கெடுதலும்
செய்யுள் மருங்கின் உரித்தென மொழிப"
—தொல்-258.

(இ) அதன் கோடு, இதன்கோடு, உதன் கோடு அன் சாரியை பெற்றது [27]

(ஈ) அவையற்றுக் கோடு
இவையற்றுக் கோடு
உவைய்ற்றுக் கோடு; அற்றுச் சாரியை பெற்றன [28]

### 3. கெடுதல்

(1) சாவ என்னும் செயவென் எச்சத்திநிறுதி வகரம் கெடுதலும் உரித்தே.[29]
கோட்டைச் சாக்குத்திஞன்.

(2) வாழிய என்னும் செயவென் கிளவி இறுதி அகரம் கெடுதலும் உரித்து.

வாழி கொற்ரு.[30]

---

27. "சுட்டுமுதல் இறுதி உருபியல் நிலையும
ஒற்றிடை மிகாஅ வல்லெழுத்து இயற்கை."
—தொல்-263

28. "சுட்டுமுதல் இறுதி உருபியல் நிலையும்." —தொல்–281

29. "சாவ என்னும் செய வென் எச்சத்து
இறுதி வகரம் கெடுதலும் உரித்தே" —தொல்-209
''சாவஎன் மொழியீற்று உயிர்மெய் சாதலும்
விதி"—நன்-169

30. "வாழிய என்னும் செய வென் கிளவி
இறுதி அகரம் கெடுதலும் உரித்தே" —தொல்-211
"வாழிய என்பதன் ஈற்றின் உயிர் மெய்
ஏகலும் உரித்து அஃது ஏகினும் இயல்பே" —நன்-168

## 4. இயல்பு

(1) அகர ஈறு :—1. அன்ன என்னும் உவமக் கிளவியும் 2. அண்மை விளிக் கிளவியும் 3. செய்ம்மன என்னும் தொழில் இறு சொல்லும் 4. ஏவல் கண்ணிய வியங்கோட் கிளவியும் 5. செய்த என்னும் பெயரெஞ்சு கிளவியும் 6. செய்யிய என்னும் வினையெஞ்சு கிளவியும் 7. அம்ம என்னும் உரைப் பொருட் கிளவியும் 8. பன்மை உணர்த்தும் அகர ஈற்றுச் சொற்களும் இவ்வெட்டுச் சொல்லும் இயல்பாய் முடியும்.

1. பொன்னன்ன குதிரை; 2. ஊரகேள்; 3. உண்மன குதிரை (செய்யும் என்னும் பொருளினது); 4. அவன் செல்க காட்டின் கண்; 5. உண்ட குதிரை; 6. உண்ணிய கொண்டான்; 7. அம்மகொற்ற, 8. பல குதிரை, சில குதிரை. [31]

---

31. "அன்ன என்னும் உவமக் கிளவியும்
அண்மை சுட்டிய விளிநிலைக் கிளவியும்
செய்ம்மன என்னும் தொழிலிறு சொல்லும்
ஏவல் கண்ணிய வியங்கோட் கிளவியும்
செய்த என்னும் பெயரெஞ்சு கிளவியும்
செய்யிய என்னும் வினையெஞ்சு கிளவியும்
அம்ம என்னும் உரைப்பொருட் கிளவியும்
பலவற்று இறுதிப் பெயர்க்கொடை உளப்பட
அன்றி அனைத்தும் இயல்பென மொழிப —தொல்-210

"செய்யிய என்னும் வினையெச்சம் பல்வகைப்
பெயரின் எச்சம்முற்று ஆறன் உருபே
அஃறிணைப் பன்மை அம்மமுன் இயல்பே" —நன்-167

**(2) ஆகார ஈற்றுச் சொற்கள்:**

1. ஆ குறிது—ஆ என்னும் பெயர்.
2. மா பெரிது—மா என்னும் பெயர்.[32]
3. ஊரா கேள்—விளிப் பெயர்.[33]
4. யா குறிய—யாவென் வினா.[34]
5. உண்ணா குதிரைகள்—பன்மை வினை முற்று.
6. கேண்மியா—ஏவல் குறித்த உரையசை (மியா)
7. உண்கா கொற்றா—தன் தொழில் உரைக்கும் வினாவின் கிளவி.

இவ்வேழும் ஆகார ஈற்றுச் சொற்களில் இயல்பாக முடிவன ஆகும்,[35]

**(3) ஈகார ஈறு:**

நீ குறியை—நீ என்னும் பெயர்
பீ குறிது—இடக்கர்ப் பெயர்
மீ கண்—இடம் வரை கிளவி.

மீ என்பதனை மரூஉ முடிபு என்பர் தொல்காப்பியர் [36]

---

32. "அல்வழி ஆமா மியா முற்று முன்மிகா" —நன்-171
33. "ஈற்றியா வினாவிளிப் பெயர்முன் வலி இயல்பே." —நன்-160
34. நன்-120
35. "ஆவும் மாவும் விளிப்பெயர்க் கிளவியும்
யாவென் வினாவும் பலவற் றிறுதியும்
ஏவல் குறித்த உரையசை மியாவும்
தன்தொழில் உரைக்கும் வினாவின் கிளவியொடு
அன்றிஅனைத்தும் இயல்பென மொழிப."
—தொல்-224
36. "நீ என் பெயரும் இடக்கர்ப் பெயரும்
மீ என மரீஇய இடம்வரை கிளவியும்
ஆவயின் வல்லெழுத்து இயற்கை ஆகும்."—தொல்-250

(4) இடைச் சொற்கள்:

யானேஎ கொண்டேன்—தேற்ற எகரம்
யானோஒ கொடியன்—சிறப்பு ஓ.[37]
யானே கொண்டேன்—மாறுகொள் எச்சம் ஏ
நீயே கொண்டாய்—வினா.[38]
நீரே தீயே—எண் ஏ
யானோ கொண்டேன்—மாறுகொள் எச்சம் ஓ
நீயோ கொண்டாய்—வினா ஓ
பத்தோ பதினொன்றோ—ஐய ஓ.[39]
கொளலோ கொண்டான்—ஒழியிசை ஓ.[40]

5. உறழ்வு:

1 பல+பல—பற்பல—பலபல—பலப்பல
சில+சில—சிற்சில—சிலசில—சிலச்சில
பஃறொழிசை, பன்ஞானம், பன்னாள், பன்மொழி.[41]

---

"பவ்வீ நீமீ முன்னர் அல்வழி
இயல்பாம், வலிமெலி மிகலுமாம் மீக்கே." — நன்-1.8

37. "தேற்ற எகரமும் சிறப்பின் ஒவ்வும்
மேற்கூ றியற்கை வல்லெழுத்து மிகா." —தொல்-273

38. "மாறுகோள் எச்சமும் வினாவும் எண்ணும்
கூறிய வல்லெழுத்து இயற்கை யாகும்." —தொல்-275;

39, "மாறுகொள் எச்சமும் வினாவும் ஐயமும்
கூறிய வல்லெழுத்து இயற்கை யாகும்."—தொல்-290

40 "ஒழிந்ததன் நிலையும் மொழிந்தவற்று இயற்றே."
—தொல்-291

41. "தொடரல் இறுதி தம்முன் தாம் வரின்
லகரம் றகரஒற்று ஆகலும் உரித்தே." —தொல்-214
"வல்லெழுத்து இயற்கை உறழத் தோன்றும்."
—தொல்-215

"பல சில எனும்இவை தம்முன் தாம்வரின்
இயல்பும் மிகலும் அகரம் ஏக
லகரம் றகரம் ஆகலும் பிறவரின்
அகரம் விகற்பம் ஆகலும் உளபிற." —நன்-170

2. யாஅங்கோடு; யாஅக்கோடு; பிடாஅங்கோடு; பிடா அக்கோடு.[42]

3. புளி + கூழ் —புளிங்கூழ்; புளிக்கூழ்; [43]

4. மீகண்—மீக்கண்.[44]

5. பூங்கொடி—பூக்கொடி.[45]

6, பனங்காய்—பனு அட்டு; பனைக்கொடி.[46]

---

42. "யாமரக் கிளவியும் பிடாவும் தளாவும்
ஆமுப் பெயரும் மெல்லெழுத்து மிகுமே."
—தொல்-229

"வல்லெழுத்து மிகினும் மானம் இல்லை." —தொல்-230

43. "ஏனைப் புளிப்பெயர் மெல்லெழுத்து மிகுமே."
—தொல்-245

"வல்லெழுத்து மிகினும் மானம் இல்லை
ஒல்ஒழி அறிதல் வழக்கத் தான." —தொல்-246

44. "நீயென் பெயரும் இடக்கர்ப் பெயரும்
மீயென் மரீஇய இடம்வரை கிளவியும்
ஆவயின் வல்லெழுத்து இயற்கையாகும்."—தொல்-250

"இடம்வரை கிளவிமுன் வல்லெழுத்து மிகூஉம்
உடனிலை மொழியும் உளவென மொழிப."
—தொல்-251

45: "பூவென் ஒருபெயர் ஆயியல்பு இன்றே
ஆவயின் வல்லெழுத்து மிகுதலும் உரித்தே."
—தொல்-268

"பூப்பெயர்முன் இன மென்மையும் தோன்றும்
—நன்—200

46. "பனையின் முன்னர் அட்டுவரு காலை
நிலையின்று ஆகும் ஐயென் உயிரே
ஆகாரம் வருதல் ஆவயி னான." —தொல்-284

"கொடிமுன் வரினே ஐயவண் நிற்கக்
கடிநிலை யின்றே வல்லெழுத்து மிகுதி." —தொல்-285

## 6. எழுத்துப்பேறு:

தொல்காப்பியர் காலத்தில் உயிரீற்றுச் சொற்கள் பல எழுத்துப்பேறு பெற்றுப் புணர்ந்தன என்பது தெரிகிறது.

1. உவா+பதினன்கு — உவாஅப்பதினன்கு — அகரம் பெற்றது; உம்மைத்தொகை.[47]

2. பலாஅக்கோடு—குறியதன் முன்னர் வரும் நெடில் அகரம் பெற்றது.[48]

அவற்றுள் இரா என் கிளவி அகரம் பெறுதல் இல்லை என்பர்.[49]

3. ஆன்+நெய்—ஆன நெய்.[50]

4. எழூஉக் கதவு—ழகரம் நீடிடன் உடைத்து உகரம் வருதல் அங்கு உண்டு.[51]

---

"பனைமுன் கொடிவரின் மிகலும் வலிவரின்
ஐபோய் அம்மும் திரள்வரின் உறழ்வும்
அட்டுறின் ஐகெட்டு அந்நீள்வுமாம் வேற்றுமை."
—நன்-203

47. "உம்மை எஞ்சிய இருபெயர்த்தொகை மொழி
மெய்ம்மையாக அகரம் மிகுமே." —தொல்-223

48. "குறியதன் முன்னரும் ஓரெழுத்து மொழிக்கும்
அறியத் தோன்றும் அகரக் கிளவி." —தொல்-226

49. "இராவென் கிளவிக்கு அகரம் இல்லை." —தொல்227

50. "ஆன்ஒற்று அகரமொடு நிலையிடன் உடைத்தே."
—தொல்-232

51. "ழகர உகரம் நீடிடன் உடைத்தே
உகரம் வருதல் ஆவயி னன." —தொல்-261

5. உடுஉக்குறை – குற்றெழுத்தின் பின் வந்த ஊகாரக் கிளவி உகரம் பெறும்.[52]

6. ஊன்+குறை – ஊனக் குறை. ஊ என் ஒரு பெயர் னகரம் பெறும்.[53]

7. ஏ+கொட்டில் – ஏஎக் கொட்டில் (எபெற்றது) ஏயென் இறுதிக்கு எகரம் வரும்.[54]

8. ஓ ஒக் கடுமை—.[55]

ஓகார ஈற்றில் ஒகரம் வரும்.

கோ+இல்—கோயில் வகரம் பெறவில்லை.[56]

9. கௌவுக் கடிது—ஔகார இறுதிப் பெயர் உகரம் பெற்றது.[57]

10. மா+கோடு—மான்கோடு; ஆ+கோடு....[58]

---

52. "குற்றெழுத்து இம்பரும் ஒரெழுத்து மொழிக்கு
நிற்றல் வேண்டும் உகரக் கிளவி." —தொல்-267

53. "ஊவென் ஒரு பெயர் ஆவொடு சிவணும்."
—தொல்-269

54. "ஏயென் இறுதிக்கு எகரம் வருமே." தொல்—277

55. "வேற்றுமைக் கண்ணும் அதனோர் அற்றே
ஒகரம் வருதல் ஆவயினான" —தொல்-292

56. "இல்லொடு கிளப்பின் இயற்கை ஆகும்" —தொல்-293

57. "ஔகார இறுதிப் பெயர்நிலை முன்னர்
அல்வழி யானும் வேற்றுமைக் கண்ணும்
வல்லெழுத்து மிகுதல் வரைநிலை இன்றே
அவ்விரு ஈற்றும் உகரம் வருதல்
செவ்விது என்ப சிறந்தசி னோரே." —தொல்-295

58. "மாமரக் கிளவியும் ஆவும் மாவும்
ஆமுப் பெயரும் அவற்றோர் அன்ன
அகரம் வல்லெழுத்து அவை அவண் நிலையா
னகரம் ஒற்றும் ஆவும் மாவும்." —தொல்-231

ஆன்கோடு; னகரம் மிக்கது

11. ஊ+குறை—ஊனக் குறை.[59]

### 7. சாரியை புணர்தல்:

1. மக+கை—மகவின்கை—இன்.[60]
மகத்துக்கை—அத்து.[61]

2. பல வற்றுக்கோடு—வற்று.[62]

3. நிலா அத்துக் கொண்டான்—அத்து[63]

4. பனியத்துக் கொண்டான்—அத்து.[64]

5. வளியத்துக் கொண்டான்—அத்து.[65]

6. பரணியாற் கொண்டான்—ஆன்.[66]

7. ஆடிக்குக் கொண்டான்—இக்கு.[66]

---

59. "ஊவென் ஒருபெயர் ஆவொடு சிவணும் ..." தொல்-269

60 "மகப்பெயர்க்கிளவிக்கு இன்னே சாரியை."
— தொல்-218

61, "அத்து அவண் வரினும் வரைநிலை இன்றே."
— தொல்-219

62. "பலவற்று இறுதி உருபியல் நிலையும்." —தொல்-220

63. "நிலாவென் கிளவி அத்தொடு சிவணும்" —தொல்-228

64. "பனி என வரூஉம் கால வேற்றுமைக்கு
அத்தும் இன்னும் சாரியை யாகும்." —தொல்-241

65. "வளியென வரூஉம் பூதக்கிளவியும்
அவ்வியல் நிலையல் செவ்விது என்ப." —தொல்-242

66. "நாண்முன் தோன்றும் தொழில்நிலைக் கிளவிக்கு
ஆனிடை வருதல் ஐயம் இன்றே." —தொல்-247
"திங்கள் முன்வரின் இக்கே சாரியை" —தொல்-248

8. எருவங்குழி; செருவங் களம்[67]

9. ஊனக் குறை (அக்கு) அக்கு.[68]

10. ஆடூஉவின் கை; மகடூஉவின் கை—இன்.[59]

11. சேவின் கோடு.—இன்[70]

12. அவையற்றுக் கோடு—வற்று.[71]

13. பனங்காய்; ஆவிரங்காய், அரையங்கோடு—அம்.[72]

14. சித்திரைக்குக் கொண்டான்—இக்கு; கேட்டையாற் கொண்டான்—ஆன்.[73]

---

67. "எருவும் செருவும் அம்மொடு சிவணித்
திரிபிடன் உடைய தெரியுங் காலை
அம்மென் மகரம் செருவயிற் கெடுமே
தம்மொற்று மிகூஉம் வல்லெழுத்து இயற்கை."
—தொல் -260

68. "அக்குஎன் சாரியை பெறுதலும் உரித்தே
தக்கவழி அறிதல் வழக்கத்தான." —தொல்–270

69. "ஆடூஉ மகடூஉ ஆயிரு பெயர்க்கும்
இன்னிடை வரினும் மானம் இல்லை." தொல்2-17

70. "பெற்றம் ஆயின் முற்றஇன் வேண்டும்." —தொல்-279

71. "சுட்டுமுதல் இறுதி உருபியல் நிலையும்." —தொல்-281

72. "பனையும் அரையும் ஆவிரைக் கிளவியும்
நினையுங் காலை அம்மொடு சிவணும்
ஐயென் இறுதி அரை வரைந்து கெடுமே
மெய்யவண் ஒழிய என்மனார் புலவர்." —தொல்–283

73. "திங்களும் நாளும் முந்து கிளந்தன்ன." —தொல்- 286

15. மழையத்துக் கொண்டான்—அத்து.[74]

16. கோஒன்கை—ஒன்.[75]

## 8. மரூஉ முடிவு

புணரியல் தலைப்பில் மரூஉ முடிபையும் ஓர் நியதியாகக் குறிப்பிட்டுள்ளார்.

மருவின் தொகுதி மயங்கியல் மொழியும்
உரியவை உளவே புணர்நிலைச் சுட்டே — தொல் 111.

ஒன்றுக்கு மேற்பட்ட திரிபுகள் நிகழ்ந்தால் அவற்றை மரூஉ முடிபு என்று கூறலாம். உயிரீற்றுப் புணரியலில் ஒரு சிலவற்றைக் காட்ட இயலும்.

நாழி+உரி—நாடுரி.[76]

வேட்கை+அவா—வேணவா.[77]

இதனைச் செய்யுன் திரிபு என்பர் தொல்காப்பியனார்.

---

74. "மழையென் கிளவி வளியியல் நிலையும்." —தொல்-287

75. "உருபியல் நிலையும் மொழியுமார் உளவே
ஆவயின் வல்லெழுத்து இயற்கை யாகும்."
—தொல்-294

76. "உரிவரு காலை நாழிக் கிளவி
இறுதி இகரம் மெய்யொடுங் கெடுமே
டகரம் ஒற்றும் ஆவயினான." —தொல்-240
"உரிவரின் நாழியின் ஈற்றுயிர் மெய்கெட
மருவும் டகரம் உரியின் வழியே
அகரஉயிர் மெய்யாம் ஏற்பன வரினே." —நன்-174

77. "செய்யுள் மருங்கின் வேட்கை என்னும்
ஐயென் இறுதி அவாமுன் வரினே
மெய்யொடுங் கெடுதல் என்மனார் புலவர்
டகார ணகாரம் ஆதல் வேண்டும்." —தொல்-278

### 9. பொருள் பற்றிய உறழ்வு:

தொல்காப்பியனுர் பொருள் பற்றிய உணர்வாலும் சொற்களின் வேறுபாடுகளைக் காட்டுவது அவர் இயல் பாகி விட்டது. சொல் சொன்மையைக் காட்டுவதோடு பொருண்மையையும் உணர்த்துவது என்பது அவர் அடிப்படைக் கொள்கையாகும். பொருள் வேறு பாட்டுக்கு ஏற்பச் சொல் வடிவங்களிலும் மாறுபாடு இருந்தமையை அவர் காட்டியுள்ளார். உயிரீற்றுப் புணரியலில் பின்வருவனவற்றைக் காட்ட இயலும்.

1. மா அங்கோடு—மரப் பெயர்
   மான்கோடு—விலங்கு.[78]

2. புளியங்கோடு—மரப் பெயர்[79]
   புளிங்கூழ்—சுவைப் பெயர்.[80]

3, சேங்கோடு—மரப் பெயர்
   சேவின்கோடு—விலங்கின் பெயர்.[81]

### 10. நன்னூல் தரும் சிறப்புச் செய்திகள்:

1. ஆ மா என்பன தொல்காப்பியர் கருத்துப் படி ஆன் மான் என னகரமும், கோஒன் என்பது ஒன் சாரியையும் பெற்றன என்பது ஆகும்.

---

78. "மாமரக் கிளவியும் ஆவும் மாவும்
ஆமுப் பெயரும் அவற்றோர் அன்ன
அகரம் வல்லெழுத்து அவைஅவண் நிலையா
னகாரம் ஒற்றும் ஆவும் மாவும்." – தொல்-231

79. "புளிமரக் கிளவிக்கு அம்மே சாரியை." —தொல்-244

80. "ஏனைப் புளிப் பெயர் மெல்லெழுத்து மிகுமே." —தொல்-245

"சுவைப் புளிமுன் இனமென்மையும் தோன்றும்." —நன்-175

81, "பெற்றம் ஆயின் முற்றஇன் வேண்டும்." —தொல்-279

நன்னூலார் ஒன் என்பதையும் னகரமாகவே கூறுவர்.

ஆன் மான் கோன்

ஆமாகோ னவ்வணையவும் பெறுமே.[82]

2. தொல்காப்பியர்—சுட்டுமுதல் இறுதி முன் இயல் பாகும் என்று மட்டும் கூறுவர்.

அதுகுறிது இதுகுறிது உதுகுறிது.

நன்னூல் மூன்றன் உருபு, ஆறன் உருபு, எண்ணுப் பெயர், வினைத்தொகை இவற்றையும் சேர்த்து இயல்பு எனத் தொகுத்துக் கூறுவர்.[83]

சாத்தனொடு கொண்டான்; சாத்தனது கை; ஒரு கலம்; இருகலம்; அறு கலம்; ஏழு கலம்; அடுகளிறு என வரும்.

3. நன்னூல் உயிரீறுகள் சாரியை பெறுதலும் எழுத்துப் பேறு பெறுதலும் கூறவில்லை. அவர்காலத்தில் அவை வழக்கிழந்து விட்டன எனத் தெரிகிறது.

4. குற்றியலுகரப் புணரியலையும் நன்னூலார் உயிரீற்றுப் புணரியலில் சேர்த்துக் கூறுகின்றார்; தனி இயல்கள் அமைக்கவில்லை.

---

82. "ஆமாகோ ன அணையவும் பெறுமே." —நன்-248

83. "சுட்டுமுதல் இறுதி உருபியல் நிலையும்
ஒற்றுஇடை மிகாஅ வல்லெழுத்து இயற்கை"
—தொல்-263

"மூன்று ஆறுஉருபு வினைத்தொகை சுட்டு
ஈறுஆகும் உகரம் முன்னர் இயல்பாம்." —நன்-179

# 9. புள்ளி மயங்கியல்

புணரியலில் மெய்யீறெல்லாம் புள்ளியொடு நிலை யல் என்று கூறி அறிமுகம் செய்து வைத்தார். எனவே புள்ளி பெறும் ஈற்று வடிவங்களே பிற எழுத்துக்களோடு மயங்கும் மயக்கத்தையே புள்ளி மயங்கியலில் கூறு கின்றார். உயிர் மெய் பிறவற்றோடு மயங்கும் மயக்கம் உயிரியலிலேயே அடங்கும் என்பதாயிற்று.

இதனையும் மேல் உயிர் மயங்கியலில் காட்டிய தலைப் புக்களில் பிரித்து அறிவது ஏற்புடைத்தாகும்.

## 1. தோன்றல்:

அ. வல்லெழுத்து மிகுதல்.

(1) உரிஞ்+கடிது—ஞகர ஈற்றுத் தொழிற் பெயர் உகரம் பெற்று வல்லெழுத்து மிக்கது.[1]

(2) மகர இறுதி மகரம் கெட்டு வல்லினம் மிக்கது மாக்கோடு[2]

---

1. "ஞகாரை ஒற்றிய தொழிற்பெயர் முன்னர்
அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்
வல்லெழுத்து இயையின் அவ்வெழுத்து மிகுமே
உகரம் வருதல் ஆவயினான." —தொல்-296

2. "மகர இறுதி வேற்றுமை ஆயின்
துவரக் கெட்டு வல்லெழுத்து மிகுமே." —தொல்-310
"மவ்வீறு ஒற்றழிந் உயிரீறு ஒப்பவும்
வன்மைக்கு இனமாத் திரிபவும் ஆகும்." —நன்-219

(3) மகர ஈற்றுத் தொழிற் பெயர்களும் ஈம், கம், உரும் என்னும் மகர ஈற்றுப் பெயர்களும் உகரமும் வல்லெழுத்தும் பெற்றன

செம்முக் கடிது, செம்முக் கடுமை

ஈமுக் கடிது, ஈமுக் கடுமை

உருமுக் கடிது, உருமுக் கடுமை[3]

(4) எகின் என்னும் பறவையை உணர்த்தும் சொல் அகரம் பெற்று வன்மை மிக்கு முடிந்தது.

எகினக் கால்[4]

(5) மின், பின், பன், கன் இவையும் இவ்வாறே உகரமும் வல்லெழுத்தும் பெற்றன.

மின்னுக்கடிது, பின்னுக்கடிது, பன்னுக்கடிது, கன்னுக்கடிது[5]

(6) வேற்றுமைப் பொருளில் யகர ஈற்றுப் பெயர் க ச த ப மிகுதலைப் பெறும். இவ்வாறே ரழவும் இவ் விதியைப் பெறும்.

---

3. "தொழிற்பெயர் எல்லாம் தொழிற்பெய ரியல்."
—தொல்-327

"ஈமும் கம்மும் உருமென் கிளவியும்
ஆமுப் பெயரும் அவற்றோர் அன்ன." —தொல்-328

4. "ஏனை எகினே அகரம் வருமே
வல்லெழுத்து இயற்கை மிகுதல் வேண்டும்."
—தொல்–337

5. "மின்னும் பின்னும் பன்னுங் கன்னும்
அந்நாற் சொல்லும் தொழிற்பெய ரியல."
—தொல்-345

நாய்க்கால் தேர்க்கால் பூழ்க்கால்[6]

(7) சார் என்னும் கிளவி காழ் என்பதோடு புணரும்பொழுது வல்லெழுத்துப் பெற்றது.

சார்க்காழ்[7]

ஆ மெல்லெழுத்து மிகுதல்.

(1) ரகர ழகர மகர ஈற்று மரப் பெயர்கள் மெல்லெழுத்துப் பெற்றது.

ஆர்ங்கோடு, வெதிர்ங்கோடு,

சார்ங்கோடு, பீர்ங்கோடு[8]

(2) குமிழங்கோடு—குமிழ்ங்கோடு (உறழ்வு)

இல்லம் + கோடு—இல்லங்கோடு[9]

## 2. திரிதல்:

(பொதுப் பெயர்கள்)

( ) ண ள ல ன இவை வல்லினம் வரும்பொழுது இன வல்லெழுத்தாகத் திரியும். வேற்றுமையில்

---

6. "யகர இறுதி வேற்றுமைப் பொருள்வயின்
வல்லெழுத்து இயையின் அவ்வெழுத்து மிகுமே."
—தொல்-357

"ரகார இறுதி யகார இயற்றே." —தொல்-362

"ழகார இறுதி ரகார இயற்றே." —தொல்-383

"யரழ முன்னர்க் கசதப அல்வழி
இயல்பு மிகலும் ஆகும்; வேற்றுமை
மிகலும் இனத்தோடு உறழ்தலும் விதிமேல்." —நன்-224

7. "சாரென் கிளவி காழ்வயின் வலிக்கும்." —தொல்-364

8. "ஆரும் வெதிரும் சாரும் பீரும்
மெல்லெழுத்து மிகுதல் மெய்பெறத் தோன்றும்."
—தொல்-363

9. "இல்ல மரப்பெயர் விசைமர இயற்றே." —தொல்-313

இவ்வாறு திரிதல் பொதுவிதியாகும். ஏனையிடத்துத் திரியா என்பதாம்.

மட்குடம், கட்குடி, பொற்குடம், கற்பாறை.

(2) அல்வழியிலும் ஒருசில சொற்கள் இத்திரிபைப் பெறுகின்றன.

எட்கடிது[10]

(3) மன், சின், ஆன், ஈன், பின், முன், செயின், சுட்டும் வினவும் அடுத்து வரும் அவ்வயின் இவவயின் உவவயின் எவ்வயின் முதலியனவும் திரிபு பெறும்[11]

(4) நெல் செல் கொல் சொல் இவை அல்வழியில் திரிபு பெறும்[12]

(5) சூழ்நிலை ஒட்டிய மாற்றங்கள் :

(அ) ல்—ற்—ஃ; ள—ட்—ஃ

கல்+குறை—கற்குறை — ற்
கல்+தீது —கஃறீது — ஃ
கல்+நன்று—கன்னன்று — ன்
பால்+கடிது—பால்கடிது — ல்

---

10. "வேற்றுமை அல்வழி எண்என் உணவுப் பெயர்
வேற்றுமை இயற்கை நிலையிலும் உரித்தே."
—தொல்-308

11. "மன்னும் சின்னும் ஆனும் ஈனும்
பின்னும் முன்னும் வினையெஞ்சு கிளவியும்
அன்ன இயல என்மனார் புலவர்." —தொல்-333

"சுட்டுமுதல் வயினும் எகரமுதல் வயினும்
அப்பண்பு நிலையும் இயற்கைய என்ப." —தொல்-334

12. "நெல்லும் செல்லும் கொல்லும் சொல்லும்
அல்லது கிளப்பினும் வேற்றுமை இயல." —தொல்-371

முள்+குறை—முட்குறை — ட
முள்+தீது—முஃடீது — ஃ
முள்+நன்று—முண்ணன்று — ண்
கோள்+கடிது—கோள்கடிது — ள்[13]

(ஆ) நாய்+கால்—நாய்க்கால்; வேற்றுமை
நாய்+கடிது—நாய்கடிது; அல்வழி[14]

---

13. "தகரம் வருவழி ஆய்தம் நிலையலும்
புகரின்று என்மனார் புலமை யோரே." —தொல்-369

"ணகார இறுதி வல்லெழுத்து இயையின்
டகார மாகும் வேற்றுமைப் பொருட்கே."—தொல்-302

"ளகார இறுதி ணகார இயற்றே." —தொல்-396

னகார இறுதி வல்லெழுத்து இயையின்
றகார மாகும் வேற்றுமைப் பொருட்கே."—தொல்-532

"லகார இறுதி னகார இயற்றே." —தொல்–366

"ணனவல் லினம்வரட் டறவும் பிறவரின்
இயல்பும் ஆகும் வேற்றுமைக்கு; அல்வழிக்கு
அனைத்துமெய் வரினும் இயல்பா கும்மே." —நன்–209

"லள வேற்றுமையில் றடவும் அல்வழி
அவற்றோடு உறழ்வும் வலிவரி னாமெலி
மேவி னணவும் இடைவரின் இயல்பும்
ஆகும் இருவழி யானும் என்ப." —நன்-227

"குறில்வழி லளத்தவ் வணையின் ஆய்தம்
ஆகவும் பெறூஉம் அல்வழி யானே." —நன்–228

14. "யகர இறுதி வேற்றுமைப் பொருள்வயின்
வல்லெழுத்து இயையின் அவ்வெழுத்து மிகுமே."
—தொல்–357

"அல்வழி எல்லாம் இயல்பென மொழிப."—தொல்-361

(இ) மரம்+கோடு—மரக்கோடு வேற்றுமை
மரம்+குறிது—மரங்குறிது அல்வழி[15]

(ஈ) மூவிடப் பெயர்:

நும்+கை—நுங்கை — வேற்றுமை
நும்—நீயிர்—நீயிர் குறியிர் — அல்வழி[16]
தான்+கை—தன்கை — வேற்றுமை
தான்+கண்டான்—தான்கண்டான் — அல்வழி[17]

(உ) சுட்டுப் பெயர்கள்:

அவ்+கோடு—அவற்றுக்கோடு
அவ்+கடிய—அஃகடிய
அவ்+நாள்—அந்நாள்
அவ்+யாழ்—அவ்யாழ்
அவ்+ஊர்—அவ்வூர்[18]

---

15. "மகர இறுதி வேற்றுமை ஆயின்
துவரக் கெட்டு வல்லெழுத்து மிகுமே." —தொல்-310
"அல்வழி எல்லாம் மெல்லெழுத்து ஆகும்."—தொல்-314

16. "நும்மென் ஒருபெயர் மெல்லெழுத்து மிகுமே."
—தொல்-325
"அல்லதன் மருங்கிற் சொல்லும் காலை
உக்கெட நின்ற மெய்வயின் ஈவர
இ இடை நிலைஇ யீறுகெட ரகரம்
நிற்றல் வேண்டும் புள்ளியொடு புணர்ந்தே
அப்பால் மொழிவயின் இயற்கை ஆகும்."—தொல்-326

17. "தான்யான் எனும்பெயர் உருபியல் நிலையும்"
—தொல்-352
"வேற்றுமை அல்வழிக் குறுகலும் திரிதலும்
தோற்றம் இல்லை என்மனார் புலவர்." —தொல்-353

18. "சுட்டு முதலாகிய வகர இறுதி
முற்படக் கிளந்த உருபியல் நிலையும்." —தொல்-378

(ஊ) எண்ணுப் பெயர்கள்:

எண்ணுப் பெயர்முன் எண்ணுப் பெயரும் அளவு நிறைப் பெயர்களும்:

ஏழ்—எழு
ஏழ்+நூறு—எழுநூறு—எண்ணுப்பெயர்.
ஏழ்+கலம்—எழுகலம்—அளவுப்பெயர்.
ஏழ்+கழஞ்சு—எழுகழஞ்சு—நிறை.
ஏழ்+நூறுயிரம்—ஏழ்நூறுயிரம்—எண்ணுப்பெயர்.
ஏழ்+ஆயிரம்—ஏழாயிரம் ,,
ஏழ்+வெள்ளம்—ஏழ்வெள்ளம்—பேரெண்
ஏழ்+தாமரை—ஏழ்தாமரை— ,,
ஏழ்+வெள்ளம்—ஏழ்வெள்ளம்— ,,
ஏழ்+அகல்—ஏழகல்— அளவு
ஏழ்+உழக்கு—ஏழுழக்கு— ,,
ஏழ்+ஒன்று—ஏழொன்று—எண்

உயிர் முன்னும் பேரெண் முன்னும் ஏழ் என்ற வடிவும், ஏனையிடத்து எழு என்னும் வடிவும் வந்தன.[19]

---

"வேற்றுமை அல்வழி ஆய்தம் ஆகும்." —தொல்–379
"மெல்லெழுத்து இயையின் அவ்வெழுத்து ஆகும்." —தொல்–380
"ஏனவை புணரின் இயல்பென மொழிப."—தொல்-381

19. "ஏழென் கிளவி உருபியல் நிலையும்." —தொல்-388
"அளவும் நிறையும் எண்ணும் வருவழி
நெடுமுதல் குறுகலும் உகரம் வருதலும்
கடிநிலை இன்றே ஆசிரி யற்க." —தொல்-389
"பத்தென் கிளவி ஒற்றிடை கெடுவழி
நிற்றல் வேண்டும் ஆய்தப் புள்ளி." —தொல்–390
"ஆயிரம் வருவழி உகரம் கெடுமே." —தொல்–391

## 3. கெடுதல்:

(1) மரம்+கோடு—மரக்கோடு (மகரம்கெட்டு வலி மிக்கது)

(2) நிலம்+வலிது—நிலம்வலிது[20]

மாத்திரை கெட்டது; வகாரம் மிசை மகரம் தன் மாத்திரையில் குறைந்தது[21]

(3) சாத்தன்+தந்தை—சாத்தந்தை

அன் கெட்டது.

(4) ஆதன்+தந்தை—ஆந்தை[22]

(5) கொற்றன்+கொற்றன்—கொற்றங் கொற்றன்; அன் கெட்டு அம் வந்தது[23]

---

"நூறூர்ந்து வரூஉம் ஆயிரக் கிளவிக்குக்
கூறிய நெடுமுதல் குறுக்கம் இன்றே." —தொல்–392

"ஐயம் பல்லென வரூஉம் இறுதி
அல்பெயர் எண்ணினும் ஆஇயல் நிலையும்."
—தொல்–393

"உயிர்முன் வரினும் ஆயியல் திரியாது." —தொல்-394

20. "மகர இறுதி வேற்றுமை ஆயின்
துவரக் கெட்டு வல்லெழுத்து மிகுமே." —தொல்-310

21. "வகார மிசையு மகாரங் குறுகும்." —தொல்–330

22. "இயற்பெயர் முன்னர்த் தந்தை முறைவரின்
முதற்சண் மெய்கெட அகர நிலையும்
மெய்யொழித்து அன்கெடும் அவ்வியற் பெயரே."
—தொல்-347

"ஆதனும் பூதனும் கூறிய இயல்பொடு
பெயரொற்று அகரம் துவரக் கெடுமே." —தொல்–348

23. "அப்பெயர் மெய்யொழித்து அன்கெடு வழியும்
நிற்றலும் உரித்தே அம்மென் சாரியை
மக்கண் முறைதொகூஉ மருங்கினை." —தொல்-350

4. இயல்பு:

(1) ஆண்+கை—ஆண்கை
பெண்+கை—பெண்கை[24]

(2) உமண்+குடி—உமண்குடி (கிளைப்பெயர்)[25]
எயின்+குடி—எயின்குடி ( ,, )[26]

(3) முரண்+கடிது—முரண்கடிது (தொழிற் பெயர்)[27]

(4) இலம்+படு—இலம்பாடு (செய்யுள் வழக்கு)[28]

(3) குயின்+குழாம்—குயின்குழாம் (குயின்: தனிக் கிளவி)[29]

(6) தான், பேன், கோன்+கொற்றன்—(தான் கொற்றன்;பேன்கொற்றன்; கோன்கொற்றன்; (இவை இயற்பெயர்கள்)[30]

---

24. "ஆணும் பெண்ணும் அஃறிணை இயற்கை."—தொல்-303
25. "கிளைப்பெயர் எல்லாம் கொளத்திரி பிலவே."
—தொல்-307
26. "கிளைப் பெய ரெல்லாம் கிளைப் பெயர் இயல"
—தொல்-338

சாதி குழூப் பரண் கவண் பெயர் இறுதி
இயல்பாம் வேற்றுமைக்கு." —நன்-211

27. "முரண்என் தொழிற்பெயர் முதலியல் நிலையும்."
—தொல்-309
28. இலம்என் கிளவிக்குப் படுபவரு காலை
நிலையலும் உரித்தே செய்யு ளான." —தொல்-316
29. "குயின்என் கிளவி இயற்கை யாகும்." —தொல்-335
30. "தானும் பேனும் கோனும் என்னும்
ஆமுறை இயற்பெயர் திரிபிடன் இலவே."—தொல்-351

5. உறழ்வு:

(1) வெரிந்+குறை—வெரிங்குறை, வெரிக்குறை[30]

(2) மீன்+கண்—மீன்கண்; மீற்கண்[32]

(3) தேன்+குடம்—தேன்குடம்; தேற்குடம், தேக்குடம்; தேங்குடம்.[33]

தேன்+மொழி—தேன்மொழி; தேமொழி[34]

தேன்+இறால்—தேனிறால்; தேத்திறால[35]

(4) வேய்+குறை—வேய்க்குறை; வேய்ங்குறை[36]

---

31. "வெரிந் என் இறுதி முழுதுங் கெடுவழி
வருமிடன் உடைத்தே மெல்லெழுத்தியற்கை."
—தொல்-300

"ஆவயின் வல்லெழுத்து மிகுதலும் உரித்தே."
—தொல்-301

32. "மீன்என் கிளவி வல்லெழுத்து உறழ்வே."—தொல்-339
"மீன் றவ்வொடு பொரூஉம் வேற்றுமை வழியே."
—நன்-213

33. "தேன் என் கிளவி வல்லெழுத்து இயையின்
மேனிலை ஒத்தலும் வல்லெழுத்து மிகுலும்
ஆமுறை இரண்டும் உரிமையும் உடைத்தே
வல்லெழுத்து மிகுவழி இறுதி இல்லை." —தொல்-340
"மெல்லெழுத்து மிகினும் மானம் இல்லை."—தொல்-341

34. "மெல்லெழுத்து இயையின் இறுதியோடு உறழும்."
—தொல்-342

35. "இறால் தோற்றம் இயற்கை யாகும்." —தொல்-343
"தேன்மொழி மெய்வரின் இயல்பும்; மென்மை
மேவின் இறுதி அழிவும்; வலிவரின்
ஈறுபோய் வலிமெலி மிகலுமாம் இருவழி." —நன்-214

36. "மெல்லெழுத்து உறழும் மொழியுமார் உளவே."
—தொல்-360

தொல் 357-ம் காண்க.

(5) குளம்+கரை—குளக்கரை; குளங்கரை[37]

(6) இல்லை+கொற்றன்—இல்லை கொற்றன்; இல்லைக் கொற்றன்; இல்லாக் கொற்றன்; இல்கொற்றன்.[38]

(7) பாழ்+கிணறு—பாழ்கிணறு; பாழ்க்கிணறு[39]

(8) கீழ்+குளம்—கீழ்குளம்; கீழ்க்குளம்[40]

(9) மக்கள்+கை—மக்கள்கை; மக்கட்கை[41]

(10) பீர்+கோடு—பீர்ங்கோடு; பீரங்கோடு
அம் உறழ்வு[42]

---

37. "மெல்லெழுத்து உறழும் மொழியுமார் உளவே
செல்வழி அறிதல் வழக்கத் தான." —தொல்-312

"வேற்றுமை மப்போய் வலிமெலி உறழ்வும்
அல்வழி உயிரிடை வரின் இயல்பும் உள." —நன்-220

38. "இல்லென் கிளவி இன்மை செப்பின்
வல்லெழுத்து மிகுதலும் ஐயிடை வருதலும்
இயற்கை ஆதலும் ஆகாரம் வருதலும்
கொளத்தகு மரபின் ஆகிடன் உடைத்தே."
—தொல்–372

"இல்லென் இன்மைச் சொற்குஐ அடைய
வன்மை விகற்பமும் ஆகாரத் தொடு
வன்மை யாகலும் இயல்பும் ஆகும்." —நன்-233

39. "பாழ்என் கிளவி மெல்லெழுத் துறழ்வே."—தொல்-387

40. "கீழ்என் கிளவி உறழத் தோன்றும்." —தொல்-395

"கீழின்முன் வன்மை விகற்பமும் ஆகும்." —நன்-226

41. "மக்கள் என்னும் பெயர்ச் சொல் இறுதி
தக்கவழி அறிந்து வலித்தலும் உரித்தே."—தொல்-404

42. "ஆரும் வெதிரும் சாரும் பீரும்
மெல்லெழுத்து மிகுதல் மெய்பெறத் தோன்றும்."
—தொல்-363

"பீர்என் கிளவி அம்மொடும் சிவணும்." —தொல்–365

(11) குமிழ்+கோடு; குமிழங்கோடு, குமிழ்ங்கோடு.[43]

## 6. எழுத்துப்பேறு

புள்ளி மயங்கியலில் உகரமும் அகரமும் எழுத்துப் பேருக வருதல் குறிப்பிடத்தக்க புணரியல் நியதியாகும்.

(1) ஞ ண ந ம ல ள இவ்வீற்றுத் தொழிற்பெயர்கள் அல்வழியிலும் வேற்றுமையிலும் வல்லெழுத்து வருவழி உகரமும் வல்லெழுத்தும் பெறும். ஏனைய எழுத்து வருவழி உகரம் மட்டும் வரும். பொருந் என்பது மட்டும் வேற்றுமையில் அகர எழுத்துப்பேறு பெறும்.

—(வல்லெழுத்து)[44]

உரிஞுக்கடிது; உரிஞுக் கடுமை (ஏனை எழுத்து)[45]
உரிஞுநீண்டது உரிஞு நீட்சி
பொருநுக் கடிது; பொருநு நீண்டது

(அல்வழியில்)[46]

பொருநக்கடுமை, பொருநநீட்சி (வேற்றுமை)[47]

---

43. "குமிழ்என் கிளவி மரப்பெய ராயின்
பீர்என் கிளவியொடு ஓரியற்ருகும்." —தொல்-386

44. "ஞகாரை ஒற்றிய தொழிற்பெயர் முன்னர்
அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்
வல்லெழுத்து இயையின் அவ்வெழுத்து மிகுமே
உகரம் வருதல் ஆவயினை." —தொல்-296

45. "ஞ ந ம வ இயையினும் உகரம் நிலையும்" —தொல்-297

46. "நகர இறுதியும் அதனோர் அற்றே" —தொல்-298

47. "வேற்றுமைக்கு உக்கெட அகரம்
நிலையும்"
— தொல்-299

"நவ்விறு தொழிற் பெயர்க்கு அவ்வுமாம் வேற்றுமை"
—நன்-208

மண்ணுக்கடிது, மண்ணுக் கடுமை (வல்லெழுத்து)[4]
மண்ணு நீண்டது, மண்ணு நீட்சி (ஏனை)[48]
செம்முக் கடிது; செம்முக்கடுமை (வல்)
செம்மு நீண்டது; செம்மு நீட்சி (ஏனை)
புல்லுக்கடிது, புல்லுக்கடுமை (வல்)[49]
துள்ளுக் கடிது; துள்ளு நீண்டது

(2) தொழிற்பெயர்களேயன்றி ஏனைய ஈற்றுப் பொதுப் பெயர்களும் எழுத்துப் பேறு பெறும். இவற்றுள் ஒரு சில உகரமேயன்றி அகரமும் பெறும்.

ஈம் : ஈமுக்கடிது; ஈமுக்கடுமை; ஈமுநீண்டது; ஈமு நீட்சி; உருமுக்க்டிது; உருமுக்க்டுமை.[50]

ஈமக்குடம் (வேற்றுமையில் அகரம் பெற்றது.)[51]

கம்—கம்முக் கடிது; கம்முக்கடுமை; கம்மு நீண்டது கம்முநீட்சி; கம்மக்குடம்; க்ம்மவிறகு[52]

---

48; 49. "தொழிற் பெயர் எல்லாம் தொழிற்பெயர் இயல" —தொல்–306 327; 376; 401.

50. "ஈமும் கம்மும் உருமென் கிளவியும்
ஆம்முப் பெயரும் அவற்றோர் அன்ன" —தொல்-328

51. "வேற்றுமை யாயின் ஏனை இரண்டும்
தோற்றம் வேண்டும் அக்கென் சாரியை"
—தொல்-329

52. தொல் 328; 329
"ஈமும்
கம்மும் உருமும் தொழிற்பெயர் மானும்;
முதலன வேற்றுமைக்கு அவ்வும் பெறுமே."
—நன்-228

மின், பின், கன், வல், வள், தெவ் என்பனவும் அன்ன. இவற்றுள் கன் என்பது கன்னக்குடம் என வேற்றுமையில் அகரம் பெற்றது.[53]

"வல்ல நாய்" "வல்லப் பலகை" என நாய் பலகை எனவரும் சூழ்நிலைகளில் மட்டும் வல் அகரம் பெற்றது.[54]

பொருந், ஈம், கம், கன் என்பன வேற்றுமையில் அகரம் பெற்றன.

## 7. சாரியைகள் பெறல்

வேற்றுமைப் புணர்ச்சியில் அம், அத்து, தம், நும், நம், வற்று, அக்கு, அன் ஆகிய சாரியைகள் இடம் பெற்றன.[55]

---

53. "வேற்றுமை யாயின் ஏனை எகினொடு
தோற்றம் ஒக்கும் கன்னென் கிளவி" —தொல்-346
"மின்பின் பன் கன் தொழிற்பெயர் அனைய
கன் அவ் ஏற்று மென்மையோடு உறழும்"
—நன்-217
"வல்லென் கிளவி தொழிற் பெயர் இயற்றே"
—தொல்-373
"நாயும் பலகையும் வருஉங் காலை
ஆவயின் உகரம் கெடுதலும் உரித்தே.
உகரம் கெடுவழி அகரம் நிலையும்" —தொல்-374
"புள்ளும் வள்ளும் தொழிற்பெயர் இயல"—தொல்-403
"புள்ளும் வள்ளும் தொழிற்பெயர் மானும்" —நன்-234
"ஏனை வகரம் தொழிற் பெயர் இயற்றே"
—தொல்-382

54. தொல்-374

55. தொல் 328, 329., 349 ; 298

(1) அம்:

மரப்பெயர்கள் சிலவற்றுள் அம்சாரியை இடம் பெற்றது.

ஆணங்கோடு[56]

எகினங்கோடு[57]

பீரங்கோடு[58]

பூலங்கோடு, ஆலங்கோடு, வேலங்கோடு [59]

(2) அத்து

விண்ணத்துக் கொட்கும்[60]

ஆயிரத் தொன்று[61],

பதிறுயிரத்தொன்று[62]

மகத்தாற் கொண்டான்[63]

---

56. "ஆண்மரக் கிளவி அரைமர இயற்றே" —தொல்-304

57. "எகின் மரமாயின் ஆண்மர இயற்றே" —தொல்-336

58. "பீர்என் கிளவி அம்மொடுஞ் சிவணும்" —தொல்-365

59. "பூல்வேல் என்று ஆல்என் கிளவியொடு
ஆம்முப் பெயர்க்கும் அம்மிடை
வருமே." தொல்-375

60. "விண்ணென வரூஉங் காயப் பெயர் வயின்
உண்மையும் உரித்தே அத்தென் சாரியை
செய்யுண் மருங்கின் தொழில்வருகாலை."— தொல்-305

61. "அத்தொடு சிவணும் ஆயிரத்து இறுதி
ஒத்த எண்ணும் முன்வரு காலை" —தொல்-317

62. "அடை யொடு தோன்றினும்
அதனோர் அற்றே" —தொல்-318

63. "நாட்பெயர்க் கிளவி மேற்கிளந் தன்ன
அத்தும் ஆன்மிசை வரைநிலை இன்றே
ஒற்று மெய் கெடுதல் என்மனார் புலவர்"
—தொல்-331

வெயிலத்துக் கொண்டான் [64]

இருளத்துக் கொண்டான் [65]

(3) தம் நும் நம்

எல்லாரும்+கை—எல்லார் தங்கையும் [66]

எல்லீரும்+கை—எல்லீர் நுங்கையும்

எல்லாம்+கை—எல்லாநங்கையும். [67]

எல்லாரும் எல்லீரும் என்பவற்றுள் உள்ள 'உம்' இடம் பெயர்ந்து வருமொழியின் ஈற்றில் புணர்ந்தது.

(4) வற்று

அவ்+கோடு—அவற்றுக்கோடு [68]

எல்லாம்+கோடு—எல்லாவற்றுக்கோடு [69]

---

64. "வெயில் என் கிளவி மழையியல் நிலையும்" —தொல்-377

65. "இருளென் கிளவி வெயிலியல் நிலையும்" —தொல்-402

66. "படர்க்கைப் பெயரும் முன்னிலைப் பெயரும்
தொடக்கங் குறுகும் பெயர்நிலைக் கிளவியும்
வேற்றுமை யாயின் உருபியல் நிலையும்
மெல்லெழுத்து மிகுதல் ஆவயி னான." —தொல்-320

67. "உயர்திணை யாயின் உருபியல் நிலையும்" —தொல்-324

68. "சுட்டுமுதல் ஆகிய வகர இறுதி
முற்படக் கிளந்த உருபியல் நிலையும்" —தொல்-378

69. "அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்
எல்லாம் எனும் பெயர் உருபியல் நிலையும்
வேற்றுமை அல்வழிச் சாரியை நிலையாது."
—தொல்-322

(5) அக்கு

எகின்+கால்—எகினக்கால்

தாழ்+கோல்—தாழக்கோல்[70]

தமிழ்+கூத்து—தமிழக்கூத்து[71]

(6) அன்

ஏழ்+காயம்—ஏழன்காயம்[73]

8 பொருள் சூழ்நிலை பற்றிய மாற்று வடிவங்கள்

தொல்காப்பியனார் சொற்பொருள் அடிப்படையில் ஏற்பட்ட சொல் வடிவ மாற்றங்களை ஒரு சில சொற்களில் காட்டுவது குறிப்பிடத் தக்கதாகும்.

(1) ஆண்+கை—ஆண்கை-இயல்பு; இயற்பெயர்
ஆண்+கோடு—ஆணங்கோடு-அம்;மரப்பெயர்.

(2) எகின்+கால்—எகினக்கால்—அக்கு[73]
—(பறவை)
எகின்+கோடு—எகினங்கோடு—அம்[74]
—(மரம்)

---

70. "தாழ் என் கிளவி கோலொடு புணரின்
அக்கிடை வருதல் உரித்தும் ஆகும்" —383

"தமிழ் அவ் உறவும் பெறும் வேற்றுமைக்கே
தாழுங் கோல் வந்துஉறுமேல் அற்றே" —நன்-225

71. "தமிழ் என் கிளவியும் அதனோ ரற்றே"
—தொல்-385

"நன்–225"

72. "ஏழென் கிளவி உருபியல் நிலையும்" —தொல்-388

73. "எகின்மர மாயின் ஆண்மர இயற்றே." —தொல்-336

74. "ஏனை எகினே அகரம் வருமே
வல்லெழுத் தியற்கை மிகுதல் வேண்டும்"
—தொல்-337

(3) தான்+கால்—தான்கால்; தான்-இயற்பெயர்.
தான்+கால்—தன்கால் (தான்—இடப்பெயர்[75]

(4) தாய்+கலாம்—தாய்கலாம்[76]
மகன் தாய்+கலாம்—மகன் தாய்க்கலாம்

## 9: நன்னூல் தரும் சிறப்புச் செய்திகள்

(1) தொல்காப்பியனார் அங்கை என்பதற்கு மட்டும் விளக்கம் கூற நன்னூல் அதனோடு அஞ்செவி என்பதற்கும் விளக்கம் தருகிறது.[77]

அகம்+செவி—அஞ்செவி

(2) 'தெவ்' உகரம் பெறுதல் மட்டும் தொல்காப்பியனார் கூற மெல்லெழுத்து முன் தெவ் என்பதில் உள்ள வகர மெய் மெல்லெழுத்தாதலை நன்னூல் காட்டும்.

தெவ்+மாண்டது—தெம்மாண்டது.[78]

---

75. "தானும் பேனும் கோனும் என்னும்
ஆ முறை இயற்பெயர் திரிபிடன்
இலவே" —தொல்-351
"தான்யான் எனும் பெயர் உருபியல் நிலையும்" —தொல்-352

76. "தாய் என் கிளவி இயற்கை யாகும்" —தொல்-358
"மகன் வினை கிளப்பின் முதல்நிலை
இயற்றே" —தொம்-359

77. "அகமுனர்ச் செவிகை வரின்இடையன
கெடும்." —நன்-222

78. "தெவ்வென் மொழியே தொழிற் பெயர் அற்றே
மவ்வரின் வஃகான் மவ்வும் ஆகும்." —நன்-236

(3) தொழிற்பெயர்களுள் வகர ஈற்றுப்பெயரையும் னகர ஈற்றுத் தொழிற்பெயரையும் நன்னூல் உடன் சேர்த்துக் கூறுகிறது.[79]

(4) ய அல்லாத பிற மொழி முன் யகரம் வந்தால் இகரம் துன்னும் என்பர்.

வேள்+யாவன்—மண்+யாது

வேளியாவன், மண்ணியாது; பேர்+யாறு

—பேரியாறு.[80]

(5) பரண் கவண் என்பன வேற்றுமையில் இயல்பாதல். [81]

(6) சாண்—சாட்: (சாட்கோல்) என அமைதல்.[82]

(7) தன்பகை—தற்பகை—உறழ்ச்சி; நின்பகை—ஓரே வடிவம்.[83]

---

79. "ஞணநம லவளன ஒற்றிறு தொழிற்பெயர்
ஏவல் வினை நனி அவ்வல் மெய்வரின்
உவ்வுறும் ஏவல் உறுசில சில்வழி" —நன்–207

80. "தன்னொழி மெய்ம்முன் யவ்வரின் இகரம்
துன்னும் என்று துணிநரும் உளரே" —நன்-206

81. "சாதி குழூஉப் பரண் கவண்பெயர் இறுதி
இயல்பாம் வேற்றுமைக்கு உணவு எண் சாண்பிற
டவ்வா கலுமாம் அல்வழி யும்மே" —நன்-221

82. "நன்–221"

83. "தன்னென் என்பதற்று ஈற்றுன வன்மையோடு
உறழும்; நின்னீறு இயல்பாம் உறவே" —நன்-281

# 10. குற்றியலுகரப் புணரியல்

குற்றுயலுகர ஈற்றுப் பொதுப் பெயர்கள், எண்ணுப் பெயர்கள், திசைப் பெயர்கள் முதலியன பிற சொற்களோடு அல்வழியிலும் வேற்றுமையிலும் புணரும் இயல்பைக் கூறுகின்றது. குற்றுகர ஈற்றுத் தொடர்களை நெடிற்றொடர் உயிர்த்தொடர், இடைத் தொடர், ஆய்தத் தொடர், வன்தொடர் மென்தொடர் என அறு வகைப்படுத்திக் காட்டுவர்.[1]

இவற்றையும் 1. தோன்றல் 2; திரிதல் 3. கெடுதல் 4. இயல்பு 5, உறழ்வு 6. சாரியை பெறுதல் 7. பொருள் நிலை பற்றிய மாற்று வடிவங்கள் 8. எண்ணுப் பெயர்களின் மாற்று வடிவங்கள் 9. நன்னூல் தரும் சிறப்புச் செய்திகள் 10. புறநடைச் செய்திகள் என்னும் தலைப்புக்களில் தொகுத்துக் காண இயல்கின்றது.

## 1. தோன்றல் :

(1) வன்தொடர்க் குற்றியலுகரம் வேற்றுமையிலும் அல்வழியிலும் மிகும்.

---

1. "ஈரெழுத்து ஒருமொழி உயிர்த்தொடர் இடைத்
தொடர்
ஆய்தத்தொடர் மொழி வன்றொடர் மென்றொடர்
ஆயிரு மூன்றே உகரம் குறுகிடன்" —தொல்-406

"அவற்றுள்,
ஈரொற்றுத் தொடர்மொழி இடைத்தொட ராகா"
—தொல்-407

கொக்குக்கால்; கொக்குக் கடிது.[2]

(2) மென்தொடர்க் குற்றியலுகரம் வேற்றுமையில் மட்டும் மிகும்.

குரங்குக்கால்—வேற்றுமைத்தொடர்.
குரங்கு கொடிது—அல்வழித்தொடர்.[3]

(3) சுட்டு நீண்ட மென்தொடர் மொழியும் யாவினு முதலிய மென்தொடர் மொழியும் வல்லெழுத்துப் பெறும்.

ஆங்குக் கொண்டான்; ஈங்குக் கொண்டான்; யாங்குக் கொண்டான்.[4]

(4) முதல் நீளாமல் இயல்பாக உள்ள சுட்டுப்பெயர்களும் வினைப்பொருளும் வல்லெழுத்துப் பெற்று முடியும்.

அங்குக் கொண்டான், இங்குக் கொண்டான், உங்குக் கொண்டான், எங்குக் கொண்டான்.[5]

---

2. "ஒற்றிடையின மிகா மொழியுமா ருளவே
அத்திறத்து இல்லை வல்லெழுத்து மிகலே"
தொல்-412

"வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து மிகுமே"
—தொல்-426

"வன்றொடர் அல்லன முன்மிகா அல்வழி" —நன்-181

3. வன்றொடர் மொழியும் மென்றொடர் மொழியும்
வந்த வல்லெழுத்து ஒற்றிடை மிகுமே;
மெல்லொற்றுத் தொடர்மொழி மெல்லொற்றெல்லாம்
வல்லொற்று இறுதி கிளையொற்றாகும்" —தொல்-414

4. "சுட்டுச்சினை நீடிய மென்றொடர் மொழியும்
யாவினா முதலிய மென்றொடர் மொழியும்
ஆயியல் திரியா வல்லெழுத்து இயற்கை" —தொல்-427

5. "அந்நான் மொழியும் தந்நிலை திரியா" —தொல்-429

## 2. திரிதல்

(1) குற்றியல் உகரம் குற்றியலிகரம் ஆதல் :

நாகு+யாது—நாகியாது. [6]

(2) நெடிற்றொடரும் உயிர்த் தொடரும் வேற்றுமையில் வல்லெழுத்து இரட்டுதல் பெற்று வற்லொற்றுத் தொடர் ஆதல்.

யாடு+கால்—யாட்டுக்கால்

முயிறு+கால்—முயிற்றுக்கால்.[7]

(3) மெல்லொற்றுத் தொடர் வேற்றுமையில் வல்லொற்றுத் தொடர் ஆதல்.

குரங்கு+கால்—குரங்குக் கால்

மருந்து+பை—மருத்துப்பை.

வேம்பு+கோடு—வேப்பங்கோடு

கடம்பு+கோடு—கடப்பங்கோடு. [8]

## 3. கெடுதல்

அஃது என்னும் சுட்டுப் பெயர் உயிர் வருவழி ஆய்தம் நிலை பெறும்; ஏனையிடத்து ஆய்தம் கெடும்.

அஃது+ஊர்—அஃதுஊர்

அஃது+நகர்—அதுநகர். [9]

---

6. "யகரம் வருவழி இகரம் குறுகும்
உகரக் கிளவி துவரத் தோன்றாது" —தொல்-410

7. ஈரெழுத்து மொழியும் உயிர்த்தொடர் மொழியும்
வேற்றுமை ஆயின் ஒற்றிடை யினமிகத்
தோற்றம் வேண்டும் வல்லெழுத்து மிகுதி"—தொல்-411
"நெடிலோடு உயிர்த்தொடர்க் குற்றுகரங் களுள்
டறவொற்று இரட்டும் வேற்றுமை மிகவே" —நன்-183

8. தொல்காப்பியம் 414

9. "முன்னுயிர் வருமிடத்து ஆய்தப் புள்ளி
மன்னல் வேண்டும் அல்வழி யான" —தொல்-423
"ஏனைமுன் வரினே தானிலை இன்றே" —தொல்-424

## 4. இயல்பு

(1) அல்வழியிலும் வேற்றுமையிலும் நிலைமொழி யீற்றுக் குற்றியலுகரம் மெய்யெழுத்து வருவழி நிலைபெற்று நிற்கும்.

நாகு கடிது; வரகு கடிது (உகரம் நிலை பெற்றது) [10]

உயிர் வருவழிக் குற்றியலுகரம் நிலைபெறாது கெடும் என்பதாம்.

நாகு+அரிது—நாகரிது.[11]

(2) நெடிற்றொடரும் உயிர்த்தொடரும் இரட்டா மையும் உண்டு; வல்லெழுத்து மிகுதலும் இல்லை.

நாகு+கால்; வரகுகதிர் [12]

(3) இடைத்தொடரும் ஆய்தத் தொடரும் வல் லெழுத்து வருவழி மிகுதல் இல்லை.

தெள்கு கால்; எஃகு கடுமை. [13]

(4) ஒரு சில மரப்பெயர்களின் மெல்லொற்று வல் லொற்றாக மாறாமையும் உண்டு.

புன்கங்கோடு; குருந்தங்கோடு. [14]

---

10. "அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்
எல்லா இறுதியும் உகரம் நிலையும்" —தொல்-408

11. "குற்றியல் உகரமும் அற்றென மொழிப" —தொல்-405

12. "தொல்காப்பியம் 411, 412"
"மென்றொடர் மொழியுள் சிலவேற் றுமையில்
தம்மினம் வன்றொடர் ஆகா மன்னே" —நன்-184

13. "இடையொற்றுத் தொடரும் ஆய்தத் தொடரும்
நடையாய் இயல என்மனார் புலவர்" —தொல்-413

14. "மெல்லொற்று வலியா மரப்பெயரும் உளவே"
—தொல்-416

(5) குன்று+கூகை; குன்றக்கூகை; மென்தொடர் வன்தொடராகத் திரிபு பெறவில்லை. [15]

(6) அல்வழியில் வன்தொடர் அல்லாத ஏனைய எல்லாத் தொடரும் வல்லெழுத்துப் பெறு.

நாகுநடிது, வரகு கடிது, தெள்கு கடிது, எஃகு கடிது, குரங்கு கடிது. [16]

## 5. உறழ்வு

**(1) இன் அன் இரண்டும் பெறுதல் :—**

பெண்டின் கால் [17] பெண்டன் கால் [18]

**(2) வல்லெழுத்து மிகுதலும் மிகாமையும்**

யாங்குக் கொண்டான்; யாங்கு கொண்டான் [19]

**(3) உண்டு என்னும் கிளவி**

உண்டு பொருள்; உள் பொருள் [20]

---

15. "ஒற்றுநிலை திரியாது அக்கொடு வரூஉம்
அக்கிளை மொழியும் உளவென மொழிப" —தொல்-418

16. "அல்லது கிளப்பின் எல்லா மொழியும்
சொல்லிய பண்பின் இயற்கை ஆகும்" —தொல்-425

17. "வண்டும் பெண்டும் இன்னொடு சிவணும்" —தொல்-420

18. "பெண்டென் கிளவிக்குஅன்னும் வரையார்"
—தொல்-421

19. "சுட்டுச்சினை நீடிய மென்றொடர் மொழியும்
யாவினு முதலிய மென்றொடர் மொழியும்
ஆயியல் திரியா வல்லெழுத்து இயற்கை" —தொல்-427
"யாவினு மொழியே இயல்பும் ஆகும்" —தொல்-428

20. "உண்டென் கிளவி உண்மை செப்பின்
முந்தை இறுதி மெய்யொடுங் கெடுதலும்
மேனிலை ஒற்றே ளகாரம் ஆதலும்
ஆமுறை இரண்டும் உரிமையும் உடைத்தே
வல்லெழுத்து வரூஉங் காலையான" —தொல்-430

(4) இன் இற் என மாறி வருதல்

ஒன்பது+கலம்—ஒன்பதின் கலம்
ஒன்பது+அகல்—ஒன்பதிற்றகல்[21]

### 6. சாரியை பெறுதல் :

(1) அம் என்னும் சாரியை

மரப்பெயர்க்கிளவி அம் சாரியை பெறல்
தேக்கு+கோடு—தேக்கங்கோடு.
வேம்பு—கோடு—வேப்பங்கோடு.[32]
ஏனைய சில பெயர்களும் அம்பெறுதல் உண்டு.
ஏறு+கோள்—ஏறங்கோள்
புற்று+சோறு—புற்றஞ்சோறு.[23]

(2) அக்கு என்னும் சாரியை

குன்று+கூகை—குன்றக் கூகை[24]

(3) அன் என்னும் சாரியை

ஒன்று+காயம்—ஒன்றன் காயம்[25]

---

21. "ஒன்பான் இறுதி உருபுநிலை திரியாது
இன்பெறல் வேண்டும் சாரியை மொழியே"
—தொல்-459

"அளவாகு மொழிமுதனிலைஇய உயிர்மிசை
னஃகான் றஃகான் ஆகிய நிலைத்தே" —தொல்-121

22. "மரப்பெயர்க் கிளவிக்கு அம்மே சாரியை"—தொல்-415

23. "ஈரெழுத்து மொழியும் வல்லொற்றுத் தொடரும்
அம்மிடை வரற்கும் உரியவை உளவே
அம்மரபு ஒழுகும் மொழிவயி னான" —தொல்-417

24. "தொல்காப்பியம் 418"

25. "எண்ணுப் பெயர்க்கிளவி உருபியல் நிலையும்"
—தொல்-418

பெண்டு+கால்—பெண்டன் கால்[26]
யாது+கோடு—யா்தன்கோடு.
அஃது+கோடு—அதன் கோடு.[27]

(4) இன் என்னும் சாரியை
வண்டு+கால்—வண்டின் கால்[28]
பெண்டு+கால்—பெண்டின்கால்[29]

(5) ஏ என்னும் சாரியை
இரு திசை புணரின் ஏ இடையே வரும் என்பர்.

தெற்கே வடக்கு; கிழக்கே மேற்கு. இவை உம்மைத் தொகை[30]

7. பொருள் நிலை பற்றிய மாற்றுவடிவங்கள்

(1) வடக்கே தெற்கு — உம்மைத் தொகை.[31]
இரண்டு திசைகளும் என்பது பொருள்;

வடகிழக்கு-வடக்கு ஆகிய கிழக்கு; பண்புத்தொகை; கோணத் திசை என்பது பொருளாம்.[32]

---

26. "பெண்டென் கிளவிக்கு அன்னும் வரையார்" —தொல்-421
27. "யாதென் இறுதியும் சுட்டுமுத லாகிய
ஆய்த இறுதியும் உருபியல் நிலையும்" —தொல்-422
28. "வண்டும் பெண்டும் இன்னொடு சிவணும்" —தொல்-420
29. "தொல்காப்பியம் 422"
30. "இருதிசை புணரின் ஏயிடை வருமே" —தொல்-431
31. "இருதிசை புணரின் ஏயிடை வருமே" —தொல்-431
32. "திரிபுவேறு கிளப்பின் ஒற்றும் உகரமும்
கெடுதல் வேண்டும் என்மனார் புலவர்
ஒற்றுமெய் திரிந்து னகார மாகும்
தெற்கொடு புணரும் காலை யான" —தொல்-432

(2) மா என்பது விலங்கையும் குறிக்கும் அளவையும் குறிக்கும். விலங்கினின்று 'விலக்குவதற்கு 'வழங்கியல் மா' என்று கூறுதல் காண்க. எனவே பொருளுக்கு ஏற்ப இரண்டுமுதல் ஒன்பான் இறுதி மாற்றம் பெறும் என்பது தெரிகிறது.

இரு மா—மா அளவின் பெயர்.
இரண்டுமா—மா விலங்கின் பெயர்.[33]

8. குற்றியலுகர ஈற்று எண்ணுப் பெயர்கள் (திரிபுகள்)

குற்றியலுகர ஈற்றுப் புணரியல் செய்திகளில் எண்ணுப் பெயர்கள் மிகுதியான இடம் பெறுகின்றன. அளவுப் பெயரும், நிறைப் பெயரும், பொதுப் பெயரும், ஏனை எண்ணுப் பெயரும் வரும்பொழுது அடையும் திரிபுகள் பின் வருமாறு:

(1) ஒன்று, ஒரு, ஓர் - மாற்று வடிவங்கள்
ஒன்று—தனித்து வரும்பொழுது.
ஓர்—உயிரும் யகரமும் மொழி முதலில் வருமிடத்து
ஒரு—ஏனையிடத்து
ஓர்—ஓரகல்[34] ஓராயிரம்[35] ஓரிலை, ஓர்யாழ்[36]

---

"திசையொடு திசையும் பிறவும் சேரின்
நிலையீற்று உயிர்மெய் கவ்வொற்று நீங்கலும்
றகரம் னலவாத் திரிதலும் ஆம் பிற" —நன்–186

33. "இரண்டு முதலொன்பான் இறுதி முன்னர்
வழங்கியல் மாவென் கிளவி தோன்றின்
மகர அளவொடு நிகரலும் உரித்தே" —தொல்–480

34. "முதலீ ரெண்ணின் முன்உயிர் வருகாலைத்
தவலென மொழிப உகரக் கிளவி
முதனிலை நீடல் ஆவயி னான" —தொல்-455

ஒரு—ஒரு பஃது[37] ஒரு நூறு[38] ஒரு நூறுயிரம்[39]
ஒரு கல், ஒரு சுனை[40]

(2) இரண்டு, இரு, ஈர்

இரண்டு—தனித்து வரும்பொழுது
ஈர்—உயிரும் யகரமும் வருவழி
இரு—ஏனையிடத்து.
ஈர்—ஈரகல்[41]
ஈராயிரம்[42]

---

35. "ஆயிரக் கிளவி வருஉங் காலை
முதலீ ரெண்ணின் உகரங் கெடுமே" —தொல்3464
"முதனிலை நீடினும் மானமில்லை" —தொல்-465

36, "அதனிலை உயிர்க்கும் யாவரு காலை
முதனிலை ஒகரம் ஓவா கும்மே
ரகரத்து உகரம் துவரக் கெடுமே" —தொல்-479

37. "முதலீ ரெண்ணின் ஒற்று ரகர மாகும்
உகரம் வருதல் ஆவயி னான" —தொல்-438

38. "நூறுமுன் வரினும் கூறியஇயல்பே" —தொல்-460

39. "நூறு யிரமுன் வருஉங் காலை
நூறன் இயற்கை முதனிலைக் கிளவி" —தொல்–471

40. "முதனிலை எண்ணின் முன்வல்லெழுத்து வரினும்
ஞநமத் தோன்றினும் யவவந்து இயையினும்
முதனிலை இயற்கை என்மனார் புலவர்" —தொல்-478

41. "முதல் ஈரெண்ணின் முன்உயிர் வருகாலைத்
தவலென மொழிப உகரக் கிளவி
முதனிலை நீடல் ஆவயினான" —தொல்-455

42. "ஆயிரக் கிளவி வருஉங் காலை
முதல் ஈரெண்ணின் உகரம் கெடுமே" —தொல்–464
"முதனிலை நீடினும் மானமில்லை" —தொல்–465

ஈரிலே[43]

இரு — இருபஃது[44] இருநூறு[45], இரு நூறுயிரம்[46].
இருகல் [47]

(3) மூன்று, மூ, மு

மூன்று — தனித்து வரும்பொழுது

மூ — உயிரும் ய வ வருமிடத்தும்

மூ — ஏனையிடத்து.

மூ — மூவுழக்கு[48] ; மூவழி, மூ யானை[49]

மு—இதனோடு அடுத்த மெய்யும் உடன் சேரும். எனவே முப், முச், முங், முவ் முதலியன இவற்றின் மாற்று வடிவங்கள் என்பர்; முப்பது[50] முக்கலம்[51]

---

43. "தொல்காப்பியம் 479 உரை"

44. "முதலீ ரெண்ணின் ஒற்று ரகர மாகும்
உகரம் வருதல் ஆவயி னான" —தொல்-438
"இடைநிலை ரகரம் இரண்டெனெ் எண்ணிற்கு
நடைமருங்குஇன்றே பொருள் வயினான" —தொல்–439

45. "நூறுமுன் வரினும் கூறிய இயல்பே" —தொல்–460

46. "நூறுயிரமுன் வருஉங் காலை
"நூறன் இயற்கை முதனிலைக் கிளவி" —தொல்–471

57. "முதனிலை எண்ணின்முன் வல்லெழுத்து வரினும்
ஞநமத் தோன்றினும் யவவந்து இயையினும்
முதனிலை இயற்கை என்மனார் புலவர்" —தொல்–478

48. மூன்றன் முதனிலை நீடலும் உரித்தே
உழக்கென் கிளவி வழக்கத்தான" —தொல்-457

49. "அதனிலை உயிர்க்கும் யாவரு காலை
முதனிலை ஒகரம் ஓவா கும்மே
ரகரத் துகரம் துவரக் கெடுமே" —தொல்–479
இதன் உரையும் காண்க.

50. "மூன்றும் ஆறும் நெடுமுதல் குறுகும்" —தொல்-440
"மூன்றன் ஒற்றே பகாரமாகும்" —தொல்–441

51. "மூன்றன் ஒற்றே வந்தது ஒக்கும்." —தொல்-447

முந்நாழி, மும்மண்டை[52] முவ்வட்டி[53]; முவ்வகல்[54] முக்கல், மும்மொழி[55]

(4) நான்கு:—நான், நால், நாற்

நான்கு—தனித்து வரும்பொழுது

நாற் – வல்லெழுத்து வரும்பொழுது

நான் மெல்லெழுத்து வரும்பொழுது

நால்—ஏனையிடத்து

நாற்—நாற்பஃது[56] நாற்புறம்[57]

நான்—நானூறு[58] நான்மொழி[59]

நால்—நாலகல்[60] நாலாயிரம்[61]

---

52. "ஐந்து நமவரு காலை
வந்தது ஒக்கும் ஒற்றிய னிலையே." —தொல்-451
53. "மூன்றன் ஒற்றே வகரம் வருவழித்
தோன்றிய வகரத்து உருவா கும்மே." —தொல்-452
54. "மூன்றும் நான்கும் ஐந்தென் கிளவியும்
தோன்றிய வகரம் இயற்கை ஆகும்." —தொல்-456
55. "முதனிலை எண்ணின் முன் வல்லெழுத்து வரினும்
ஞநமத் தோன்றிலும் யவவந்து இயையினும்
முதனிலை இயற்கை என்மனார் புலவர்." —தொல்-478
56. "நான்கன் ஒற்றே றகாரம் ஆகும்." —தொல்-442
57. "தொல்காப்பியம் 478 உரை"
58. நான்கும் ஐந்தும் ஒற்றுமெய் திரியா." —தொல்-462
59. "தொல்காப்பியம் 478 உரை."
60. "மூன்றும் நான்கும் ஐந்தென் கிளவியும்
தோன்றிய வகரத்து இயற்கை ஆகும்." —தொல்-456
61. "நான்கன் ஒற்றே லகாரம் மாகும்." —தொல்-467

(5) ஐந்து, ஐ

ஐந்து—தனித்து வருமிடத்து

ஐ—ஏனையிடத்து

ஐ கசதப வருவழி வல்லெழுத்துப் பெறுவதில்லை. மெல்லெழுத்தே பெறும். எனவே உயிரும் யகரவகரமும் வருவழி ஐ என்ற வடிவும், ஏனைய வலிமெலி வருவழி மெல்லெழுத்தும் பெறும் என்பதாயிற்று.

ஐ—ஐம்பது[62] ஐங்கலம்[63]; ஐந்நாழி, ஐம்மண்டை[64] ஐவட்டி[65] ஐயகல்[66]; ஐந்நூறு[67] ஐயாயிரம்[68]

(6) ஆறு, அறு

ஆறு—தனித்து வருமிடத்தும் உயிர் வருமிடத்தும்

அறு—ஏனையிடத்து.

ஆறு—ஆறகல்[69] ஆருயிரம்[70]

அறு—அறுகலம், அறுபகல்[71]

(7) ஏழ் (மெய்யீற்றுப் புணரியலில் காண்க.)

---

62. ஐந்தன் ஒற்றே மகாரம் ஆகும்." —தொல்-443
63. ஐந்தன் ஒற்றே மெல்லெழுத் தாகும்." —தொல்-448
64. ஐந்து மூன்று நமவரு காலை
வந்த தொக்கும் ஒற்றியல் நிலையே." —தொல்-45
65. "ஐந்தன் ஒற்றே முந்தையது கெடுமே." —தொல்-454
66. "தொல்காப்பியம்-456"
67. "நான்கும் ஐந்தும் ஒற்றுமெய் திரியா." —தொல்–462
68. "ஐந்தன் ஒற்றே யகாரம் ஆகும்." —தொல்-468
69. "ஆறென் கிளவி முதல் நீடும்மே." —தொல்–459
70. "ஆறன் மருங்கிற் குற்றியல் உகரம்
ஈறுமெய் ஒழியக் கெடுதல் வேண்டும்." —தொல்-469
71. தொல்-478 உரை.

(8) எட்டு, எண்

எட்டு—தனித்து வருமிடத்து

எண்—ஏனையிடத்து

எண், எண்பஃது[72] —எண்ணுழி, எண்மண்டை[73], எண்ணகல், எண்யாழ்[74]

(9) ஒன்பது, தொண், தொள்.

தொண்—பத்து என்னும் சொல் நூறாகத் திரிந்து வருமிடத்து[75]

தொள்—நூறு என்னும் சொல் ஆயிரமாகத்திரிந்து வருமிடத்து[76]

ஒன்பது—ஏனையிடத்து

---

72. "எட்டன் ஒற்றே ணகார மாகும்." —தொல்-444

73. "நமவ என்னும் மூன்றொடு சிவணி
யகரம் வரினும் எட்டன்முன் இயல்பே." —தொல்-450

74. தொல் காப்பியம்-478.

75. "ஒன்பான் ஒகரமிசைத் தகரம் ஒற்றும்
முந்தை ஒற்றே ணகாரம் இரட்டும்
பஃதென் கிளவி ஆய்த பகரங் கெட
நிற்றல் வேண்டும் ஊகாரக் கிளவி
ஒற்றிய தகரம் றகர மாகும்." —தொல்-445

76. "ஒன்பான் முதல்நிலை முந்து கிளந்தற்றே
முந்தை ஒற்றே ளகாரம் இரட்டும்
நூறுஎன் கிளவி நகார மெய்கெட
ஊவா ஆகும் இயற்கைத் தென்ப
ஆயிடை வருதல் இகார ரகாரம்
ஈறுமெய் கெடுத்து மகரம் ஒற்றும் —தொல்-464

(10) ப:்து, பதின் பத்து,

பஃது—தனித்து வருமிடத்து

பன்—இரண்டு வருமிடத்து

பத்து—ஒன்றுமுதல் எட்டு எண் முன் வருமிடத்து.

பதின்—ஏனையிடத்து

பன்—பன்னிரண்டு[77]

பத்து—ஒருபத்தொன்று[78]

பதின்—பதினொன்று[79] பதினாயிரம்[80] பதின் கழஞ்சு[81], ஒரு பதினாயிரம்[82], ஒரு பதின் கலம் ஒரு பதின் கழஞ்சு[83]

(11) நூறு, நூற்று

நூறு—தனித்து வரும்பொழுது

நூற்று—ஏனை மொழியின்முன் அடையாக நிற்கும் பொழுது.

---

77. "பத்தன் ஒற்றுக்கெட னகாரம் இரட்டல்
ஒத்தது என்ப இரண்டுவரு காலை." —தொல்-434

78. "ஒன்று முதலாகிய பத்தூர்கிளவி
ஒன்றுமுதல் ஒன்பாற்கு ஒற்றிடை மிகுமே
நின்ற ஆய்தம் கெடுதல் வேண்டும்." —தொல்-575

79. "இடையொற்றுத் தொடரும் ஆய்தத் தொடரும்
நடையாய் இயல என்மனார் புலவர்." —தொல்-413

80. "ஆயிரம் வரினும் ஆயியல் திரியாது." —தொல்-435

81. "நிறையும் அளவும் வரூஉங் காலையும்
குறையா தாகும் இன்னென் சாரியை." —தொல்-436

82. "ஆயிரம் வரினே இன்னென் சாரியை
ஆவயின் ஒற்றிடை மிகுதல் இல்லை." —தொல்-476

83. "அளவும் நிறையும் ஆயியல் திரியா." —தொல்-467

நூற்றொன்று[84]; நூற்றொருபஃது[85]; நூற்றுக்கலம்[86]

**உறழ்நிலை வடிவங்கள்**

ஒன்று: தனித்துவரும் வடிவம்; அடையாக வரும்பொழுது ஒரு அல்லது ஓர் என்றே வரும். ஏனைய பொதுப்பெயர்கள் வரும்பொழுதும் இவ்விதியே பெறும். இரண்டுமுதல் எட்டுவரை உள்ள எண்கள் இருவடிவும் பெறும்.

இரண்டுமாடு, இருமாடு.
மூன்றுமாடு—மும்மாடு
நான்குகல் – நாற்கல்
ஐந்துகல்—ஐங்கல்
ஆறுகல்—ஆறுகல்
எட்டுக்கல்—எண்கல்[87] —487 உரை

## 9. நன்னூல் தரும் சிறப்புச் செய்திகள்

(1) குற்றியலுகர ஈறு ஐகார ஈறுக மாறுதலும் உண்டு என்பர்[88]

பண்டு+காலம்—பண்டைக்காலம்.
இன்று+நாள்—இற்றைநாள்
அன்று+கூலி—அற்றைக்கூலி.

---

84. "நூறென் கிளவி ஒன்றுமுதல் ஒன்பாற்கு
ஈறுசினை ஒழிய இனஒற்று மிகுமே." —தொல்-472
85. "அவையூர் பத்தினும் அத்தொழிற்று ஆகும்."
—தொல்-473
86. "அளவு நிறையும் ஆயியல் திரியாது
குற்றியல் உகரமும் வல்லெழுத்து இயற்கையும்
முற்கிளந் தன்ன என்மனார் புலவர்." —தொல்-474
87. "தொல்காப்பியம் 478 உரை"
88. "ஐயீற்று உடைக்குற்று உகரமும் உளவே," —நன்-185

(2) தெங்கு+காய்—தேங்காய் ஆகியது என்னும் மரூஉ முடிபைக் காட்டுவர்[89]

(3) எண்ணுப்பெயர்களின் திரிபுகளைத் தொல் காப்பியர் பல சூத்திரங்களுள் கூறுவனவற்றை இவர் சில சூத்திரங்களில் தொகுத்துத் தருவர்[90]

(4) தொல்காப்பியர் தரும் திசைச்சொற்களுக்கும் மென்தொடர் வன்தொடர் ஆதலுக்கும் மிகுதல் மிகாமைக்கும் பொதுச்சூத்திரங்களாகத் தொகுத்துச் செய்திகளைத் தருவர்,[91]

---

89. "தெங்கு நீண்டு ஈற்றுயிர் மெய்கெடும் காய்வரின்."
—நன்-187

90. "எண்ணிறை அளவும் பிறவும் எய்தின்
ஒன்று முதல் எட்டு ஈறும் எண்ணுள்
முதலீ ரெண் முதல்நீளும்; மூன்றாறு
ஏழ்குறுகும்; ஆறேழல் அவற்றின்
ஈற்றுயிர் மெய்யும் ஏழன் உயிரும்
ஏகும் ஏற்புழி என்மனார் புலவர்." —நன்-188

"நன்-189 முதல் 199"

91. "திசையொடு திசையும் பிறவும் சேரின்
நிலையீற்று உயிர்மெய் கவ்வொற்று நீங்கலும்
றகரம் னலவாத் திரிதலும் ஆம்பிற" —186

"வன்றொடர் அல்லன முன்மிகா அல்வழி." —நன்-181

"இடைத்தொடர் ஆய்தத் தொடர் ஒற்றிடையின்
மிகா நெடில் உயிர்த்தொடர் முன்மிகா வேற்றுமை."
—நன்-182

"நொடிலோடு உயிர்த்தொடர்க் குற்றுகரங் களுட்
டறவொற்று இரட்டும் வேற்றுமை மிகவே."—நன்-183

"மென்றொடர் மொழியுள் சிலவேற்றுமையில்
தம்மினம் வன்றொடர் ஆகா மன்னே". —நன்-184

## 10. புணரியல் புறநடைச் செய்திகள்

### (1) உம் கெழு இவற்றின் மாற்று வடிவங்கள்

உம் என்பது பொதுவாக உம்மைத் தொடரின்கண் வரும். உம்மை இடைச்சொல் எனப்படும். உம் எண்ணிடைச்சொல்லாகவும் வரும்; *சாரியையாகவும் வரும்.

கபிலனும் பரணனும்—உம்மைத் தொகை; அல்வழித் தொடர்; உம் எண்ணும்மையாகும்.

**வானவரி திங்களும் வில்லும் போலும்**

இது வில்லும் திங்களும் என்னும் பொருளைத்தர வில்லை. திங்களிடை வில்லும் போலும் என ஏழாம் வேற்றுமைத் தொடராக அமைதல் காண்க. இது வேற்றுமைத் தொடர். உம் என்பது சாரியையாக வந்தது.

கெழு என்பது அல்வழித் தொடரில் வினைப் பொருளையும் வேற்றுமைத் தொடரில் சாரியைப் பொருளையும் தருதல் உண்டு.

துறைகெழு மாந்தை—துறை பொருந்திய மாந்தை என்னும் ஊர். இஃது எழுவாய்த் தொடராகும். கெழு என்பது வினைப்பொருளைத் தந்தது.

கல்கெழு கானவர் மகள்—கல்லைப் பொருந்திய கானவர்மகள் என்னும் பொருளையே தருகிறது. எனவே இது வேற்றுமைத் தொடராகும். கெழு என்பதற்கு பொருந்திய என்னும் வினைப்பொருள் ஈண்டு இல்லை. வெறும் சாரியையாகவே வருகிறது.

எனவே உம் கெழு என்பன இரண்டு வேறு தொடர்களுள் இருவேறு நிலைகளைப் பெறுதல் காண்க. இவ்வாறு

சாரியைகளாக வருவன ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையிலேயேயாகும் என்பர்.

லன எனவரும் சொற்களின்முன் வரும் உம்கெழு என்பனவே இவ்வாறு சாரியைகளாக வரும் என்பர். இவைசெய்யுள் திரிபுகள் என்றும் கூறுவர்[92]

மற்றும் னகரஈற்றின் முன் வரும் எடுத்துக்காட்டுகள் பின் வருமாறு:

"மாநிதிக் கிழவனும் போன்ம்"

"கான்கெழுநாடு"

னகர ஈற்றின் முன் உம் கெழு என்பன வேற்றுமைத் தொடரில் சாரியைகளாக வந்தன.

(2) ஏனையமரூஉமுடிபுகளும் செய்யுள் திரிபுகளும்

உரிச்சொற்களும் பண்புத் தொகையும் வினைத் தொகையும் எண்ணின் தொகுதியும் அன்ன பிறவும் மரூஉ முடிபுகளாம். இவற்றிற்கெல்லாம் விதிகள் கூற இயலாது என்பர் தொல்காப்பியனார்.[93]

---

92. "லனவென வரூஉம் புள்ளி இறுதிமுன்
உம்மும் கெழுவும் உளப்படப் பிறவும்
அன்ன மரபின் மொழியிடைத் தோன்றிச்
செய்யுள் தொடர்வயின் மெய்பெற நிலையும்
வேற்றுமை குறித்த பொருள் வயினான." —தொல்-481

93. "உயிரும் புள்ளியும் இறுதி ஆகிக்
குறிப்பினும் பண்பினும் இசையினும் தோன்றி
நெறிப்பட வாராக் குறைச்சொற் கிளவியும்
உயர்திணை அஃறிணை ஆயிரு மருங்கின்
ஐம்பால் அறியும் பண்புதொகு மொழியும்
செய்யும் செய்த என்னும் கிளவியின்

உரிச்சொற்களைக் குறைச் சொற்கிளவி என்று குறிப்பிடுவர். அதாவது பால் ஈறுகளும் கால இடைநிலைகளும் இணையாத பகுதிகள் என்பது இதன் கருத்தாகும். பண்புத்தொகை, வினைத்தொகை இவையும் ஈற்று விகுதிகள் குறைந்த வடிவங்களாம். ஒவ்வொன்று ஒரோஒன்று, நன்னான்கு முதலிய எண்ணின் தொகுதியும் ஈற்று விகுதிகள் குறைந்த வடிவங்களாம். இவற்றின் இத்திரிபு வடிவங்களுக்கு விதிமுறைகள் மரூஉ முடிபு ஆகும் என்பது அவர் கருத்தாகும். நன்னான்கு அவ்வாறு எவ்வேழு ஓரோஒன்று இவற்றின் பகுதிகள் குற்றிலுகர ஈற்றுப்புணரியலில் கூறவில்லையென்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

2. பிற செய்யுள் திரிபுகளையும் அருகி வழங்கும் மரூஉ முடிபுகளையும் கிளந்தவற்று இயல் கொண்டு ஏனைய உணரப்படும் என்பர். [94]

நச்சினார்க்கினியர் காட்டும் ஒரு சில எடுத்துக் காட்டுகள் பின்வருமாறு.

---

மெய்யொருங்கு இயலும் தொழில் தொகுமொழியும்
தம்மியல் கிளப்பின் தம்முன் தாம் வரூஉம்
எண்ணின் தொகுதி யுளப்படப்பிறவும்
அன்னவை எல்லாம் மருவின் பாத்திய
புணரியல் நிலையிடை உணரத்தோன்றா.'' —தொல்-482

94. ''கிளந்த வல்ல செய்யுளுள் திரிநவும்
வழங்கியல் மருங்கின் மருவொடு திரிநவும்
விளம்பிய இயற்கையின் வேறுபடத் தோன்றின்
வழங்கியல் மருங்கின் உணர்ந்தனர் ஒழுக்கல்
நன் மதி நாட்டத்து என்மனார் புலவர்.'' —தொல்-483
''இடையுரி வடசொலின் இயம்பிய கொளாதவும்
போலியும் மரூஉவும் பொருந்திய வாற்றிற்கு
இயையப் புணர்த்தல் யாவர்க்கும்நெறியே.'' —நன்-239

செய்யுள் திரிபுகள் சில

1. "தடவுத்திரை", "தடவுநிலை"—உரிச் சொல் உகரம் பெற்றது.

2. "நறவங்கண்ணி"—நறு என்னும் சொல் அம் சாரியை பெற்றது.

3. "அன்ன கோயில் வண்ணமே"—கோயில் என்பது யகர உடம்படு மெய் பெற்று முடிந்தது.

4. "சுற எறி மீன்" "இர வழங்கு சிறு நெறி", உகரம் பெறுமல் முடிந்தன. இதனை நன்னூலார் விதி யாகவே தருவர்.

5. "தீயின் அன்ன ஒண்செங்காந்தள்" வேற்றுமை யில் ஈகார ஈறு இன் பெற்றது.

6. "நல்லொழுக்கம் காக்கும் திரு வத்தவர்" உகர ஈறு வேற்றுமைக்கண் அத்துப் பெற்றது.

7. "ஏப் பெற்ற மான்பிணைபோல்" ஏகர ஈறு வேற்றுமைக்கண் எழுத்துப் பேறு பெறவில்லை.

8. "கைத்துண்டாம் போழ்து", "புன்னையங் கானல்" முல்லையந் தொடையல்" ஐகார ஈறு அத்து அம் சாரியைகள் வேற்றுமைக்கண் பெற்றது.

9. "அஞ்செவி நிறைய ஆலின"—'செவி' வருவழி யும் ககரம் கெட்டது.

10. தெம்முனை—என்பதில் உகர எழுத்துப் பேறு பெறுமல் வகரம் மகரமாகத் திரிந்தது. இதனை நன்னூல் விதியுள் சேர்த்துள்ளது.

வழக்கியல் மரூஉமுடிபுகள்

அருமருந்தான்—அருமந்தான்

சோழ நாடு—சோணாடு

பாண்டிய நாடு—பாண்டி நாடு

மலையமான் நாடு—மலாடு

பொதுவில்—பொதியில்

இவற்றை நச்சினார்க்கினியர் மரூஉ முடிபாகக்காட்டுவர்

# 11. கிளவியாக்கம்

சொல்லதிகாரம் என்பது சொல்லின் இயலைக் கூறுவதாகும். தொல்காப்பியனார் சொற்களைத் தொடரின்கண் வைத்தே பெரிதும் ஆராய்கின்றார். கிளவியாக்கம் என்பது எழுவாய் பயனிலை கொண்ட தொடரியலைத் தெளிவுபடுத்துகிறது. கிளவி என்பது ஈண்டுக் கிளத்தல் என்னும் பொருளினது.

கிளவி யாக்கத்தில் கூறப்படும் செய்திகளை நன்னூல் பொதுவியலில் கூறுகிறது. தொல்காப்பியம் கிளவியாக்கத்துள்ளும் எச்சவியலிலும் கூறும் செய்திகளைத் தொகுத்து நன்னூல் பொதுவியலில் தருகின்றது.

கிளவியாக்கத்தில் கூறப்படும் செய்திகளைக் கீழ் வரும் தலைப்புகளில் பகுத்துக் காணலாம்.

1. திணைபால் இடம் வழாநிலையும் வழுமைதியும்.
2. செப்பு வினாவாக்கிய நிலைகள்
3. வழக்கும் செய்யுளும்
4. சொற் பொருள் மரபுகள்
5. நன்னூல் தரும் சிறப்புச் செய்திகள்.

## 1. திணை பால் இடம் வழாநிலையும் வழுவமைதிகளும்

நன்னூலார் தொல்காப்பியக் கிளவியாக்கத்தில் கூறப்படும் செய்திகளை வழாநிலைத் தொடர்கள் வழுவமைதித் தொடர்கள் என்ற பகுப்பில் காட்டுதல் சிறப்புடைத்தாம்.

"திணைபால் இடம் பொழுது வினு இறை
மரபாம் ஏழும் மயங்கினும் வழுவே" —நன் 375

இதுவே கிளவியாக்கத்தில் கூறப்படும் செய்திகளின் தொகுப்பு ஆகும். தொல்காப்பியனார் கிளவியாக்கத்துள் காலவழுப்பற்றிய செய்தியைக் குறிப்பிடவில்லை. வினையியலில் கூறப்படும் ஒரு சில செய்திகள் நன்னூலார் காட்டும் கால வழுவமைதிக்குத் துணை செய்கின்றன.

(1) திணைபால் மரபுகள்:

தொடர் நிலையில் திணை பால் இயைபு பெரிதும் எதிர்பார்க்கப் படுகிறது. திணைபால் சிறப்புக்கள் சொல்வடிவ அமைப்புக்களுக்குப் பெரிதும் துணை செய்கின்றன. பால் ஈறுகள் வினையில் இடம் பெறும்பொழுது தொடர் நிலை விளக்கம் பெறுகிறது.

திணை இருவகைப்படும். மக்களைச் சுட்டும் சொற்கள் உயர்திணை எனப்படும். மக்கள் அல்லாத பிறவற்றை அஃறிணை என்பர். இவ்விரண்டு திணைகளின் அடிப்படையிலேயே சொற்கள் தொடரின்கண் இயங்கும்.[1]

இப்பாகுபாடு தமிழ் மொழியியலுக்கு மிகவும் இன்றியமையாதது ஆகும். பெயரியலிலும் வினையியலி

1. "உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை என்மனார் அவரல பிறவே
ஆயிரு திணையின் இசைக்கு மன சொல்லே." —தொல் 1
"ஒருமொழி தொடர்மொழி பொதுமொழி என்று
இருதிணை ஐம்பால் பொருளையும் தன்னையும்
மூவகை இடத்தும் வழக்கொடு செய்யுளின்
வெளிப்படை குறிப்பின் விரிப்பது சொல்லே:"
—நன்-259

லும் சொற்கள் இந்த அடிப்படையிலேயே பிரித்து உணரப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்க செய்தி யாகும். திணை என்பதால் பால் இடம் முதலியனவும் அடங்கும் என்க.

ஆண்பால், பெண்பால், பலர்பால் உயர்திணைப் பால்கள் ஆகும். ஒன்றன்பால் பலவின் பால் அஃறிணைப் பால்கள் ஆகும்.[2]

னகர இறுதி ஆண்பால் விகுதியும், ளகர இறுதியும் இகர இறுதியும் பெண்பால் விகுதிகளும் ஆகும். ரகர இறுதியும் பகரஇறுதியும் பலர் பால் விகுதிகளாகும். து என்பதன் மாற்றுவடிவம் 'று' 'டு' என்பன ஆகும். ஒலிச் சூழ்நிலை ஒட்டி இவை மாறுபடும். அ ஆ வ பலவின்பால் விகுதிகளாகும். இவை அனைத்தும் பெரும்பாலும் வினை யோடு தெளிவாக வரும்.[3]

---

2. "ஆடூஉ அறிசொல் மகடூஉ அறிசொல்
பல்லோர் அறியும் சொல்லொடு சிவணி
அம்முப் பாற்சொல் உயர்திணை அவ்வே."

3. "ஒன்றறி சொல்லே பலவறி சொல்லென்று
ஆயிரு பாற்சொல் அஃறிணை யவ்வே." —தொல்-3
"ஆண்பெண் பலர் என முப்பாற்று உயர்திணை."
—நன்-262
"ஒன்றே பலவென்று இருபாற்று அஃறிணை." —நன்-263
"னஃகான் ஒற்றே ஆடூஉ அறிசொல்." —தொல்-5
"ளஃகான் ஒற்றே மகடூஉ அறிசொல்." ...தொல்–6
"ரஃகான் ஒற்றும் பகர இறுதியும்
மாரைக் கிளவி உளப்பட மூன்றும்
நேரத் தோன்றும் பலரறி சொல்லே." —தொல்–7
"ஒன்றறி கிளவி, தறட ஊர்ந்த
குன்றியல் உகரத்து இறுதி ஆகும்." —தொல்-8

தொல்காப்பியனார் மேலும் வினையியலில்—அம், ஆம், எம், ஏம், கும், டும், தும், றும் என்பன தன்மைப் பன்மை வினைமுற்று விகுதிகள் என்றும்[4], குடுதுறு என் ஏன் அல் என்பன தன்மை ஒருமைவினை விகுதிகள் என்றும்[5] கூறியுள்ளார். இவற்றை எல்லாம் உட்கொண்டு நன்னூல் விகுதிகளைத் தொகுத்துக் கூறியுள்ளது[6].

பெயரும் வினையும் திணைபால் எண் இடம் வழுவுதல் இல்லை என்பது,

"வினையின் தோன்றும் பால்அறி கிளவியும்
பெயரின் தோன்றும் பால்அறி கிளவியும்
மயங்கல் கூடா தம்மர பினவே." —தொல்-11

என்னும் சூத்திரத்தில் வற்புறுத்தப்படுகிறது. இது வழுவற்க என வற்புறுத்தியவாறும்.

---

"அஆவ என வரூஉம் இறுதி
அப்பால் மூன்றே பலவறி சொல்லே." —தொல்-9

"இருதிணை மருங்கின் ஐம்பால் அறிய
ஈற்றில் நின்றிசைக்கும் பதினோ ரெழுத்தும்
தோற்றம் தாமே வினையொடு வருமே." —தொல்-10

4. "அவைதாம்
அம்ஆம் எம்ஏம் என்னுங் கிளவியும்
உம்மொடு வரூஉங் கடதற என்னும்
அந்நாற் கிளவியொடு ஆயெண் கிளவியும்
பன்மை யுரைக்கும் தன்மைச் சொல்லே."
—தொல்-202

5. "கடதற என்னும்
அந்நான்கு ஊர்ந்த குன்றியல் உகரமொடு
என் ஏன் அல்என வரூஉம் ஏழும்
தன்வினை உரைக்கும் தன்மைச் சொல்லே."
—தொல்-203

6. "பண்புகொள் பெயரும் அதனோ ரற்றே." —நன்-140

இப்போது நியதியினின்று மாறுபட்டு வருவனவும் உள. இவை வழு ஆயினும் வழக்கில் உள்ளமையின் வழுவமைதியாகக் கொள்ளப்படும் என்பர் நன்னூலார்.[7]

(2) திணைபால் வழுவமைதி

உயர்திணைக்கு உரிய தன்மைச் சொல்லும் அஃறிணைக் கிளவியும் ஒரு தொடரின்கண் விரவி வந்தால் அத்தொடர் உயர்திணை வினை கொண்டே முடியும்.

"யானும் என் எஃகமும் சாறும்.[8]"

இம் மரபினை இன்னும் சிறிது விரிவுபடுத்தி நன்னூல் ஏனைய அஃறிணைப் பெயர்களும் உயர்திணையைத் தொடருமிடத்தும் உயர்திணை கொண்டு முடியும் என்பர். மற்றும் திணைவிரவி வரும் விரவுப் பெயர்கள் சிறப்பு, மிகுதி, இழிவு பற்றி அவற்றின் இயல்புக்கு ஏற்ப வினை முடிவைப் பெறும் என்பர்.[9]

வியங்கோள் வினையிலும் இரு திணைகள் கலந்து வரும்.

"ஆவும் ஆயனும் செல்க."[10]

---

7. "திணையே பால்இடம் பொழுது வினாஇறை
மரபாம் ஏழும் மயங்கின்ஆம் வழுவே. —நன்-375

8. "தன்மைச் சொல்லே அஃறிணைக் கிளவியென்று
எண்ணுவழி மருங்கின் விரவுதல் வரையார்."
—தொல்-43

"உயர்திணை தொடர்ந்த பொருள்முதல் ஆறும்
அதனொடு சார்த்தின் அத்திணை முடிபின." —நன்-377

9. "திணைபால் பொருள்பல விரவின சிறப்பினும்
மிகவினும் இழிபினும் ஒருமுடி பினவே." —நன்-378

10. "வியங்கோள் எண்ணுப்பெயர் திணைவிரவு வரையார்."
—தொல்-45

ஆண்மை திரிந்து பெண்மை சுட்டிய பேடு. பேடியர், பேடிமார், பேடிகள் முதலாயின சொற்களும் தெய்வம்; தேவி, தேவன் முதலிய சொற்களும் உயர்திணைப் பால் விகுதிகளைக் கொண்டு முடியும்.[11]

## (3) பால் வழுவமைதி

(அ) ஒருவரைக்கூறும் பன்மைக் கிளவியும் ஒன்றனைக் கூறும் பன்மைச் சொல்லும் இலக்கண அமைதி பெறுவதில்லை. எனினும் வழக்கின்கண் பயின்று வந்து விட்டமையால் அவை ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.[12]

யாம் வந்தோம், நீயிர் வந்தீர், இவர் வந்தார் இவை ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவிகளாம்.

(ஆ) ஒருவர் என்பது ஒருவனையும் ஒருத்தியையும் உணர்த்தும் உயர் சொற் கிளவியாகும். அதேபோல இருவர் மூவர் என்பன எந்தத் தனிப்பாலையும் உணர்த்தும் உயர் சொற் கிளவியாகா. அவை பொதுப் பாற் சொற்களாகும்[13].

---

11. "பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்
ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியும்
தெய்வம் சுட்டிய பெயர்நிலைக் கிளவியும்
இவ்வென அறியும் அந்தம் தமக்கிலவே
உயர்திணை மருங்கின் பால்பிரிந்து இசைக்கும்."
—தொல் -4

12, "ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்
ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும்
வழக்கின் ஆகிய உயர்சொற் கிளவி;
இலக்கண மருங்கின் சொல்லா றல்ல." —தொல்-27

13. "ஒருமை எண்ணின் பொதுப்பிரி பாற்சொல்
ஒருமைக் கல்லது எண்ணுமுறை நில்லாது."—தொல்-44

(இ) பால் ஈறு பெருத உயர்திணைப் பொருள் தரும் சொற்கள்:-

உயர்திணைப் பொருளை உணர்த்தும் சொற்களாயினும் கீழ் வருவன மக்களை உணர்த்தாமல் அவர்கள் தன்மையையும் இயல்புகளையும் உணர்த்துவன ஆதலின் அவை அஃறிணை முடிபையே பெறும். உயர்திணை முடிவு பெரு.

காதல், சிறப்பு, செறற் சொல், விறற்சொல் என்னும் தொல்காப்பியர் தரும் குறிப்பைக் கொண்டு நன்னூல் அதற்கு விளக்கமாகக் கீழ் வரும் சூத்திரத்தை அமைத்துள்ளது.[14]

"உவப்பினும் உயர்வினும் சிறப்பினும் செறலினும்
இழிப்பினும் பால்திணை இழுக்கினும் இயல்பே."

நன். 379

காதற் சொல் பாவையானை என ஒப்புமை கருதாது காதல் பற்றி வருவன; சிறப்புச் சொல் கண்போலச் சிறந்தானைக் கண் என்றலும் உயிர் போலச் சிறந்தானை உயிர் என்றலும் என இவை முதலாயின;

---

14. "குடிமை ஆண்மை இளமை மூப்பே
அடிமை வன்மை விருந்தே குழுவே
பெண்மை அரசே மகவே குழவி
தன்மை திரிபெயர் உறுப்பின் கிளவி
காதல் சிறப்பே செறற்சொல் விறற்சொலென்று
ஆவறு மூன்றும் உளப்படத் தொகைஇ
அன்ன பிறவும் அவற்றொடு சிவணி
முன்னத்தின் உணருங் கிளவி யெல்லாம்
உயர்திணை மருங்கின் நிலையின ஆயினும்
அஃறிணை மருங்கின் கிளந்தாங்கு இயலும்." —தொ-56

செறற் சொல் செறுதலைப் புலப்படுத்தும் பொறியறை கெழீஇயிலி என்னும் தொடக்கத்தன; விறற் சொல் விறலை உணர்த்தும் பெருவிறல் அருந்திறல் என்னும் தொடக்கத்தன எனச் சேனாவரையர் விளக்கம் தருவர்.

அதே போலக் காலம், உலகம், உயிர், உடம்பு தெய்வம் வினை, பூதம், ஞாயிறு, திங்கள், சொல் என வரும் இச் சொற்களும் இவை போல்வன பிறவும் பால் ஈறுகள் பெறுவது இல்லை. அஃறிணைப் பாலாகவே வினை முடிவு கொள்ளும்.[15]

இவை பால் ஈறுகள் பெறும்பொழுது உயர்திணை முடிபுகளைப் பெற்று இயங்கும்.

உலகம் பசித்தது—அஃறிணை முடிபு
உலகர் பசித்தார்—உயர்திணை முடிபு
அரசு விழுந்தது—அஃறிணை முடிபு
அரசன் விழுந்தான்—உயர்திணை முடிபு.[16]

**பன்மை சுட்டிய கிளவிகள் ஒருமையில் வழங்குதல்:-**

பன்மையில்தான் கூறப்பட வேண்டும் என்ற கட்டுப் பாடு இல்லை. ஒருமையிலும் இவை கூறப்படும்,

---

15. "காலம் உலகம் உயிரே உடம்பே
பால்வரை தெய்வம் வினையே பூதம்
ஞாயிறு திங்கள் சொல்என வருஉம்
ஆயீ ரைந்தொடு பிறவும் அன்ன
ஆவயின் வருஉங் கிளவி யெல்லாம்
பால்பிரிந் திசையா உயர்திணை மேன." -தொல்-57

16. "நின்றாங்கு இசைத்தல் இவணியல்பு இன்றே."
—தொல்-58
"இசைத்தலும் உரிய வேறிடத் தான." —தொல்-59

கண் நல்லள்; தோள் நல்லள் எனச் சேனைரையர் எடுத்துக் காட்டுத் தருவர்.[17]

(4) இடம் பற்றிய மரபுச் சொற்கள்:-

(அ) தருசொல்லும் வருசொல்லும் தன்மை முன்னிலையாகிய இரண்டிடத்தை மட்டும் சாரும்.

"எனக்குத் தந்தான்; உனக்குத் தந்தான்"

"என்னுழை வந்தான்; நின்னுழை வந்தான்"

கொடை பற்றிய கிளவியும் செல்லுதல் பற்றிய கிளவியும் படர்க்கை இடத்தை மட்டும் சாரும்.

"அவன் கண் சென்றான்; அவனுக்குக் கொடுத்தான்."

இவை தொல்காப்பியர் காலத்து வழங்கிய தனி வழக்குகளாம்.

தரு சொல்லும் வரு சொல்லும் தன்மைக்கும் முன்னிலைக்கும் மட்டும் வரும் என்று நன்னூலாரும் கூறுவர்; படர்க்கை இடத்து நான்கு சொற்களும் வரும் என்பது அவர் கூறும் தனிச் செய்தியாகும். படர்க்கை இடத்துச் செலவும் கொடையும் மட்டும் வரும் என்பது தொல்காப்பியர் காலத்து மரபு என்பது தெரிகிறது.

---

17. "கண்ணும் தோளும் முலையும் பிறவும்
பன்மை சுட்டிய சினைநிலைக் கிளவி
பன்மை கூறும் கடப்பாடு இலவே
தம்வினைக்கு இயலும் எழுத்தலங் கடையே."
—தொல்-61

"உயர்திணை தொடர்ந்த பொருள்முதல் ஆறும்
அதனொடு சார்த்தின் அத்திணை முடிபின." —நன்-377

(ஆ) ஒருமையில் பன்மைப்பால் சொல்லையும், பன்மையில் ஒருமைப்பால் சொல்லையும், ஓரிடத்தில் பிறவிடச் சொல்லையும் தழுவிக் கூறுதலும் உள என்பர்.

'வெயிலெல்லாம் மறைந்தது'
'இரண்டு கண்ணும் சிவந்தது.'
'சாத்தன் தாய் இவை செய்வலோ'
'நீயோ இவனோ யாரிது செய்தார்'[18]

## 2. செப்பு வாக்கியங்களும் வினா வாக்கியங்களும்

(1) செப்பும் வினாவும் என வாக்கியங்களை இரு வகைப் படுத்தலாம்,[19] வினாவுக்கு எதிரே விடையாக வினா வருமாயின் அதனையும் செப்பாகவே கொள்ளலாம். [20] மற்றும் நேர் நிலை விடையாக அமையாமல் ஒரு வாற்றான் வினாவுக்கு விடையாக அமையுமானால் அதனை

18. "செலவினும் வரவினும் தரவினும் கொடையினும்
நிலைபெறத் தோன்றும் அந்நாற் சொல்லும்
தன்மை முன்னிலை படர்க்கை என்னும்
அம்மூ விடத்தும் உரிய என்ப." —தொல்-28

"அவற்றுள்
தருசொல் வருசொல் ஆயிரு கிளவியும்
தன்மை முன்னிலை ஆயீரிடத்த" —தொல்-29

"ஏனை இரண்டும் ஏனை யிடத்த." —தொல்-30

"தன்மை முன்னிலை படர்க்கை மூவிடனே." —நன்-266

"தரல்வரல் கொடைசெலல் சாரும் படர்க்கை
எழுவாய் இரண்டும் எஞ்சிய ஏற்கும்." —நன்-381

"ஒருமையிற் பன்மையும் பன்மையில்
ஓரிடம் பிறவிடம் தழுவலும் உளவே." —நன்-380

19. "செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல்." —நன்-13

20. "வினாவும் செப்பே வினாஎதிர் வரினே." —தொல்-14

யும் செப்பாகவே ஏற்றுக் கொள்ளலாம்.[21] செப்பினும் வினவினும் உறழ் பொருளினும் துணைப் பொருளினும் சினைக்குச் சினையும் முதலுக்கு முதலும் வரும் என்பர்.[22]

(2) யாது எவன் என்னும் வினாக் கிளவிகள் இரண்டும் அறியாப் பொருளிடத்து வினவாக அமையும். யாது எவன் என்பன இரண்டும் அஃறிணைச் சொற்களாம், அவற்றுள் யாது என்னும் வினாவின் கிளவி அறிந்த பொருளிடத்து ஐயம் தீர்தற்குத் தெரிந்த கிளவி யாதலும் உரித்து.[23]

(3) திணை துணிந்து பால் துணியாத ஐயப் பொருளை அவ்வத் திணைப் பன்மைச் சொல்லால் கூறுவர்.[24]

ஆண்மகனோ பெண் மகளோ இங்கு வருவார்? ஒருவனோபலரோ இங்குப் புகுந்த கள்வர்? என வரும் என்பர்.

---

21. "செப்பே வழீஇயினும் வரைநிலை இன்றே
அப்பொருள் புணர்ந்த கிளவி யான." —தொல்-15

22. "செப்பினும் வினவினும் சினைமுதற் கிளவிக்கு
அப்பொருள் ஆகும் உறழ்துணைப் பொருளே."
—தொல்–16

23. "வினவினும் செப்பினும் விரவா சினைமுதல்."—நன்-387
"யாது எவன் என்னும் ஆயிரு கிளவியும்
அறியாப் பொருள்வயின் செறியத் தோன்றும்."
—தொல்-31

"அவற்றுள்,
யாதுஎன வரூஉம் வினாவின் கிளவி
அறிந்த பொருள்வயின் ஐயம் தீர்தற்குத்
தெரிந்த கிளவி ஆதலும் உரித்தே." —தொல்–32

24. "பால்மயக் குற்ற ஐயக் கிளவி
தான்அறி பொருள்வயின் பன்மை கூறல்."—தொல்-23

ஆண்மகனோ பெண் மகளோ இங்குத் தோன்றும் உரு எனவும் "குற்றியோ மகனோ இங்குத் தோன்றும் உரு எனவும்" ஒன்றோ பலவோ செய்புக்க பெற்றம் எனவும் பொதுச் சொற்களையும் கொண்டு ஐய வினாக்கள் முடியும். [25]

(4) ஐயம் தெளிந்து துணிவைத் தெரிவிக்கும் பொழுது அன்மைக் கிளவி மறுக்கப்பட்ட மற்றொரு பொருள் மீது செல்லும்.

மகன் என்று துணிந்தவழிக் குற்றியன்று மகன் எனவும் குற்றி என்று துணிந்தவழி மகல்லன் குற்றி எனவும் வரும் என்பர். [26]

(5) இனைத்து என அறிந்த சினைக் கிளவிக்கும் முதற்கிளவிக்கும் வினை ஏற்று முடியும்பொழுது அச் சினைக் கிளவியோடும் முதற்கிளவியோடும் உம்மை சேரும்.

"பன்னிரு கையும் பாற்பட இயற்றி
முரசு முழங்குதானை மூவரும் கூடி"[27]

---

25. "உருபென மொழியினும் அஃறிணைப் பிரிப்பினும்
இருவீற்றும் உரித்தே சுட்டுங் காலை." —தொல்-24

26. "தன்மை சுட்டலும் உரித்தென மொழிப
அன்மைக் கிளவி வேறிடத் தான." —தொல்-25

"ஐயந் திணைபால் அவ்வப் பொதுவினும்
மெய்தெரி பொருள்மேல் அன்மையும் விளம்புப."
—நன்-376

27. "இனைத்தென அறிந்த சினைமுதற் கிளவிக்கு
வினைப்படு தொகுதியின் உம்மை வேண்டும்."
—தொல்-33

(6) இல்லாப் பொருளும் இடமும் காலமும் உம்மை முதலானவற்றோடு சார்த்தி இன்மை கூறுதற்கண் கொடுத்துச் சொல்வர்.

"பவளக்கோட்டு நீலயானை சாத்த வாகனன் கோயில் உள்ளும் இல்லை,,"

"குருடு காண்டல் பகலும் இல்லை."[28]

(7) மேலும் எப்பொருளாயினும் 'அல்லது இல்லை' என்னும் வாய்பாட்டிற் கூறுவார்" "இல்லை" என்னும் சொல் மறுக்கும் பொருளிடத்தும் "அல்லது" என்பது ஒப்புக் கொள்ளும் சொ்ல்லோடும் கூறுதல் இயற்கை.

"இது வல்லது வேறு இல்லை."
"பயிறு அல்லது உளுந்து இல்லை.[29]"

"அப்பொருள் உள்ளது" என்னும் வாய்பாட்டால் கூற விரும்பின் "இப்பயிறு உள்ளது" எனக் கூறுவர்.[30]

(8) பொருளோடு சாராது தனித்துச் சுட்டு அமையுமானால் சூழ்நிலை ஒட்டிப் பொருளை உணர்த்தும். [31]

---

28. "மன்னுப் பொருளும் அன்ன இயற்றே." —தொல்-34
29. "எப்பொருள் ஆயினும் அல்லது,இல்லெனின்
அப்பொருள் அல்லாப் பிறிதுபொருள் கூறல்."
—தொல்-35
30. "அப்பொருள் கூறின் சுட்டிக் கூறல்." —தொல்-36
"தம்பால் இல்லது இல்லெனின் இனனாய்
உள்ளது கூறி மாற்றியும் உள்ளது
சுட்டியும் உரைப்பர் சொற்சுருங்கு தற்கே."—நன்-406
31. "பொருளொடு புணராச் சுட்டுப்பெய ராயினும்
பொருள்வேறு படாஅ தொன்று குமமே."—தொல்-37

"இங்கு உள்ளன" என்பது சூழ்நிலை ஒட்டி இவை என்பதும் இன்ன பொருள் என்பதும் உணர்த்தும்.

(9) இயற்பெயரும் சுட்டுப் பெயரும் இணைந்து ஒரே வினைகொண்டு முடிந்தாலும் தனித்தனி வினைகள் கொண்டு முடிந்தாலும் சுட்டுப் பெயர்க் கிளவியை முற் படக் கிளவார்; இயற்பெயர் வழியே சுட்டுப் பெயர் இயங்கும் என்பர்.[32]

"சாத்தன் அவன் வந்தான்" ஒருவினைகொண்டு முடிந்தன.

"சாத்தி வந்தாள் அவட்குப் பூக்கொடுக்க" தனி வினைகள் கொண்டு முடிந்தன.

(10) சுட்டு முதலாகிய காரணக் கிளவியும் சுட்டுப் பெயரின் இயல்பை ஒட்டியே இயற்பெயரின் பின் னரே வரும். இயற்பெயரும், சிறப்புப் பெயர்களும் இணையும்பொழுது இயற்பெயர், மேல் சுட்டுப் பெயர் களுக்குக் கூறிய விதியினைப் பெறுது. சிறப்புப் பெயர் களே முதலிடம் பெறும்.

ஆசிரியன் அன்பழகன்
ஏனுதி நல்லுதடன்
காவிதி கண்ணந்தை.[33]

---

32. "இயற்பெயர்க் கிளவியும் சுட்டுப்பெயர்க் கிளவியும்
வினைக்கொருங் கியலும் காலம தோன்றின்
சுட்டுப்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்
இயற்பெயர் வழிய என்மனார் புலவர்." —தொல்-38
"படர்க்கை முப்பெயரோடு அணையிற் சுட்டுப்
பெயர்பின் வரும்வினை யெனிற்பெயர்க் கெங்கும்
மருவும் வழக்கிடைச் செய்யுட் கேற்புழி." —நன்-394
"சுட்டு முதலாகிய காரணக் கிளவியும்
சுட்டுப்பெயர் இயற்கையின் செறியத் தோன்றும்"

33. "சிறப்பின் ஆகிய பெயர்நிலைக் கிளவிக்கும்
இயற்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்."—தொல்-41

(11) ஒரு பொருளுக்குப் பல்வேறு சிறப்புப் பெயர்கள் இணைந்து இயற்பெயரைச் சிறப்பிக்கும்பொழுது அவை ஒரே வினைகொண்டுமுடியும். வேறுவினைகள் கொண்டால் அவை சிறப்புப் பெயர்களாக அமையாமல் தனிப் பெயர்களாக இயங்கும்.[34]

ஆசிரியர் பேரூர் கிழான் செயிற்றியன்
இளங் கண்ணன் வந்தான்.[34]

(12) நன்னூல் வினாவும் செப்பும் குறித்துக் கீழ் வரும் செய்திகளைத் தரும்.

(அ) வினா ஆறு வகைப்படும். அறிவு வினா அறியாமை வினா, ஐயுறல் வினா, கொளல் வினா, கொடை வினா என ஆறாகக் காட்டுவர்.

(ஆ) அதே போல விடைகளை எட்டாக வகுத்துக் காட்டுவர்.

சுட்டு, எதிர்மறை, உடன்படல், ஏவல், வினாதல், உற்றது உரைத்தல், உறுவது கூறல், இன மொழிகூறல் என எட்டுவகை என்பர்.

(இ) மற்றும் வினாவினும் செப்பினும் சினையும் முதலும் விரவி வருதல் இல்லை என்பர்.[35]

---

"திணைநிலம் சாதி குடியே உடைமை
குணம்தொழில் கல்வி சிறப்பாம் பெயரோடு
இயற்பெயர் ஏற்றிடிற் பின்வரல் சிறப்பே." —நன்-393

34. "ஒருபொருள் குறித்த வேறுபெயர்க் கிளவி
தொழில்வேறு கிளப்பின் ஒன்றிடன் இலவே."
"ஒருபொருள்மேற் பலபெயர்வரின் இறுதி
ஒருவினை கொடுப்ப தனியும் ஒரோ வழி." —நன்-392

35. "அறிவு அறியாமை ஐயுறல் கொளல் கொடை
ஏவல் தரும் வினா ஆறும் இழுக்கார்." —நன்-385

3. வழக்கும் செய்யுளும்: (அ) வழக்கு நியதிகள்

(1) வழக்கும் செய்யுளும் ஆராய்ந்தே தமிழ் இலக்கணம் தொல்காப்பியர் கூறுகின்றார் எனப் பாயிரம் கூறுகின்றது.

"வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்
எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி" —பாயிரம்

பொதுவாக எழுத்தும் சொல்லும் இவ்விருவகை வழக்கை ஒட்டியே விளக்கப்படும். தொடரியலுள் செய்யுளிலும் வழக்கிலும் ஒரு சில வேறுபாடுகள் காணப் படுகின்றன. அவற்றைக் கிளவி யாக்கத்தில் காட்டுவது குறிப்பிடத் தக்க செய்தியாகும்.

(2) வழக்கு என்பது காரண காரியம் பெற்று இயங்க வேண்டும் என்று கூற முடியாத ஒன்று ஆகும். இலக்கணம் என்பது பொருள் உணர்ச்சிக்கு அடிப்படை யான அமைப்பாகும். இத்தகைய அடிப்படை இல்லாமல் அமைவனவே வழக்கு எனலாம்.

(3) தகுதி பற்றியும் வழக்குப் பற்றியும் நடை பெறும் சொற்றொடர்கள் இலக்கணப் பிழை உடையன ஆயினும் அவை பயின்று வரும் மரபு பெற்று விளங்குவ தால் அவை ஏற்றுக் கொள்ளப்படும் வழக்குகளாம்.[36]

---

"சுட்டு மறைநேர் ஏவல் வினாதல்
உற்றது உரைத்தல் உறுவது கூறல்
இனமொழி எனும் எண்ணிறையுள் இறுதி
நிலவிய ஐந்தும்அப்பொருண்மையின் நேர்ப."
—நன்-386

"வினாவினும் செப்பினும் விரவா சினைமுதல்." —நன்-387

"ஒருமையிற் பன்மையும் பன்மையின் ஒருமையும்
ஓரிடம் பிறவிடம் தழுவலும் உளவே" —நன்-380

36. "தகுதியும் வழக்கும் தழீஇயின ஒழுகும்
பகுதிக் கிளவி வரைநிலை இலவே" —தொல்-17

இவை அனைத்தையும் வழக்கியல் என நன்னூல் தெளிவு படுத்தும்.

"இலக்கணம் உடையது இலக்கணம் போலி
மரூஉ என்று ஆகும் மூவகை இயல்பும்
இடக்கர டக்கல் மங்கலம் குழூஉக் குறி
எனும் முத்தகுதியோடு ஆறும் வழக்கியல்"
—நன். 267

எனவே இவை எல்லாம் வழக்கியல்கள் எனத் தெரிகிறது.

ஆ. செய்யுள் நியதிகள்

செய்யுள் வழக்குகள் ஒரு சில தனி நியதிகளைப் பெற்று விளங்குகின்றன. அவை கீழ்வருமாறு:

(1) அடை சினை முதல் என்று தொடர்தலே வழக்காகும். இம்முறை மாறி வருதலும் உண்டு. அது செய்யுளில் காணப்படும் நியதியாகும்.

செஞ்செவிச் சேவல்—உலக வழக்கு
செவி செஞ்சேவல் —செய்யுள் வழக்கு
வல்வாய்க் காக்கை—வழக்கு
வாய் வன்காக்கை—செய்யுள்.[37]

(2) பண்பு அடுத்து வழங்கப்படும் பெயர்கள் பொதுவாக இனச்சுட்டை உணர்த்தி வேறுபடுத்தவே அமையும்.

---

37. "அடைசினை முதல்என முறைமூன்றும் மயங்காமை
நடைபெற்றியலும் வண்ணச் சினைச்சொல்"—தொல்–26
"அடைசினை முதல்முறை அடைதலும் ஈரடை
முதலோடு ஆதலும் வழக்கியல்; ஈரடை
சினையொடு செறிதலும் மயங்கலும் செய்யுட்கே"
—நன்-403

வெண்தாமரை என்றால் அது செந்தாமரையின் வேறுபட்டது என்பது பொருளாம். இஃது இனச்சுட்டு உடையது ஆகும்.

செஞ்ஞாயிறு என்றால் வெண் ஞாயிறு என்பதின் இது வேறுபட்டது என்னும் பொருள் தருவது அன்று. எனவே இஃது இனச்சுட்டு இல்லாப் பண்புகொள் பெயராகும். இது வழக்காறல்ல செய்யுள் ஆறே என்பது தொல்காப்பியர் உணர்த்தும் செய்தியாகும்.[38]

(3) இயற்கைப் பொருளை இன்ன தன்மைத்து என்று கூறல் வழக்கு ஆகும்.

"நிலம் வலிது; நீர் தண்ணிது."

செயற்கைப் பொருளை ஆக்கச் சொல் புணர்த்துக் கூறுவர். ஆக்கக் கிளவி காரணத்தை முன் பெற்றுக் கூறப் பெறும்; வழக்கில் காரணக் கிளவி இன்றியும் வரும்.

"பரிசிலர்க்கு அருங்கலன் நல்கவும் குரிசில்
வலிய ஆகுக நின் தாள்தோய் தடக்கை."

அருங்கலன் நல்குதல் காரணக்கிளவி; ஆகுக என்பது ஆக்கக்கிளவியாகும்.[39]

---

38. "இனச் சுட்டில்லாப் பண்புகொள் பெயர்க்கொடை
வழக்காறு அல்ல செய்யுள் ஆறே" —தொல்-18
"பொருள்முதல் ஆறும் அடைசேர் மொழியினம்
உள்ளவும் இல்லவும் ஆம் இரு வழக்கினும்" —நன்-401

39. "இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல்"
—தொல்-19
"செயற்கைப் பொருளை ஆக்கமொடு கூறல்"—தொல்-20
"ஆக்கம் தானே காரண முதற்றே" —தொல்-21

சுட்டுப்பெயரை இயற்பெயருக்குப் பிற்படக் கிளத்தல் வழக்கு ஆகும். முற்படக் கிளத்தலும் உண்டு. அது செய்யுள் வழக்காகும்

"அவன் அணங்குநோய் செய்தான் ஆயிழாய் வேலன்
விறன் மிகுதார்ச்சேந்தன் பேர்வாழ்த்தி"

சேந்தன் இயற்பெயர்; அவன் சுட்டுப் பெயர்.[40]

(4) உயர்திணையும் அஃறிணையும் விரவிவந்த தொடர் அஃறிணை முடிபினைச் செய்யுள் பெறுதல் உண்டு என்பர்.[41]

வழக்கில் அவற்றின் முடிபு அத்தொடரின் கண் வரும் செய்திகளின் சிறப்புப் பற்றியும் மிகுதிபற்றியும் இழிவு பற்றியும் அமையும் என நன்னூலார் விளக்கம் தருவர்.[42]

"பார்ப்பார் அறவோர் பசுப்பத்தினிப் பெண்டிர்
மூத்தோர் குழவி எனும் இவரைக் கைவிட்டு"

"வடுகர் அருவாளர் வான்கரு நாடர்
சுடுகாடு பேய் எருமை என்றிவையாறும்
குறுகார் அறிவுடையார்"

இவை இழிவுபற்றி அஃறிணை முடிவுகொண்டன.

---

"ஆக்கக் கிளவி காரணம் இன்றியும்
போக்கின்று என்ப வழக்கி னுள்ளே" —தொல்-21

40. "முற்படக் கிளத்தல் செய்யுளுள் உரித்தே" —தொல்-9ε-39

41. "பலவயி னானும் எண்ணுத்திணை விரவுப்பெயர்
அஃறிணை முடிபின செய்யு ளுள்ளே" —தொல்–51

42. "திணைபால் பொருள்பல விரவின சிறப்பினும்
மிகவினும் இழிபினும் ஒருமுடி பினவே" —நன்–378

"கடுஞ்சினத்த கொல் களிறும்
கதழ் பரிய கலிமாவும்
நெடுங்கொடிய நிமிர்தேரும்
நெஞ்சுடைய புகல் மறவரும் என
நான்குடன் மாண்டதாயினும்"

மிகுதிபற்றி அஃறிணை முடிவு கொண்டது.

(5) செய்யுள் வழக்கு என்று குறிப்பிட்டவைஏனைய உலக வழக்கில் இடம் பெறுவதில்லை. உலக வழக்கு என்று குறிப்பிட்ட செய்திகள் அனைத்தும் செய்யுள் வழக்கிற்கும் உலக வழக்கிற்கும் பொதுவான செய்திக ளாகும். செய்யுள் வழக்கு என்பது இலக்கிய வழக்க மாகும். உலக வழக்கு என்பது பேச்சு வழக்காகும். செய்யுள் என்பதற்கு நன்னூல் கீழ்வரும் விளக்கத் தைத் தரும்.[43]

4. சொற்பொருள் மரபுகள்

(1) பொதுச்சொல் கிளத்தல்

வேறுபட்ட வினையை உடைய பல பொருள்களுக்கும் பொதுவாகிய சொல்லை ஒன்றற்கு உரிய வினையால் கிளவார்.

அடிசில் என்பது உண்பன தின்பன பருகுவன நக்குவன என்னும் நால்வகைக்கும் பொது. எனவே அடிசில் உண்டார் தின்றார் பருகினார் நக்கினார் எனக் கூறின் இலக்கணப்படி வழு அன்று. ஆயினும் பொருள் அடிப்படையில் வழுவாகும். எனவே பொதுச் சொல்லில் கிளக்க என்பர்.

---

43. "பல்வகைத் தாதுவின் உயிர்க்குஉடல் போல்பல
சொல்லால் பொருட்கிட னாக உணர்வினின்
வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்" —நன்-268

"அடிசில் அயின்ருர்"

இதே போல,

"அணி அணிந்தா ர்
"இயம் இயம்பினர்"

என்று கூறுவர்.[44]

தனிப்பொருள் தரும் சிறப்புச் சொற்களை எண்ணுங்காலும் பொதுவினை கொண்டே முடிப்பர்.

"சோறும் கறியும் அயின்ருர்"
"யாழும் குழலும் இயம்பினர்"

எனவரும்.[45]

(2) இரட்டைக் கிளவி பொருள் உணர்த்தல்

சில சொற்கள் இரட்டித்து நிற்பதாலேயே பொருள் உணர்த்தும் ஆற்றலைப் பெறுகிறது, இவற்றை 'இரட்டைக்கிளவி' என்பர். இவ்விரட்டைக் கிளவி தனி நிலைக் கிளவியாகப் பிரிந்து நின்ருல் அப்பொருள் உணர்த்தும் ஆற்றல் அதற்கு இல்லை. அடுக்குச் சொற்கள் தனி நிலைக்கிளவியாயினும் இரட்டைக்கிளவி யாயினும் அதே பொருளைப் பெற்றுவரும். இரட்டைக் கிளவி இரட்டிற் பிரிந்திசையா என்பர்.

---

44. "வேறுவினைப் பொதுச்சொல் ஒருவினை கிளவார்"
—தொல்–46

"வேறுவினைப் பல்பொருள் தழுவிய பொதுச்சொலும்
வேறவற் றெண்ணுமோர் பொதுவினை வேண்டும்"
—நன்-389

45. "எண்ணும் காலும் அதுஅதன் மரபே" —தொல்–47
"நன்னூல் 389"

"சுருசுருப்பு குறுகுறு நடந்து."[46]

### (3) பன்மைக்குரிய வழக்குகள்

உயர்திணையிலும் அஃறிணையிலும் பல பொருள்களையும் தொகுத்துச் சுட்டும் பொதுச் சொல் தலைமை பற்றியும் பன்மை பற்றியும் அமையும் என்பர்.

பார்ப்பனச் சேரி—தலைமைபற்றிய பொதுச் சொல்(உயர்திணை)
கமுகம் தோட்டம்—தலைமைபற்றிய பொதுச்சொல்(அஃறிணை)
எயினர் நாடு—பன்மைபற்றி பொதுச்சொல்(உயர்திணை)
மாந்தோப்பு—பன்மை பற்றிய பொதுச்சொல் (அஃறிணை)[47]

### (4) சூழ்நிலை பொருள் உணர்த்தலுக்குத் துணை செய்தல்

ஒரு சொல்லுக்கு ஒரு பொருளாகப் பயின்று வருதலே சொற்களின் இயல்பு ஆகும். பல பொருள் குறிக்கும் சொற்கள் சூழ்நிலை ஒட்டியே தனிப்பொருளைப் பெறுகின்றன.

(அ) ரகர ஈற்றுச் சொல் ஆண்பாலுக்கும் பெண் பாலுக்கும் உரிய பொதுச் சொல்லாகும். அஃது ஆணு பெண்ணு என்பது சூழ்நிலை ஒட்டியே உணரப்படும். மற்றும் அஃறிணைப் பெயர்களும், சூழ்நிலையால் பால் அறியப்படுகின்றன.[52]

'தொடியோர் கொய் குழை அரும்பிய ஞாழல்'—

---

46. "இரட்டைக் கிளவி இரட்டிற்பிரிந்து இசையா"
—தொல்-48
"இரட்டைக் கிளவி இரட்டிற்பிரிந்து இசையா"
—நன்-396

47. "ஒருபெயர்ப் பொதுச்சொல் உள்பொருள் ஒழியத்
தெரிபுவேறு கிளத்தல் தலைமையும் பன்மையும்
உயர்திணை மருங்கினும் அஃறிணை மருங்கினும்"
—தொல்-49

தொடி—வளையல் என்பதால் அதனை அணிந்தவர் மகளிர் என்பது தெரிகிறது. இது பெண்பால் சொல்லாகும்.

'வடுகர் அரசர் ஆயிரவர் மக்களை உடையவர்'—மக்கள் என்பது ஆண்பாலை உணர்த்தும் சொல்லாகும்.

"இவர் வாழ்க்கைப்பட்டார்" என்பது பெண்பாலை உணர்த்தும் சொல்லாகும்.

"நம்பி நூறு எருமை உடைன்" எருமை என்பது பெண்ணினத்தை உணர்த்தும்.[48]

(ஆ) பல பொருள் ஒரு சொல் வினையாலும் இனத்தாலும் சார்பாலும் பொருள் விளங்கும். இவை வேறுபட்ட வினைகளைக் கொண்டு முடியும்.

மாப்பூத்தது பூத்தது என்னும் வினையால்மா என்பது மரம் என உணரப்பட்டது.

'மாவும் மருதும் ஓங்கின'
இனத்தால் மா என்பது மரம் என்பது உணரப்பட்டது.

போர் உடை அணிந்து 'மாக்கொண்டு வா' என்றால் குதிரை[49] என்பது சார்பால் விளங்குகிறது.

---

48. "பெயரினும் தொழிலினும் பிரிபவை எல்லாம்
மயங்கல் கூடா வழக்குவழிப் பட்டன" —தொல்-50
"இருதிணை ஆண்பெணுள் ஒன்றனை ஒழிக்கும்
பெயரும் வினையும் குறிப்பினானே" —நன்-352
49. "வினைவேறு படூஉம் பலபொருள் ஒருசொல்
வினைவேறு படாஅப் பலபொருள் ஒருசொலென்று
ஆயிரு வகைய பலபொருள் ஒருசொல்" —தொல்-52
"அவற்றுள்,
வினைவேறு படூஉம் பலபொருள் ஒருசொல்
வேறுபடு வினையினும் இனத்தினும் சார்பினும்
தேறத் தோன்றும் பொருள்தெரி நிலையே" —தொல்-53

தனித்தனி வினைகொள்ளாமல் ஒரே வினையைக் கொண்டு முடியும் பல பொருள் ஒரு சொல் தக்க அடைகளைக் கொண்டும் விளக்கங்களைக் கொண்டும் சிறப்பித்துக் கூறப்படுவதால் பொருள் சிறப்புப் பெறுகின்றது.

மாமரம் வீழ்ந்தது
விலங்குமா வீழ்ந்தது

என வரும்.

ஒரு பொருள் வேறுபாடு குறித்தோன் அஃது ஆற்றல் முதலாயினவற்றால் விளங்காதாயின் அதனைத் தெரித்துக் கூறுக என்பர்.[50]

"குறித்தோன் கூற்றம் தெரித்து மொழிக் கிளவி"
—தொல்55

சார்பு பற்றியோ வினைபற்றியோ இனம்பற்றியோ அடை பற்றியோ விளக்கம் பெறாவிட்டால் முழுவதும் விளங்கும் வகை தக்க சொற்களைக் கொண்டு பொருள் விளக்கம் அமைதல் வேண்டும் என்பர்.[51]

இனப் பொருள்களையோ செய்திகளையோ பிரித்துக் கூறியவழி அதன் தொடர்புடைய செய்தியையும் அஃது உணர்த்தும்.

---

50. "ஒன்றுவினை மருங்கின் ஒன்றித்தோன்றும்
வினைவேறு படாஅப் பலபொருள் ஒருசொல்
நினையுங் காலைக் கிளந்தாங்கு இயலும்" —தொல்-54
"வினைசார்பு இனமிட மேவி விளங்காப்
பலபொருள் ஒருசொல் பணிப்பர் சிறப்பெடுத்தே"
—நன்-390

51. "குறித்தோன் கூற்றம் தெரித்துமொழிக் கிளவி"
—தொல்-55

எடுத்த மொழி இனம் செப்பலும் உரித்து.

"அறம் செய்தான் துறக்கம் புகும்" "மறம்செய் தான் துறக்கம் புகான்" என இனப்பொருளை உணர்த் திற்று.[52]

### 5. நன்னூல் தரும் சிறப்புச்செய்தி

(1) கால வழாநிலை வழுவமைதி குறித்துத் தொல் காப்பியர் வினையியலில் குறிப்பிடுவர்.[53] அவற்றை உட்கொண்டு நன்னூலார் பின்வரும் வழாநிலை வழு அமைதிகளை உடன்சேர்த்துக் கூறுவர்.

காலம் இறப்பு எதிர்வு நிகழ்வு என மூன்றாகும்.[54] முக்காலத்தினும் ஒத்து இயல் பொருளை நிகழும் காலத்

---

52. "எடுத்த மொழிஇனம் செப்பலும் உரித்தே"
—தொல்-60

"அடைமொழி இனமல்லதும்தரும் ஆண்டுறின்"
—நன்-402

53. "இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்றா
அம்முக் காலமும் குறிப்பொடும் கொள்ளும்
மெய்ந்நிலை உடைய தோன்ற லாறே" —தொல்-200

"ஏனைக் காலமும் மயங்குதல் வரையார்" —தொல்-248

54. "தொல்காப்பியம் 200"

"இறப்பெதிர்வு நிகழ்வெனக் கால மூன்றே" —நன்382

55. முந்நிலைக் காலமும் தோன்றும் இயற்கை
எம்முறைச் சொல்லும் நிகழுங் காலத்து
மெய்ந்நிலைப் பொதுச்சொல் கிளத்தல் வேண்டும்"
—தொல்-420

"முக்கா லத்தினும் ஒத்தியல் பொருளைச்
செப்புவர் நிகழுங் காலத் தானே" —நன்-383

தில் செப்புவர்[55] விரைவினும் மிகவினும் தெளிவினும் இயல்பினும் காலம் பிறழவும் பெறும் என்பர்.[56]

---

56. "வாராக் காலத்தும் நிகழுங் காலத்தும்
ஓராங்கு வரூஉம் வினைச் சொற்கிளவி
இறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல்
விரைந்த பொருள என்மனார் புலவர்" —தொல்-241

"வாராக் காலத்து வினைச்சொற் கிளவி
இறப்பினும் நிகழ்வினும் சிறப்பத் தோன்றும்
இயற்கையும் தெளிவும் கிளக்கும் காலே" —தொல்-245

"இறப்பே எதிர்வே ஆயிரு காலமும்
சிறப்பத் தோன்றும் மயங்குமொழிக் கிளவி"
—தொல்-247

"ஏனைக் காலமும் மயங்குதல் வரையார்" —தொல்-248

"விரைவினும் மிகவினும் தெளிவினும் இயல்பினும்
பிறழவும் பெறூஉமுக் காலமும் ஏற்புழி" —நன்-384

# 12. வேற்றுமையியல்

## 1. வேற்றுமை எட்டு:

வேற்றுமை விளியோடு சேர்ந்து எட்டு ஆகும். அவை பெயர், ஐ, ஒடு, கு, இன், அது, கண், விளி எனப் படும். தொல்காப்பியர் கருத்துப்படி எழுவாயும் விளியும் வேற்றுமை உருபுகள் ஏலா. எழுவாய் வேற்றுமை திரிபு இல்லாத பெயராகும். வடநூல் நெறி இதற்கு மாறுபட்டதாகும். எழுவாய் வேற்றுமையும் விளியும் உருபு ஏற்பதாக வடநூல் இலக்கணங்கள்கூறும். அதற்கு மாறுபட்டது தமிழ் நெறி என்பது தொல்காப்பியம் வற்புறுத்தும் செய்தியாகும்.[1]

---

1. "வேற்றுமை தாமே ஏழென மொழிப." —தொல்-62

"விளிகொள் வதன்கண் விளியோடு எட்டே."
—தொல்-63

"அவைதாம்
பெயர் ஐ ஒடு கு
இன் அது கண்விளி என்னும் ஈற்ற." —தொல்-64

"அவற்றுள்
எழுவாய் வேற்றுமை பெயர் தோன்று நிலையே."
—தொல்-65

"ஏற்கும் எவ்வகைப் பெயர்க்கும் ஈறாய்ப்பொருள்
வேற்றுமை செய்வன எட்டே வேற்றுமை." —நன்–29

"பெயரே ஐ ஆல்கு இன்அது கண்
விளியென் றாகும் அவற்றின் பெயர் முறை." —நன்-292

எழுவாய் ஏற்கும் பயனிலைகள்:

(1) எழுவாய்த் தொடர் பின்வருவனவற்றை முடிக்கும் சொற்களாகக் கொள்ளும். அவற்றைப் பெயர்ப் பயனிலை என்பர். அவை பெயர், வினை, வினா, பொருண்மை, வியங்கோள், பண்பு ஆகும். இவற்றைப் பயனிலை என்பர்.

(அ) ஆ பல—பெயர் கொண்டு முடிந்தது; எனவே பெயர்ப் பயனிலை.

(ஆ) ஆ கிடந்தது—வினைப் பயனிலை
(இ) அஃது யாது—வினாப் பயனிலை
(ஈ) ஆ உண்டு—பொருண்மைப் பயனிலை
(உ) ஆ செல்க—வியங்கோள் பயனிலை
(ஊ) ஆ கருமை—பண்புப் பயனிலை.[2]

சுருக்கமாகச் சொன்னால் பெயரும் வினையும் வினாவும் எழுவாயின் பயனிலையாக அமையும் எனலாம்.[3]

(2) தனிப் பெயரே யன்றி மற்றொரு பெயரும் தொகையாக நின்று ஒரு சொல் நீர்மையாக இயங்கி எழுவாயாக வருதலும் உண்டு.

யானைக்கோடு கிடந்தது; மதிமுகம் வியர்த்தது; கொல் யானை நின்றது; கருங்குதிரை ஓடிற்று; உவாப் பதினான்கு கழிந்தன; பொற்றொடி வந்தாள்.[4]

---

2. "பொருண்மை சுட்டல் வியங்கொள வருதல்
வினைநிலை உரைத்தல் வினாவிற்கு ஏற்றல்
பண்புகொள வருதல் பெயர்கொள வருதல் என்று
அன்றி அனைத்தும் பெயர்ப் பயனிலையே." —தொல்-66

3. "அவற்றுள்
எழுவாய் உருபு திரிபில் பெயரே." —நன்–295

4. "பெயரினாகிய தொகையுமா ருளவே
அவ்வு முரிய அப்பா லான." – தொல்-67

(3) எழுவாய்த் தொடரில் எழுவாய் வருதல் செவ்விது. தோன்று எழுவாயாக வரவும் பெறும். பயனிலை நின்றே கருத்தைத் தெளிவுறுத்தலும் உண்டு.[5]

**பெயர் உருபேற்றலும்,காலம் ஏற்காமையும்:**

வேற்றுமை உருபுகள் பெயருக்குப் பின் ஒட்டு நிலையாக நிற்கும். பெயர் வேற்றுமை ஏற்கும் என்பதும் அது காலம் ஏற்காது என்பதும் அதன் சிறப்பிலக்கணங்களாகும்.

"கருவூர்க்குச் செல்வாயோ" என்றவழிச் "செல்வல்" என்பது பயனிலை மட்டும்வந்த எழுவாய்த் தொடராகும்.

(1) வேற்றுமை அதன் சொல் நிலையிலும் பொருள் நிலையிலும் உணர்த்தப் பெறும். சொல் நிலை என்பது அது ஏற்கும் உருபும் அதனை முன்னும் பின்னும் அடுத்து வரும் சொல் வாய்பாட்டு அண்மை நிலைகளும் எனலாம்.

பொருள் நிலை என்பது அவ்வண்மை நிலைகள் உணர்த்தும் சொற்கள் எப்பொருளில் வரும் என்பது ஆகும். சொல் தன்மை என்பது வாய்பாட்டாலும் இலக்கண அமைப்பாலும் விளக்கப்படுகிறது.

---

5. "எவ்வயிற் பெயரும் வெளிப்படத் தோன்றி
அவ்வியல் நிலையல் செவ்விது என்ப." —தொல்-68

6. "கூறிய முறையின் உருபுநிலை திரியாது
ஈறுபெயர்க்கு ஆகும் இயற்கைய என்ப." —தொல்-69

"பெயர்நிலைக் கிளவி காலம் தோன்றா
தொழில்நிலை ஒட்டும் ஒன்றலங் கடையே."
—தொல்-70

(2) இரண்டன் வேற்றுமை:

உருபு: ஐ;
சொன்மை நிலை: வினை, வினைக் குறிப்பு.
பொருண்மை நிலை: காப்பு, ஒப்பு, ஊர்தி முதலியன.[7]

(3) மூன்றன் வேற்றுமை:

உருபு: ஒடு,

சொன்மை நிலை: வினை முதல், கருவி.

பொருண்மை நிலை: அதனின் இயறல், அதன் தகு கிளவி முதலாயின.

---

7. "இரண்டா குவதே,
ஐயெனப் பெயரிய வெற்றுமைக் கிளவி
எவ்வழி வரினும் வினையே வினைக்குறிப்பு
அவ்விரு முதலில் தோன்றும் அதுவே." —தொல்-71

"காப்பின் ஒப்பின் ஊர்தியின் இழையின்
ஒப்பின் புகழின் பழியின் என்று
பெறலின் இழவின் காதலின் வெகுளியின்
செறலின் உவத்தலின் கற்பின் என்று
அறுத்தலின் குறைத்தலின் தொகுத்தலின் பிரித்தலின்
நிறுத்தலின் அளவின் எண்ணின் என்று
ஆக்கலின் சார்தலின் செலவின் கன்றலின்
நோக்கலின் அஞ்சலின் சிதைப்பின் என்று
அன்ன பிறவும் அம்முதற் பொருள
என்ன கிளவியும் அதன்பால என்மனார்." —தொல்-72

"இரண்டாவதன் உருபு ஐயே அதன்பொருள்
ஆக்கல் அழித்தல் அடைதல் நீத்தல்
ஒத்தல் உடைமை ஆதியாகும்." —நன்-296

8. "மூன்றாகுவதே
ஒடுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
வினைமுதல் கருவி அனை முதற்று அதுவே."
—தொல்-73

(4) உருபு: கு.

சொன்மை நிலை: எப்பொருளை உணர்த்தும் இலக்கணச் சொல்லையும் அண்மை நிலையாகக் கொள்ளல்.

பொருண்மை நிலை: அதற்கு வினை உடைமையின் முதலியன.[9]

---

"அதனின் இயறல் அதற்றகு கிளவி
அதன் வினைப் படுதல் அதனின் ஆதல்
அதனிற் கோடல் அதனொடு மயங்கல்
அதனோடு இயைந்த ஒருவினைக் கிளவி
அதனோடு இயைந்த வேறுவினைக் கிளவி
அதனோடியைந்த ஒப்பல் ஒப்புரை
இன்னான் ஏது ஈங்கென வருஉம்
அன்ன பிறவும் அதன்பால என்மனார்." —தொல்-74

"மூன்று வதனுருபுஆல் ஆன் ஒடு ஓடு
கருவி கருத்தா உடனிகழ்வு அதன் பொருள்."
—நன்-297

9. "நான்கா குவதே
குஎனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
எப்பொருள் ஆயினும் கொள்ளும் அதுவே."
—தொல்-75

"அதற்குவினை யுடைமையின் அதற்கு உடம்படுதலின்
அதற்குப் படு பொருளின் அதுவாகு கிளவியின்
அதற்கியாப் புடைமையின் அதன்பொருட் டாதலின்
நட்பின் பகையின் காதலின் சிறப்பின்என்று
அப்பொருட் கிளவியும் அதன்பால என்மனார்."
—தொல்-76

"நான்கா வதற்குஉருபு ஆகும் குவ்வே
கொடை பகை நேர்ச்சி தகவுஅது வாதல்
பொருட்டுமுறை ஆதியின் இதற்கு இதுஎனல்
பொருளே." —நன்-297

(5) ஐந்தன் வேற்றுமை:

உருபு: இன்.

சொன்மைநிலை: —'இதனின் இற்றுஇது' என்னும் வாய்பாட்டோடு இயங்குவது.

பொருள்: வண்ணம் வடிவு அளவு சுவை முதலிய பொருள்கள் உணர்த்தும் சொற்கள் இடம் பெறும்.[10]

(6) ஆறன் வேற்றுமை:

உருபு: அது.

சொன்மை நிலை: 'இதனது இது' என்னும் வாய்பாட்டோடு பிறிதின்கிழமையிலும் வருதல்.

பொருண்மை நிலை: இயற்கையின் உடைமையின் முறைமையின் முதலிய பொருள்கள் உணர்த்தும் சொற்கள் இதில் இடம் பெறும்.[11]

---

10. "ஐந்தா குவதே
இன்னெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
இதனின் இற்றிது என்னும் அதுவே." —தொல்-77
"வண்ணம் வடிவே அளவே சுவையே
தண்மை வெம்மை அச்சம் என்று
நன்மை தீமை சிறுமை பெருமை
வன்மை மென்மை கடுமை என்று
முதுமை இளமை சிறத்தல் இழித்தல்
புதுமை பழமை ஆக்கம் என்று
இன்மை உடைமை நாற்றம் தீர்தல்
பன்மை சின்மை பற்று விடுதலென்று
அன்ன பிறவும் அதன்பால என்மனார்." —தொல்-78
"ஐந்தா வதனுருபு இல்லும் இன்னும்
நீங்கல் ஒப்பு எல்லையேதுப் பொருளே." —நன்-299

11. "ஆறு குவதே
அதுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி

(7) ஏழாம் வேற்றுமை:

உருபு: கண்

சொன்மை நிலை: வினை செய்யிடம், நிலமாகிய இடம் காலம் இவற்றைப் பற்றுக் கோடாக வரும்.

பொருள்: கண் முதலாக இடமீருகச் சொல்லப்பட்ட பத்தொன்பதும் அவைபோல்வன பிறவும் இதன் வேற்றுமைப் பொருள்களாகும்.[12]

---

"தன்னினும் பிறிதினும் இதனது இதுவெனும்
அன்ன கிளவிக் கிழமைத்து அதுவே." —தொல்-79

"இயற்கையின் உடைமையின் முறைமையின் கிழமையின்
செயற்கையின் முதுமையின் வினையின் என்று
கருவியின் துணையின் கலத்தின் முதலின்
ஒருவழி உறுப்பின் குழுவின் என்று
தெரிந்து மொழிச் செய்தியின் நிலையின் வாழ்ச்சியின்
திரிந்து வேறு படூஉம் பிறவும் அன்ன
கூறிய மருங்கில் தோன்றும் கிளவி
ஆறன்பால என்மனார் புலவர்." —தொல்-80

"ஆறன் ஒருமைக்கு அதுவும் ஆதுவும்
பன்மைக்கு அவ்வும் உருபாம் பண்புறுப்பு
ஒன்றன் கூட்டம் பலவின் ஈட்டம்
திரிபின் ஆக்கமாம் தற்கிழமையும்
பிறிதின் கிழமையும் பேணுதல் பொருளே."—நன்-300

12. "ஏழாகுவதே
கண்ணெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
வினைசெய் இடத்தின் நிலத்தின் காலத்தின்
அனைவகைக் குறிப்பின் தோன்றும் அதுவே."
—தொல்-81

"கண்கால் புறம்அகம் உள்ளுழை கீழ்மேல்
பின்சார்பு அயல்புடை தேவகை யெனாஅ

(8) உருபும் பயனும் உடன் தொகுதல்:

வேற்றுமைத் தொகைநிலைத் தொடர்களை விரிக்கும் காலை அதன் உருபோடு ஏனைய எல்லாச் சொற்களையும் விரித்துப் பொருள் கொள்வர். ஒரு சில தொடர்களில் உருபு மட்டும் தொக்கி இருக்கும். ஒரு சில தொடர்களில் உருபும் ஏனைய சொற்களும் பொருளும் தொக்கி இருக்கும். இதனையே உருபும் பயனும் உடன் தொகுதல் என்று வழங்கி வருகின்றனர்.[13]

மரம் வெட்டினான்: உருபு தொக்கது.

பொற்றொடி: பொன்னாலாகிய தொடி உருபும் பயனும் உடன் தொக்கது.

மதிமுகம்: மதியைப் போன்ற முகத்தை உடைய ஒருத்தி; உருபும் ஏனைய சொற்களும் தொக்கன.

ஈற்று நின்றியலும் தொகை என்பதற்கு அன்மொழித் தொகை என்றே பொருள் கொண்டு விளக்கம் தருவர் சேனாவரையர். மேலே குறிப்பிட்ட பொருளும் விளக்கமும் ஏற்புடைத்து ஆகிறது.

2. வேற்றுமை மயங்கியல்

வேற்றுமையின் சொல் நிலையும் பொருள் நிலையும் வேற்றுமையியலில் விளக்கப்பட்டன. சொல் நிலை என்

---

முன்னிடை கடைதலை வலம் இடம் எனாஅ
அன்ன பிறவும் அதன்பால என்மனார்." —தொல்-82

"ஏழன் உருபுகண் ஆதியாகும்
பொருண் முதல் ஆறும் ஓரிரு கிழமையின்
இடனாய் நிற்றல் இதன் பொருள் என்ப." —நன்-301

13. "வேற்றுமைப் பொருளை விரிக்கும் காலை
ஈற்றுநின்று இயலும் தொகைவயின் பிரிந்து
பல்லாறாகப் பொருள் புணர்ந்து இசைக்கும்
எல்லாச் சொல்லும் உரிய என்ப." —தொல்-83

பதில் உருபுகளும் அடங்கும் என்க. ஈண்டு அவை தொடரின் கண் வரும் இடச் சூழ்நிலையைக் காட்டுவர். இதனையே வேற்றுமை மயங்கியல் என்பர். வேற்றுமை உருபும் பொருளும் தொடரின்கண் பிற உருபுகளோடும் சொற்களோடும் பொருந்துதல் என்பது இதன் கருத்தாம்.

இதனை வேற்றுமைப் பொருள் மயக்கம்; உருபு மயக்கம் எனப் பிரிப்பர்.

அ. வேற்றுமைப் பொருள் மயக்கம்

(1) இரண்டன் வேற்றுமைக்கு ஓதப்பட்ட "சார்பு" என்னும் பொருளைத் தரும் சொல் ஏழன் வேற்றுமையிலும் வரும்.

*தூணைச் சார்ந்தான்—இரண்டன் வேற்றுமை.*

*அரசரைச் சார்ந்தான்—*

*அரசர்கண் சார்ந்தான்: ஏழன் பொருளில் வந்தது.*

சார்தல் என்பது கரும மல்லாச் சார்பு எனவும் கருமச் சார்பு எனவும் இருவகைப்படும். தொழிலை உணர்த்தாமல் பற்றுகச் சார்தல் என்னும் பொருள் தரும் சொல்லைக் கருமம் அல்லாச் சார்பு என்பர்.[2]

(2) (அ) சினை நிலைக் கிளவியை அடுத்துவரும் தெரிநிலை வினை இரண்டன் உருபுக்கே யன்றி ஏழன் கண்ணும் வரும்.

---

14. "கருமம் அல்லாச் சார்பென் கிளவிக்கு
உரிமையும் உடைத்தே கண்ணென் வேற்றுமை."
—தொல்-84

கோட்டைக் குறைத்தான்

கோட்டின்கண் குறைத்தான்.[15]

(ஆ) கன்றலும் செலவும் ஆகிய இப்பொருள் தரும் சொற்கள் இரண்டன் வேற்றுமைக்கேயன்றி ஏழன் வேற்றுமைக்கும் வரும்.

"சூதினைக் கன்றினான்; சூதின்கண் கன்றினான்"

"நெறியைச் சென்றான்; நெறியின்கண் சென்றான்.[16]

(இ) சினைமுதல் தொடர்களில் உருபுகள் வரும் இடநியதி:

முதற் சினைக் கிளவியில் உருபுகள் 'அது' முதலுக்கு ஆயின் சினைக்கு 'ஐ' வரும். 'ஐ' முதலுக்கு ஆயின் சினைக்குக் 'கண்' வரும்.

யானையது கோட்டைக் குறைத்தான்

யானையைக் கோட்டின்கண் குறைத்தான்.

முதல் சினை என்பது சொல்லுவான் குறிப்பை ஒட்டியது ஆகும்.[17]

---

15. "சினை நிலைக் கிளவிக்கு ஐயுங் கண்ணும்
வினைநிலை ஒக்கும் என்மனார் புலவர்." —தொல்-85

16. "கன்றலும் செலவும் ஒன்றுமார் வினையே." —தொல்-86

17. "முதற்சினைக் கிளவிக்கு அதுவென் வேற்றுமை
முதற்கண் வரினே சினைக்கு ஐ வருமே."— தொல்-87
"முதல்முன் ஐவரின் கண்ணென் வேற்றுமை
சினைமுன் வருதல் தெள்ளிது என்ப." —தொல்-88
முதலும் சினையும் பொருள்வேறு படாஅ
நுவலும் காலைச் சொற்குறிப் பினவே." – தொல்-89
"முதலை ஐயுறின் சினையைக் கண்ணுறும்
அதுமுதற்கு ஆயிற் சினைக்கு ஐயாகும்." —நன்-315
"முதலிவை சினையிவை எனவேறு உளவில
உரைப்போர் குறிப்பின அற்றே பிண்டமும்."
—நன்-316

(ஈ) பிண்டப் பெயரும் முதல் சினைத் தொடரின் இயல்பைப் பெறும்.

குப்பையது தலையைச் சிதறினன்.

குப்பையைத் தலையின்கண் சிதறினன்.

குப்பை—பிண்டப் பெயர்; (தொகைப் பெயர்);[18]

(3) ஆக்கமொடு புணர்ந்த ஏதுக்கிளவி மூன்றன் வேற்றுமையிலும் ஐந்தன் வேற்றுமையிலும் இடம் பெறும்.

வாணிகத்தான் ஆயினன்—மூன்று

வாணிகத்தின் ஆயினன்—ஐந்து[19]

(4) மனத்தால் கருதுதல் என்னும் பொருளை உடைய நோக்கச்சொல் இரண்டாம் வேற்றுமைக்கு வரும் என முன்னர்க் கூறப்பட்டது. அஃது இரண்டன் வேற்றுமைக்கேயன்றி மூன்றாவதற்கும் ஐந்தாவதற்கும் கருதல் என்னும் பொருளில் வரும் என்பர். எனவே நோக்குதல் என்பது இம்மூன்று வேற்றுமையிலும் வரும் என்பது ஆயிற்று.

வானை நோக்கி வாழும்—இரண்டன் தொடர்

வானால் நோக்கி வாழும்—மூன்றன் தொடர்

வானின் நோக்கி வாழும்—ஐந்தன்தொடர்

---

18. "பிண்டப் பெயரும் ஆயியல் திரியா
பண்டியல் மருங்கின் மரீஇய மரபே." —தொல்-90
"நன்னூல்–316."

19. "மூன்றனும் ஐந்தனும் தோன்றக் கூறிய
ஆக்கமொடு புணர்ந்த ஏதுக் கிளவி
நோக்கு ஓரனைய என்மனார் புலவர்," —தொல்-92

இவை தொகையாங்கால் 'வான் நோக்கி வாழும்' என அமைதல் காண்க.[20]

(5) உடைமைப் பொருளில் உயர்திணையில் 'அது' வருதலும் அஃறிணைத் தொடரில் 'கு' வருதலும் நியதியாகும்.

நம்பிக்கு மகன்; நம்பியது மாடு. தொகையாகுங்கால் நம்பிமகன் நம்பிமாடு என அமைதல் காண்க.[21]

(6) தடுமாறு தொழிற்பெயர் இரண்டன் உருபாகவும் மூன்றன் உருபாகவும் விரியும். எனவே இப்பொருள் இரண்டு வேற்றுமைக்கண்ணும் மயங்கும் என்பது ஆயிற்று.

புலி கொன்ற யானை—புலியைக் கொன்ற யானை; புலியால் கொல்லப்பட்ட யானை என விரிதல் காண்க.

அது தான் முடியும் சொல்லால் தெளிவு பெறும்.

'புலிகொல் யானை ஓடியது'—'புலியைக் கொன்ற யானை ஓடியது' என்பது பொருள். புலிகொல் யானைக் கோடு கிடந்தது—'புலியால் கொல்லப்பட்ட யானைக் கோடு கிடந்தது என்பது பொருளாம். முடிக்கும் சொல் உருபு விரித்தற்குத் துணையாகிறது.[22]

---

20. "இரண்டன் மருங்கின் நோக்கல் நோக்கம் அவ்
இரண்டன் மருங்கின் ஏதுவும் ஆகும்." —தொல்-93

21. "அதுவென் வேற்றுமை உயர்திணைத் தொகைவயின்
அதுவென் உருபுகெடக் குகரம் வருமே." —தொல்–94

22. "தடுமாறு தொழிற்பெயர்க்கு இரண்டும் மூன்றும்
கடிநிலை இலவே பொருள்வயினான." —தொல்-95

"ஈற்றுப்பெயர் முன்னர் மெய்யறி பனுவலின்
வேற்றுமை தெரிப உணருமோரே." —தொல்–96

(7) இவ்வாறே ஏனைய தொடர்கள் சிலவும் ஒரே பொருளில் இரண்டு வேற்றுமைக் கண்ணும் செல்கிறது.

ஐம்படைக்கிளவி

புலி போற்றிவா—புலியைப் போற்றி வா (இரண்டு); புலியால் போற்றி வா (மூன்று)[23]

வாழ்ச்சிக்கிழமை

காட்டுயானை—காட்டது யானை (ஆறு); காட்டின் கண் யானை (ஏழு)[24]

கொடைப் பொருள்.

நாகர்பலி—நாகர்க்குப்பலி (நான்கு) நாகரதுபலி[25] (ஆறு)

அச்சப்பொருள்

பழி அஞ்சும்—பழியை அஞ்சும் (இரண்டு); பழியின் அஞ்சும் (ஐந்து)[26]

இரண்டாவதற்கு ஓதிய ஓம்படைக்கிளவி மூன்றற்கும், ஆறனுக்கு உரிய வாழ்ச்சிப் பொருள் ஏழனுக்கும், நான்கனுக்கு ஓதிய கொடைப்பொருள் ஆறனுக்கும் இரண்டனுக்கு ஓதிய அச்சப்பொருள் ஐந்தனுக்கும் வந்தன என்பர்.

---

23. "ஓம்படைக் கிளவிக்கு ஐயும் ஆனும்
தாம் பிரிவிலவே தொகைவரு காலை" —தொல்-97

24. "ஆறன் மருங்கின் வாழ்ச்சிக் கிழமைக்கு
ஏழும் ஆகும் உறைநிலத் தான." —தொல்-98

25. "குத்தொக வரூஉம் கொடை எதிர் கிளவி
அப்பொருள் ஆறற்கு உரித்தும் ஆகும்." —தொல்-19

26. "அச்சக் கிளவிக்கு ஐந்தும் இரண்டும்
எச்சம் இலவே பொருள் வயினான." —தொல்-100

(8) நான்கன் உருபில் ஏனைய வேற்றுமைப் பொருள் களும் இடம்பெறும் என்பர்.

யானைக்கோடு கூரிது—யானையது கோடு கூரிது. இதனால் இத்தன்மைத்து என்னும் பொருள் (ஆறு)

அவனுக்குச் செயத்தகும் அக்காரியம்—அவனால் செய் யத்தகும் அக்காரியம் (மூன்று)

"அதனால் செயற்படற் கொத்த கிளவி"

ஆவிற்குக் கன்று—ஆவினது கன்று (ஆறு) முறைக் கொண்டெழுந்த பெயர்ச் சொற்கிளவி.

கருவூர்க்குக் கிழக்கு—கருவூரின் கிழக்கு (ஐந்து)பால் உரைக் கிளவி.

சாத்தற்கு நெடியன்—சாத்தனின் நெடியன் பண்பின் ஆக்கம் (ஐந்தனுக்கு உரியது)

காலைக்கு வரும்—காலையின் கண் வரும் (காலத்தின் அறியும் வேற்றுமைக் கிளவி) ஏழன் வேற்றுமை.

மனை வாழ்க்கைக்குப் பற்றுவிட்டான்

மனை வாழ்க்கையின் பற்று விட்டான்; (பற்றுவிடு கிளவி)—ஐந்தன் பொருள்.

பிறவேற்றுமைகளில்வரும் இக்குறிப்பிட்ட பொருள் களே நான்கன் உருபாகிய கு இடம் பெறும்என்பர்.[27]

---

27. "இதனது இதுவிற் றென்னும் கிளவியும்,
அதனைக் கொள்ளும் பொருள்வயி னானும்,
அதனாற் செயற்படற் கொத்த கிளவியும்,
முறைக்கொண் டெழுந்த பெயர்ச்சொற் கிளவியும்,
பால்வரை கிளவியும், பண்பின் ஆக்கமும்.
காலத்தின் அறியும் வேற்றுமைக் கிளவியும்,
பற்றுவிடு கிளவியும், தீர்ந்துமொழிக் கிளவியும்,
அன்ன பிறவும் நான்கன் உருபில்
தொன்னெறி மரபின தோன்ற லாறே." —தொல்-110

(9) ஏனைய உருபுகள் சிலவும் ஒன்றற்கு உரிய பொருள் மற்றொன்று பெற்று வரும்.

நூலது குற்றம் கூறினான்; நூலைக்குற்றம் கூறினான். அவட்குக் குற்றேவல் செய்யும்; அவளது குற்றேவல் செய்யும்[28]

ஆ. உருபு மயக்கம்

மேற்காட்டியவை அனைத்தும் வேற்றுமைப் பொருள் மயக்கம் என்பர். பொருள் மயக்கமாவது தன் பொருளில் தீராது பிறிதொான்றன் பொருட்கண் சேறல் என்பர் உரையாசிரியர் சேனாவரையர். உருபு மயக்கமாவது தன் பொருளில் தீர்ந்து சேறல் என்று விளக்கம் தருவர்.

"யாதன் உருபிற் கூறிற்றாயினும்
பொருள்செல் மருங்கில் வேற்றுமை சாரும் (106)

இஃது ஒன்றனை மட்டும் உருபுமயக்கம் என்று தெளிவு படுத்துவர்.

'கிளையரி நாணற் கிழங்கு மணற்கு ஈன்ற
முளையோர் அன்ன முள்ளெயிற்றுத்துவாய்'—
(அகம்212)

இதில் 'மணற்கு ஈன்ற' என்பது மணலின்கண் ஈன்ற என்ற பொருள் உடையதாம். ஏழாம் வேற்றுமை உருபாகிய கண் வரவேண்டிய இடத்தில் கு வந்தது என்பர். கு என்பது ஏழன் பொருளில் வந்தது. எனவே இஃது உருபுமயக்கம் ஆயிற்று என்பர்.

"நாகுவேயொடு நக்கு வீங்கு தோள்" என்பதும் உருபு மயக்கம் எனக்காட்டுவர்.

---

28. "ஏனை உருபும் அன்ன மரபின
மான மிலவே சொன் முறையான." —தொல்-111

நாகு வேயை என்று இருக்கற்பாலது, 'வேயொடு' என வந்தது.

ஒன்றற்கு உரிய வேற்றுமைப் பொருள் ஏனை வேற்றுமைக்கண் வருதலும் ஒன்றன் வேற்றுமை உருபு ஏனை வேற்றுமைக்கண் வருதலும் வேற்றுமை மயக்கம் எனப்படும். இவ்வாறு வேற்றுமை நிலைக்களன் மாறினாலும் பொருள் திரிபு பெறாது என்பர்.

"அன்ன பிறவும் தொன்னெறி பிழையாது
உருபினும் பொருளினும் மெய்தடுமாறி
இருவயின் நிலையும் வேற்றுமை எல்லாம்
திரிபிடன் இலவே தெரியு மோர்க்கே"

—தொல்-101

வேற்றுமைப் பொருள் பிற இடத்தில் மயங்குதலும் உருபுகள் இடம் மாறுதலும் வேற்றுமை மயங்கியல் என்று உணரப்படுகின்றன. மற்றும் உருபுகளும் பொதுவாகப் பெறும் இடச்சூழ்நிலைகளும் வேற்றுமை மயக்கம் என்று கூறுதல் பொருந்துவதாகிறது. உருபுகள் வரும் இடச்சூழ்நிலைகளையும் இத்தலைப்பில் குறிப்பிடுவர் உயிர் மயங்கியல் புள்ளி மயங்கியல் என்ற தொடர். களில் 'மயங்கியல்' என்பது தொடரின்கண் உயிர் பொருந்துதல் மெய் பொருந்துதல் என்னும் பொருளில் ஆளப்படுதல் காண்க.

**உருபுகளின் இடச்சூழ்நிலைகள்**

(1) 'ஒடு' என்னும் உருபு வரும் உடனிகழ்ச்சிப் பொருள் தரும் தொடர் உயர் பொருளை முன்னும் தாழ் பொருளைப் பின்னும் தொடர் பொருளாகப் பெறும்.

அரசனோடு இளையர் வந்தார்
ஆசிரியனோடு மாணாக்கர் வந்தார்.[29]

29. "ஒருவினை ஒடுச்சொல் உயர்பின் வழித்தே —தொல்-91

(2) உருபு தொடர்ந்து அடுக்கிய வேற்றுமைக் கிளவிகள் ஒரே வினைச்சொல்லை முடிக்கும் சொல்லாகப் பெறும்

"என்னொடும் நின்னொடும் சூழாது"

"அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல்"[30]

(3) உருபு விரிந்து நிற்கும் இடங்கள்

வேற்றுமைத் தொடரின் இடையிலும் இறுதியிலும் உருபு நிலைபெறும்.

கடந்தான் நிலத்தை; நிலத்தைக் கடந்தான்.
வந்தான் சாத்தனொடு; சாத்தனொடு வந்தான்.
கொடுத்தான்சாத்தற்கு; சாத்தற்குக் கொடுத்தான்.
வலியன் சாத்தனின்; சாத்தனின் வலியன்.
இருந்தான் குன்றத்துக்கண்; குன்றத்துக்கண் இருந்தான்.

ஆடை சாத்தனது என்று வந்தால் அது குறிப்பு வினைமுற்று ஆகும்; வேற்றுமைத் தொடர் ஆகாமை காண்க. சாத்தனது ஆடை என்று அஃது இடைக்கண் மட்டும் வரும்.[31]

---

30. "உருபு தொடர்ந் தடுக்கிய வேற்றுமைக் கிளவி
ஒருசொல் நடைய பொருள் செல் மருங்கே."
—தொல்-102

31. "இறுதியும் இடையும் எல்லா உருபும்
நெறிபடு பொருள்வயின் நிலவுதல் வரையார்."
—தொல்-103

(4) உருபு மற்றோர் உருபு ஏற்றலும் உண்டு; உருபு தொக்கு வருதலும் உண்டு.

**உருபு உருபு ஏற்றல்**

சாத்தனது, சாத்தனதை சாத்தனதொடு, சாத்தனதற்கு.

**உருபு தொகை வருதல்**

நிலம் கடந்தான்; பொன் வளையல்; வரைவீழ் அருவி.[32]

(5) இரண்டன் உருபும் ஏழன் உருபும் மட்டும் ஈற்றில் தொகையாக வரும். ஏனைய ஈற்றின் கண் தொகையாக வருதல் இல்லை.[33] —105

அறம் கறக்கும்—நான்கன் தொகை

கறக்கும் அறம் என வாராமை காண்க.

பிறவும் அன்ன

கடந்தான் நிலம்.

நிலம் கடந்தான் என வரும்.

(6) **வேற்றுமை உருபுகளின் திரிபுகள்**

கு, ஐ, ஆன் என்பன அகரமாகத் திரிதலும்பெறும் செய்யுளில் என்பர்.

'கடிநிலை இன்றே ஆசிரியற்க'

'காவ லோனக் களிறு அஞ்சும்மே'

---

32. "பிறிதுபிறிது ஏற்றலும் உருபுதொக வருதலும்
நெறிபட வழங்கிய வழிமருங்கு என்ப." —தொல்-104

33. "ஐயும் கண்ணும் அல்லாப் பொருள் வயின்
மெய்யுருபு தொகாஅ இறுதி யான." —தொல்-105

'புரைதீர் கேள்விப் புலவரான[34]

(7) எதிர்மறைக்கண் உருபு வேறு வருவது இல்லை.

"மரத்தைக் குறையான்"; "வேலான் எறியான்"[35]

(8) வேற்றுமைத் தொடரில் வினைச்சொல்லே மையம் ஆகும். அதனைச் சுற்றியே ஏனை வேற்றுமைச் செய்திகள் அடங்கும் என்பர்.

வனைந்தான் என்பதில் தொழில், கருத்தா, செயப்படுபொருள், இடம், காலம், கருவி இன்னதற்கு, இது பயன் என்னும் செய்திகள் எட்டு அடங்கி இருத்தல் காண்க.[36]

**இ. தொடரின்கண் பொதுப்பொருள் மயங்குதல் (ஆகுபெயர்)**

ஒரு தொடருக்கு உள்ள இயல்பான பொருள் பயிற்சி மிகுதியால் மற்றொன்றனுக்கு ஆகிவருதலும் உண்டு. இதனை ஆகுபெயர் என்பர்.

---

34. "கு ஐ ஆனென வரூஉம் இறுதி
அவ்வொடு சிவணும் செய்யு ளுள்ளே." —தொல்-108

"ஐ ஆன்குச் செய்யுட்கு அவ்வும் ஆகும்
ஆகா அஃறிணைக்கு ஆன் அல்லாதன." —நன்-318

35. "எதிர்மறுத்து மொழியினும் தத்தம் மரபின்
பொருள்நிலை திரியா வேற்றுமைச் சொல்லே."
—தொல்-107

36. "வினையே செய்வது செயப்படு பொருளே
நிலனே காலம் கருவி என்றா
இன்னதற்கு இதுபயன் ஆக என்னும்
அன்ன மரபின் இரண்டொடும் தொகைஇ
ஆயெட்டு என்ப தொழின்முதல் நிலையே."
—தொல்-112

"அவை தாம்
வழங்கியல் மருங்கின் குன்றுவ குன்றும்." தொல்-113

கிளவியாக்கத்தில் எழுவாய்த் தொடருக்கு மிகுதி யாக விளக்கம் தரப்படுகிறது. வேற்றுமை மயங்கியலில் வேற்றுமைச் சொல்நிலையும் பொருள்நிலையும் கூறப் படுகின்றன. பொருள் மயக்கம் கூறும் செய்தியை ஒட்டி ஏனைய பொதுப் பொருள்களும் மயங்கும் மயக்கத்தை ஆகுபெயர் என்னும் தலைப்பில் கூறுவாரர் ஆயினர்.

ஆகுபெயர்களை (1) முதலாகுபெயர், (2) சினையாகு பெயர், (3) இடவாகு பெயர், (4) பண்பாகுபெயர், (5) காரண ஆகுபெயர், (6) இரு பெயரொட்டு ஆகு பெயர், (7) கருத்தா ஆகுபெயர் எனத் தொல்காப்பி யனார் விரித்துக் காட்டுவர்.

1. தாமரை புரையும் காமர் சேவடி—முதலாகுபெயர்; சினையை உணர்த்தியது.

2. வெற்றிலை நட்டுவாழும்—சினையாகு பெயர்; முதலை உணர்த்தியது.

3. ஊர் அடங்கிற்று—இடவாகுபெயர்: பொருளை உணர்த்தியது.

4. நீலம் சூடினாள் — பண்பாகு பெயர்; பொருளை உணர்த்தியது.

5. இக்குடம் பொன் — காரண ஆகுபெயர்; காரியத் தை உணர்த்தியது.

6. பொற்றொடி வந்தாள் — இரு பெயரொட்டு ஆகு பெயர்; அன்மொழிப் பொருளை உணர்த்தியது.

7. இவ்வாடை கோலிகன் — கருத்தா ஆகுபெயர்; செய்யப்பட்டதை உணர்த்தியது.

8. இந்நெற்பதக்கு (அளவாகு பெயர்); அளவை யுடைய பொருளை உணர்த்தியது.

இவ் ஏழனோடு 8. அளவுப்பெயரும் 9. நிறைப் பெயரும் ஆகுபெயராக வருதலும் உண்டு.

(9) இந்நெல் துலாம்; (நிறைப்பெயர்) எடையை யுடைய பொருளை உணர்த்தியது.

சொல்லப்பட்டனவே அன்றிப் பிறவும் ஆகுபெயர் உளவேல் அவையெல்லாம் கிளந்தவற்றைக் கொண்டு உணர்க என்பர்.

யாழ் குழல் என்பன ஓசை மேலும் யானை பாவை என்பன அவை உவமையாக நின்ற பொருள்கள்மேலும் ஏறு குத்து என்பன அத்தொழிலால் ஏற்பட்ட வடுவின் மேலும் வந்தது என்பர்.

இவை தத்தம் பொருளின் நீங்காமலும் நீங்கிப் பிறிது பொருள் சுட்டலும் என இருவகைப்படும் என்பர் இவற்றைப் பிற்காலத்து உரையாசிரியர்கள் விட்ட ஆகு பெயர் விடாத ஆகுபெயர் என்று குறிப்பிடுவர்.

புளித்தின்றான்—விடாத ஆகுபெயர்

குழிப்பாடி நேரிது—விட்ட ஆகுபெயர்.[37]

---

37. "முதலிற் கூறும் சினையறி கிளவியும்
சினையிற் கூறும் முதலறி கிளவியும்
பிறந்தவழிக் கூறலும் பண்புகொள் பெயரும்
இயன்றது மொழிதலும் இருபெய ரொட்டும்
வினைமுதல் உரைக்கும் கிளவியொடு தொகைஇ
அனைய மரபினவே ஆகுபெயர்க் கிளவி." —தொல்-114

"அவைதாம்
தத்தம் பொருள்வயின் தம்மொடு சிவணலும்
ஒப்பில் வழியால் பிறிதுபொருள் சுட்டலும்
அப்பண் பினவே நுவலுங் காலை
வேற்றுமை மருங்கில் போற்றல் வேண்டும்."
—தொல்-115

"அளவும் நிறையும் அவற்றொடு கொள்வழி
உளவென மொழிப உணர்ந்திசி னோரே." —தொல்-116

"கிளந்த வல்ல வேறுபிற தோன்றினும்
கிளந்த வற்றியலான் உணர்ந்தனர் கொளலே."
—தொல்-117

(3) விளிமரபு

1. விளியெனப்படுவது வினையொடு பொருந்தாது; பெயரொடும் பொருந்தும்; படர்க்கையோரைத் தன் முகமாக அழைப்பது என்று நன்னூலார் விளக்கம் தருவர்.[38]

2. எல்லாப் பெயர்களும் விளி கொள்ளும் என்று கூறுவதற்கு இல்லை. ஒரு சிலவே விளிகொள்ளும் பெயர்களாகும். இவற்றை உயர்திணைப்பெயர்,[39] விரவுப்பெயர்,[40] அஃறிணைப் பெயர்[41] என மூவகைப் படுத்திக் காட்டுவர்.

3. உயர்திணைக்கண் இ, உ, ஐ, ஓ, என்னும் உயிரீற்றுப் பெயர்களும் னரலள என்னும் மெய்யீற்றுப் பெயர் களும் விளி கொள்ளும்.[42] விரவுப் பெயர்கள் உயர்திணை யில் இவ்வீறுகளே விளிகொள்ளும்.[43]

4. தொல்காப்பியனார் ஒவ்வோர் ஈற்றுக்கும் விதி கூறுவது அவர் மேற்கொள்ளும் முறையாகும்.

புணரியலிலும் இம்முறையே மேற்கொள்ளப்பட்டது. இவற்றை நன்னூலார் காட்டும் தலைப்புகளின் வழி நின்று

(1) ஈற்றின் திரிபு

(2) குன்றல்,

---

38. "விளியெனப் படுப கொள்ளும் பெயரொடு
தெளியத் தோன்றும் இயற்கைய என்ப."
—தொல்-118

"எட்டன் உருபே எய்துபெயர் ஈற்றின்
திரிபு, குன்றல், மிகுதல், இயல்பு, அயல்
திரிபு மாம்; பொருள் படர்க்கை யோரைத்
தன்முக மாகத் தானழைப் பதுவே." —நன்-303

(3) மிகுதல்.

(4) இயல்பு.

(5) அயல் திரிபு, எனத் தொகுத்துக்காணலாம்.[44]

(1) ஈற்றின் திரிபு.

**உயிர் நீட்சீ**

நம்பி—நம்பீ—இ ஈ

நங்கய்—நங்காய்—அய்—ஆய். —[45]

அன்னய்—அன்னாய்—அய்— ஆய்.—[46]

**மெய் திரிதல்**

வந்தான்—வந்தாய்.[47]—133.

கரியன்—கரியாய்.[48]—134

நின்றாள்—நின்றாய்.[49]—146.

கரியாள்—கரியாய்.[50]—146.

வினைப்பெயரும் பண்புப்பெயரும் ன, ள ஈறுகள் யகரமாக மாறின.

(2) ஈற்றுமெய் கெடுதல் (குன்றல்)

சோழன்—சோழா— னகரம் கெட்டது.[51]

துறைவன்—துறைவ—னகரம் கெட்டது.

(3) மிகுதல் (ஏகாரம் பெறுதல்)

கோ—கோவே.[52]

வேந்து—வேந்தே.[52]

மகன்—மகனே.[54]

மகள்—மகளே.[55]

அஃறிணைப் பெயர்கள் எல்லா ஈறுகளும் விளியைப் பெறும். அவை ஏகாரம் பெறும்.

மரம்—மரமே; மழை —மழையே
அணில்—அணிலே முதலியனகாண்க.[56]

(4) இயல்பு.

அளபெடைப் பெயர்கள் விளியின்கண் இயல்பு ஆதலைப் பெறும்.

தோழீ இ இ—இகர ஈறு.[57]
உழா அ அன்—னகர ஈறு.[58]
சிரு அ அர்—ரகர ஈறு.[59]
மா அ அல்—லகர ஈறு.[60]
கோஒஒள்—ளகர ஈறு.[61]
(ஆ) அண்மை விளிச்சொற்கள் இயல்பு ஆதல்:
நம்பி, வேந்து, நங்கை, கோ,[62] மலையமான்.[63]

(இ) அயல் நெடிதாயின் இயல்பாகும்: பெருமாள் திருமால்.[64]

(5) ஈற்று அயல்நீட்சி

சோழன்—சோழா;—அன்—ஆ.[65]
குரிசில்— குரிசீல்;—இல்—ஈல்,[66]
மக்கள்—மக்காள்;—அள்—ஆள்[67]
பார்ப்பார்—பார்ப்பீர்.—ஆர்—ஈர்.[68]
கூத்தர்—கூத்திர்—அர்—ஈர்.[69]

---

39. 120 முதல் 149; 40. 150; 41. 151; 42. 120, 128; 43. 150; 44. நன் 303; 45. 121; 46. 122; 47. 133; 48. 134; 49. 146; 50. 146; 51. 130, 131; 52. 122; 53. 122, 123; 54. 136; 55. 147; 56. 151; 57. 125; 58. 135; 59. 141; 60. 135; 61. 149; 62. 127; 63. 132; 64. 145; 65. 130;

**5. விளி ஏலாப் பெயர்கள்.**

மேற்குறிப்பிட்ட இ, உ, ஐ, ஒ, ன, ர, ல, ள தவிர உயர்திணையில் ஏனைய ஈற்றுப் பெயர்கள் விளி ஏற்பது இல்லை.[70]

அவற்றுள்ளும் கீழ்வருவன விளி ஏற்பது இல்லை.

னகர ஈறு: தான், அவன், இவன், உவன், யான், யாவன்.[71]

ரகரஈறு:, அவர் இவர் உவர் நீயிர் யாவர்.[72]

ளகரஈறு: அவள் இவுள் உவள் யாவள்முதலாயின.[73]

ஏனைய பிற: மற்றும் த, ந, நு, எ இவற்றோடு வரும் ன, ள, ரவும் பிறவற்றோடு சேரும் ன, ள, ரவும் விளி ஏலா என்ப.

தமன், தமள், தமர், நமன், நமள், நமர், நுமன், நுமள், நுமர், எமன், எமள் எமர், மற்றையான், மற்றையாள் மற்றையார், பிறன், பிறர், பிறள் முதலாயின விளி ஏலா.[74]

**நன்னூல் தரும் சிறப்புச் செய்திகள்**

1. பெயரியலிலேயே வேற்றுமையினை நன்னூல் தெளிவுபடுத்தும்.

2. மூன்றன் உருபு 'ஒடு' என்பர் தொல்காப்பியனார். ஆல் ஆன் என்பன உடன் சேர்க்கும்.[75]

3. ஐந்தன் உருபு 'இன்' என்பர் தொல்காப்பியனார்; 'இல்' என்பதும் ஐந்தன் உருபாக நன்னூலார் குறிப்பிடுவர்.[76]

---

66. 144; 67, 144; 68. 138; 69. 138; 70. 124, 129; 71. 137; 72. 143; 73. 148; 74. 154, நன் 314.

4. அது என்பதன் நீண்ட உருபாகிய 'ஆது' என்பதும் 'அ' உருபும் ஆறன் உருபுகள் என்பர். ஒருமைக்கு அது, ஆது உருபுகள்; பன்மை உருபு 'அ' என்பர்.[77]

5. ஏழன் பொருள்கள் என்றுகுறிப்பிடுவனவற்றை நன்னூலார் உருபாகவே குறிப்பிடுவர். இவற்றுள் ஒரு சில கூட்டியும் குறைத்தும் காட்டுவர்.[78]

6. விளியேற்கும் உயர்திணைப் பெயர்களுள் ஊகார ஈற்றையும், யகரத்தையும் உடன் சேர்ப்பர். உ ஊ ஐ ன ள ல ய ஈற்றுப் பொதுப்பெயர்களும், ஞ ண நீங்கிய ஈற்று அஃறிணைப் பெயர்களும் விளி ஏற்கும் என்பர். தொல்காப்பியர் உயர்திணை ஈறுகள் மட்டும் குறிப்பிடுவர்.[79]

7. மற்றும் தொல்காப்பியர் கூறிய செய்திகளையே வேறு வாய்பாடுகளில் விளக்குவர்.[80] தொல்காப்பியர் கூறும் வேற்றுமைப்பொருள் மயக்கங்களை நன்னூலார் குறிப்பிடவில்லை. உருபு மயக்கத்தை மட்டும் வற்புறுத்துவர். தொல்காப்பியச் சூத்திரத்தை நன்னூலார் எடுத்தாளுவர்.[81]

8. ஆகுபெயர் இலக்கணத்தையும் நன்னூல் குறிப்பிடும். பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில், அளவு இவற்றோடு சொல், தானி, கருவி, காரியம், கருத்தா முதலியனவற்றையும் உடன்சேர்த்துக் கூறுவர்.[82]

---

75. நன் 297; 76. நன் 299; 77. நன் 300; 78. நன் 301, 302; 79. நன் 304; 80. நன் 305 முதல் 313; 81. நன் 317; 82. நன் 290.

# 13. பெயரியல்

## 1. சொல்லும் பொருளும்

எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவாகும். சொல் சொல் தன்மையை உணர்த்துவதோடு பொருளை யும் உணர்த்தும். அது குறிப்பாகவும் வெளிப்படையா கவும் உணர்த்தும். [1]

## 2. சொற் பாகு பாடு

சொற்கள் பெயர் வினை என்று கூறுவர். இடைச் சொல்லும் உரிச்சொல்லும் இவற்றைச் சார்பாகக் கொண்டு இடம் பெறும்.

---

1. "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" —155

"பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்
சொல்லின் ஆகும் என்மனார் புலவர்" —156

"தெரிபுவேறு நிலையலும் குறிப்பில் தோன்றலும்
இருபாற்றென்ப பொருண்மை நிலையே" —157

"ஒன்றொழி பொதுச்சொல் விகாரம் தகுதி
ஆகுபெயர் அன்மொழி வினைக் குறிப்பே
முதல்தொகை குறிப்போடு இன்ன பிறவும்
குறிப்பில் தருமொழி அல்லன வெளிப்படை"
—நன்-269

2. "சொல்லெனப்படுப பெயரே வினையென்று
ஆயிரண்டு என்ப அறிந்திசினோரே" —158

### 3. திணைபால் உணர்த்தல்

பெயரும் வினையும் திணைக்கு உரிமையாகி வரும். அவற்றுள் குறிப்பிடத்தக்கவை சுட்டுப் பெயர்கள் அவன் இவன் உவன் அவள் இவள்உவள் அவர் இவர் உவர் அது இது அவை இவை ,ஆகிய இவை சுட்டுப் பெயர்களாகும். அஃது இஃது உஃது என்பன ஒலிச் சூழ்நிலை ஒட்டி வரும் மாற்று வடிவங்களாகும். யான் யாம் நாம் என்பன இடப் பெயர்களாகும். யாவன் யாவள் யாவர் யாது என்பன வினுப் பெயர்கள், எல்லாம் எல்லீரும் எல்லாரும் என்பன தொகைப் பெயர்கள். பல்ல பல சில்ல சில உள்ள உள் என்பன பன்மைப் பெயர்கள். கள்ளொடு சிவணும் பெயர்கள். அஃறிணைப் பெயர்கள் என்பர். அன்னன், அன்னள், அன்னர், அன்னது, அன்ன என்பன ஒப்பு அடியாகப் பிறக்கும் பெயர்ச் சொற்களாகும். பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் பற்றி வருவனவாகிய காரணப் பெயர்கள், இயற்பெயர்கள், சினைப் பெயர்கள், முறைப் பெயர்கள், தாம் தான் இன்னனவும் பெயர்ச் சொற்கள் என்பர். மற்றும் பால் ஈறு பெற்ற சொற்களும், பொருள் நிலையால் உயர் திணை அஃறிணையாகப் பிரிந்து இயங்கும் சொற்களும் உள. நம்பி, நங்கை, மாந்தர், மக்கள் என்பன இத்தகைய சொற்களாகும். உயர்திணைப் பெயர்களும் அஃறிணைப்பெயர்களும் பால் ஈறுகள் பற்றியும், பொருள்

---

"இடைச்சொல் கிளவியும் உரிச்சொல் கிளவியும்
அவற்றுவழி மருங்கில் தோன்றும் என்ப" —159

"அதுவே,
இயற்சொல் திரிசொல் இயல்பிற் பெயர்வினை
என இரண்டாகும்; இடையுரி அடுத்து
நான்கு மாம்திசை வடசொல் அணுகாவழி" —நன்–270

தன்மை பற்றியும் தனித்தனியாக இயங்கி வழங்குகின்றன.[3] பால்பகா அஃறிணைப் பெயர்கள் வினைகளால் பால் தெளிவு பெறும்.

---

3. "அவற்றுள்
பெயரெனப்படுபவை தெரியுங்காலை
உயர்திணைக்கு உரிமையும் அஃறிணைக்கு உரிமையும்
ஆயிரு திணைக்கும் ஓர் அன்ன உரிமையும்
அம்மூ உருபின தோன்றலாறே" —160

"இருதிணைப் பிரிந்த ஐம்பாற் கிளவிக்கும்
உரியவை உரிய பெயர்வயினான" —தொல்: 161

"அவ்வழி
அவன்இவன் உவன்என வரூஉம் பெயரும்
அவள் இவள் உவள் என வரூஉம் பெயரும்
அவர் இவர் உவர் என வரூஉம் பெயரும்
யான் யாம் நாம்என வரூஉம் பெயரும்
யாவன் யாவள் யாவர் என்னும்
ஆவயின் மூன்றொடு அப்பதினைந்தும்
பாலறி வந்த உயர்திணைப் பெயரே" —தொல்-162

"ஆண்மை யடுத்த மகனென் கிளவியும்
பெண்மை யடுத்த மகளென் கிளவியும்
பெண்மை யடுத்த இகர இறுதியும்
நம்மூர்ந்து வரூஉம் இகர ஐகாரமும்
முறைமை சுட்டா மகனும் மகளும்
மாந்தர் மக்கள் என்னும் பெயரும்
ஆடூஉ மகடூஉ ஆயிரு பெயரும்
சுட்டு முதலாகிய அன்னும் ஆனும்
அவை முதலாகிய பெண்டென் கிளவியும்
ஒப்பொடு வரூஉங் கிளவியொடு தொகைஇ
அப்பதினைந்தும் அவற்றோர் அன்ன" —தொல்-163

"எல்லாரும் என்னும் பெயர்நிலைக் கிளவியும்
எல்லீரும் என்னும் பெயர்நிலைக் கிளவியும்

## 4. விரவுப் பெயர்கள்

இப்பெயர்களுள் ஒரு சில இரு திணைக்கும் உரிமையாகி வரும். அவை வினையொடு புணர்க்கும்பொழுதே

---

பெண்மை அடுத்த மகன்என் கிளவியும்
அன்ன இயல என்மனார் புலவர்" —தொல்164

"நிலப்பெயர் குடிப்பெயர் குழுவின் பெயரே
வினைப்பெயர் உடைப்பெயர் பண்புகொள் பெயரே
பல்லோர்க்குறித்த முறைநிலைப் பெயரே
பல்லோர்க் குறித்த சினைநிலைப் பெயரே
கூடிவரு வழக்கின் ஆடியற் பெயரே
இன்றிவர் என்னும் எண்ணியற் பெயரோடு
அன்றி அனைத்தும் அவற்றியல்பினவே" —தொல்-165

"அன்னபிறவும் உயர்திணை மருங்கின்
பன்மையும் ஒருமையும் பாலறிவந்த
என்ன பெயரும் அத்திணையவ்வே" —தொல்-166

"அது இது உது என வரூஉம் பெயரும்
அவை முதலாகிய ஆய்தப் பெயரும்
அவை இவை உவை என வரூஉம் பெயரும்
அவை முதலாகிய வகரப் பெயரும்
யாது யாவை என்னும் பெயரும்
ஆவயின் மூன்றொடு அப்பதினைந்தும்
பாலறிவந்த அஃறிணைப் பெயரே" —தொல்-167

"பல்ல பலசில என்னும் பெயரும்
உள்ள இல்ல என்னும் பெயரும்
வினைப்பெயர்க் கிளவியும் பண்புகொள் பெயரும்
இனைத்தெனக் கிளக்கும் எண்ணுக் குறிப்பெயரும்
ஒப்பினாகிய பெயர்நிலை உளப்பட
அப்பால் ஒன்பதும் அவற்றோர் அன்ன" —தொல்-168

"கள்ளொடு சிவணும் அவ்வியற்பெயரே
கொள்வழி உடைய பலவறி சொற்கே" —தொல்-169

பால் தெளிவு பெறும்.[4] செய்யும் என்னும் வாய்பாட்டில் வரும் விரவுப் பெயர் பொருள் சூழ்நிலை ஒட்டிப் பொருள் உணரப்படும். விரவுப் பெயர்கள் கீழ்வருவாறு.[5]

---

"அன்ன பிறவும் அஃறிணை மருங்கின்
பன்மையும் ஒருமையும் பாலறி வந்த
என்ன பெயரும் அத்திணை யவ்வே" —தொல்-170

"இடுகுறி மரபோடு ஆக்கம்
தொடர்ந்து தொழிலல காலந் தோற்று
வேற்றுமைக்கு இடனாய்த் திணைபால் இடத்து ஒன்று
ஏற்பவும் பொதுவும் ஆவன பெயரே" —நன்-275

"அன்னபிறவும் அஃறிணை மருங்கின்
பன்மையும் ஒருமையும் பாலறிவந்த
என்ன பெயரும் அத்திணை யவ்வே" —தொல்-170

"தெரிநிலை உடைய அஃறிணை இயற்பெயர்
ஒருமையும் பன்மையும் வினையொடு வரினே"
—தொல்–171

பால்பகா அஃறிணைப் பெயர்கள்பாற் பொதுமைய"
—நன்-281

4. இருதிணைச் சொற்கும் ஓரன்ன உரிமையின்
திரிபுவேறு படூஉம் எல்லாப் பெயரும்
நினையுங் காலைத் தத்தம் மரபின்
வினையோ டல்லது பால்தெரிபு இலவே" —தொல்-172

5. "பொதுப்பெயர் வினைகளின் பொதுமை நீக்கும்
மேல்வரும் சிறப்புப்பெயர் வினைதாமே" —நன்–359
"நிகழூஉ நின்ற பலர்வரை கிளவியின்
உயர்திணை ஒருமை தோன்றலும் உரித்தே
அன்ன மரபின் வினைவயினான" —தொல்-173
"முதற்பெயர் நான்கும் சினைப்பெயர் நான்கும்
சினைமுதற்பெயர் ஒருநான்கும் முறை இரண்டும்
தன்மை நான்கும் முன்னிலை ஐந்தும்
எல்லாம் தாம்தான் இன்னன பொதுப்பெயர்"
—நன்-282

''இயற்பெயர் சினைப்பெயர் சினைமுதற் பெயரே.
முறைப் பெயர்க் கிளவி தாமே தானே.
எல்லாம் நீயிர் நீ எனக் கிளந்து
சொல்லிய அல்ல பிறவும் ஆஅங்கு
அன்னவை தோன்றின் அவற்றெடுங்கொளலே''

—தொல் 174

இயற்பெயர் என்பது உலகில் வழங்கும் பொதுப் பெயர்களைக் குறிக்கும். சாத்தன் சாத்தி யானை கன்று முதலியன இயற்பெயர்களாம். முதற்பெயர்களும் இயற் பெயர்களேயாகும். சினைப்பெயர் ஏன்பதுமுடவன், குருடி செவியிலி முதலியன. முடக் கொற்றன் சினை முதற் பெயராகும். முறைப் பெயர் என்பது தாய் தந்தை மகன் மகள் அண்ணன் தம்பி முதலியன. தாம் தான் என்பன படர்க்கைப் பெயர்களாகும். எல்லாம் என்பது தொகைப் பெயர். நீ நீயிர் என்பன முன்னிலைப் பெயர்களாகும்.

இவை இரண்டு திணைகளுக்கும் பொதுவாக வழங்கு வன ஆகும். அஃறிணையில் ஆண் பெண் பால் பாகுபாடு இல்லை. உயர்திணையில் ஒருவன் ஒருத்தி எனவே பாகு பாடு பெறும். அதனுல் விரவுப் பெபர்கள் உயர்திணையில் ஆண் பெண் என்ற பால்களைப் பெறுவன அஃறிணையில் ஒன்றன் பாலுக்கு உரிமையாகி வரும். பால்பகா அஃறிணைப் பெயர்கள் ஒன்றன் பாலுக்கும் பலவின் பாலுக்கும் பொதுவாக வருவன உயர்திணையில் ஆண் பெண் பால்களுக்கே உரிமையாகி வரும். உயர்திணையில் இவ்வியற்பெயர்கள் உவமையாகு பெயராகவே வரும் எனத் தெரிகிறது.

''யானை வந்தது; யானை வந்தன. யானை வந்தான்; யானை வந்தாள்''

சாத்தி வந்தது — அஃறிணை ஒன்றன் பால்
சாத்தி வந்தாள் — உயர்திணைப் பெண்பால்
சாத்தன் வந்தது — அஃறிணை ஒன்றன் பால்
சாத்தன் வந்தான் — உயர்திணை ஆண்பால்.

தொல்காப்பியர் விரவுப் பெயர்களின் திணைபாற் பொதுமையைப் பல சூத்திரங்களில் கூறும் செய்திகளை

"அவற்றுள், ஒன்றே இருதிணை தன்பால் ஏற்கும்"

என்று நன்னூலார் சுருக்கிக் கூறுவர்.[6] நன் 284

---

6. அவற்றுள்
நான்கே இயற்பெயர் நான்கே சினைப்பெயர்
நான்கென மொழிமனர் சினைமுதற் பெயரே
முறைப் பெயர்க்கிளவி இரண்டாகும்மே
ஏனைப் பெயரே தத்தம் மரபின —தொல்-175
"அவைதாம்
பெண்மை யியற்பெயர் ஆண்மை இயற்பெயர்
பன்மை இயற்பெயர் ஒருமை இயற்பெயர் என்று
அந்நான்கு என்ப இயற்பெயர் நிலையே" —தொல்-176
"பெண்மைச் சினைப்பெயர் ஆண்மைச் சினைப்பெயர்
பன்மைச் சினைப்பெயர் ஒருமைச் சினைப்பெயர் என்று
அந்நான்கு என்ப சினைப்பெயா நிலையே" —தொல்176
பெண்மை சுட்டிய சினைமுதற் பெயரே
ஆண்மை சுட்டிய சினைமுதற் பெயரே
பன்மை சுட்டிய சினைமுதற் பெயரே
ஒருமை சுட்டிய சினைமுதற் பெயர் என்று
அந்நான்கு என்ப சினைமுதற் பெயரே" —தொல்-178
"பெண்மை முறைப்பெயர் ஆண்மை முறைப்பெயர் என்று
ஆயிரண்டு என்ப முறைப்பெயர் நிலையே" —தொல்-179

தாம் என்பது பன்மைப் பெயராகும். தான் என்பது ஒருமைப் பெயராகும்.[7] எல்லாம் என்பது பலவின் பால் ஆகும்[8] உயர்திணையில் அது தன்மைப் பன்மைக்கு மட்டும் வரும்.[9] நீயிர் நீ என்பன திணைப் பாகுபாடு வடிவால் உணர இயலாது. வினை வடிவிலும் அவை பால்திணை தெரிய நில்லா. நீ ஒருமைக்கு உரியது; நீர் பன்மைக்கு உரியது. ஒருவர் என்பது உயர் சொற்கிளவியாகும். அஃது ஒருவனையும் ஒருத்தியையும் உணர்த்தும்; பலர் பால் வினையைக் கொண்டு முடியும். 'நீ நீர் ஒருவர்' என்பன இன்னபால் என அறியப்படுதல்[10] சூழ்நிலை ஒட்டியே யாகும்.

---

"பெண்மை சுட்டிய எல்லாப் பெயரும்
ஒன்றற்கும் ஒருத்திக்கும் ஒன்றிய நிலையே" —தொல்-180
"ஆண்மை சுட்டிய எல்லாப் பெயரும்
ஒன்றற்கும் ஒருவற்கும் ஒன்றிய நிலையே" —தொல்-181
"பன்மை சுட்டிய எல்லாப் பெயரும்
ஒன்றே பலவே ஒருவர் என்னும்
என்றிப் பாற்கும் ஓரன் னவ்வே" —தொல்-182
"ஆண்மை பெண்மை ஒருமை பன்மையின்
ஆம்அங் நான்மைகள் ஆண்பெண்முறைப்பெயர்"
—நன்-283
"ஒருமை சுட்டிய எல்லாப் பெயரும்
ஒன்றற்கும் ஒருவர்க்கும் ஒன்றிய நிலையே" —தொல்-183

7. "தாம்என் கிளவி பன்மைக்கு உரித்தே" —தொல்-184
"தான்என் கிளவி ஒருமைக்கு உரித்தே" —தொல்-175
8. "எல்லாம் என்னும் பெயர்நிலைக் கிளவி
பல்வழி நுதலிய நிலைத்தாகும்மே" —தொல்-186
9. "தன்னுள் உறுத்த பன்மைக் கல்லது
உயர்திணை மருங்கின் ஆக்கம் இல்லை" —தொல்-177
10. "நீயிர் நீயென வரூஉங் கிளவி
பால்தெரிபு இலவே உடன்மொழிப் பொருள"
—தொல்-188

## 5. ஏனைய பெயர்கள்

பெண்மகன் என்னும் சொல் வந்தாள் என்றே முடியும்.[11] செய்யுளில் ஆ ஓ ஆகும்.[12] இறைச்சிப் பொருளில் வரும் கடுவன் மூலன் மந்தி குமரி என்பன அஃறிணை முடிபையே பெறும். திணையொடு பழகிய காளை விடலை முதலியன அஃறிணைப் பெயர்கள் ஆயினும் உவமையாகுபெயராக உயர்திணையை உணர்த்தினமையின் உயர்திணை முடிவு கொள்ளும்.[13]

---

''அவற்றுள்
நீயென் கிளவி ஒருமைக் குரித்தே'' —தொல்-184

''ஏனைக் கிளவி பன்மைக்கு உரித்தே'' —தொல்-190

''ஒருவர் என்னும் பெயர்நிலைக் கிளவி
இருபாற்கும் உரித்தே தெரியுங்காலை'' —தொல்-191

''ஒருவர் என்பது உயரிரு பாற்றாய்ப்
பன்மை வினைகொளும் பாங்கிற்றென்ப'' —நன்-289

''தன்மை சுட்டிற் பன்மைக்கு ஏற்கும்'' —தொல்-192

''இன்ன பெயரே இவைஎனல் வேண்டின்
முன்னஞ் சேர்த்தி முறையின் உணர்தல்'' —தொல்-193

11. ''மகடூஉ மருங்கின் பால்திரி கிளவி
மகடூஉ இயற்கை தொழில்வயினான'' —தொல்-194

12. ''ஆவோ ஆகும் பெயருமார் உளவே
ஆயிடன் அறிதல் செய்யுளுள்ளே'' —தொல்-195

''பெயர்வினை இடத்து ன ள ர ய ஈற்றயல்
ஆவோ ஆகலும் செய்யுளுள் உரித்தே'' —நன்-354

13. ''இறைச்சிப் பொருள்வயிற் செய்யுளுள் கிளக்கும்
இயற்பெயர்க் கிளவி உயர்திணை சுட்டா
நிலத்துவழி மருங்கில் தோன்றலான'' —தொல்-196

''திணையொடு பழகிய பெயரலங் கடையே''
தொல்-179

## நன்னூல் தரும் சிறப்புச் செய்திகள்

1. தன்மைப் பெயர்களில் நான் என்பதை நன்னூலார் உடன் சேர்த்துக் கூறுவர். முன்னிலையில் நீவிர் நீ என்பவற்றையும் உடன் கூறுவர்.[14]

2. வினையாலணையும் பெயர் தொல்காப்பியனார் படர்க்கைக்கு மட்டும் உரியது என்பர். நன்னூலார் அது மூவிடத்திற்கும் உரியது என்பர்.[15]

3. 'கள்' என்னும் விகுதி அஃறிணைக்கு மட்டும் உரியது என்பர் தொல்காப்பினார். நன்னூல் உயர்திணைக்கும் உரியது என்று கூறும்.[16]

4. பின்வருவனவற்றைக் குறிப்புப் பொருள் தருவன என்ற விளக்கத்தைத் தரும்.

**பொதுச் சொல் விகாரம் தகுதி ஆகுபெயர் அன்மொழி வினைக்குறிப்பு முதல்தொகை குறிப்போடு இன்ன பிறவும் குறிப்பில் தருமொழி அல்லன வெளிப்படை என்று நன்னூல் கூறும்.**

**—நன் 269**

இடு குறி காரணமாகவும் மரபு பற்றியும் ஆக்கம் பற்றியும் பெயர்ச் சொற்கள் அமையும் என்பர்.[17]

---

14. நன்–282
15. நன்-286
16. நன்–278
17. நன்–275

# 14. வினையியல்

1. பெயர் வேற்றுமை கொள்ளும். வினை வேற்றுமை கொள்ளாது; காலம் காட்டும். காலம் மூன்று ஆகும். அவை இறப்பு நிகழ்வு எதிர்வு என்று மூன்று வகைப் படும்.[1]

2. வினை குறிப்புப் பற்றியும் செயல் பற்றியும் வரும். இவற்றைக் குறிப்பு என்றும், வினை என்றும் கூறுவர். வினைச் சொற்கள் காலக்கிளவி எனப்படும். அவை மூன்று திணைகட்கும் உரிமையாகி வரும்.[2]

---

1. "வினையெனப்படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலைக் காலமொடு தோன்றும்" —தொல்-198
"காலம் தாமே மூன்றென மொழிப" —தொல்-199
"இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்ற
அம்முக் காலமும் குறிப்பொடுங் கொள்ளும்
மெய்ந்நிலை உடைய தோன்ற லாறே" —தொல்-200

2. "செய்பவன் கருவி நிலம் செயல் காலம்
செய்பொருள் ஆறும் தருவது வினையே" —நன்-320
"குறிப்பினும் வினையினும் நெறிப்படத் தோன்றிக்
காலமொடு வருஉம் வினைச்சொல் எல்லாம்
உயர்திணைக்கு உரிமையும் அஃறிணைக்கு உரிமையும்
அம்மூ உருபின தோன்ற லாறே" —தொல்-201
அவைதாம்
முற்றும் பெயர்வினை எச்சமும் ஆகி
ஒன்றற்கு உரியவும் பொதுவும் ஆகும்" —நன்-322

1. உயர்திணை வினைகள்

(1) அம் ஆம் எம் ஏம் கும் டும் தும் றும்.
—தன்மைப் பன்மை.[3]

(2) என் ஏன் அல் குடு துறு—தன்மை ஒருமை.[4]

(3) செய்கு என்னும் வாய்பாடு வினையொடு முடியினும் அது முற்று என்றே கருதப்படும்; நன்னூல் செய்கும் என்பதையும் உடன் சேர்க்கும்.[5]

---

3. அவைதாம்,
அம் ஆம் எம் ஏம் என்னும் கிளவியும்
உம்மொடு வரூஉங் கடதற என்னும்
அந்நாற் கிளவியொடு ஆயெண் கிளவியும்
பன்மை உரைக்கும் தன்மைச் சொல்லே'' —தொல்-202

''அம் ஆம் என்பன முன்னிலையாரையும்
எம் ஏம் ஓம் இவை படர்க்கையாரையும்
உம்மூர் கடதற இருபாலாரையும்
தன்னொடு படுக்கும் தன்மைப் பன்மை'' —நன்-332

4. கடதற என்னும்
அந்நான்கு ஊர்ந்த குன்றியல் உகரமோடு
என் ஏன் அல்லென வரூஉம் ஏழும்
தன்வினை உரைக்கும் தன்மைச் சொல்லே''—தொல்-203

''குடுதுறு என்னும் குன்றிய லுகரமொடு
அல்அன் என்ஏன் ஆகும் ஈற்ற
இருதிணை முக்கூற்று ஒருமைத் தன்மை'' —நன்-331

5. ''அவற்றுள்
செய்கென் கிளவி வினையொடு முடியினும்
அவ்வியல் திரியா என்மனார் புலவர் —தொல்-204

''செய்குஎன் ஒருமையும் செய்கும் என் பன்மையும்
வினையொடு முடியினும் விளம்பிய முற்றே'' —நன்-333

(4) அன், ஆன், அள், ஆள்—படர்க்கை ஒருமை.

(5) அர், ஆர், ப, மார்—பலர் பால் படர்க்கை.[7] மார் வினையொடும் முடியும்.[6]

ஆக இவ்விருபத்து மூன்று கிளவிகள் பால் திணை உணர்த்தும் பால் ஈறுகளாம்.[7]

(6) எண்ணியல் தொடர்களில் தன்மைப் பன்மைக் கிளவியும் மற்ருக வரும்.

யானும் என் எஃகமும் சாறும்.[8]

---

6. "அன் ஆன் அள் ஆள் என்னும் நான்கும்
ஒருவர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே" —தொல்-205

"அன் ஆன் இறுமொழி ஆண்பால் படர்க்கை"
—நன்-325

"அள் ஆள் இறுமொழி பெண்பாற் படர்க்கை"
—நன்-326

"அர் ஆர் ப என வரூஉ மூன்றும்
பல்லோர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே"
—தொல்-206

"மாரைக் கிளவியும் பல்லோர் படர்க்கை
காலக் கிளவியோடு முடியும் என்ப" —தொல்-207

"அர் ஆர் பவ்வூர் அகரம் மார் ஈற்ற
பல்லோர் படர்க்கை, மார் வினையொடு முடிமே"
—நன்-327

7. "பன்மையும் ஒருமையும் பாலறிவந்த
அந்நாலைந்து மூன்றுதலை யிட்ட
முன்னுறக் கிளந்த உயர்திணயவ்வே" —தொல்-208

8. "அவற்றுள்
பன்மை உரைக்கும் தன்மைக் கிளவி
எண்ணியல் மருங்கில் திரிபவை உளவே" —தொல்-209

(7) யார் என்னும் வினாவின் கிளவி உயர்திணை முப்பாலுக்கும் குறிப்பு முற்றாக வரும்

அவன் யார்; அவள் யார்; அவர்யார்.[9]

(8) செய்யுள் திரிபுகள்.

பெயர்களைப் போலவே செய்யுளில்

ஆ ஓ ஆதல் உண்டு.

வந்தாம்—வந்தோம்.

ஆய் என் கிளவியும் ஓய் எனத்திரிதல் உண்டு.

வந்தாய்—வந்தோய்.[10]

(9) குறிப்பு வினைமுற்று.

பொன்னன் வந்தான்—இயற்பெயர்

அவன் பொன்னன்—குறிப்பு வினைமுற்று

அவன் அல்லன்— ,,

அவன் பொன் அன்னன்— ,,

அவன் அரியன்— ,,

பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் உணர்த்தும் பெயர்களோடு பால் ஈறுகள் சேர்ந்து உடை

---

9. "யாஅர் என்னும் வினாவின் கிளவி
அத்திணை மருங்கின் முப்பாற்கும் உரித்தே"
—தொல்-210

"யார்என் வினா வினைக்குறிப்பு உயர்முப்பால்"—நன்-349

10. "பாலறி மரபின் அம்மூ வீற்றும்
ஆவோ ஆகும் செய்யுள் உள்ளே" —தொல்-211
"ஆய் என் கிளவியும் அவற்றொடு கொள்ளும்"
—தொல்-212

11. 'அதுச் சொல் வேற்றுமை உடைமையானும்
கண்ணென் வேற்றுமை நிலத்தினானும்
ஒப்பினானும் பண்பினானும் என்று
அப்பாற் காலம் குறிப்பொடு தோன்றும்" —தொல்213

மைப் பொருளிலும் இடப்பொருளிலும் பெயர் வடிவம் பெறுவன குறிப்பு வினை முற்ருகும். இவை பயனிலை யாகுங்கால் இத்தகைய அமைப்பைப் பெறுகின்றன.

'பொன்னன் வந்தான்' என்னும் தொடரில் அஃது இயற் பெயராகும். பொன்னை உடையவன் என்ற பொருள் அதற்கு இல்லை. அவன் பொன்னன் என்று கூறும் பொழுது அவன் பொன்னை உடையவன் என்பது பொரு ளாம்: எனவே அது குறிப்பு வினை முற்ருகும்.

குறிப்புவினைமுற்று பண்பு அடியாகப் பிறப்பது; தெரிநிலை வினை செயலை அடிப்படையாகக் கொண்டு பிறப்பது. இதுவே தெரிநிலை வினைக்கும் குறிப்பு வினைக்கும் உள்ள வேறுபாடு ஆகும்.[11]

---

"அன்மையின் இன்மையின் உண்மையின் வன்மையின்
அன்ன பிறவும் குறிப்பொடு கொள்ளும்
என்ன கிளவியும் குறிப்பே காலம்" தொல்–214

"பன்மையும் ஒருமையும் பாலறி வந்த
அன்ன மரபிற் குறிப்பொடு வருஉங்
காலக் கிளவி உயர்திணை மருங்கின்
மேலைக் கிளவியொடு வேறுபாடு இலவே" —தொல்215

"இன்று இல உடைய என்னும் கிளவியும்
அன்று உடைத்து அல்ல என்னும் கிளவியும்
பண்புகொள் கிளவியும் உளவென் கிளவியும்
பண்பிணுகிய சினைமுதற் கிளவியும்
ஒப்பொடு வருஉங் கிளவியொடு தொகைஇ
அப்பாற்பத்தும் குறிப்பொடு கொள்ளும் —தொல்-220

"பன்மையும் ஒருமையும் பாலறிவந்த
அன்னமரபிற் குறிப்பொடு வருஉங்
காலக் கிளவி அஃறிணை மருங்கின்
மேலைக் கிளவியொடு வேறுபாடு இலவே" —தொல்221

யார் என்பது வினைக் குறிப்பாகும். அஃது உயர் திணைமுப்பாலுக்கும் வரும்.

அவன் யார், அவள் யார், அவர் யார்,[12]

2. அஃறிணை வினை

அ ஆ வ—படர்க்கைப் பலவின்பால் விகுதிகள்.[13]

து று டு ஒன்றன் படர்க்கை.[14]

இவை ஆறும் அஃறிணை வினை ஈறுகளாம்.[15]

எவன் என்னும் வினா, குறிப்பு வினை முற்று ஆகும்.

அஃது எவன்; அவை எவன் என இருபாற்கும் உரித்து,[16]

3. விரவுத்திணை வினை.

முன்னிலை, வியங்கோள், வினை எச்சம், இன்மை செப்பல், வேறு என் கிளவி, செய்ம்மன, செய்யும், செய்த

---

12. "யாஅர் என்னும் வினாவின் கிளவி
அத்திணை மருங்கின் முப்பாற்கும் உரித்தே"—தொல்-210
"யார்என் வினா வினைக்குறிப்பு உயர் முப்பால்"
—நன்-349

13. "அஆவ என வரூஉம் இறுதி
அப்பால் மூன்றே பலவற்றுப் படர்க்கை" —தொல்-216

14. "ஒன்றன் படர்க்கை தறட ஊர்ந்த
குன்றியல் உகரத்து இறுதி யாகும்" —தொல்-217

15. "பன்மையும் ஒருமையும் பாலறி வந்த
அம்மூ இரண்டும் அஃறிணையவ்வே" —தொல்-218

16. "அத்திணை மருங்கின் இருபாற் கிளவிக்கும்
ஒக்கும் என்ப எவன் என் வினாவே" —தொல்-219
"எவன்என் வினா வினைக்குறிப்பு இழிஇருபால்"
—நன்-350

என்னும் கிளவிகளும் விரவு வினைகளாம். இவை இரு திணைக்கும்உரிய பொது வினைகளாம்.[17]

இ ஐ ஆய்—முன்னிலை ஒருமை.[18]

இர் ஈர் மின்— பன்மை.[19]

ஏனையவை எல்லா இடத்திற்கும் உரியவாய் வரும்.[20]

---

17. "முன்னிலை வியங்கோள் வினையெஞ்சு கிளவி
இன்மை செப்பல் வேறுஎன் கிளவி
செய்ம்மன செய்யும் செய்த என்னும்
அம்முறை நின்ற ஆயெண் கிளவியும்
திரிபுவேறு படூஉஞ் செய்திய வாகி
இருதிணைச் சொற்கும் ஓரன்ன உரிமைய" —தொல்-222

18. "அவற்றுள்
முன்னிலைக் கிளவி
இ ஐ ஆய் என வரூஉ மூன்றும்
ஒப்பத் தோன்றும் ஒருவர்க்கும் ஒன்றற்கும்"
—தொல்-223

"ஐ ஆய் இகர ஈற்ற மூன்றும்
ஏவலின் வரூஉம் எல்லா ஈற்றவும்
முப்பால் ஒருமை முன்னிலை மொழியே" —நன்-335

19. "இர் ஈர் மின்என வரூஉ மூன்றும்
பல்லோர் மருங்கினும் பலவற்று மருங்கினும்
சொல்லோர் அனைய என்மனார் புலவர்" —தொல்-224

"இர் ஈர் ஈற்ற இரண்டும் இருதிணைப்
பன்மை முன்னிலை; மின் அவற்று ஏவல்" —நன்-337

20. "எஞ்சிய கிளவி இடத்தொடு சிவணி
ஐம்பாற்கும் உரிய தோன்ற லாறே" —தொல்-225

"வேறுஇல்லை உண்டு ஐம்பால் மூவிடத்தன" —நன்-33

வியங்கோட் கிளவி படர்க்கையில் மட்டும் வரும். ஏனையவை ஐம்பால் மூவிடத்திற்கும் உரியன ஆகும்.[21]

செய்யும் என்னும் முற்று பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை இவற்றிற்கு மட்டும் முற்றாக வருதல் இல்லை. பெயரெச்சமாகுங்கால் இவ்வரையறை இல்லை.[22]

### 4. வினை யெச்ச வாய்பாடுகள்.

'செய்' என்பதைப் பகுதியாகக் கொண்டு அவற்றோடு சேரும் இடைச் சொற்களைக் கொண்டு வாய்பாடுகள் அமைப்பர்.

செய்து—செய்+து; செய்யூ—செய்+ஊ;
செய்பு—செய்+பு; செய்தென—செய்+து+என;
செய்யியர்—செய்+இயர்; செய்யிய—செய்+இய,
செயின்—செய்+இன்;செய—செய்+அ;செயற்கு—
செய்+அல்+கு;

---

21. "அவற்றுள்
முன்னிலை தன்மை ஆயீர் இடத்தொடு
மன்னாதாகும் வியங்கோட் கிளவி" —தொல்-226
"கயவொடு ரவ்வொற்று ஈற்ற வியங்கோள்
இயலும் இடம்பால் எங்கும் என்ப" —நன்-338

22. "பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை
அவ்வயின் மூன்றும் நிகழும் காலத்துச்
செய்யும் என்னும் கிளவியொடு கொள்ளா"
—தொல்-227
"பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையிற்
செல்லா தாகும் செய்யுமென் முற்றே" —நன்-348
"அவற்றொடு வருவழிச் செய்யுமென் கிளவி
முதற்கண் வரைந்த மூவீற்றும் உரித்தே" —தொல்-235

**செய்து செய்யூச் செய்பு செய்தெனச்
செய்யியர் செய்யிய செயின் செயச் செயற்கென
அவ்வகை ஒன்பதும் வினையெஞ்சு கிளவி.[23] —தொல் 228**

பின்முன் கால் கடை வழி இடத்து என்னும் இடக் கிளவிகள் 'செய்த' என்னும் வினை வாய்பாட்டோடு சேர்ந்துவினையெச்ச வாய்பாடுகளாகவும் அமையும்.[24]
—தொல்-22

இவையேயன்றி இகர ஈற்று வினை யெச்சமும் உள்ளது. ஆடி, ஓடி, அசை இ, நசை இ முதலியன இவ் வாய்பாட்டில் அடங்கும். இதற்கு வாய்பாடு ஈண்டுக்கூற வில்லை. எனினும் எழுத்ததிகாரத்தில் புணரியலில் இதைக் குறிப்பிட்டுள்ளார்.

'இனியணி என்னும் காலையும் இடனும்
வினையெஞ்சு கிளவியும் சுட்டும் அன்ன'.
—தொல்-236

ஆடி ஓடி அசைஇ முதலியன
இகர ஈற்று வினையெச்சங்களாம்.

செய்து செய்யூ செய்பு என்பன மூன்றும் தன் வினை முதல் கொள்ளும் வினை முற்றையே முடிக்கும் சொல்லாகக் கொண்டு இயையும்.

---

23. "செய்து செய்பு செய்யாச் செய்யூச்
செய்தெனச் செயச்செயின் செய்யிய செய்யியர்
வான்பான் பாக்கின வினை எச்சம் பிற
ஐந்துஒன்று ஆறு முக்காலமும் முறைவரும்" —நன்-343

24. "பின்முன் கால்கடை வழி இடத்து என்னும்
அன்ன மரபின் காலங் கண்ணிய
என்ன கிளவியும் அவற்றியல் பினவே" —தொல்-229

"அவன் செய்து வந்தான்"

"அவன் உண்ணூ வந்தான்"

"அவன் உண்குபு வந்தான்".[25]

"அவன் செய்ய வந்தான்"

"மழை பெய்தென நெல் விளைந்தது"

"கையிற்று வீழ்ந்தான்; —கையிறூ வீழ்ந்தான்"

"கையிறுபு வீழ்ந்தான்."[26]

"ஞாயிறு பட்டு வந்தான்" என்ற தொடர் இவ் விதிக்கு மாறுபட்டதாகும். செய்து (பட்டு) என்பது வந்தான் என்னும் பிறவினை முதல் வினையைக் கொண்டு முடிந்தது. "உரற்கால் யானை ஒடித்து உண்டு எஞ்சிய மரம்" என்பதும் அது. இவற்றை எச்சத்திரிபாகக் கொள்வர்.

"வினையெஞ்சு கிளவியும் வேறுபல் குறிய"
என்ற எச்சயியல் சூத்திரத்தில் இதற்கு
விளக்கம் தருவர். —தொல்-457

"சொற்றிரியினும் பொருள் திரியா வினைக்குறை"
என்று நன்னூல் விளக்கம் தரும். —நன்-346

சினை வினைக்கும் முதல் வினைக்கும் உள்ள தொடர்பை ஒட்டிச் செய்து செய்யூ செய்பு என்னும் வாய்பாட்டிலும் சினைவினை வருதல் உண்டு.[27]

---

25. "அவற்றுள்
முதல்நிலை மூன்றும் வினைமுதல் முடிபின" —தொல்-230
"அவற்றுள்
முதலில் நான்கும் ஈற்றில் மூன்றும்
வினைமுதல் கொள்ளும் பிறவும் ஏற்கும்பிற" —நன்-344

26. "ஏனை எச்சம் வினைமுதலானும்
ஆன் வந்து இயையும் வினைநிலையானும்
தாமியல் மருங்கின் முடியும் என்ப" —தொல்-232

27. "அம்முக் கிளவியும் சினைவினை தோன்றின்
சினையொடு முடியா முதலொடு முடியினும்
வினையோர் அனைய என்மனார் புலவர்" தொல்-221

**5. எச்சங்கள் காலம் உணர்த்தமாறு.**

சொல் வடிவங்களைக் கொண்டு எச்சங்கள் காலம் காட்டுதலை உறுதி செய்ய இயலாது. அடுத்து வரும் வினை முற்றின் காலத்திற்கு முன் வினையெச்சம் உணர்த்தும் செயல் அமைந்திருந்தால் அஃது இறந்தகாலமாகும். அதற்குப் பின் நடைபெறுவதாக இருந்தால் எதிர்வு உணர்த்தும். ஒரே சமயத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளாக இருந்தால் நிகழ்வு எனப்படும்.

"அவன் செய்து வந்தான்."

"அவன் செய்து வருவான்."

"அவன் செய்து வருகிறான்."

செய்து என்பது வருதலை நோக்க முன் நடக்கும் நிகழ்ச்சியாகும். எனவே இஃது இறந்த காலமாகும்,

இதனைக் காரணப் பொருட்டு என நன்னூலும் விளக்கும்.

"மழை பெய்ய நெல் விளைந்தது" (இறப்பு)

"நெல் விளைய மழை பெய்தது" (எதிர்வு)

"கோழி கூவப் பொழுது விடிந்தது" (நிகழ்வு)

இம்மூன்று தொடர்களுள் 'செய' என்னும் வாய்பாடு மூன்று காலங்களில் வந்துள்ளமை காண்க.

காரணப் பொருட்டாக வருவது இறப்பு; காரியப் பொருட்டாக வருவது எதிர்வு. ஒரே சமயத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளை இணைப்பது நிகழ்வு என்பர். எனவே வினையெச்சக்கால நியதி அது முற்று உணர்த்தும் செயலோடு கொண்ட தொடர்பை ஒட்டியதாகும்.

## 6. வினையெச்சங்கள் அடுக்கி முடிதல்

ஒரு வாய்பாட்டினும் பல வாய்பாட்டினும் வினை எச்சக் கிளவிகள் அடுக்கி வந்தாலும் முற்றுக்கு அடுத்த எச்சம் முடிய ஏனையவும் பொருள் முடிந்தனவாம்.

உண்டு தின்றோடிப் பாடி வந்தான்.[28]

## 7. பெயரெச்ச வாய்பாடுகள்

செய்யும் செய்த என்பன பெயரெச்ச வாய்பாடு களாம். செய்யும் என்பது நிகழ்வையும் செய்த என்பது இறப்பையும் உணர்த்தும்; இவை எல்லாப் பெயர்களை யும் கொண்டு முடியும். இடம், பொருள், காலம். கருவி. தொழில் பற்றி வரும் பெயர்களைக் கொண்டு இவை முடியும். இவ்விரண்டு வாய்பாடுகளுக்கு மட்டும் தொல் காப்பியர் காலம் சுட்டுவர். ஏனைய எந்த வினையமைப் பிற்கும் அவர் காலம் தெளிவு படுத்தவில்லை.[29]

---

28. "பன்முறை யானும் வினைஎஞ்சு கிளவி
சொன்முறை முடியாது அடுக்குந வரினும்
முன்னது முடிய முடியுமன் பொருளே" —தொல்-233

29. நிலனும் பொருளும் காலமும் கருவியும்
வினைமுதற் கிளவியும் வினையும் உளப்பட
அவ்வறு பொருட்கும்ஓர் அன்ன உரிமைய
செய்யும் செய்த என்னும் சொல்லே" —தொல்-234

"செய்த செய்கின்ற செய்யுமென் பாட்டில்
காலமும் செயலும் தோன்றிப் பாலொடு
செய்வ தாதி யறுபொருட் பெயரும்
எஞ்ச நிற்பது பெயரெச்சம்மே" —நன்-340

"அவற்றொடு வருவழிச் செய்யுமென் கிளவி
முதற்கண் வரைந்த மூவீற்றும் உரித்தே" —தொல்-235

**8. எதிர் மறையில் எச்சங்கள்**

பெயரெச்சக் கிளவியும் வினையெச்சச் கிளவியும் எதிர் மறுத்து மொழியினும் அவற்றின் பொருள் நிலை திரிபு பெறு.[30]

உண்ணுக் குதிரை.

உண்ணுது வந்தான்.

**9. எச்சத் தொடரும் தொகை நிலைத் தொடரும்**

எச்சத் தொடர்கள் இடைப் பிற வரலாக எச் சொல்லையும் ஏற்கும். தொகைச் சொற்கள் அவ்வாறு ஏலா.

உழுது வந்தான்—உழுது சத்தான் வந்தான்

கொல்லும் யானை—கொல்லும் காட்டுள் யானை

உழு தொழில்—வினைத் தொகை.

செந்தாமரை—பண்புத் தொகை.

இடையில் சொற்கள் வருவதற்கு இல்லை. எனவே இவை தொகை எனப்படும்.[31]

**10. பெயரெச்சத் திரிபு**

செய்யும் என்னும் பெயரெச்சம் இடை யகரமும் உகரமும் கெட்டு வருதலும் உண்டு.

---

30. "பெயரெஞ்சு கிளவியும் வினையெஞ்சு கிளவியும்
எதிர்மறுத்து மொழியினும் பொருள்நிலை திரியா"
—தொல்-235

31. "தத்தம் எச்சமொடு சிவணும் குறிப்பின்
எச்சொல் லாயிலும் இடைநிலை வரையார்"
—தொல்-237

வாவும் புரவி—வாம்புரவி.

போகும் காலம்—போங் காலம்.[32]

## 11. கால மயக்கமும் பொருள் மயக்கமும்

### (1) எச்சமும் முற்றும் காலம் வேறுபடுதல்

"அவன் செய்து வந்தான்"

"அவன் செய்து வருவான்"

செய்து என்பது வந்தான் என்னும் இறந்த கால முற்ருேடு முடிந்தது. அது வருவான் என்னும் எதிர் வோடும் முடிந்தது.[33]

(2) முக்காலத்தும் நிகழும் நிகழ்ச்சியை நிகழும் காலத்தில் கூறல் வேண்டும் என்பர்.

"மலை நிற்கும்" "ஞாயிறு இயங்கும்".[34]

---

32. "அவற்றுள்
செய்யும் என்னும் பெயரெஞ்சு கிளவிக்கு
மெய்யொடும் கெடுமே ஈற்றுமிசை உகரம்
அவ்விடன் அறிதல் என்மனுர் புலவர்" —தொல்-238

"செய்யும் என்எச்ச ஈற்று உயிர்மெய் சேறலும்
செய்யுளுள் உம் உந்து ஆகலும் முற்றேல்
உயிரும் உயிர்மெய்யும் ஏகலும் உளவே" —நன்-341

33. "செய்தென் எச்சத்து இறந்தகாலம்
எய்திடன் உடைத்தே வாராக்காலம்" —தொல்-239

34. முந்நிலைக் காலமும் தோன்றும் இயற்கை
எம்முறைச் சொல்லும் நிகழும் காலத்து
மெய்ந்நிலைப் பொதுச்சொற் கிளத்தல் வேண்டும்"
—தொல்-240

**12. விரவுப் பொருளிலும் மிகுதிப் பொருளிலும் சிறப்புப் பொருளிலும் இயற்கைப் பொருளிலும் தெளிவுப் பொருளிலும் காலம் மயங்குதல்:**

(1) சோறு உண்ணு நின்றேன் விரைவுப் பொருளில் 'உண்டேன் போந்தேன்' எனக் கூறுதல் விரைவு பற்றிக் கூறியதாகும்.[35]

(2) 'அறம் வெல்லும் பாவம் தோற்கும்'' மிகுதி பற்றிய நிகழ்ச்சி நிகழும் காலத்தில் கூறப்படும்.[36]

(3) காட்டில் கூறை கோட்படுதல் ஒருதலை என்று துணிந்த வழிக் கூறை கோட்படா முன்னும், இக் காட்டுள் போகிற் கூறை கோட்பட்டான்' 'கூறை கோட் படும்' (நிகழ்வு) என எதிர்வில் கூறவேண்டுவன இறப் பிலும் நிகழ்விலும் கூறப்படும் இயல்பு உடையன ஆகிறது. எறும்பு முட்டை கொண்டு தெற்றியேறின் மழை பெய்தது; மழை பெய்யும். எதிர்வு இறப்பிலும் நிகழ்விலும் கூறுவர்.[37]

---

35. "வாராக் காலத்தும் நிகழும் காலத்தும்
ஓராங்கு வரூஉம் வினைச்சொற் கிளவி
இறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல்
விரைந்த பொருள என்மனார் புலவர்" —தொல்-341

36. "மிக்கதன் மருங்கின் வினைச்சொற் சுட்டி
அப்பண்பு குறித்த வினைமுதற் கிளவி
செய்வது இல்வழி நிகழும் காலத்து
மெய்பெறத் தோன்றும் பொருட்டாகும்மே"
—தொல்-242

37. "வாராக் காலத்து வினைச்சொற் கிளவி
இறப்பினும் நிகழ்வினும் சிறப்பத்தோன்றும்
இயற்கையும் தெளிவும் கிளக்குங்காலை" —தொல்-245

இவர் பண்டு இப் பொழிலகத்து விளையாடினர்
,, ,, விளையாடுவர்
,, ,, விளையாடும்

என மூன்று காலமும் வருதல் காண்க.[38]

**13. பொருள் மயக்கம் :**

ஒரே தொடரில் இரண்டு பொருள்கள் நிலை பெறுதலும் உண்டு.

(1) **ஓதல் வேண்டும்:** மகன் ஓதலை வேண்டும் (விரும்பும்) மகன் ஓதலைத் தந்தை வேண்டும் என இரு பொருள் அமைதல் காண்க.[39]

(2) **வினாவும் எதிர்மறையும்**

"யானா வைதேன்?"—இதில் எதிர் மறைட் பொருளும் வினாப் பொருளும் அமைந்திருத்தல் காண்க.

வற்புறுத்திச் சொல்லும் இத்தகைய கூற்றுக்களில் வினா எதிர் மறைப் பொருளையும் தரும் என்பர்[40]

(3) 'திண்ணை மெழுகிற்று'

'திண்ணை மெழுகப்பட்டது'

---

38. "வாராக் காலத்து வினைச்சொற் கிளவி
இறப்பே எதிர்வே ஆயிரு காலமும்
சிறப்பத் தோன்றும் மயங்குமொழிக் கிளவி"
—தொல்-247

"ஏனைக் காலமும் மயங்குதல் வரையார்" —தொல்-248

39. "இதுசெயல் வேண்டும் என்னும் கிளவி
இருவயின் நிலையும் பொருட்டாகும்மே
தன்பாலானும் பிறன்பாலானும் —தொல்-243

40. "வன்புற வரூஉம் வினாவுடை வினைச்சொல்
எதிர்மறுத்து உணர்த்துதற்கு உரிமையும் உடைத்தே"
—தொல்-244

இரண்டு தொடர்களும் ஒரே பொருளை உணர்த்தும் என்பர். செயப்படு பொருளைச் செய்தது போலத் தொழிற்படக் கிளத்தலும் வழக்கில் உள்ளது என்பர்.[41]

## 14. நன்னூல் தரும் சிறப்புச் செய்திகள்

1. உயர்திணை வினைகளுள் தொல்காப்பியர் தன்மை இடப் பெயரை அடக்க, அதனை விரவுப் பெயருள் நன்னூல் காட்டும். அன் என்னும் தன்மை ஒருமை விகுதியையும் உடன் சேர்ப்பர்.

2. செய்து என்பது முற்றோடு முடியும் என்பர் தொல்காப்பியனார். அதனோடு செய்கும் என்பதையும் உடன் சேர்த்துக் கூறும்.

4. தொல்காப்பியனார் படர்க்கையில் மட்டும் வியங் கோள் வரும என்பர். வியங்கோள் மூவிடத்திற்கும் வரும் என்று நன்னூல் கூறும். அதற்கு விகுதிகள் கயர ஆகும் என்று அவற்றைக் குறிப்பிடும்.

5. வினை யெச்ச வாய்படுகளில் செய்யா, வான், பான், பாக்கு என்பவற்றைக் கூட்டும்; சொற்கு என் பதைக கூறவில்லை.

6. கால மயக்கம் பொருள் மயக்கம் இவற்றை வழா நிலை வழுவமைதிகளில் நன்னூல் காட்டுகிறது.

7. வினையெச்ச வாய்பாடுகளுள் செய்து செய்பு செய்யா செய்யூ செய்தென என்பன இறப்பும், செய என்பது நிகழ்வும், செயின் செய்யிய செய்யியர் செய் வான் செய்பாக்கு என்பன எதிர்வும் காட்டும் எனத் தெளிவுபடுத்துவர். நன்343

---

41. "செயப்படு பொருளைச் செய்தது போலத்
தொழிற்படக் கிளத்தலும் வழக்கியல் மரபே"
—தொல்-246

# 15. இடையியல்

1. பெயரும் வினையும் நேரிடையே பொருள் உணர்த்துவனவாகும். அவை தனித்து இயங்கும் ஆற்றல் பெற்றவையாகும். சூழ்நிலை ஒட்டிப் பொருள் தன்மை பெற்றும் பிறவற்றின் உறுப்பாகவும் சார்பாக வும் வருவன இடைச் சொற்களாகும்.[1]

"இடையெனப்படுவ பெயரொடும் வினையொடும்
நடைபெற்றியியலு தமக்கியல்பு இலவே" —249

2. அவை சாரியைகளாகவும், கால இடை நிலை களாகவும், வேற்றுமை உருபுகளாகவும், அசை நிலைகளா கவும், இசை நிறைக் கிளவிகளாகவும், உவம உருபுகளா கவும் அமைகின்றன. இவையே யன்றி ஒரு சில இடைச் சொற்கள் தத்தம் குறிப்பில் பொருள் செய்குவநவாகவும் இடம் பெறுகின்றன. இவற்றையே இடையியல் என் னும் தலைப்பில் தொல்காப்பியனாரும் நன்னூலாரும் விரித்துக் கூறுவர்.[1]

3. மேற் கூறப்பட்ட இடைச் சொற்கள் சொற் களுக்கு உறுப்பாக அமைதலோடு அன்றித் தம்மால் சாரப்படும் சொற்களுக்கு முன்னும் பின்னும் இடம் பெற்று இச் சிறப்புப் பொருள்களைத் தருகின்றன.

அதன் வடிவங்கள் ஈறுதிரிதலைப் பெறுதலும் உண்டு. ஓர் இடைச் சொல்லை அடுத்து மற்றோர் இடைச் சொல்வருதலும் உண்டு.

---

1. தொல் 250; நன் 240;

அது மன்—பின்வந்தது.

கொன்னூர்—முன்வந்தது.

உயிர் போகுக தில்ல—தில் என்பது தில்ல என ஈறு திரிந்தது.

வருக தில்லம்ம—தில் என்பதை அடுத்து அம்ம என்பது வந்தது.[2]

4. தத்தம் குறிப்பில் பொருள் செய்குந பின்வருமாறு:

(1) மன்—கழிவு, ஆக்கம், ஒழியிசை.[3]

(2) தில்—விழைவு, காலம்,[4]

(3) கொன்—அச்சம்,பயனின்மை, காலம், பெருமை

(4) உம்—எச்சம், சிறப்பு,எதிர்மறை, முற்று, எண், தெரிநிலை, ஆக்கம் என்னும் இவ் எட்டுப் பொருளில் வரும்.[5]

(5) ஓ—பிரிநிலை, வினா, எதிர் மறை, ஒழியிசை, தெரிநிலைக் கிளவி, சிறப்பு இவ் ஆறு பொருளைத் தரும்.[6]''

(6) ஏ—தேற்றம், வினா, பிரிநிலை, எண், ஈற்றசை இவ் ஐந்து பொருளைத் தரும்.[7]

(7) என, என்று—வினை, குறிப்பு, இசை, பண்பு, எண், பெயர் இவ் அறு பொருளைத் தரும்.[8]

(8) மற்று—வினைமாற்று, அசைநிலை.[9]

---

2, தொல்–250
3. தொல்-262 நன்-432
4. தொல்-253 நன்-431
5. தொல்-254, 255
6. தொல்–26ು நன்-423
7. தொல்-257 நன்-422
8. தொல்-259, 260 நன்-424
9. தொல்-262 நன்-433

(9) எற்று—இறந்தது என்னும் பொருளைத் தரும்.[10]

(10) மற்றையது—மற்றையது என்பது சுட்டப்பட்ட தனை ஒழித்து அதன் இனம் குறித்து நிற்கும்.[11]

(11) மன்ற—தெளிவுப் பொருள் தரும்.[12]

(12) தஞ்சம்—எளிது என்னும் பொருண்மை தருவ தாகும்.[13]

(13) அந்தில்—ஆங்கு என்னும் இடப் பொருளைத் தரும்; அசை நிலைக் கிளவியாகவும் வரும்.[13]

(14) கொல்—ஐயப் பொருளைத் தரும்.[14]

(15) எல்—விளக்கம் என்னும் பொருளைத் தரும்.[15]

(16) ஆர்—விரவுப் பெயராக வரும் இயற் பெயர் களுக்கு உயர் சொல் விகுதியாக வருதல் உண்டு.

''சாத்தனார்,'' ''நரியார்''

ஆர் என்பது அசைநிலைக் கிளவியாகவும் வருதல் உண்டு.

''பெயரினாகிய தொகையுமாரி உளவே''—மார்— அசை நிலைக் கிளவி.[16]

(17) ஏ, குரை—இவை அசை நிலையாகவும் இசை நிறையாகவும் வரும்.[17]

---

10. தொல்-263
11. தொல்-264 நன்-434
12. தொல்-265
13. தொல்-266
14. தொல்-267 437
15. தொல்-268 435
16. தொல்-269
17. தொல்-270, 271

(18) மா—வியங்கோள் அசைச் சொல்லாக வரும்.[18]

(19) மியா, இக, மோ, மதி, இகும், சின்—இவை ஆறும் முன்னிலை அசைச் சொற்களாகும்.[19]

அவற்றுள் இகுமும் சின்னும் முன்னிலை இடத்தோடு அன்றித் தன்மைக்கும் படர்க்கைக்கும் வரும்.[20]

(20) அம்ம—ஒன்று கேள் என்னும் உரை யசைக் கிளவியாக வரும்.[21]

(21) ஆங்க உரையசைக் கிளவியாக வரும்.[22]

(22) போலும்—உரையசைக் கிளவியாக வரும்.[23]

(23) யா, கா, பிற, பிறக்கு, அரோ, போ, மாது இவை ஏழும் அசை நிலைக்கிளவிகள்.[24]

(24) ஆக, ஆகல் என்பன அசை நிலைகள்; இவை இரட்டித்து வரும் இயல்பின.[25]

(25) 'ஔ' என்பதும் இவ்வாறு இரட்டித்து வரும். அஃது அளபெடுத்து 'ஔ உ ஔ உ' என இரட்டித்து வரும்.[26]

(26) நன்றே, அன்றே, அந்தோ, அன்னோ என்பனவும் குறிப்போசையால் இரட்டித்துப் பொருள் உணர்த்தும்.

---

18. தொல்-272
19. தொல்-273 நன்-439
20. தொல்-275
21. தொல்–276 1; நன்-438
22. தொல்-277
23. தொல்-278
24. தொல்-279 நன்-441
25. தொல்-280
26. தொல்-281

இவை சூழ்நிலைக்கேற்பப் பொருள் உணர்த்தும் தன்மைய.[27]

(27) எண்ணிடைச் சொற்களாகப் பின் வருவன வரும்:

உம், என, ஏ, எனா, என்று, ஒடு ஆகிய இவை எண்ணிடைச் சொற்களாக வரும்.[28]

நன்னூல் இடைச் சொற்கள் தரும் சிறப்புப் பொருளைக் கீழ்வரும் சூத்திரத்தில் தொகுத்துத் தருகின்றது.

"தெரிநிலை, தேற்றம், ஐயம், முற்று, எண், சிறப்பு
எதிர்மறை, எச்சம், வினா, விழைவு ஒழியிசை.
பிரிப்புக் கழிவு ஆக்கம் இன்னன இடைப் பொருள்"
—நன்-421

நன்னூல்: கீழ்வரும் புதிய இடைச் சொற்களைக் கூறும்.

(1) எண் இடைச் சொல்லாக 'உம்' என்பதைத் தொல்காப்பியம் கூறும். அதற்கு எதிர்மறை, சிறப்பு, ஐயம், எச்சம், முற்று, தெரிநிலை, ஆக்கம் முதலிய ஏழும் உடன் சேர்த்துக் கூறும். —நன்-425

(2) கொல் என்பது ஐயமாக வருதலோடு அசை நிலையாகவும் வரும் என்பர். —நன்-435

(3) ஒடு தெய் என்பன இசை நிறை என்பர்—436

(4) மன் என்பது அசை நிலைப் பொருளிலும் மிகுதிப் பொருளிலும் வரும் என்று சேர்த்துக் கூறுவர்
—நன்-432

---

27. தொல்-282
28. தொல்-287, 288, 289, 294

(5) ஓ என்பதற்குக் கழிவு, அசை நிலை இரண்டையும் சேர்த்துக் கூறுவர். —நன்-423

(6) மற்று என்பது பிறிது என்னும் பொருளிலும் வரும் என்பர் நன்னூலார். —நன்-433

(7) மியா, இக, மோ, மதி, இகும், சின் என்ற ஆறனோடு அத்தை, இத்தை, வாழிய, மாள, ஈ, யாழ என்பவற்றையும் முன்னிலை அசைச் சொற்களாகக் கூறுவர். நன்-440

# 16. உரியியல்

1. உரிச்சொல் இசை குறிப்பு பண்பு என்னும் பொருள் பற்றிப் பிறப்பது. அது பெயருக்கும் வினைக்கும் பகுதியாகவும், அடையாகவும் நின்று பொருட் கூறுக விளங்கும். ஒரு சொல் பல பொருள் உணர்த்தும். பல சொல் ஒரு பொருட்கு உரிமையாகி வரும் என்பர். எனவே உரிச்சொல் என்பது இருவகை அடிப்படையில் ஆராயப்படுவது ஆகும். ஒன்று அதன் சொல் தன்மை மற்றொன்று பொருள் தன்மையாகும். 'பெயரினும் வினையினும் மெய் தடுமாறி' என்பது சொல் தன்மையாகும். பொருள் உணர்த்தல் பொருள் தன்மையாகும்.

2. நன்னூலார் பதவியலில் பகுதி என்று கூறப் படுவனவே ஈண்டு உரிச்சொற்கள் எனப்படுகின்றன. வினைப்பகுதிகள் சொல்லின் உறுப்பாகவே நிற்கும். பண்புப் பகுதிகள் சொல்லின் உறுப்பாக அமைதலோடு அடையாகவும் விளங்கும். சொல்லின் உறுப்பாக முதல் நிலையாக நிற்றல் பற்றிப் பகுதி என்னும் இலக்கணச் சொல்லில் வழங்குதலின் அதன் அடைத்தன்மையே உரிச்சொல்லின் இலக்கணமாக இக்காலத்தில் கொள்ளப் படுகிறது. ஏனைய பண்பு அடைகள் பெயரின் உறுப் பாகவும், வினையின் உறுப்பாகவும் அமையும் இயல்பின. இவை அவ்வாறு பெயரின் உறுப்பாகவும் வினையின் உறுப்பாகவும் அமையா. வெறும் அடை நிலைகளாகவே இயங்குகின்றன. பெயரைப் போல வேற்றுமை உருபு

களும் பால் விகுதிகளும் பெறு. வினையைப் போலக் காலக் கிளவிகள் ஏலா. அவையே இக்காலத்தில் உரிச் சொற்கள் என உணரப்பட்டு வருகின்றன. இதுவே உரிச் சொல்லின் சொன்மை நிலையாம். (தொல்காப்பியர் காலத்தில் சொல்லின் முதல் நிலைகளாகிய பகுதிகளே உரிச்சொற்கள் எனப்பட்டன. அவை பகுதிகளாக நிற்றலோடு அடை மொழிகளாவும் இயங்கின. பகுதிகள் உரிச்சொற்கள் ஆயின. விகுதிகளும் ஏனைய இலக்கணச் சேர்க்கைகளும் இடை நிலைகள் எனப்பட்டன.)

3. உரிச்சொற்களின் பொருண்மை நிலையே உரியியலில் மிகுதியாகப் பேசப்படுகின்றது. 'பெயரினும் வினையினும் மெய் தடுமாறி' என்ற ஒரு தொடரைத் தவிர ஏனைய அனைத்தும் அதன் பொருண்மை நிலையையே பேசுகிறது.

4. வெளிப்படையாக விளங்கும் சொற்களின் பொருண்மை நிலை குறித்துக் கிளத்தலால் பயன் இல்லை. பொருண்மை வெளிப்படையாக உணர முடியாத சொற்களுக்கே அவர் விளக்கம் தருகின்றார். —298

5. பொருண்மை நிலையை நான்கு வகையாகப் பிரிக்கலாம். (1) ஒரு சொல்லுக்குப் பல பொருள்; (2) பல சொல்லுக்கு ஒரு பொருள்; (3) ஒரு சொல்லுக்கு ஒரு பொருள்; (4) உறழ்வு நிலையில் வைத்து அரிய சொற்களை விளக்குதல்.

## 1. ஒரு சொல்லுககுப் பல பொருள்

1. கடி என்னும் சொல்லுக்கு வரைவு, கூர்மை, காப்பு, புதுமை, விரைவு, விள்க்கம், மிகுதி, சிறப்பு, அச்சம், முன்தெளிவு (முன்தேற்று) எனப் பத்துப் பொருள்களைக் கூறுவர். ஐயம் கரிப்பு என்னும் பொருளும் தருதல் உண்டு; விரை (மணம்

ஆர்த்தல் என்னும் பொருள்களை நன்னூல் சேர்த்துக் கூறுகிறது. முன்தேற்று என்பது தொல்காப்பியம் தரும் தனிச் செய்தியாகும். —தொல்-383 நன்–446

2. தட—பெருமை; கோட்டம் (வளைவு) 320, 321.
3. கய—பெருமை, மென்மை 320, 322.
4. நளி—பெருமை, செறிவு 320, 323.
5. ஏற்றம்—நினைவு, துணிவு 337.
6. பணை—பிழைத்தல், பெருத்தல் 339
7. படர்—உள்ளல், செலவு 340.
8. தா—வலி, வருத்தம் 344.
9. விறப்பு—செறிவு, வெரூஉதல் 347, 348,
10. அழுங்கல்—அரவம், இரக்கம் 349. 350.
11. செழுமை—வளன், கொழுப்பு 352.
12. விழுமம் சீர்மை, சிறப்பு, இடும்பை 353.
13. இரங்கல்—இசை, கழிவு 358, 359.
14. கனவு—களன், அகலம் 379
15. மதவு—மடன், வலி, மிகுதி, வனப்பு 377, 378.

## 2. பல சொல்லுக்கு ஒரு பொருள்

1. உறு, தவ, நளி—மிகுதி 291; நன்-455
2. குரு, கெழு – நிறன் 301.
3. செல்லல், இன்னல்—இன்னாமை 302.
4. அலமரல், தெருமரல்—சுழற்சி 310.
5. மழவு, குழவு—இளமை 311.
6. கூர்ப்பு, கழிவு—உள்ளது சிறத்தல் 314.
7. கதழ்வு, துனைவு—விரைவு 355.
8. அதிர்வு, விதிர்ப்பு—நடுக்கம் 316.
9. வார்தல், போகல், ஒழுகல்—நேர்மை, நெடுமை 317
10. தீர்தல், தீர்த்தல்—விடல் 318.
11. கெடவரல், பண்ணை—விளையாட்டு 319.
12. தட, கய, நளி—பெருமை 320.
13. நம்பு, மேவல்—நசை 329.

14. ஓய்தல், ஆய்தல், நிழத்தல், சாஅய்தல்—உள்ள தன் நுணுக்கம் 330
15. பிணை, பேண்—பெட்பு 338.
16. பையுள், சிறுமை—நோய் 341.
17, விறப்பு, உறப்பு, வெறுப்பு—செறிவு 3 4.
18, கம்பலை, சும்மை, கலி, அழுங்கல்—அரவம் 349.
19. துவைத்தல், சிலைத்தல், இயம்பல், இரங்கல்—இசைப்பொருள 358. நன்-458
20. இலம்பாடு, ஒற்கம்—வறுமை 360.
21. ஞெமிர்தல், பாய்தல்—பரப்பு 361.
22. பே, நாம், உரும்—அச்சம் 365.
23. கறுப்பு, சிவப்பு—வெகுளி 372. (நிறம்-373)
24. நொசிவு, நுழைவு, நுணுக்கம்—நுண்மை 374.
25. பரவு, பழிச்சு—வழுத்தல் 382.

## 3. ஒரு சொல்லுக்கு ஒரு பொருள்

1. உரு—உட்கு 300.
2. புரை—உயர்வு 300.
3. மல்லல்—வளன் 303.
4. ஏ—பெற்று (பெருக்கம்) 304.
5. சீர்த்தி—மிகுபுகழ் 312.
6. மாலை—இயல்பு 313.
7. பழுது—பயனற்றது 324
8. சாயல்—மென்மை 325.
9. முழுது—எஞ்சாமை 326.
10. வம்பு—நிலையின்மை 327.
11. மாதர்—காதல் 328.
12. புலம்பு—தனிமை 331
13. துவன்று—நிறைவு 332.
14. முரஞ்சல்—முதிர்வு 333.
15. வெம்மை—வேண்டல் 334.

16. பொற்பு—பொலிவு 335.
17. வறிது—சிறிது 336.
18. எய்யாமை—அறியாமை 342.
19. நன்று—பெரிது 343.
20. கழும்—மயக்கம் 351.
21. கருவி—தொகுதி 354.
22. கமம்—நிறைவு 355.
23. அரி—ஐம்மை 356.
24. கவவு—அகத்திடு 357.
25. கவர்வு—விருப்பு 362.
26. சேரே—திரட்சி 363.
27. வியல்—அகலம் 364.
28. வாள்—ஒளி 367.
29. புனிறு—ஈன்றணிமை 375.
30. யாணர்—புதுமை 379.
31. அமர்தல்—மேவல் 380.
35. யாண்—கவின் 381.
33. ஐ—வியப்பு 385.
34. முனைவு—முனிவு 386.
35. வை—கூர்மை 381
36. எறுழ்—வலி 388.

## 4. உறழ்வு நிலையில் பொருள் உணர்த்தல்

சொற்களின் உறழ்ச்சியால் பொருண்மை விளக்குதல் உரியியலில் காணப்படும் சிறப்பியல்பாகும்.

1. உகப்பு—உயர்வு
   உவப்பு—உவகை —305
2. பயப்பு—பயன்
   பசப்பு—நிறன் —306, 7
3. இயைபு—புணர்ச்சி
   இசைப்பு—இசை —308, 9

4. உயா—உயங்கல்
உசா—சூழ்ச்சி —369, 70
உயா—உயங்கல்
வயா—வேட்கை —369, 71

5. தெவு—கொளல்
தெவ்வு—பகை —345, 46

6. வய—வலி
துய—அறிவு —366, 68

**5. நன்னூல்'தரும் சிறப்புச் செய்திகள்:**

நன்னூல் தொல்காப்பியத்தை முழுவதும் பின் பற்றினலும் பொருளதிகாரத்தில் மரபியலில் கூறப்படும் உயிர்ப் பண்புகளையும் சொல் வழக்கு மரபுகளையும் இங்கு உரியியலில் உடன் சேர்த்துக் கூறுகிறது. "கடிசொல் இல்லைக் காலத்துப் படினே" எனத் தொல்காப்பியர் எச்சயியலில் கூறும் செய்தியை

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல காலவகையினனே" —நன்-462

என்று கூறுவர்.

# 17. எச்ச வியல்

1. தொடரியலில் சொற்கள் பிறவற்றை எஞ்சி முடியும் இயல்பினைக் கூறுவது 'எச்ச வியலாகும். அச்சொற்கள் யாவை என்பதும், அவை தொகைப்படுமாறும், முற்று எச்சம்முதலிய வினை வகைகள், இடைச் சொற்கள், முதலியன பிற சொற்களோடு முடியுமாறும் இது கூறுகிறது. அவையல் கிளவி பெறும் தொடரியல்களையும் ஈதா கொடு என்பன பெறும் முடிவுகளையும் அவற்றின் பொருள் மரபுகளையும் இவ்வியலில் கூறுகின்றார். 'எச்சங்களின் மிகுதியைக் கூறினாலும் ஈற்றில் ஒரு சில புறநடைச் செய்திகளையும் கூறாமல் இல்லை. புறநடைச் செய்திகளைத் தொல்காப்பியர் கூறுவது அவர் இயல்பாகி விட்டது. எனவே எச்ச முடிவுகளைக் கூறுவதாலேயே இஃது எச்ச வியல் என்னும் பெயர் பெற்றது என்பது பொருந்தும். எனினும் சேனாவரையர் கருத்து வேறாக உள்ளது. 'கிளவியாக்கம் முதலாக உரியியல் இறுதியாகக் கிடந்த இயல்களில் உணர்த்தப்படாது எஞ்சி நின்ற சொல்லிலக்கண மெல்லாம் தொகுத்து உணர்த்துதலின் இஃது எச்ச இயல் என்னும் பெயர்த்தாயிற்று' என்பர்.

எச்ச வியற் சொற்களை நன்னூல் பொது வியலில் கூறும்.

**2. சொற்களின் வகை.**

இயற்சொல், திரிசொல், திசைச் சொல், வடசொல் ஆகிய இவை செய்யுள் இலக்கியத்தில் வழங்கும் சொற்களாகும்.[1]

---

1. "இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல் என்று அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே." —தொல் 397
—நன் 270

இயற்சொல் என்பது செந்தமிழ்ச் சொற்களாகும். திரிசொல் என்பது புலவர்கள் எடுத்து ஆளும் சொற்களாகும். அவை ஒருபல சொல் பொருளினவாகவும் பல ஒரு பொருளினவாகவும் வரும். திசைச் சொல் என்பது மக்கள் பேச்சு வழக்குச் சிறப்பு வழக்குகளாகும். வடசொல் என்பது வடமொழியில் இருந்து புகுந்த பிற மொழிச் சொற்களாகும். இவ் வடசொற்களைத் தமிழ்ப் படுத்துங்கால் வட எழுத்து நீக்கித் தமிழ் ஒலிப்படுத்துவர்.[2]

### 3. செய்யுள் விகாரம்.

செய்யுளில் ஓசை நயம் கருதிப் பெறும் திரிபுகளைச் செய்யுள் விகாரம் என்பர். அவை வலித்தல், மெலித்தல்,

---

2. "அவற்றுள்
இயற்சொல் தாமே
செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித்
தம்பொருள் வழாமை இசைக்கும் சொல்லே."
—தொல் 398
—நன் 281

"ஒரு பொருள் குறித்த வேறுசொல் லாகியும்
வேறுபொருள் குறித்த ஒருசொல் லாகியும்
இருபாற் றென்ப திரிசொல் கிளவி." —தொல் 399
—நன் 272

"செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்
தங்குறிப் பினவே திசைச்சொற் கிளவி." —தொல் 400
—நன் 273

"வடசொற் கிளவி வடவெழுத்து ஒரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே."
—தொல் 401

"சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்."
—தொல் 402
—நன் 274

விரித்தல், தொகுத்தல், நீட்டல், குறுக்கல் என்பன வாகும்.[3]

4. **பொருள்கோள்.**

செய்யுளில் பொருள் கோளுக்கு ஏற்ப முடிக்கும் சொற்கள் அமையும். அவை நிரல் நிறை, சுண்ணம் அடிமறி, மொழி மாற்று என்பர்.[4]

நிரல் நிறை வினையானும் பெயரானும் சொல் வேறு நிற்பப் பொருள் வேறு நிற்றலாகும்.[5]

சுண்ணமாவது இயல்பாக அமைந்த ஈரடிக்கண் உள்ள எண் சீரைத் துணித்து இயையும் வழி அறிந்து கூட்டி இயற்றப்படுவதாகும்.[6]

---

3. *அந்நாற் சொல்லும் தொடுக்கும் காலை*
*வலிக்கும்வழி வலித்தலும், மெலிக்கும்வழி மெலித்தலும்*
*விரிக்கும்வழி விரித்தலும் தொகுக்கும்வழித் தொகுத்த*
*நீட்டும்வழி நீட்டலும், குறுக்கும்வழிக்குறுக்கலும் [லும்*
*நாட்டல் வலிய என்மனார் புலவர்.''* —தொல் 403
*''வலித்தல் மெலித்தல் நீட்டல் குறுக்கல்*
*விரித்தல் தொகுத்தலும் வரும் செய்யுள் வேண்டுழி''*
—நன் 155

4. *''நிரல்நிறை சுண்ணம் அடிமறி மொழிமாற்று*
*அவைநான் கென்ப மொழிபுணர் இயல்பே.''*
—தொல் 404

5. *''அவற்றுள்*
*நிரல்நிறை தானே*
*வினையினும் பெயரினும் நினையத் தோன்றிச்*
*சொல்வேறு நிலைஇப் பொருள்வேறு நிலையல்.''*
—தொல் 405

6. *''சுண்ணம் தானே*
*பட்டாங் கமைந்த ஈரடி எண்சீர்*
*ஒட்டுவழி யறிந்து துணித்தனர் இயற்றல்.''*—தொல் 406

அடிமறிச் செய்யுளாவது சீர் நின்றாங்கு நிற்ப அடிகள் தத்தம் நிலையில் திரிந்து ஒன்றன் நிலைக்களத்து ஒன்று சென்று நிற்பது என்பர். அடிமறிச் செய்யுட் கண் ஈற்றடியது இறுதிச்சீர் எருத்தடியிற் சென்று திரிதலும் அடிமறிப் பொருள்கோள் ஆகும்.[7]

மொழி மாற்றியற்கை என்பது பொருளெதிரி இயையுமாறு சொல் நிலையை மாற்றி முன்னும் பின்னும் கொள்ளும் வழிக் கொள்ளுதல் என்பர்.[8]

**5. கிளைப்பெயர்கள்—தொகைநிலைத் தொடராகாமை.**

பால் ஈறுகள் பெற்ற சொற்கள் கிளைப் பெயர்கள் ஆகும். அவை பிரிந்துவிட்டால் அப்பொருட் பகுதியை அவை பெற்று நில்லா. எனவே இவை தொகைச் சொல் லாகக் கொள்ளுவதற்கு இல்லை. இரண்டு தனிச் சொற் கள் தொகைப்படும் பொழுதே அவை தொகைச் சொற் கள் ஆகும். இவை சொல் நிலையில் இணைந்து தொகைப் பட்டுள்ளனவே அன்றித் தொடரியல் நிலையில் தொகைப் பட்டில.

அவையாவன தமன், தமள், நமன், எமள், எமர் முதலாயின.[9]

---

7. "அடிமறிச் செய்தி அடிநிலை திரிந்து
சீர்நிலை திரியாது தடுமா றும்மே." —தொல் 407
"பொருள்தெரி மருங்கின்
ஈற்றடி இறுசீர் எருத்துவயின் திரிபும்
தோற்றமும் வரையார் அடிமறி யான." —தொல் 408

8. "மொழிமாற்று இயற்கை
சொல்நிலை மாற்றிப் பொருள்எதிர் இயைய
முன்னும் பின்னும் கொள்வழிக் கொளாஅல்."
—தொல் 409
பொருள்கோள் : நன் 411. முதல் 419 காண்க.

9. "த ந நு எ எனும் அவை முத லாகிய
கிளை நுதல் பெயரும் பிரிப்பப் பிரியா." —தொல் 410

## 6. ஒரு சொல்லடுக்குகள்.

இசை நிறையாகவும், அசை நிலையாகவும், பொருளொடு புணர்தல் எனவும் மூன்று வகையாக அடுக்குத் தொடர்கள் அமையும் என்பர்.

"ஏஎ ஏஎ அம்பல் மொழிந்தனள்" —இசை நிறை.

மற்றே மற்றே—அசை நிலை.

பாம்பு பாம்பு—பொருள் பற்றிய அடுக்குத் தொடர்.

மேற் கூறப்பட்ட ஒரு சொல்லடுக்கினுள் இசை நிறையடுக்கு நான்கு முறைக்குமேல் வாராது. பொருளொடு புணர்தற்கண் விரைவுப்பொருள்பட அடுக்குவது மூன்றாகிய வரம்பை உடைத்து. கண்டீர், கொண்டீர், சென்றது, போயிற்று ஆகிய இவை வினாவோடு பொருந்தி அசை நிலையாகி வரும். கேட்டை, நின்றை, காத்தை, கண்டை என்பவை முன்னிலை வினையாக வாராத வழி அவையும் அசைநிலை அடுக்குகளாம்.[10]

---

10. "இசைநிறை அசைநிலை பொருளொடு புணர்தல் என்று
அவைமூன்று என்ப ஒருசொல் அடுக்கே." —தொல் 411
"இசைப்படு பொருளே நான்கு வரம்பாகும்"
—தொல் 423
"விரை சொல் லடுக்கே மூன்று வரம் பாகும்"
—தொல் 424
"கண்டீர் என்றா கொண்டீர் என்றா
சென்றது என்றா போயிற்று என்றா
அன்றி அனைத்தும் வினாவொடு சிவணி
நின்றவழி அசைக்கும் கிளவி என்ப. —தொல் 425
"கேட்டை என்றா நின்றை என்றா
காத்தை என்றா கண்டை என்றா
அன்றி அனைத்தும் முன்னிலை அல்வழி
முன்னுறக் கிளந்த இயல்பாகும்" —தொல் 426
"அசைநிலை, பொருள்நிலை, இசைநிறைக்கு ஒருசொல்
இரண்டு மூன்று நான்கு எல்லை முறை அடுக்கும்"
—நன் 395

**7. தொகை நிலைத் தொடர்கள்.**

தொகை நிலைத் தொடர்கள் ஆறு வகைப்படும்.[11]

அவற்றுள் வேற்றுமைத் தொகை வேற்றுமைப் பொருளில் இரண்டு சொற்கள் தொகைப்பட்டு நிற்ற லாகும்.[12]

உவமப் பொருளில் உவமையும் பொருளும் எனத் தொகைப்படுவது உவமத் தொகையாகும்.[13]

வினைச் சொற்கும் வினைப் பெயர்க்கும் முதல் நிலை யாகிய உண் தின் செல் கொல் முதலியன நின்று பெயர்ச் சொற்களோடு தொகைப்பட்டுக் காலம் உணர்த்தும் தொடர் வினைத் தொகையாகும்.[14]

பண்புத் தொகை என்பது வண்ணம், வடிவு, அளவு, சுவை முதலியவற்றை உணர்த்தும் பண்புச் சொற்களும்

---

11. வேற்றுமைத் தொகையே உவமத் தொகையே
வினையின் தொகையே பண்பின் தொகையே
உம்மைத் தொகையே அன்மொழித் தொகையென்று
அவ்வாறு என்ப தொகைமொழி நிலையே."
—தொல் 412
—நன் 361; 362

12. அவற்றுள்
வேற்றுமைத் தொகையே வேற்றுமை இயல."
—தொல் 413

"இரண்டு முதலாம் இடையாறு உருபும்
வெளிப்படல் இல்லது வேற்றுமைத் தொகையே"
—நன் 363

13. "உவமத் தொகையே உவம இயல. —தொல் 414
"உவம உருபு இலது உவமத் தொகையே" —நன் 366

14. வினையின் தொகுதி காலத்தியலும்." —தொல் 415
"காலங் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை."
—நன் 364

இன்னது இது என வரும் இரு பெய ரொட்டுகளும் தொகைப் பட்டுப் பண்புத் தொகை யாகும்.[15]

இயற் பெயர், அளவுப் பெயர், நிறைப் பெயர், எண்ணத்தகு பெயர்கள் முதலியன இணைந்து எண்ணப் பட்டுத் தொகைப்படுமாயின் அவை உம்மைத் தொகை எனப்படும் [16]

அன்மொழித் தொகை என்பது பண்பு, உம்மை வேற்றுமைத் தொகை நிலைத் தொடர்கள் வழி பிற சொற்கள் நிற்பதால் அமையும் என்பர். நன்னூல் ஐந்தொகை மொழி மேல் பிற தொகல் அன்மொழி என்னும்.[17]

---

15. "வண்ணத்தின் வடிவின் அளவின் சுவையின் என்று
அன்ன பிறவும் அதன்குணம் நுதலி
இன்னது இதுவென வரூஉம் இயற்கை
என்ன கிளவியும் பண்பின் தொகையே." —தொல் 416
"பண்பை விளக்கு மொழி தொக் கனவும்
ஒரு பொருட்கு இருபெயர் வந்தவும் குணத்தொகை"
—நன் 365

16. "இருபெயர் பல்பெயர் அளவின் பெயரே
எண்ணியற் பெயரே நிறைப் பெயர்க் கிளவி
எண்ணின் பெயரொடு அவ்வறு கிளவியும்
கண்ணிய நிலைத்தே உம்மைத் தொகையே."
—தொல் 417
"எண்ணல் எடுத்தல் முகத்தல் நீட்டல்
எனு நான்கு அளவையுள் உம்இலது அத் தொகை"
—நன் 368

17. "பண்புதொக வரூஉங் கிளவி யானும்
உம்மை தொக்க பெயர்வயி னானும்
வேற்றுமை தொக்க பெயர்வயினானும்
ஈற்றுநின் றியலும் அன்மொழித் தொகையே."
—தொல் 418

தொகை நிலைத் தொடர்களுள் பொருட் சிறப்பு முன் மொழியிலும் பின் மொழியிலும் இரு மொழியிலும் இவையல்லாத அன்மொழியிலும் அமையும் என்பர்.[18]

தொகைச் சொற்கள் இரண்டு வேறு தனிச் சொற்களின் இணைப்பு என்றாலும் அவை ஒரே சொல் போல இசைக்கும்; பிரித்து இசைக்கப்படா. இடையே எச்சத் தொடர்களைப் போல இடைப் பிற வரலாகப் பிற சொற்களைப் பெறா.[19]

உயர்திணைக் கண், உம்மைத் தொகை முடிக்கும் சொல் பலர் பால் வினை கொண்டு முடியும்.

'கபில பரணர்' என்றே முடியும்.[20]

**8. குறிப்பு மொழித் தொடர்கள்.**

'அந்நெறி ஈண்டு வந்து கிடந்தது'

"அம்மலை இங்கு வந்து இதனோடு பொருந்திற்று."

---

"ஐந்தொகை மொழிமேற் பிறதொகல் அன்மொழி"
—நன் 369

18. "அவைதாம்
முன்மொழி நிலையலும் பின்மொழி நிலையலும்
இருமொழி மேலும் ஒருங்குடன் நிலையலும்
அம்மொழி நிலையாது அன்மொழி நிலையலும்
அந்நான்கு என்ப பொருள்நிலை மரபே." —தொல் 419
"முன்மொழி பின்மொழி பன்மொழி புறமொழி
எனும்நான்கு இடத்துஞ் சிறக்கும் தொகைப் பொருள்."
—நன் 370

19. "எல்லாத் தொகையும் ஒரு சொல் நடைய." —தொல் 420
"ஒருமொழி போல் நடப்பன தொகைநிலைத் தொடர்ச்
சொல்" —நன் 361

"ஊர் வந்துவிட்டது" இவ்வாறு குறிப்பு மொழித் தொடர்கள் அமைதலும் உண்டு.[21]

**9. தொடர் நிலையில் வினைமுற்று.**

முற்று என்பது சொல் நிலையில் திணைபால் எண் இடம் காலம் இவற்றைக் காட்டுவதில் முழுமை பெற்றுள்ளது. எனவே இவை முற்று என்று வழங்கப்படுகிறது.[22]

அவை தெரிநிலையாகவும் குறிப்பாகவும் இயங்கும்.

முற்றுச் சொற்கள் அடுக்கி வரினும் அவை பெயரையே முடிக்கும் சொல்லாகப் பெறும்.[23]

---

20. உயர்திணை மருங்கின் உம்மைத் தொகையே
பலர்சொல் நடைத்தென மொழிமனார் புலவர்."
"உயர்திணை உம்மைத் தொகை பலர் ஈறே" —நன் 372

22. "வாரா மரபின வரக்கூறுதலும்
என்ன மரபின எனக்கூறுதலும்
அன்னவை எல்லாம் அவற்றவற் றியல்பான்
இன்ன என்னும் குறிப்புரை யாகும்." —தொல் 422
"கேட்குந போலவும் கிளக்குந போலவும்
இயங்குந போலவும் இயற்றுந போலவும்
அஃறிணை மருங்கினும் அறையப்படுமே" நன் 409

23. இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்றச்
சிறப்புடை மரபின் அம்முக் காலமும்
தன்மை முன்னிலை படர்க்கை என்னும்
அம்மூ இடத்தான் வினையினும் குறிப்பினும்
மெய்ம்மை யானும் இவ்விரண் டாகும்
அவ்வாறு என்ப முற்றியல் மொழியே." தொல்—427
"எவ்வயின் வினையும் அவ்வியல் நிலையும்" —தொல் 428

**10. வினை யெச்சங்கள்.**

வினை யெச்சங்கள் தெரிநிலை வினை கொண்டும் முடியும். குறிப்பு வினை கொண்டு முடியுங்கால் ஆக்கச் சொல் பெற்று முடியும் என்பர்.

"உழுது வந்தான்"—
"உழுது வல்லன் ஆயினான்."[24]

**11. பெயரெச்ச வினை.**

இது பெயரைக் கொண்டு முடியும். உண்ணும் சாத்தன், உண்ட சாத்தன்.[25]

**12. ஏனைய முடிவுகள்.**

பிரிநிலை எச்சமாக வரும் ஏகாரப் பிரிநிலையும் ஓகாரமும் பிரிக்கப்பட்ட பொருளை உணர்த்தும் சொற்களோடு முடியும்.[26]

---

"அவைதாம்
தத்தம் கிளவி அடுக்குந வரினும்
எத்திறத் தானும் பெயர் முடி பினவே." —தொல் 429
—நன் 322, 323

24. "பிரிநிலை வினையே பெயரே ஒழியிசை
எதிர்மறை உம்மை எனவே சொல்லே
குறிப்பே இசையே ஆயீ ரைந்தும்
நெறிப்படத் தோன்றும் எஞ்சுபொருட்கிளவி."
—தொல் 439

24. "வினையெஞ்சு கிளவிக்கு வினையும் குறிப்பும்
நினையத் தோன்றிய முடிபா கும்மே
ஆவயிற் குறிப்பே ஆக்க மொடு வருமே." —தொல் 432

25. "பெயரெஞ்சு கிளவி பெயரொடு முடிமே."
—தொல் 433

26. அவற்றுள்
பிரிநிலை எச்சம் பிரிநிலை முடிபின.' —தொல் 431

ஒழியிசை எச்சமாக வரும் மன், தில், ஒ ஆகிய இம் மூன்றும் ஒழியிசையான் முடியும்.[27]

எதிர் மறை எச்சமாக வரும் ஏ, ஓ, உம்மை ஆகிய மூன்றும் எதிர் மறைப் பொருளைக் கொண்டு முடியும்.[28]

எச்ச உம்மையாக வரும் தொடர்கள் தன் வினையைக் கொண்டே முடியும்; பிறவினையைக் கொண்டு முடியாது.

சாத்தனும் வந்தான் என்பது கொற்றனும் வந்தான் என்னும் பொருளையே முடிக்கும் சொல்லாகக் கொள்ளும்.[29]

எச்ச உம்மைப் பொருளில் வரும் தொடர்கள் உம்மையில்லாத செஞ் சொல் தொடராயின் காலம் மயங்கியும் தொடர்கள் அமையும் என்பர்.

'கூழ் உண்கிறவன் சோறும் உண்பன்' எனக் கூறுதலும்,

கூழ் உண்டவன் சோறும் உண்பன் எனக் கூறுதலும் இதற்கு எடுத்துக் காட்டுகளாம்.[30]

என வென் எச்சம் வினையொடு முடியும்.[31]

---

27. "ஒழியிசை எச்சம் ஒழியிசை முடிபின. —தொல் 434
28. "எதிர்மறை எச்சம் எதிர்மறை முடிபின." —தொல் 435
29. "உம்மை எச்சம் இருவீற் றுனும்
தன்வினை ஒன்றிய முடிபா கும்மே." —தொல் 436
30. "தனமேல் செஞ்சொல் வருஉங் காலை
நிகழுங் காலமொடு வாராக் காலமும்
இறந்த காலமொடு வாராக் காலமும்
மயங்குதல் வரையார் முறைநிலை யான." —தொல் 437
31. "எனவென் எச்சம் வினையொடு முடிமே." —தொல் 438

குறிப்பும் இசையும் சொல்லும் முடியும் சொற்கள்:

இவை மூன்றும் சொல்லுவார் குறிப்பால் எஞ்சி நின்ற பொருளை உணர்த்தும்.

"இளைதாக முண் மரம் கொல்க களையுநர்
கை கொல்லும் காழ்த்த இடத்து"

இதற்கு இதுதான் எச்சப் பொருள் என்று கூறுதற்கு இல்லை. இதனைக் குறிப்பு எச்சம் என்பர்.

'கற்கறிக்க நன்கு அட்டாய்' என்பது குறிப்பெச்சம் என்பர்.

'வயிறு மொடு மொடுத்தது'—உண்ண வேண்டா என்னும் குறிப்பைத் தருதலின் இசை எச்சம் என்பர்.

'உயர்திணை என்மனார்'—ஆசிரியர் என்னும் சொல் எஞ்சி நின்றது. எனவே இதனைச் சொல் லெச்சம் என்பர்.[32]

## 13. அவையல் கிளவிகள்

பிறரிடம் பேசும் பொழுது தக்க சொற்களைக் கொண்டே உரையாடுதல் வேண்டும். அவைக்கண் உரைக்கக் கூடாத சொற்களை அவ்வாய்பாடு மறைத்துப் பிற வாய்பாட்டாற் கூறுதல் மரபாக உள்ளது. 'ஆன் முன் வரூஉம் ஈகார பகரம்' 'கண் கழீ இ வருதும்' 'கால்மேல் நீர் பெய்து வருதும்' முதலியன பழங்காலத்து வழக்கியல்கள் என்பது தெரிகிறது. மருவி வழங்கும்

---

32. "எஞ்சிய மூன்றும் மேல்வந்து முடிக்கும்
எஞ்சுபொருட் கிளவி இலவென மொழிப. —தொல் 439
"அவைதாம்
தத்தம் குறிப்பின் எச்சம் செப்பும்." —தொல் 440
"சொல்லென் எச்சம் முன்னும் பின்னும்
சொல்லள வல்லது எஞ்சுதல் இன்றே." —தொல்441

சொற்களாயின் அவற்றை மாற்றி மறைத்துக் கிளக்கத் தேவையில்லை என்பர்.[33]

## 14. மூவகை நிலைகள்

ஈ, தா, கொடு என்னும் மூன்று சொற்களையும் தர மறிந்து வழங்குவது இயல்பாக இருந்தது. ஈ என்பது இழிந்தோன் கூற்றாகவும்; தா ஒப்போன் கூற்றாகவும்; என்பது கொடு என்பது உயர்ந்தோன் கூற்றாகவும் வழங்கின.

கொடு என்பது படர்க்கைக்கு உரியது என்று முன்னரீக் கிளவியாக்கத்தில் கூறப்பட்டது. தன்னைப் பிறன் போல் கூறும் குறிப்பில் தன்மை இடத்தும் நிகழும் என்பர்.

அவனுக்குக் கொடு—படர்க்கைக்கு வந்தது.
எனக்குக் கொடு—தன்மைக்கு வந்தது.[34]

15. கடப்பாடு இல்லாதவை: ஒரு திணைப் பெயர் ஒரு திணைக்காய் வருவனவும், திசைச் சொல்லிடத்து

---

33. அவையல் கிளவி மறைத்தனர் கிளத்தல்." —தொல் 442
"மறைக்கும் காலை மரீஇயது ஒராஅல்." —தொல் 443

34. "ஈதா கொடுவெனக் கிளக்கும் மூன்றும்
இரவின் கிளவி யாகிட னுடைய." —தொல் 444
"அவற்றுள்
ஈயென் கிளவி இழிந்தோன் கூற்றே" —தொல்445
"தாவென் கிளவி ஒப்போன் கூற்றே." —தொல் 446
"கொடுவென் கிளவி உயர்ந்தோன் கூற்றே."
—தொல் 447

"கொடுவென் கிளவி படர்க்கை யாயினும்
தன்னைப் பிறன்போல் கூறும் குறிப்பில்
தன்னிடத் தியலும் என்மனார் புலவர்" —தொல் 448

வாய்பாடு திரிந்து வருவனவும், மூது சொல்லாகத் தொன்று தொட்டு வருவனவும், விடுகதையாக அமைவனவும், மந்திர நூல் வழக்குகளும் இவை அனைத்தும் வழங்கியவாறே கொள்வதல்லது இலக்கணத்தால் கட்டுப்படக் கூடியவை அல்ல.

1. ஓர் எருத்தை நம்பி என்று வழங்கலும், கிளியை நங்கை என்று வழங்கலும் பெயர் நிலைக் கிளவியில் மாறி வழங்கலுக்கு எடுத்துக் காட்டுகளாம்.

2. பூனைக் கண்ணன், பூசையான், புலியான், பனை மரத்தான் போன்ற வழக்குகள் திசைக் கிளவித் திரிபுகளாம்.

3. "செத்தால் தெரியும் செட்டியார் வாழ்வு"
தொன்னெறி வழியாக வரும் பழமொழியாம்.

4. "கருப்புச் சட்டைக்காரன்
காவலுக்குக் கெட்டிக்காரன்" —விடுகதை.

5. மந்திரப் பொருள்வயின் வருவன மந்திரநூலில் வருவனவாம்.[35]

## 15. முன்னிலைக் கிளவிகளின் மாற்று வடிவங்கள்

1. செய்யாய், செய் இவை ஒரே பொருள் தரும் முன்னிலைக் கிளவிகள். செய்யா என்பதை அடிப்படை

---

35. "ஈதா கொடுவெனும் மூன்றும் முறையே
"இழிந்தோன் ஒப்போன் மிக்கோன் இரப்புரை"
407

"பெயர்நிலைக் கிளவியின் ஆஅ குநவும்
திசைநிலைக் கிளவியின் ஆ அ குநவும்
தொன்னெறி மொழிவயின் ஆஅ குநவும்
மந்திரப் பொருள்வயின் ஆஅ குநவும்
அன்றி அனைத்தும் கடப்பாடு இலவே." —தொல் 449

வடிவம் என்று கொண்டால் ஈறு கெட்ட வடிவமாகிய செய் என்பது மாற்று வடிவமாகும்.[36]

2. முன்னிலைக் கிளவிகள் ஒரு சில ஈயும், ஏயும் பெற்று வரும். இவையும் மாற்று வடிவங்களாம்.

"சென்றீ பெரும" "தொட்டனை நீன்மே" செல், நில் என்பன அடிப்படை வடிவங்களாம்.[37]

## 16. பழையன கழிதலும் புதியன புகுதலும்

காலந்தொறும் புதிய சொற்களும் வழக்குகளும் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. பழைய சொற்களும் வழக்குகளும் ஒரு சில மறைந்து கொண்டே வருகின்றன. வளர்ச்சியுள்ள மொழியின் இயல்பும் வரலாறும் இவை எனலாம். அவற்றுள் குறிப்பிடத்தக்கவை சொற்களைக் குறைத்து வழங்கலும் உண்டு. இதனை முதற் குறை, இடைக்குறை, கடைக்குறை என்று வழங்கி வருகின்றனர். செய்யுள் விகாரமென்பது வேறு இது வேறு. செய்யுள் விகாரம் செய்யுளில் அருகி வருவது. அங்கே ஓசை நோக்கிக் குறைக்கப் பெறும். வழக்கில் வழக்கு மிகுதி பற்றி இச்சொற்கள் தேய்வு பெறுகின்றன.

மரை இதழ் புரையும்—முதற்குறை
நீல் உண் துகிலிகை—கடைக்குறை

---

36. "செய்யாய் என்னும் முன்னிலை வினைச்சொல்
செய் என் கிளவி ஆகிடன் உடைத்தே." தொல் 450

37. முன்னிலை முன்னர் ஈயும் ஏயும்
அந்நிலை மரபின் மெய்யூர்ந்து வருமே." தொல் 451
—நன் 336

ஓதி முது போத்து—இடைக்குறை.[38]

## 17. வேற்றுமைச் சொற்கள்

இடைச் சொற்கள் பிறசொற்களை விசேடித்து வருவனவாகும்.[39] உரிச் சொற்களிலும் இவ்வாறு வருவன உள[40]

## 18. வினைத்திரிபுகள்

வினையெச்சங்களும் கூறப்பட்ட முடிக்கும் சொற்களேயன்றி வேறு சிலவற்றையும் கொண்டு முடியும்.[41]

## 19. அரிய வழக்குகள்

வழக்கிடத்து உடன் நிற்கற்பாலன அல்லாதனவும் உடன் நிற்கப் பெறும்.

---

38. "கடிசொல் இல்லைக் காலத்துப் படினே." —தொல் 452
"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல காலவகையினானே"
நன், 462

"குறைச்சொல் கிளவி குறைக்குவழி அறிதல்."
—தொல் 453

"குறைத்தன ஆயினும் நிறைப்பெயர் இயல."
—தொல் 457

"ஒரு மொழி மூவழிக் குறைதலும் அனைத்தே"
—நன் 156

39. "இடைச் சொல் எல்லாம் வேற்றுமைச் சொல்லே."
—தொல் 455

40. "உரிச்சொல் மருங்கினும் உரியவை உரிய."
—தொல் 456

41. "வினையெஞ்சு கிளவியும் வேறுபல் குறிய."
—தொல் 457

"சொற்றிரியினும் பொருள்திரியா வினைக்குறை"
—நன் 345

இந் நாழிக்கு இந் நாழி சிறிது பெரிது; சிறிது பெரிது என்பன உடன் நின்றன என்பர்.[42]

## 20. குறிப்புப் பொருள் தருவன

முன்னத்தின் உணரும் குறிப்புச் சொற்களும் சில உள; அவை சூழ்நிலை கொண்டு பொருள் உணரப் பெறும்.

"செஞ்செவி; வெள்ளொக் கலர் என்புன செல்வச் சிறப்பினை யுடையவர் என்பதை உணர்த்தும்[43].

## 21. ஒரு பொருட் பன்மொழி

மீமிசை; நிவந் தோங்கு மலை; சரிநிகர்ச் சமானம்; ஈர்ந்தண புனல் முதலியன ஒருபொருட் பன்மொழி களாம்[44]

42. "உரையிடத் தியலும் உடனிலை அறிதல்"—
— தொல் 458

43. "முன்னத்தின் உணரும் கிளவியும் உளவே
இன்ன வென்னும் சொன்முறை யான." — தொல் 459
"முன்னத்தின் உணரும் கிளவியும் உளவே"
—நன் 408

44. "ஒரு பொருள் இருசொல் பிரிவில வரையார்."
—தொல் 460
"ஒரு பொருள் பலபெயர் பிரிவில வரையார்
—நன் 397
"ஒரு பொருட் பன் மொழி சிறப்பினின் வழா"
—நன் 398

**22. ஒருமைச் சொல் பன்மைப் பொருள் உணர்த்தல்**

'ஏவல் இளையா தாய் வயிறு கரிப்ப'—ஒருமைச் சொல் பன்மையை உணர்த்தலும் உண்டு.[45]

**23. ஒருமைச் சொல் பன்மை வினை கொள்ளும்**

"கலம்பெறு கண்ணுளர் ஒக்கல்தலைவ
இரும்பேர் ஒக்கலொடு பதமிகப் பெறுகுவீர்"

என முன்னிலையில் ஒருமைக் கிளவி பன்மைச் சொல்லோடு முடிந்தது. இஃது ஆற்றுப்படை இலக்கியத்தில் அமையும் முடிபு நிலையாகும்.[46]

**24. முடிவுரை**

செய்யுளிடத்தும் வழக்கிடத்தும் கூறிய நெறிகளைக் கொண்டு ஏனையவற்றிற்கும் விதிகள் அமைத்துக்கொள்க என்பர்.[47]

---

45. "ஒருமை சுட்டிய வொருமைக் கிளவி
பன்மைக் காகும் இடனுமார் உண்டே."
—தொல் 461

"ஒருமையில் பன்மையும் பன்மையில் ஒருமையும்
ஓரிடம் பிறவிடம் தழுவலும் உளவே' —நன் 379

46. முன்னிலை சுட்டிய வொருமைக் கிளவி
பன்மையொடு முடியினும் வரைநிலை இன்றே
ஆற்றுப்படை மருங்கிற் போற்றல் வேண்டும்."
—தொல் 462

47. "செய்யுள் மருங்கினும் வழக்கியல் மருங்கினும்
மெய்பெறக் கிளந்த கிளவி எல்லாம்
பல்வேறு செய்தியின் நூல்நெறி பிழையாது
சொல்வரைந் தறியப் பிரித்தனர் காட்டல்."
—தொல் 463

"சொற்றொறும் இற்றுஇதன் பெற்றி என்று அனைத்தும்
முற்ற மொழிகுறின் முடிவில ஆதலின்
சொற்றவற் றியலான் மற்றைய பிறவும்
தெற்றென உணர்தல் தெள்ளியோர் திறனே"
—நன் 461

# 18. சாரியைகளும் எழுத்துப் பேறும்

## 1. சாரியைகள்

இன், வற்று, அத்து, அம், ஒன், ஆன், அக்கு இக்கு, அன் இவற்றைத் தொல்காப்பியனுர் சாரியைகள் என்று குறிப்பிடுவர். இவற்ருேடு தம் நம் நும் கெழு, உம், ஏ என்பனவும் சாரியைகள் என்பர்.[1] சாரியைகள் வேற்றுமைத் தொடரிலே மட்டுமன்றி அல்வழித் தொடரிலும் இடம் பெற்றன.

## 2. சாரியைகளின் மாற்று வடிவங்கள்

சாரியைகள் சூழ்நிலைக்கு ஏற்ப மாற்று வடிவங்களைப் பெற்றன.

(1) இன்—ன்—இற் என்பன மாற்று வடிவங்களாம். ஆவினை, ஆனை பதிற்றகல்.

(2) வற்று—அற்று மாற்று வடிவங்களாம். எல்லாவற்றையும், அவையற்றை.

(3) இன், ஒன், ஆன். இன்—இற், ஒற், ஆற் அற் என மாறின.

விளவிற்கு, கோஒற்கு, ஒரு பாற்கு, அதற்கு

(4) ஆன்—ஆற்

பரணியாற் கொண்டான்

(5) அத்து—த்து

மக+அத்து—மகத்துக்கொண்டான்.

(6) இக்கு—க்கு.

ஆடி+இக்கு—ஆடிக்குக்கொண்டான்.

---

1. இந்நூல் 56 பக்கம் காண்க.

(7) அக்கு—அ.
குன்றக் கூகை; தமிழக் கூத்து

(8) அம், அங், அஞ், அந், அ.
கசதப வருவழி அங் அஞ், அந், அம் எனவும்
உயிரும் இடையும் வருவழி அ எனவும் வரும்.

(9) இன் என வரும் வேற்றுமை
உருபிற்கு இன் இன்மை வேண்டும் என்பர். [2]

**3. அல்வழித் தொடரில் சாரியைகள் வருதல்**
**(தொகை மரபு)**

அல்வழித் தொடரில் அளவுப் பெயரும் நிறைப் பெயரும் எண்ணுப் பெயரும் உம்மைத் தொகையின்கண் இரண்டு பெயர்கள் புணரும் பொழுது பெறும் சாரியைகள் சொற் சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாறி வந்தன.

**(1) ஏ என்னும் சாரியை**

தம்மிற் குறைந்த சொற்கள் வந்தால் ஏ என் சாரியை வருதல் உண்டு.

"நாழியே யாழாக்கு, "தொடியே கஃசு" "ஒன்றே கால்"

அரை என்ற சொல் வருமொழியில் வரும்பொழுது சாரியை வருதல் இல்லை என்பர்.

உழக்கரை; கழஞ்சரை; பத்தரை; உம்மைத் தொகைக் கண் இருதிசை புணரின் 'ஏ' என்னும் சாரியை இடையே வரும்.

தெற்கே வடக்கு, கிழக்கே மேற்கு

**(2) இன் சாரியை**

குற்றிலுகர ஈற்று அளவுப் பெயர்கள் தம்மிற் குறைந்த அளவுப் பெயர்களைப் பெறும்பொழுது இன்சாரியை பெறுதல் உண்டு என்பர்.

---

2. இத்நூல் பக்கம் 58-60

உழக்கின் குறை; ஆழாக்கின் குறை இதற்கு உழக்கும் குறையும், ஆழாக்கும் குறையும் என்பதே பொருளாகும்.

பனை + குறை—பனையின் குறை

கா + குறை—காவின் குறை

பனை—அளவுப் பெயர்: கா—நிறைப்பெயர்.

இவையும் உம்மைத் தொகையாம்.

(3) அத்துச் சாரியை

கலம் என்னும் அளவுப் பெயர் அடுத்து அத்து என்னும் சாரியை வரும்.

கலம் + குறை—கலத்துக்குறை

கலமும் குறையும் என்பது இத்தொடரின் பொருளாம். இதுவும் உம்மைத் தொகையாம். [3]

4. வேற்றுமைத் தொடரில் சாரியைகள் (உருபு புணரியல்)

(1) 'இன்' என்னும் சாரியை

(அ) விளவினை, பலாவினை, கடுவினை, தழூஉவினை.
சேவினை, வெளவினை (வெளவுதல் தொழிற்பெயர்)

அ ஆ உ ஊ ஏ ஔ இவ்வீற்றுப் பெயர்கள் இன்சாரியை பெற்றன.

(ஆ) உரிஞினை, பொருநினை

ஞ ந ஆகிய இம் மெய்யீற்றுச் சொற்கள் இன்சாரியை பெற்றன.

(இ) வகர ஈற்றுச் சொற்களில் தெவ் என்பது மட்டும் இன்சாரியை பெற்றது.

தெவ்வினை.

(ஈ) மகர ஈற்றுச் சொற்கள் அத்துப் பெறுதலோடு இன் சாரியையும் பெற்றன.

உருமினை திருமினை

---

3. இந்நூல் பக்கம் 80-82

(உ) அழன்புழன் என்னும் னகர ஈற்றுச் சொற்களும் அத்தும் இன்னும் பெறும் இயல்பின.

அழத்தை, அழனினை
புழத்தை, புழனினை.

(ஊ) குற்றுயலுகர இறுதிப் பொதுச் சொற்கள் இன் சாரியை பெற்றன.

நாகினை, வரகினை, வீட்டினை

(2) அன் என்னும் சாரியை

(அ) சுட்டை முதலாக உடைய வகர ஈற்றுச் சொற்கள் அன் சாரியை பெற்றன. நிலைமொழி வகரம் கெட்டது.

அஃது+அன்+ஐ—அதனை.

(ஆ) எண்ணுப் பெயர்களுள் ஏழ் என்பதன்பின் அன் சாரியை வந்தது.

ஏழ்+ஐ—ஏழனை.

(இ) குற்றியலுகர ஈற்று எண்ணுப் பெயர்கள் அன் சாரியை பெற்றன.

ஒன்றனை, இரண்டனை, மூன்றனை

(ஈ) யாது, அஃது இஃது உஃது ஆகிய இவை அன் சாரியை பெற்றன. அன் வரும்பொழுது இவற்றின் உகரம் கெட்டது.

யாதனை, அதனை, இதனை, உதனை

(3) ஆன் சாரியை

ஒன்று முதலாக எட்டு ஈறாக உள்ள எண்கள் பத்து என்பதனோடு புணரும்பொழுது ஆன் என்னும் சாரியை வரும் என்பர்.

ஒருபானை, இருபானை, முப்பானை

(4) ஒன் சாரியை

ஒகார ஈற்றுச் சொற்கள் ஒன் என்னும் சாரியை பெற்றன. "கோஒனை"

(5) அத்து என்னும் சாரியை

உயிர்களுள் அகர ஆகார ஈற்று மரப்பெயர்க் கிளவிகள் அத்து என்னும் சாரியை பெற்றது.

விளவத்துக் கண், பலாவத்துக்கண்

மெய்களுள் மகர ஈற்றுச் சொற்கள் அத்து என்னும் சாரியை பெற்றது.

மரத்தை; நிலத்தை

(6) வற்று என்னும் சாரியை

அஃறிணைப் பன்மை ஈற்றுச் சொற்களிலும் சுட்டு வினுத் தொகைப் பெயர்களின் பின்னும் வற்று இடம் பெற்றது. பல வற்றை, சிலவற்றை, யாவற்றை, எல்லாவற்றையும்.

(7) இடப் பெயர்களின் குறுக்கம் சாரியை யாதல்

நம், தம், நும் என்பன முறையே எல்லா நம்மையும், எல்லார் தம்மையும், எல்லீர் நும்மையும் ஆகிய தொடர் களில் இடம் பெற்றன.

(8) மூவிடப் பெயர்களுள் நீ, நீர், தான், தாம், யான், யாம், நாம் என்பன வேற்றுமை ஏற்கும்பொழுது வடிவம் குறுகுமே யன்றிச் சாரியை பெறுதல் இல்லை.

(9) ஒரு சில வடிவங்களில் சாரியை பெறுதலும் பெரு திருத்தலும் ஆகிய உறழ்வு நிலை காணப்பட்டது.

வடக்கின் கண்—வடக்கண்
யாடு—யாட்டை; யாட்டினை
சோறு—சோற்றை; சோற்றினை
மண்—மண்ணினை—மண்ணை
கல்—கல்லினை—கல்லை

எனவே முன் குறிப்பிட்டவை அனைத்தும் சாரியை பெற்றே வரும் என்பது ஆயிற்று.[4]

---

4. இந்நூல் பக்கம் 87-94

5. உயிரீற்றுச் சொற்கள் வேற்றுமைத தொடரில் கீழ் வரும் சாரியைகளைப் பெற்று முடிந்தன. (உயிர் மயங்கியல்)

(1) இன்

மக+கை—மகவின்கை
ஆடூ+கை—ஆடூஉவின்கை
சே+கோடு—சேவின் கோடு

(2) வற்று

அவை+கோடு—அவையற்றுக்கோடு
பல+கோடு—பலவற்றுக்கோடு

(3) அத்து

பனி, நிலா, வளி, மழை முதலியன அத்துப் பெற்றன.

(4) ஆன்

பரணி+கொண்டான்—பரணியாற் கொண்டான்
கேட்டை+கொண்டான்—கேட்டையாற் கொண்டான்

(5) இக்கு

ஆடி+கொண்டான்—ஆடிக்குக் கொண்டான்.
சித்திரை+கொண்டான்—சித்திரைக்குக் கொண்டான்

(6) அம்

எரு+குழி—எருவங்குழி
செரு+களம்—செருவங்களம்
பனை; ஆவிரை, அரை—பனங்காய்
ஆவிரங்காய், அரையங்கோடு

(7) அக்கு

ஊ+குறை—ஊனக்குறை.

(8) ஒன்

கோ+கை—கோஒன்கை. [5]

---

5. இந்நூல் பக்கம் 110-112

6. புள்ளி மயங்கியலில் சாரியைகள்

(1) அம் : ஆணங்கோடு, எகினங்கோடு, பீரங்கோடு, பூலங்கோடு, ஆலங்கோடு, வேலங்கோடு

(2) அத்து: விண்ணத்துக் கொட்கும், ஆயிரத் தொன்று, பதினாயிரத் தொன்று, மகத்தாற் கொண்டான்

(3) தம், நும், நம் : எல்லார் தங்கையும், எல்லீர் நுங்கையும், எல்லார் நங்கையும்

(4) வற்று : அவற்றுக்கோடு, இவற்றுக் கோடு எல்லாவற்றுக்கோடு.

(5) அக்கு ; எகினக்கால், தாழக்கோல், தமிழக் கூத்து.

(6) அன் : ஏழன்காயம்.[6]

7. குற்றியலுகரப் புணரியலில் சாரியைகள்

(1) மரப்பெயர்க் கிளவிகள் அம் சாரியை பெற்றன.
தேக்கங்கோடு, வேப்பங்கோடு.
ஏனைய சில பெயர்களும் அம் பெற்றன.
ஏறங்கோள்; புற்றஞ்சோறு

(2) குன்று+கூகை—குன்றக்கூகை—அக்குப் பெற்றது

(3) ஒன்று+காயம்—ஒன்றன்காயம்—அன்பெற்றது.
பெண்டன்கால், யாதன்கோடு, அதன்கோடு

(4) வண்டின் கால்; பெண்டின்கண்—இன்பெற்றது.[7]

8. உம் கெழு என்னும் சாரியைகள்

உம் என்பது இடைச் சொல்; கெழு என்பது வினைப்பகுதி இவை வேற்றுமையில் அருகி சாரியைகளாக வருகின்றன என்பதைக் காட்டுவர்.

லன என வரும் புள்ளி முன்னர் மட்டும் இவை வேற்றுமைத் தொடரில் அருகி வரும் என்பர்.

"கல்கெழு கானவர் மகள்"

"வானவரி வில்லும் திங்களும் போலும்"

---

6. இந்நூல் பக்கம் 128-131
7. இந்நூல் பக்கம் 139 காண்க.

"மாநிதிக் கிழவனும் போன்ம்"

"கான் கெழு நாடு."

இவை வேற்றுமைத் தொடரின்கண் வந்தன. [8]

## 9. எழுத்துப் பேறுகள்

சாரியை பெறுவதோடு எழுத்துப்பேறு பெற்றமையும் குறிப்பிடத்தக்க புணரியல் நியதியாகும்.

### அ. உயிரீற்றுச் சொற்கள்

(1) உம்மைத் தொகையில் ஆகார ஈற்றுச் சொல் அகரம் பெற்றது.

உவாஅப் பதினன்கு

(2) குறியதன் முன் வரும் ஆகார ஈற்றுச் சொல் அகரம் பெறும்.

பலாஅக் கோடு

(3) ஆ என்னும் சொல் னகர ஈறு பெறுதலோடு அகரமும் பெறும். அதேபோல ஊகார ஈற்றுச் சொல்லும் னகரமும் அகரமும் பெற்றன. "ஆன நெய்" "ஊனக் குறை"

(4) ழகர உகரம் நீடுதல் உடைத்து; ஆண்டு உகரம் வருதல் உண்டு.

எழூஉக் கதவு.

(5) குற்றெழுத்தின் பின் வந்த ஊகாரக் கிளவி உகரம் பெற்றது.

உடூஉக் குறை.

(6) ஏ, ஓ, ஔ ஈற்றுச் சொற்களும் இவ்வாறே எழுத்துப் பேறுகளைப் பெறும்.

ஏஎக் கொட்டில், ஓஒவிக் கடுமை, கௌவுக் கடிது (உகரம்பெற்றது)

---

8. இந்நூல் பக்கம் 150-151

(7) மா என்பது னகரம் பெற்றது; மான் கோடு.

ஆ. மெய்யீற்றுச் சொற்கள்

(1) மெல்லெழுத்துக்களில் ஞ ண ந ம ல ள இறு தொழிற்பெயர்களும் ஈம், கம், உரும், மின், பின், பன், கன் வல், வள், புள், தெவ் என்னும்,ஏனைய சொற்களும் உகரம் எழுத்துப்பேருகப் பெற்றன.

(2) இவற்றுள் ஒரு சில அகரத்தை எழுத்துப் பேருகப் பெற்றன.

பொருந், ஈம், கம், கன் என்பன வேற்றுமையில் அகரம் பெற்றன. வல் என்பது பலகை அல்லது நாய்வரின் அகரப் பேறு பெற்றன.[10]

(3) மற்றும் எச்ச இயலுள் தனிச் சொல்லின் கண் வரும் எழுத்துப் பேற்றினைக் குறிப்பிடுவதைக் காண்கின்ருேம்.

"சென்றீ பெரும நின் தகைக்குநர் யாரோ"
அட்டில் ஓலை தொட்டனை நின்மே"

என்னும் தொடர்கள் முறையே ஈ ஏ என்னும் எழுத்துப் பேறுகளைப் பெற்றன.

9. இந்நூல் பக்கம் 108–110
10. இந்நூல் பக்கம் 126-128

# 19. செய்யுள் வழக்குகள்

தொல்காப்பியம் செய்யுள் வழக்கையும் ஏனைய வழக்கியல் நெறியையும் ஆங்காங்குச் சிறப்பித்துக் கூறு கின்றது.

"வழக்கும் செய்யுளும் ஆயிருமுதலின்
எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி"

தொல்காப்பியர் இந்நூலை இயற்றினர் என்பது பாயிரத் துள் கூறப்படும் செய்தியாகும்-

செய்யுள் வழக்குகளாகவே ஒருசிலவற்றைத் தொல் காப்பியனர் குறிப்பிடுவர். அவை பின்வருமாறு:

1. எழுத்தியலில் செய்யுள் வழக்குகள்:

(1) சுட்டுப் பெயர்கள் உயிர் வரும்பொழுது நீட்சி பெறுதலும் உள என்பர்.

"நீட வருதல் செய்யுளில் உரித்தே 208
"ஆயிருதிணையின் இசைக்குமன சொல்லே."
"ஆயிருபாற் சொல்."

என வருதல் காண்க.

(2) செய்யுள் இறுதியில் வரும் "போலும்" என்பது "போன்ம்" என வரும் என்பர். சூ 51, 52

(3) குறிலை அடுத்துவரும் நெடில் அதன் நீட்சி குறைந்து உகரம் பெறுவது செய்யுள் வழக்காகிவிட்டது.

"இறவுப் புறத்தன்ன பிணர்ப்படு தடவு முதல்"
"சுறவுக் கோட்டன்ன முள்ளிலைத் தாழை"
"புறவுப் புறத்தன்ன புன்காய் உகாய்" 234

(4) அது என்னும் சுட்டுப்பெயர்முன் அன்றுவருமிடத்து உகரம் கெட்டு ஆ ஆகுதலும், ஐ வருகாலை தகர ஒற்று நிற்க உகரம் கெடுதலும் ஆகிய திரிபுகள் நிகழ்தலும் உண்டு என்பர்.

"அதாஅன் றம்ம"
"அதை மற்றம்ம" —258

(5) செய்யுளிடத்து வேட்கை என்னும் ஐ என் இறுதி அவா முன் வரின் 'கை' கெட்டு டகரம் ணகரமாகத் திரியும் என்பர்.

"வேணவா நலிய வெய்ய உயிரா" —288

(6) செய்யுளில் 'விண்' என்னும் ஆகாயத்தை உணர்த்தும் பெயர்ச் சொல்லின்முன் தொழில் வருகாலை 'அத்து' என்னும் சாரியை வருதலும் உண்டு.

"விண்ணத்துக் கொட்கும்"

(7) இலம் என் கிளவிக்குப் படுவருமிடத்து இலப்படு என ஆகாமல் செய்யுளின்கண் இலம்படு என இயல்பாக நிலைப்பதும் உண்டு.

"இலம்படு புலவர் ஏற்றகை நிறைய" —316

(8) பொன் என்னும் கிளவி பொலம் எனச் செய்யுளில் திரிபு பெறும்.

"பொலந்தேர்க்குட்டுவன்"
"பொலஞ்சுடர் ஆழி பூண்ட தேரே" —356

(9) லன என்னும் புள்ளிமுன் உம்மும் கெழுவும் வேற்றுமைத் தொடரின்கண் சாரியைகளாக வரும்.

"வான வரி வில்லும் திங்களும் போலும்"
"கல்கெழு கானவர் நல்குறு மகளே"
"மாநிதிக் கிழவனும் போன்ம்"
"கான்கெழு நாடு" —481

(10) புணரியலில் மேற்குறிப்பிட்ட சிறப்பு விதிகளைக் கூறியதோடு புறநடையில் வேறுபிற செய்யுள் திரிபு உளவேனும் கொள்க என்பர்.

"கிளந்த அல்ல செய்யுளில் திரிநவும்
வழங்கியன் மருங்கின் மருவொடு திரிநவும்
விளம்பிய இயற்கையின் வேறுபடத் தோன்றின்
வழங்கியல் மருங்கின் உணர்ந்தனர் ஒழுக்கல்
நன்மதி நாட்டத்து என்மனார் புலவர்" —483

நச்சினார்க்கினியர் இதற்குப் பல எடுத்துக்காட்டுகள் தருவர். (இந்நூலில் 53ம்பக்கம் காண்க.)

## 2. சொல்லியலில் செய்யுள் வழக்குகள்

(1) இனச் சுட்டு இல்லாப் பண்பு அடுத்து வழங்கப்படும் பெயர் வழக்கு நெறியல்ல; செய்யுள் நெறியாகும் என்பர்.

"செஞ்ஞாயிற்று நிலவு வேண்டினும் வெண்திங்களுள் வெயில் வேண்டினும்" —சொல்-18

(2) இயற் பெயர்க் கிளவியும் சுட்டுப் பெயர்க் கிளவியும் ஒரே வினையைக் கொள்ளுமிடத்து இயற்பெயர் முன்னும் சுட்டுப் பெயர் பின்னும் வருதல் வழக்கியல் ஆகும். அம்முறை மாறிச் சுட்டுப்பெயரை முற்படக் கிளத்தல் செய்யுளில் உரித்தாகும்.

"அவன் அணங்கு நோய் செய்தான் ஆயிழாய்"
முற்படக் கிளத்தல் செய்யுளில் உரித்து என்பர். சொல் 39.

(3) திணை விரவி எண்ணப்பட்ட பெயர் செய்யுளகத்தில் பெரும்பான்மையும் அஃறிணைச் சொற்கொண்டு முடியும்.

"வடுகர் அருவாளர் வான்கருநாடர்
சுடுகாடு பேய் எருமை என்றிவை யாறும்
குறுகார் அறிவுடையார்" சொல் 51

(4) பெயர்ச் சொற்கள் ஆகார ஈறு ஓகாரமாதலும் உள செய்யுளுள் என்பர்.

"வில்லோன் காலன கழலே" —165

(5) இறைச்சிப் பொருள்வயின் செய்யுளில் கிளக்கும் இயற்பெயர்க் கிளவி உயர்திணை ஈறு பெற்றுள ஆயினும் அஃறிணையையே காட்டும் என்பர்.

"கடுவன் முதுமகன் கல்லா மூலற்கு
வதுவை அயர்ந்த வன்பறழ்க் குமரி." சொல் 196, 197.

(6) பாலறி மரபினை உடைய ன ள ர ஈற்றுச் சொற்கள் செய்யுளில் ஆ ஓ ஆதல் உண்டு.

ஆய் என்னும் முன்னிலை வினைச்சொல்லும் ஓய் எனத் திரிபு பெறும் என்பர்.

"வினவி நிற்றந்தோனே"
"வந்தோய் மன்ற தண்கடற் சேர்ப்ப" தொல் 211, 212

(7) செய்யுளுக்கு உரிய சொற்களாக இயற்சொல், திரிசொல், திசைச் சொல், வடசொல் என இந்நான்கையும் குறிப்பிடுவர். 397—400

(8) செய்யுள் விகாரமாக வலித்தல், மெலித்தல், விரித்தல், தொகுத்தல், நீட்டல், குறுக்கல் இவை ஆறனையும் குறிப்பிடுவர். 403

(9) செய்யுள் பொருள்கோளாக நிரல்நிறை, சுண்ணம், அடிமறி, மொழிமாற்று இந்நான்கையும் குறிப்பிடுவர். 404

(10) செய்யுளிடத்தும் வழக்கிடத்தும் கிளக்கப்பட்ட செய்திகள் அனைத்தும் அவற்றின் இயல்பு அறிந்து இலக்கண நெறிகளை மேற்கொள்ள வேண்டும் என்பது அவர் முடிவுரையாக அமைகிறது. செய்யுள் வழக்குக்கும் வழக்கியலுக்குமே அவர் இலக்கண நெறிகளைப் பொதுப்படக் கிளந்தார் எனினும் ஒருசில சிறப்புச் செய்யுள் வழக்குகளை ஆங்காங்குக் காட்டியுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். —463

# 20. சொல்லும் பொருளும்

1. தொல்காப்பியம் மொழியிலக்கணத்தை எழுத்து நிலையிலும் சொல்நிலையிலும் தொடர்நிலையிலும் ஆராய்வ தோடு பொருள்நிலையிலும் உணர்த்துகிறது.

## 2. எழுத்தியலும் பொருள்நிலையும்

(1) எழுத்தியலிலும் பொருள் அடிப்படை அமைந் துள்ளது. எழுத்துக்களிலேயே சுட்டுப் பொருளில் வரும் எழுத்துக்களைச் சுட்டு எனவும் வினாப் பொருளில் வருவன வற்றை வினா எனவும் பிரித்துக் காட்டுவர். சுட்டு வினா என்ற அடிப்படையே பொருள் பற்றியதாகும்.

(2) செம்பொன்பதின்தொடி, செம்பருத்தி, குறும்பரம்பு, நாகன்றேவன்போத்து, தாமரைக் கணியார், குன்றேறுமா முதலிய தொடர்கள் பொருள் உணர்வுக்கு ஏற்ப இசைத் திரிபு பெறும் என்பர். இத்தொடர்கள் பொருள் அடிப் படையிலேயே ஆராயப்படுகின்றன.

(3) புணரியலில் பொருள் அடிப்படையில் புணர்வின் தன்மையும் மாறுபாடு பெறுகின்றது. ஆண்கை, ஆணங் கோடு; எகினக்கால், எகினங்கோடு; தான்கால், தன்கால்; தாய்கலாம், மகன் தாய்க்கலாம்; எகினங்கோடு, எகினக் கால்; மாஅங்கோடு, மான்கோடு; புளியங்கோடு, புளிங்கூழ்; சேங்கோடு, சேவின்கோடு முதலிய உறழ்வு நிலைகள் பொருள் பற்றி அமைந்தவையாகும்.

(4) மற்றும் ஒருசில சொற்றொடர்கள் பொருள் அடிப் படையிலேயே சிறப்பிலக்கணம் பெறுகின்றன.

விண் என வரும் காயப் பெயர் (ஆகாயத்தை உணர்த் தும் சொல் என்பதாம்), எண் என் உணவுப்பெயர், வழங் கியல் மா எனப் பொருள் விளக்கத்தோடு அமைக்கும் தொடர்கள் ஏனைய பொருள் உணர்த்தும் தொடர்களை வேறுபடுத்திக் காட்ட அமைந்தவையாகும்.

## 3. சொல்லியலும் பொருள்நிலையும்

(1) கிளவியாக்கத்தில் செப்பு வினாத் தொடர்களின் விளக்கமும் பொருள் அடிப்படையில் அமைந்தவையாகும். இயல்பு வழக்கு, தகுதி வழக்கு என்னும் பாகுபாடுகள் பொருளை உணர்த்தும் நெறிபற்றி எழுந்த பிரிவாகும்.

இயற்கைப் பொருளும் செயற்கைப் பொருளும் கிளப்பதில் உள்ள வேறுபாடு காட்டப்படுகிறது. செந்தாமரை, கருங்குவளை என்பன இனச் சுட்டு உடைய தொடர்களாம். செஞ்ஞாயிறு, வெண்திங்கள் என்பன இனச்சுட்டு இல்லாத் தொடர்களாகும். இப்பாகுபாடும் பொருள் அடிப்படையில் அமைந்தவையாம். அடைசினைமுதல் என வண்ணச் சினைச் சொல் வழங்குதல், ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவி, செலவு வரவு தரல் கொடை முதலிய வழக்குகள், ஒரு பொருள் குறித்த வேறு பெயர்க் கிளவி, வேறு வினைப் பொதுச் சொல், இரட்டைக் கிளவி பொருள் உணர்த்தல், தலைமை பற்றியும் பன்மை பற்றியும் பெயர்கள் வழங்கப் படுதல், வினை வேறுபடூஉம் பலபொருள் ஒரு சொல், வினை வேறுபடாப்பல பொருள் ஒரு சொல் முதலிய இலக்கணங்கள் அனைத்தும் பொருளியல் அடிப்படையில் அமைந்தவையாகும்.

(2) வேற்றுமையியலிலும் பொருள் அடிப்படை போற்றப்படுகிறது. எழுவாய்த் தொடர் ஏற்கும் பயனிலைகளுள் பொருண்மை சுட்டல் என்பது ஒன்றாகும். ஏனைய வேற்றுமைகள் சொல் நிலையிலும் பொருள் நிலையிலும் உணர்த்தப் படுகின்றன. உருபுகள் கிளத்தலும் அவை முடிக்கும் சொற்கள் கிளத்தலும் அன்றி வேற்றுமைப் பொருள்களும் சுட்டப்படுகின்றன.

(3) வேற்றுமை மயங்கியலில் உருபுகள் மயங்குவதைக் காட்டுவதோடு பொருள் மயக்கத்தை மிகுதியாக எடுத்துக் காட்டுகின்றார்.

'அன்ன பிறவும் தொன்னெறி பிழையாது
உருபினும் பொருளினும் மெய் தடுமாறி
இருவயின் நிலையும் வேற்றுமைஎல்லாம்
திரிபிடன் இலவே தெரியுமோர்க்கே'

என்னும் சூத்திரம் தெளிவாக வேற்றுமையில் உருபு பொருள் என்ற அடிப்படையில் ஆராய்ந்தமைக்குச் சான்று தருகிறது.

உருபுக்குத் தரப்படும் சிறப்பை விடப் பொருளுக்கே தலைமை தரப்படுகிறது

' யாதன் உருபிற் கூறிற் றுயினும்
பொருள்செல் மருங்கின் வேற்றுமை சாரும்—106"

(4) தெரிநிலை வினையாக வரும் வினை, செய்வது, செயப்படுபொருள், நிலன், காலம், கருவி, இன்னதற்கு இது பயன் என்னும் எட்டு வகைப் பொருள்கள் பெறப்படும் என்று தெளிவுபடுத்துவர்.

(5) இதே அடிப்படையில்தான் வேற்றுமையியலில் ஆகு பெயர்க்கு இலக்கணம் கூறப்படுகிறது. ஆகுபெயர் என்பது பொருள் பிறழ்ச்சியும் மயங்கி வருதலும் ஆகும்.

(6) விளிவேற்றுமை என்பதே விளிப்பொருளை ஒட்டி அமைந்ததாகும். இதற்கு என எந்த உருபும் இல்லை. ஒரு சில வடிவ மாறுதல்கள் விளிப்பொருளால் ஏற்படுகின்றன.

(7) சொல்லுக்கும் பொருளுக்கும் உள்ள தொடர்பு பெயரியலில் தெளிவாக உணர்த்தப்படுகிறது.

"எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே"—155
"பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்
சொல்லின் ஆகும் என்மனார் புலவர்"—156
"தெரிபுவேறு நிலையலும் குறிப்பில் தோன்றலும்
இருபாற் றென்ப பொருண்மை நிலையே"—157

இம்மூன்று சூத்திரங்களும் பொருளியலின் அடிப்படையையும் அவர் கொள்கையையும் வற்புறுத்துகின்றன; பொருளுக்குத் தலைமை தருதல் ஒப்புநோக்கத் தக்கதாகும்.

(8) இடைச் சொற்கள் தத்தம் குறிப்பில் பொருள் செய்யும் நிலை விரித்துக் கூறப்படுகின்றது. இஃது இடையியலில் மிக்க இடம் பெற்றுள்ளது. இதன் விளக்கமே இடையியலாக அமைந்துள்ளது.

(9) உரிச்சொற் கிளவி பெயரினும் வினையினும் மெய்தடுமாறுதல் என்பது மட்டும் சொல்நிலை இலக்கணமாகும். மற்று இசையினும் குறிப்பினும் பொருளினும் தோன்றி ஒரு சொல்லுக்குப்பல பொருள் அமைதலும், பல சொற்கு ஒரு பொருள் அமைதலும் பொருள் நிலையில் உணர்த்தப்படும் செய்திகளாகும்.

(10) மற்றும் இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்பவற்றுள் தமிழ்ச் சொற்கள் மூன்றும் பொருள் விளக்கும் நுட்பத்திலேயே வேறுபாடு பெற்றுள்ளமை சிறப்பிக்கப்படுகிறது.

(11) இயற்சொல் என்பது செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித் தம் பொருள் வழுவாமல் இசைப்பது என்று கூறப்படுகிறது. திரிசொல் என்பது ஒரு பொருள் குறித்த வேறு சொல்லாகவும் வேறு பொருள் குறித்த ஒரு சொல்லாகவும் அமைவது என்று குறிப்பிடுவர். திசைச் சொல் என்பது செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும் தங்குறிப்பினவே என்று உணர்த்தப்படுகிறது.

(12) இச் சொற்கள் நிரல் நிறை; சுண்ணம், அடிமறி, மொழிமாற்று என்னும் நெறிமுறைப்படிப் பொருள் கொள்ளப்படுகிறது என்று கூறப்படுகிறது. பொருள்கோள் பற்றிய செய்தியும் பொருளியலைச் சார்ந்ததாகும்.

தொல்காப்பியம் மொழியின் அமைப்பை வடிவாலும் பொருளாலும் விளக்கும் மொழியியல் நூலாகும். இலக்கணம் என்பது சொல்லாராய்ச்சி மட்டுமன்று; தொடரியல் விளக்க மட்டுமன்று; அது பொருள் விளக்கத்தின் அடிப்படையிலும் அமைந்துள்ளது என்பது தொல்காப்பியம் உணர்த்தும் இலக்கண நெறியாகும்.